# சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

25 SILVER JUBILEE 1992 - 2016-17 வெள்ளி விழா ஆண்டு

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்"

டிசம்பர் 2025 | மார்கழித் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | December - 2025 | Issue - 2 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக
## மாண்புமிகு திரு. நீதிபதி சூர்யகாந்த் பதவியேற்பு

SATTAKADIR



இந்திய குடியரசுத் தலைவர் மேதகு திருமதி திரௌபதி முர்மு அவர்கள்
மாண்புமிகு திரு. நீதிபதி சூர்யகாந்த் அவர்களுக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக
பதவிப் உறுதிமொழி எடுக்க வைத்தார்

## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,



www.sattakadir.com http://epaper.sattakadir.com


VIT
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

# சட்டக்கதிர்

தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்

டிசம்பர் 2025 http://epaper.sattakadir.com மார்கழித் திங்கள் இதழ் 2025

## பொருளடக்கம்


1. 34ஆம் ஆண்டில் சட்டக்கதிர் – தலையங்கம் 5
2. இந்திய உச்சநீதிமன்றத்தின் 53வது தலைமை நீதிபதி மாண்புமிகு நீதிபதி திரு.சூர்யகாந்த் அவர்களை வாழ்த்துகிறோம் 7
3. பணிக்காலத்தில் ஏற்படும் இயலாமை காரணமாக மாற்றுத்திறனாளியை பணி நீக்கம் செய்தது தவறு – மாற்றுப்பணியில் தொடர வேண்டும். – இந்திய உச்சநீதிமன்றம் 9
4. பொது அதிகாரத்தை ரத்தாக்குதல் அதற்கு முன் மேற்கொண்ட உரிமை மாற்றல் மீது தாக்கம் ஏற்படுத்தாது – இந்திய உச்சநீதிமன்றம் 23
5. நீதிமன்ற தீர்ப்புரையின் பகுதியாகும் அசையாச் சொத்து பொறுத்த ஆவணங்கள் முத்திரை தீர்வை செலுத்தலிருந்து விலக்கப்படுகின்றன. – இந்திய உச்சநீதிமன்றம் 25
6. நலிவுற்ற நெசவு நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் – சென்னை உயர்நீதிமன்றம் 27
7. உரிமையும் கால வரம்பும் – சென்னை உயர்நீதிமன்றம் 35
8. தொழிலாளர்களது பணிநீக்கல் பின்னோக்கியதாக உள்ளபோது அது எளிய பணி நீக்கமாக அழைக்கப்பட முடியாது. – சென்னை உயர்நீதிமன்றம் 39
9. நேர்வு முறையும் நீதிப்பேராணையும்– சென்னை உயர்நீதிமன்றம் (மதுரைக் கிளை) 45
10. ஓய்வூதியத்தை மறுக்க மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றதை காரணமாக கூற முடியாது. – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு) 47
11. மணமுறிவும் அதற்கான ஆதாரங்களும் – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்) 49
12. குறித்தவகை நிறைவேற்றுதலும் அதற்கான காரணங்களும் – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரைக் கிளை) 54
13. தலாக் அறிவிப்பால் மட்டுமே பராமரிப்பு கடமைகள் நீங்காது - (ILI NEWSLETTER) 61
14. ஸ்ரீதனச் சொத்து: உரிமையாளரின் வெளிப்படையான அங்கீகாரம் இல்லாமல் வேறு யாரும் மீட்கக் கோர முடியாது. - (ILI NEWSLETTER) 63
15. தாயிடமிருந்து தனது சொந்த மைனர் குழந்தையை தந்தை எடுத்துச் சென்றதை கடத்தல் என குற்றம் சாட்ட இயலுமா? - (ILI NEWSLETTER) 65
16. பட்டியல் இனத்தவர் (SC) பட்டியலைத் திருத்த நாடாளுமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உண்டு. - (ILI NEWSLETTER) 67
17. வரதட்சிணைக் கொடுமைகளுக்கு நிரந்தரத் தீர்வு உண்டா? – ப. சுசீந்திரா, ஆராய்ச்சியாளர் சமூக நீதி – சமத்துவ மையம் 70
17. 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 73

# சட்டக்கதிர்

**ஆசிரியர் வெளியிடுபவர்:**
முனைவர் வே.இரா.சே.சம்பத்

**சிறப்பு ஆலோசனைக் குழு:**
**மூத்த வழக்கறிஞர்கள்:**
திரு.ஆர்.காந்தி
திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்
டாக்டர் எ. தியாகராஜன்

**சட்ட/தமிழ் வல்லுநர்கள்:**
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

**வழக்கறிஞர்கள்:**
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி
திரு. எஸ். பாலமுருகன்

**சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:**
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

**மொழி பெயர்ப்பாளர் குழு:**
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன்
திரு.மா.வெற்றிவேல்

**அலுவலகப் பணிக்குழு:**
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்
திரு.வி.கதிரவன்

**வடிவமைப்பு:** வாசன் அச்சகம், சென்னை


| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ‘‘சட்டக்கதிர்’’ என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


# சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு
(12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) ரூ.1200/-
நீதிமன்றங்களில் தமிழ் ரூ.500/-

தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) ரூ.500/-

சட்டவல்லுனர் பார்வையில் அண்ணா ரூ.500/-

தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி ரூ.500/-

சட்டமும் சமுதாயமும் (அச்சில்) ரூ.150/-

சென்னையிலிருந்து உலகை நோக்கி ரூ.200/-

உன்னுள் என்னைப் பார் ரூ.150/-

உலகெங்கும் கலைஞர் ரூ.300/-

“International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report” (English) Rs.500/-

‘‘சட்டக்கதிர்’’ என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

மார்கழித் திங்கள் இதழ்

சட்டம் – 34 டிசம்பர் 2025 கதிர் – 2

## 34ஆம் ஆண்டில் சட்டக்கதிர்

சட்டத் தமிழுக்குத் தொண்டாற்றும் வகையிலும், நீதிமன்ற மொழியாகத் தமிழைக் கொண்டு வரும் முயற்சியின் பங்களிப்பாகவும் வெளிவரும் சட்டக் கதிர் 33 ஆண்டுகளை நிறைவுற்று 34ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது.

1992ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ''சட்டக்கதிர்'' தொடங்கப் பெற்றது. அன்று முதல் கடந்த 33 ஆண்டுகளாகத் தங்கு தடையின்றி தொடர்ந்து வெளிவந்து 34ஆம் ஆண்டில் நுழைவதில் வெற்றிப் பெருமிதம் கொள்கிறது. இந்த இதழ் 399வது இதழ் மூலம் 'சட்டக்கதிர்'' தன் பயணத்தில் மேலும் ஒரு முத்திரை பதிக்கிறது.

இத்தருணத்தில் 2000ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்காகச் சட்டக்கதிர் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையில் பரிசுத் தொகையாக ரூபாய் இருபதாயிரமும், பாராட்டுச் சான்றிதழும் பெற்றதை நாங்கள் பெருமையுடன் நினைவு கூர்கிறோம்.

மீண்டும் தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் சிறந்த மாத இதழியலுக்கான சி.பா.ஆதித்தனார் விருது–2023, ரூபாய் இரண்டு லட்சம் காசோலையும், கேடயமும், தகுதியுரையும் 2025இல் நடந்த விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு மு.பெ.சாமிநாதன் அவர்கள் விருதினை வழங்கிச் சிறப்பித்தார் என்பதைப் பெருமையுடன் தெரிவிக்கிறோம்.

தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் 5000 பொது கிளை நூலகங்களில் பொது சட்டக்கதிர் 2500 கிளை நூலகங்களுக்கு வாங்கப்பட்டு வருகிறது மேலும் 2500 கிளை நூலகங்களுக்கும் சட்டக்கதிர் வாங்க வேண்டும் என பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

சென்னை உயர்நீதிமன்றம் 2006ஆம் ஆண்டிலிருந்து சென்னை உயர்நீதிமன்ற நூல் நிலையத்திற்கும் மற்றும் 35 மாவட்டங்களில் உள்ள முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கும் சட்டக் கதிர் இதழை வாங்கி வருகிறது. மேலும் சட்டக் கதிர் இதழைச் சென்னை உயர்நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. ஆனால் மற்ற சார்பு நீதிமன்றங்களுக்கு இன்று வரையில் சட்டக்கதிர் வாங்கி நம் நூலகங்களுக்கு வழங்கப்படவில்லை இது குறித்து உயர்நீதிமன்றம், நீதிபதிகள் குழு உரிய நடவடிக்கை எடுத்து 1000க்கும் மேற்பட்ட சார்பு நீதிமன்றங்களுக்கு சட்டக்கதிர் வாங்கி வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

தமிழ்நாடு அரசு, புதுச்சேரி அரசு, இந்திய அரசு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டும், சட்டக்கதிரின் சேவைக்கு உதவுமாறும் கோரி வருகிறோம். தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் சட்டத்துறையில் சிறப்பு நிதி உதவிக்கான கோப்பு நிலுவையில் உள்ளது. விரைவில் நிதியுதவி வழங்க வேண்டுகிறோம்.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் உள்ள நீதிபதிகளுக்குச் செய்தித்தாள்கள் மற்றும் இதழ்கள் வாங்க ஒதுக்கும் நிதியிலிருந்து சட்டக்கதிரை வாங்கிட வேண்டும் எனச் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட வேண்டுகிறோம்.
- ஊராட்சி பேரூராட்சி, நகராட்சி ஆகியவற்றின் படிப்பகங்கள் மற்றும் நூலகங்களுக்குச் சட்டக்கதிர் வாங்கிட அரசு சிறப்பு ஆணை (G.O.) வழங்கிட வேண்டுகிறோம்.

● அரசுத் துறை வெளியிடும் விளம்பரங்களைச் சட்டக்கதிருக்கு மாதாமாதம் தந்து சட்டக்கதிர் வாசகர்கள் அரசு திட்டங்களைத் தெரிந்து கொள்ள அரசு ஆணை வழங்கிட வேண்டுகிறோம்.

● தமிழ்நாட்டில் உள்ள சட்டக் கல்லூரிகள், அரசு கலைக் கல்லூரிகள் அனைத்திலும் சட்டக்கதிர் வாங்கிட உத்தரவிட வேண்டுகிறோம்.

● தமிழ்நாட்டில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் சட்டக்கதிர் வாங்கிட உத்தரவிட வேண்டுகிறோம்.

● தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு வழக்கறிஞர்களுக்கு அரசே சட்டக்கதிர் வாங்கி வழங்கிட தமிழ்நாடு அரசு பொதுத் துறையினை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

இதுவரை 398 சட்டக்கதிர் இதழ்கள் வெளிவந்துள்ளன. இந்த இதழ் 399வது இதழாக மலர்வது கண்டு, நாங்கள் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். இந்த நேரத்தில் சட்டக்கதிர் வாசகர்களுக்கு ஓர் உறுதியினையும் அளிக்கிறோம். இதுவரை சட்டக்கதிரால் நீங்கள் பெற்ற பயன்கள் தொடர்ந்து மேலும் சிறப்பாகக் கிடைக்க வகை செய்வோம் என்று உறுதி அளிக்கிறோம். மேற்கண்ட எங்கள் கோரிக்கைகளுக்கு ஆதரவாகச் சட்டக்கதிர் வாசகர்களும் அரசுக்குக் கடிதங்கள் எழுதிட வேண்டுகிறோம்.

சட்டக்கதிர் மேலும் சிறப்பாகப் பணிபுரிய வேண்டும் என்ற நோக்கில் **"சட்டக்கதிர் பவுண்டேஷன்"** தொடங்கியுள்ளோம்.

இதன் மூலமாக **"சட்டத் தமிழ் கல்வி ஆராய்ச்சி மையம்"** மற்றும் **"சட்டத் தமிழ் ஆராய்ச்சி நூலகம்"** உருவாக்கியுள்ளோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சார்பில் நன்கொடையாக 1000 நூல்கள் வழங்கியுள்ளார்.

பலரும் நூல்களை இலவசமாகத் தந்து வருகிறார்கள். வழக்கறிஞர்கள், நூல் வெளியீட்டாளர்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் தந்துள்ளார்கள். தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சித் துறை 2000 நூல்களைத் தந்துள்ளது.

சட்டக்கதிர் மூலமாக தமிழில் சட்டங்களை மொழி பெயர்ப்பது, நீதிமன்றங்களின் மூலமாக தமிழில் வழக்கறிஞர்கள் வழக்காடுவதோடு, தமிழில் சட்ட நூல்கள் கொண்டு வருவது, கணினி தமிழ் மென்பொருளை உருவாக்குவது என பல்வேறு பணிகளைச் செய்து வருகிறோம்.

சட்டக்கதிருக்குச் சட்ட உதவி கேட்டுக் கடிதம் எழுதியவர்களுக்கெல்லாம் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள தமிழ்நாடு மாநில இலவச சட்ட உதவி மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இலவச சட்ட உதவி பெற உதவி வருகிறோம்.

**இதற்காக தமிழ்நாடு அரசு பொதுப் பணித் துறையின் கீழ் உள்ள டாக்டர் அம்பேத்கார் பல்கலைக்கழக பழைய வளாகத்தில் காலியாக உள்ள ஒரு கட்டிடத்தை ஒதுக்கித் தருமாறு வேண்டுகோள் வைத்துள்ளோம்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேறித் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

உயர்நீதிமன்றத்தில் விரைவில், தமிழ் கூடுதல் வழக்கு மொழியாக வரும் நாளை எதிர் நோக்குவோமாக! சட்டத்தமிழ் – நீதித்தமிழ் உருவாகப் பணியாற்றி வரும் சட்டக்கதிர் இதழுக்குத் தமிழ்நாடு அரசு சிறப்பு நிதி வழங்கும் நாளை எதிர்நோக்குவோமாக! வாசகர்கள் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்கு என்றும் எங்கள் நன்றி!

சட்டக்கதிர் இதழின் புதிய இணையதளம் www.sattakadir.com வழியாகச் சட்டக்கதிர் பணிகளைப் பார்வையிடலாம். சட்டக்கதிர் இணைய இதழாகவும் வெளிவருகிறது. இவற்றையும் இணையதள வழியாகப் பதிவு செய்து படிக்கலாம். இணைய தளத்தில் இதுநாள் வரையில் இலவசமாய்ப் பார்க்க படிக்க ஏற்பாடு செய்து வந்தோம். இனி வரும் காலங்களில் பதிவு செய்து படிக்கும் வசதியாக மாற்ற இருக்கிறோம். சட்டக்கதிருக்குத் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வரும் சட்ட வல்லுநர்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் வாசகர்களுக்கும் நன்றி.

**– ஆசிரியர்**

# இந்திய உச்சநீதிமன்றத்தின் 53வது தலைமை நீதிபதி மாண்புமிகு நீதிபதி திரு.சூர்யகாந்த் அவர்களை வாழ்த்துகிறோம்



இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பணியாற்றி வந்த மாண்புமிகு நீதிபதி பி.ஆர்.கவாய் அவர்கள் பணி ஓய்வு பெற்றதை தொடர்ந்து, மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் உத்திரவினைத் தொடர்ந்து இந்திய உச்ச நீதிமன்றத்தின் 53வது தலைமை நீதிபதியாக மாண்புமிகு சூர்ய காந்த் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

ஹரியானா மாநிலத்தின் ஒரு சாதாரண கிராமப் பின்னணியில் இருந்து தனது அயராத உழைப்பால் நாட்டின் மிக உயர்ந்த நீதித்துறைப் பதவியை எட்டிய இவரது வாழ்க்கை மற்றும் சட்டப் பணி, தன்னம்பிக்கைக்கும், சமூக நீதிக்குமான ஒரு உன்னதப் பாடமாகத் திகழ்கிறது. மாண்புமிகு நீதிபதி சூர்ய காந்த் அவர்கள், பிப்ரவரி 10, 1962 அன்று ஹரியானா மாநிலம் ஹிசார் மாவட்டத்தில் உள்ள பெட்வார் (Petwar) கிராமத்தில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். இவரது குடும்பத்தில் பலர் ஆசிரியர்களாக இருந்தனர். பெட்வார் கிராமப் பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியை முடித்த இவர், ரோத்தக் மகரிஷி தயானந்த் பல்கலைக்கழகத்தில் தனது சட்டப் பட்டத்தைப் பெற்றார்.

1984ஆம் ஆண்டு சட்டத்துறையில் நுழைந்த இவர், தன் குடும்பத்தில் இருந்து சட்டத் தொழிலுக்கு வந்த முதல் தலைமுறை வழக்கறிஞர் ஆவார். ஹிசார் மாவட்ட நீதிமன்றங்களில் குறுகிய கால பயிற்சிக்குப் பிறகு, பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் கையாளத் தொடங்கினார்.

உயர்நீதிமன்றத்தில், இவர் சேவைச் சட்டத்தில் ஒரு நிபுணராகத் தன் நற்பெயரைக் கட்டமைத்தார். பல்வேறு அரசு நிறுவனங்கள் (பல்கலைக்கழகங்கள், வாரியங்கள், வங்கிகள்) மற்றும் உயர் நீதிமன்றம் சார்பாக இவர் வழக்குகளைக் கையாண்டார். இவரது திறமையின் காரணமாக, 2000 ஆம் ஆண்டு ஜுலை 7ஆம் தேதி, ஹரியானா மாநிலத்தின் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார்.

ஒரு சட்டப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசிய இவர், தனது 'கவனமான சுய பரிசோதனை' பழக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். தன் தவறுகளையும் சிந்தனையில் உள்ள குறைபாடுகளையும் பதிவு செய்ய ஒரு நோட்டுப் புத்தகத்தைப் பராமரித்து வந்ததாகக் கூறினார். இது ஒரு இளம் வழக்கறிஞராகவும், தலைமை வழக்கறிஞராகவும் இருந்த காலத்தில் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு நீதிபதி சூர்ய காந்த் அவர்களின் தொழில் வாழ்க்கையின் ஆரம்ப ஆண்டுகளிலேயே, நீதித்துறையில் நிறுவன நம்பிக்கை மற்றும் சமூக அக்கறை குறித்த இவரது நிலைப்பாடு வெளிப்பட்டது: ஷாம் லால் –எ– ஹரியானா மாநில அரசு (2001) வழக்கில், லோக் அதாலத்–கள் (மக்கள் நீதிமன்றங்கள்) வழக்குகளை அதன் தகுதியின் அடிப்படையில் தீர்ப்பளிக்க முடியாது என்றும், அவற்றின் நோக்கம் சமரசத்திற்கு உதவுவதே என்றும் இவர் வாதிட்டார். இவரது சமர்ப்பிப்பை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

சுபாஷ் ஷர்மா (எ) சுபாஷ் சந்தர் –எ– ஹரியானா மாநில அரசு (2001) என்ற வழக்கில் ஒரு அமைச்சருக்கு எதிராக ஃபரிதாபாத் மாவட்டத்தில் சட்டவிரோதமாக கனிம வளங்கள் சுரண்டப்படுகிறது என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தபோது, இவர் மாநில அரசு சார்பில் உறுதியாக வாதாடினார். அதே சமயம், சட்டவிரோதமாக இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதையும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டார்.

நீதிமன்றம் அதன் சுயமாக எடுத்த (2004) வழக்கில், நீதிபதி நியமனம் தொடர்பான அவதூறு குற்றச்சாட்டுகளில் இரண்டு பத்திரிகையாளர்கள் மற்றும் ஒரு வழக்கறிஞர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அப்போது தலைமை வழக்கறிஞராக இருந்த நீதிபதி சூர்ய காந்த் அவர்கள், நீதிமன்றத்தின் வேண்டுகோளின் பேரில் (amicus curiae) 'நீதிமன்ற நண்பராகச்' செயல்பட்டார். இது நீதித்துறை இவரின் மீது கொண்டிருந்த அதீத நம்பிக்கையைக் காட்டுகிறது.

2004 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் தேதி, இவர் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றார். இக்காலக்கட்டத்தில் தான் இவர் தன் பெயருடன் இருந்த 'சர்மா' என்ற குடும்பப் பெயரை நீக்கிவிட்டு, சூர்ய காந்த் என்றே அழைக்கப்பட முடிவெடுத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஜஸ்வீர் சிங் –எ– பஞ்சாப் மாநில அரசு (2014) என்ற வழக்கில், ஆயுள் தண்டனை பெற்ற ஒரு தம்பதி செயற்கை கருத்தரிப்பு மூலம் குழந்தை பெறக் கோரியதை விசாரித்தார். சிறைவாசம் தனிப்பட்ட உரிமைகளை அணைத்துவிடாது என்று வலியுறுத்தி, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 21இன் கீழ் உள்ள வாழ்வுரிமை மற்றும் சுதந்திரத்தின் பாதுகாப்பிற்குள் அந்தக் கோரிக்கையை நிலைநிறுத்தினார். உடனடி நிவாரணம் மறுக்கப்பட்டாலும், குடும்ப சந்திப்புக் கொள்கை மற்றும் சிறைச் சீர்திருத்தக் குழுவை உருவாக்க அரசுக்கு உத்தரவிட்டு, கைதிகளின் உணர்ச்சிப்பூர்வமான வாழ்வை அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரித்த முதல் தீர்ப்புகளில் இதுவும் ஒன்றாகும்.

துப்புரவுப் பணியாளர்கள் சங்கம் எம்.சி.சண்டிகார்க் –எ– இந்திய அரசு (2008) என்ற வழக்கில், பாதாளச் சாக்கடைகளைச் சுத்தம் செய்யும் தொழிலாளர்களின் பணி நிலைமைகள் மனித கௌரவத்திற்கு ஒவ்வாதவை என்று மாண்புமிகு நீதிபதி சூர்ய காந்த் அவர்கள் சுட்டிக் காட்டினார். இது அரசியலமைப்புச் சட்டம் 21இன் கீழ் தொழில் உரிமைகளைப் பற்றியது என்று கூறி, இயந்திரமயமாக்கல் திட்டம், கட்டாயப் பாதுகாப்புக் கருவிகள், காப்பீடு மற்றும் மருத்துவ கண்காணிப்பு ஆகியவற்றை கட்டாயமாக்கினார்.

மூத்த நீதிபதிகள் மத்தியில் இருந்த சில சிக்கல்களால் சில மாத தாமதத்திற்குப் பிறகு, 2018ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றார். மே 2019 இல் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இவர் உயர்த்தப்பட்டபோது, சட்ட அறிவும், சிக்கலான பிரச்சினை களைக் கையாளும் திறனும் கொண்ட ஒரு 'சட்டவாதி மற்றும் யதார்த்தவாதி' என்று இவரது சகாக்களால் பாராட்டப்பட்டார். இவரது திறமை, நடத்தை மற்றும் நேர்மையை கொலீஜியம் அங்கீகரித்து உச்ச நீதிமன்றத்திற்குப் பரிந்துரைத்தது.

உச்ச நீதிமன்ற நீதிபதியாக இவரது பதவிக்காலத்தில், சமூகத்தின் சலுகை பெறாத மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு நீதி வழங்குவதில் இவர் தன் தாராள மனப்பான்மையைத் தொடர்கிறார்.

மாண்புமிகு நீதிபதி சூர்ய காந்த் அவர்கள், இந்திய உச்ச நீதிமன்றத்தின் 53வது தலைமை நீதிபதியாக 24 நவம்பர் 2025 அன்று பொறுப்பேற்றுள்ளார். இவர் ஹரியானா மாநிலத்திலிருந்து இந்தப் பதவியை அடையும் முதல் நபர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இவரது பதவிக்காலம், இவர் ஓய்வுபெறும் நாளான பிப்ரவரி 9, 2027 வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு தலைமை நீதிபதி சூர்ய காந்த் அவர்களின் தலைமையில், இந்திய நீதித்துறை மேலும் வளர்ச்சி அடையவும், சமூக நீதி செழிக்கவும், சட்டக்கதிர் மாத இதழ் உளமார வாழ்த்துகிறது.

– ஆசிரியர்

# பணிக்காலத்தில் ஏற்படும் இயலாமை காரணமாக மாற்றுத்திறனாளியை பணி நீக்கம் செய்தது தவறு - மாற்றுப்பணியில் தொடர வேண்டும்

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி திரு.ஜே.கே.மகேஸ்வரி,**
**நீதிபதி திரு.அரவிந்த் குமார்**
SLP (C) 36278/2017
**தீர்ப்பு நாள்: 01 ஆக 2025**
2025 Livelaw (SC) 763

**சி.ஹெச்.ஜோசப்** ...**மேல்முறையீட்டாளர்**

**–எதிர்–**

**தெலுங்கானா மாநில அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் சிலர்** ..**எதிர்மனுதாரர்கள்**

மனுதாரருக்காக:
**திரு.சி.மோகன் ராவ், மூத்த வழக்கறிஞர், திரு.ஆர்.சந்தானகிருஷ்ணன், வழக்கறிஞர், திரு லோகேஷ் குமார் ஷர்மா, வழக்கறிஞர் மற்றும் திரு.தர்மேந்திர குமார் சின்ஹா, வழக்கறிஞர்**

எதிர்மனுதாரர்களுக்காக:
**திரு.சத்யம் ரெட்டி சரசானி, மூத்த வழக்கறிஞர், திருமதி ஸ்ரீ ருமா சரசானி, திரு.சிஷிர்பினாகி, வழக்கறிஞர்**

## தீர்ப்பு

**நீதிபதி அரவிந்த்குமார்**

1. சிறப்பு அனுமதி கோரல் அனுமதிக்கப் படுகிறது.

2. இந்த மேல்முறையீட்டு மனுதாரர், தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கான ஹைதராபாத் உயர்நீதிமன்றம் (இனிமேல் ‘உயர்நீதிமன்றம்’ எனக் குறிப்பிடப் படுகிறது) W.A. No. 1343/2017 வழக்கில் 21.08.2017 அன்று அளித்த தீர்ப்பால் மனமு டைந்துள்ளார். அத்தீர்ப்பில், தெலுங்கானா மாநிலச் சாலைப் போக்குவரத்துக் கழகத்தால் (இனிமேல் ‘தெமாஅபோ கழகம்’ எனக் குறிப்பிடப்படுகிறது) அதாவது, மனுதாரர் எண் 1 தாக்கல் செய்த எழுத்து மூலமான மேல் முறையீடு அனுமதிக்கப்பட்டது. மேலும், நீ.பே. எண் 5164/2016 வழக்கில் 10.03.2016 அன்று தனி நீதிபதி பிறப்பித்த, மனுதாரர் எண் 1 இவருக்கு மாற்று வேலை வழங்க வேண்டும் என்ற உத்தரவு ரத்து செய்யப்பட்டது. அத்துடன், மாற்று வேலை கோரி மனுதாரர் எதிர்மனுதாரர் கழகத்திற்கு ஒரு விரிவான கோரிக்கையைச் சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டது.

**பொருண்மைகள்:**

3. இந்த மனுதாரர், ஆந்திரப் பிரதேச மாநிலச் சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 01.05.2014 அன்று, பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதி அளவுகோல்களைப் பூர்த்தி செய்தபின் நியமிக்கப்பட்டார். எதிர்மனுதாரர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான மருத்துவமனையின் மருத்துவ அலுவலரால் அவ்வப்போது நடத்தப் பட்ட மருத்துவப் பரிசோதனையின்போது, மனுதாரருக்கு ‘வண்ணக் குறைபாடு’ இருப்பது கண்டறியப்பட்டு, ‘ஓட்டுநர்’ பதவிக்கு அவர் தகுதி யற்றவர் என்று அறிவிக்கப்பட்டார். மனுதாரர் ‘ஓட்டுநர்’ பதவிக்கான தனது உடற்தகுதி குறித்த இந்தக் கருத்துக்கு எதிராக மேல்முறையீடு செய்தார். மேலும், அவர் ‘மருத்துவரீதியாகத் தகுதியற்றவர்’ என்று அறிவிக்கப்பட்டால், அவருக்கு மாற்று வேலை வழங்கப்பட வேண்டும் என்றும் கோரினார். மேல்முறையீட்டு அதிகாரி மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறை யீட்டை நிராகரித்தார். அதன் பிறகு, மனுதாரர் மருத்துவ வாரியத்திடம், கழகத்தைச் சேர்ந்த

மருத்துவமனை மூலம் தனது வழக்கைக் கருத்தில் கொள்ளுமாறு ஒரு கோரிக்கையைச் சமர்ப்பித்தார். மருத்துவ வாரியம் மனுதாரரின் வழக்கைப் பரிசீலித்த பின்னர், மருத்துவ அதிகாரி மற்றும் மேல்முறையீட்டு அதிகாரி ஆகியோரின் முடிவுகளை மீண்டும் வலியுறுத்தியது.

4. வண்ணக் குறைபாடுள்ள ஓட்டுநர்களுக்கு மாற்று வேலை வழங்க தற்போதைய விதிகள் வழிவகை செய்யவில்லை என்ற அடிப்படையில், மாற்று வேலை கோரிய மனுதாரரின் கோரிக்கை கழகத்தால் நிராகரிக்கப்பட்டது. கழகம், 27.01.2016 தேதியிட்ட உத்தரவு மூலம், 06.01.2016 முதல் மனுதாரரை ஓய்வு பெற உத்தரவிட்டு, அதற்கான கொள்கையின் கீழ் வழங்கப்பட்ட கூடுதல் பணப் பலன்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அவருக்கு அறிவுறுத்தியது.

5. மனுதாரர் 27.01.2016 தேதியிட்ட உத்தரவை எதிர்த்து நீ.பே.எண். 5164/2016 மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். தனது குறைபாடு ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995 (இனிமேல் 'சட்டம்' எனக் குறிப்பிடப்படுகிறது)இன் விதிகளின் கீழ் ஊனத்தின் வகையின் கீழ் வருவதால், தனக்கு மாற்று வேலை வழங்கும்படி கழகத்திற்கு உத்தரவிடக் கோரினார். மேலும், இது தன்னை பாகுபாடு காட்ட இயலாது என்றும், இத்தகைய பாகுபாடு சட்டத்தின் பிரிவு 47 மற்றும் இந்திய அரசியலமைப்பின் பிரிவு 14 மற்றும் பிரிவு 21 ஆகியவற்றை மீறுவதாகும் என்றும் வாதிட்டார். மனுதாரர், எதிர்மனுதாரர் கழகத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்திற்கும் இடையே 17.12.1979 தேதியிட்ட ஒப்பந்தத்தை நம்பினார். இந்த ஒப்பந்தத்தில், பிரிவு 14 என்ற ஒரு விதி உள்ளது. அது 'ஓட்டுநர்களுக்கு' மாற்று வேலை வழங்கப்படும் என்று கூறியது.

6. தனி நீதிபதி 10.03.2016 தேதியிட்ட உத்தரவு மூலம் மனு எண் 25577/2014ஐ அனுமதித்தார். அதில் 'வண்ணக் குறைபாடு' என்பதும் சட்டத்தின் விதிகளின் கீழ் உள்ள ஊனத்தின் வகையின்கீழ் வருகிறது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. தனி நீதிபதியின் இந்த உத்தரவால் பாதிக்கப்பட்ட எதிர்மனுதாரர் போக்குவரத்துக் கழகம், மேல்முறையீடு செய்தது. இந்த நீதிமன்றத்தின் மற்றொரு தீர்ப்பான ஆந்திரப் பிரதேச மாநிலச் சாலைப் போக்குவரத்துக் கழகம் சார்பாற்றம், அதன் நிர்வாக இயக்குநர் மற்றும் பிறர் –எதிர்– பி.எஸ். ரெட்டி மற்றும் அதனுடன் தொடர்புடைய வழக்குகளின் தீர்ப்பை சார்ந்து நின்று, இரு நீதியர் அமர்வு தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்தது. மேலும், கழகத்தின் விதிமுறைகள் மற்றும் திட்டங்களின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட பலனைப் பெறுவதற்கு மனுதாரர் கழகத்திற்கு ஒரு கோரிக்கை மனுவை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது.

**தரப்பினர்களின் சமர்ப்பிப்புகள்:**

7. மனுதாரர் சார்பாக ஆஜரான மூத்த வழக்கறிஞர் திரு. சி. மோகன் ராவ் பின்வருமாறு வாதிட்டார்:

7.1. தொழில் தகராறு சட்டம், 1947–இன் பிரிவு 12(3)இன் கீழ் ஆபிசாபோ கழகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு இடையே 17.12.1979 அன்று ஏற்படுத்தப்பட்ட இருதரப்பு ஒப்பந்தம் எதிர்மனுதாரர் கழகத்தை கட்டுப்படுத்தும். அதன் படி, கழகத்தின் 'ஓட்டுநராக' இருக்கும் இந்த மனுதாரருக்கு மாற்று வேலைக்கு உரிமை உண்டு, எனவே மாற்று வேலை கோரும் உரிமை அவருக்கு உள்ளது என்றார்.

7.2. உயர் நீதிமன்றம் மனுதாரரின் வழக்கை சரியாக பரிசீலித்திருக்க வேண்டும். பணியில் இருந்தபோது ஊனமுற்றவர்களின் பிரிவின்கீழ் மனுதாரரின் வழக்கு வருவதைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டது. இதனால் மனுதாரர் மாற்று வேலைக்கு உரிமை பெறுகிறார் என்றார்.

7.3. இந்த நீதிமன்றம் குணால் சிங் –எதிர்– இந்திய அரசு மற்றும் மற்றொருவர் வழக்கில் அளித்த தீர்ப்பில் தனிப்பட்ட ஒருவரின் ஊனத்தையும், பணியில் இருக்கும்போது பெறப்பட்ட ஊனத்தையும் வேறுபடுத்திக் காட்டியது. உயர்நீதிமன்றம் இந்தக் கொள்கைகளைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டது. எனவே,

பணியில் இருக்கும்போது ஊனம் அடைந்த மனுதாரருக்கு மாற்று வேலைக்கு உரிமை உண்டு.

7.4. இந்த மனுதாரர் சட்டத்தின் பிரிவு 47 இன் பலனைப் பெற உரிமை உண்டு என்றும், எனவே மாற்று வேலைக்கு அவருக்கு உரிமை உண்டு என்றும் உயர்நீதிமன்றம் பரிசீலித்திருக்க வேண்டும்.

7.5. மனுதாரர், 2023ஆம் ஆண்டின் சிவில் மேல்முறையீடு எண் 6785இல் முகமது இப்ராஹிம் –எதிர்– தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மற்றும் பிறர் வழக்கில் இந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் நம்பியிருந்தார். அதில், வண்ணக் குறைபாடுள்ள மனுதாரருக்கு மாற்று வேலை வழங்கும்படி எதிர்மனுதாரர் போக்குவரத்துக் கழகத்திற்கு இந்த நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

8. எதிர்மனுதாரர் கழகத்தின் சார்பாக ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு.சத்யம் ரெட்டி சரசானி, சர்ச்சைக்குரிய உத்தரவை ஆதரித்து, பின்வருமாறு வாதிட்டார்:

8.1. 17.12.1979 தேதியிட்ட இருதரப்பு ஒப்பந்தம் 22.12.1986 தேதியிட்ட மற்றொரு ஒப்பந்தத்தால் மாற்றப்பட்டது. ஓட்டுநர்களுக்கு மாற்று வேலை வழங்குவது தொடர்பான முந்தைய பிரிவு, 22.12.1986 தேதியிட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 5(d) இன் கீழ் பின்வருமாறு மாற்றப்பட்டது: '5(d) மருத்துவ ரீதியாகத் தகுதியற்ற ஓட்டுநர் – சாத்தியமான அளவிற்கு பொருத்தமான மாற்று வேலை அடையாளம் காணப்படும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. பொருத்தமான வேலைகளை அடையாளம் காண இயலாவிட்டால், அரசுக்கு அனுப்பப்பட்ட திட்டங்களின்படி கூடுதல் பணப் பலன், அரசின் ஒப்புதலுக்குப் பிறகு வழங்கப்படும்.'

8.2. மனுதாரர் கல்வித்தகுதி குறைவாகவும், தகுதியில்லாதவராகவும் இருப்பதால், 22.12.1986 தேதியிட்ட இருதரப்பு ஒப்பந்தத்தின் பிரிவு 5(d)இன் படி மாற்று வேலை வழங்கப்படக்கூடிய நபர்களின் பிரிவில் அவர் வரவில்லை. மேலும், மனுதாரருக்கு மாற்று வேலை வழங்க கழகத்தில் பொருத்தமான பதவி இல்லை என்பதால், மனுதாரரின் சேவைகளை முடிவுக்குக் கொண்டு வந்த கழகத்தின் முடிவு சரியானது. மாற்று வேலை வழங்கி மனுதாரரை நியமிக்க கழகத்திற்கு கடமையை நிர்ணயிக்கும் எந்த விதியும் ஒழுங்குமுறையில் இல்லை என்பதை நிரூபிக்க, கழகம் அதன் பணியாளர்களை நிர்வகிக்கும் ஒழுங்குமுறைகளை சார்ந்து தமது வாதங்களை முன்வைத்தது.

8.3. 'வண்ணக் குறைபாடு' என்ற சொல் சட்டத்தின் பிரிவு 2(i)இன் கீழ் வரையறுக்கப் பட்டுள்ள 'ஊனம்' என்ற வகையின் கீழ் வரவில்லை. எனவே சட்டத்தின் பிரிவு 47 பொருந்தாது. மேலும், உயர்நீதிமன்றம் முன் சொல்லப்பட்ட சிவில் மேல்முறையீடு எண் 3529/2017இல் வழங்கப்பட்ட தீர்ப்பு சரி யானது என்றும், எனவே அதை சார்ந்து நின்று உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சர்ச்சைக் குரிய உத்தரவை ஆதரிப்பதாகவும் எதிர்மனு தாரர் நிர்வாகத்தின் தரப்பில் வாதிடப் பட்டது.

8.4. பிரிவு 2(i)இல் கொடுக்கப்பட்டுள்ள வரையறையைப் படிக்கும்போது, 40%க்கும் அதிகமான ஊனம் உள்ளவர்களே 'ஊனமுற்ற நபர்கள்' என்ற பிரிவில் வருவார்கள் என்று காணப்படுகிறது. எனவே, மனுதாரரின் வழக்கு 'ஊனமுற்ற நபர்கள்' என்ற பிரிவில் வரவில்லை.

8.5. கழகத்தால் மருத்துவரீதியாக பணிக்கு இயலாதவர்களாக அறிவிக்கப்பட்ட பணியாளர் களின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கு வேலை வழங்கும் ஒரு திட்டத்தையும் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. எனவே மனுதாரர் அதையே தேர்வு செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9. தரப்பினர்களுக்காக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டறிந்த பின்னரும், பதிவில் உள்ள ஆவணங்களைப் பரிசீலித்த பின்னரும், பின்வரும் கேள்விகள் எங்களின் பரிசீலனைக்கு எழுந்துள்ளன:

- வண்ணக் குறைபாடு காரணமாக, மாற்று வேலை வழங்கப்படாமல், மருத்துவ அடிப்படை யில் மனுதாரர் ஓய்வு பெறச் செய்யப்பட்டது. பொருந்தக்கூடிய சேவை விதிமுறைகள் மற்றும்

கட்டாய ஒப்பந்தங்களின் அடிப்படையில் சட்டப்படி நிலைத்திருக்கக் கூடியதா?

• தொழில் தகராறு சட்டம், 1947-இன் பிரிவு 12(3)இன் கீழ் செயல்படுத்தப்பட்ட 17.12.1979 தேதியிட்ட சமரச இருதரப்பு ஒப்பந்தத்தின் பிரிவு 14, அதன் பின் வந்த 1986 ஒப்பந்தம் மற்றும் உள்நிர்வாக சுற்றறிக்கைகள் இருந்தபோதிலும், செல்லுபடியாகக்கூடியதாகவும், கட்டாயப்படுத்துவதாகவும், செயல்படுத்தக் கூடியதாகவும் நீடிக்குமா?

• சட்டம், கொள்கை மற்றும் இயற்கை நீதியின் கொள்கைகளின்படி தேவைப்படும் மனுதாரருக்கான மாற்று வேலை வாய்ப்புகளைப் பற்றி எதிர்மனுதாரர் நம்பகமான மதிப்பீடு மேற்கொள்ளும் வகையில் தங்கள் கடமையை நிறைவேற்றினார்களா?

• ஒரு கட்டாயத் தொழில்துறை ஒப்பந்தத்தின் கீழ் மனுதாரரின் தனிப்பட்ட உரிமைகளின் பின்னணியில், உயர்நீதிமன்றம் பி.எஸ். ரெட்டி (மேற்கூறிய)வழக்குத் தீர்ப்பை நம்பியது சட்டப்படி நிலைத்திருக்குமா?

10. இந்த வழக்கில் எழும் சிக்கல்களைப் பற்றிய விரிவான பகுப்பாய்வைத் தொடங்குவதற்கு முன், உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய உத்தரவை ரத்து செய்யவும், இந்த மனுவை அனுமதிக்கவும் எங்களை கட்டாயப்படுத்தும் முக்கிய காரணங்களைச் சுருக்கமாகக் கூறுவது பொருத்தமானது என்று நாங்கள் கருதுகிறோம். பின்வரும் காரணங்களுக்காக நாங்கள் அவ்வாறு செய்கிறோம்:

10.1. முதலாவதாக, மனுதாரர் வாகனம் ஓட்டாத ஒரு பதவிக்கு மறுபணி செய்யப்பட விருப்பம் தெரிவித்தபோதிலும், மாற்று வேலையின் சாத்தியக்கூறுகளை அடையாளம் காண அல்லது மதிப்பீடு செய்ய எதிர்மனுதாரர் போக்குவரத்துக் கழகம் எந்தவிதமான ஆதாரப்பூர்வமான முயற்சியும் இல்லாமல், வண்ணக் குறைபாடு என்ற அடிப்படையில் மனுதாரர் பணியிலிருந்து ஓய்வு பெறச் செய்துள்ளது. அத்தகைய செயலற்ற தன்மை சட்டபூர்வ கடமை மற்றும் நிர்வாக நேர்மை ஆகிய இரண்டையும் மீறுவதாகும்.

10.2. இரண்டாவதாக, தொழில் தகராறு சட்டம், 1947-இன் பிரிவு 12(3)இன் கீழ் செயல்படுத்தப்பட்ட 17.12.1979 தேதியிட்ட இருதரப்பு சமரச ஒப்பந்தத்தின் பிரிவு 14 இலிருந்து மனுதாரருக்கு மறுபணி செய்வதற்கான உரிமை எழுகிறது. இது வண்ணக் குறைபாடுள்ளதாக அறிவிக்கப்பட்ட ஓட்டுநர்களுக்கு ஊதியப் பாதுகாப்பு மற்றும் சேவைத் தொடர்ச்சி ஆகியவற்றுடன் மாற்று வேலையை வழங்க குறிப்பாக வழிவகை செய்கிறது. இந்தக் கூறு செல்லுபடியாகக் கூடியதாகவும் மற்றும் செயல்படுத்தக்கூடியதாகவும் நீடிக்கிறது.

10.3. மூன்றாவதாக, பின்வந்த 22.12.1986 தேதியிட்ட ஒப்பந்தம், 1979 ஒப்பந்தத்தை வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ரத்து செய்யவில்லை. பிந்தைய ஒப்பந்தம் பொதுவான வரம்பைக் கொண்டதாகவும், முந்தைய ஒப்பந்தம் ஒரு குறிப்பிட்ட வகையான ஊனத்தை (வண்ணக் குறைபாடு) பற்றியதாகவும் இருப்பதால், இரண்டு ஒப்பந்தங்களும் இணக்கமாகச் செயல்படுகின்றன. எனவே, நிவாரணத்தை மறுப்பதற்காக பதிலளிக்கும் தரப்பினர் 1986 ஒப்பந்தத்தை நம்பியிருப்பது தவறானது.

10.4. நான்காவதாக, வண்ணக் குறைபாடுள்ள ஓட்டுநர்களுக்கு மாற்று வேலை வழங்குவதைத் தடுக்கக் கழகத்தால் 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட உள் சுற்றறிக்கைகள், தொழில் தகராறு சட்டத்தின் கீழ் ஒரு சட்டபூர்வமான ஒப்பந்தத்தால் உருவாக்கப்பட்ட கட்டாயச் சேவை நிபந்தனைகளை மீற முடியாத நிலையில் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்கள் ஆகும்.

10.5. ஐந்தாவதாக, உயர் நீதிமன்றத்தின் இரு நீதியர் அமர்வு, சட்டத்தின் பிரிவு 47 இன் வரையறுக்கப்பட்ட வரம்பைக் கையாண்ட பி.எஸ். ரெட்டி (மேற்கூறிய) வழக்கில் உள்ள தீர்ப்பைப் பயன்படுத்துவதில் தவறிழைத்துள்ளது. மேலும், தொழில்துறை ஒப்பந்தங்களின் கீழ் தனிப்பட்ட முறையில் எழும் கோரிக்கைகளைக் கருத்தில் கொள்ளவில்லை. தற்போதைய வழக்கு முற்றிலும் வேறுபட்ட சட்ட அடிப்படையைக் கொண்டுள்ளது.

11. இந்தச் சிக்கல்களில் ஒவ்வொன்றையும் இப்போது விரிவாக ஆராயத் தொடர்கிறோம்.

**பிரச்சனை 1**

12. மனுதாரர் தெலுங்கானா மாநிலச் சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் ஒரு ஓட்டுநராக நியமிக்கப்பட்டார், அவர் பணியில் சேர்ந்தபோது மருத்துவப் பரிசோதனை செய்யப் பட்டுத் தகுதியானவர் என்று அறிவிக்கப்பட்டார். மேலும், பின்னர் வழக்கமான மருத்துவப் பரிசோதனையின்போது வண்ணக் குறைபாடுள்ள தாகக் கண்டறியப்படும் வரை அவர் தனது கடமைகளைச் செய்தார் என்பது மறுக்க முடியாத உண்மை நிலையாகும். ஓட்டுநர் பணிகளுக்குத் தகுதியற்றவர் என்று அறிவித்த மருத்துவ அறிக்கையைத் தொடர்ந்து, ஆந்திர மாநில அரசுப் போக்குவரத்துக் கழக பணியாளர்கள் (சேவை) ஒழுங்குமுறைகள், 1964இன் விதி 6A(5)(b)இன் கீழ் அவர் பணியிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்பட்டார். வண்ணக் குறைபாடு காரணமாக மருத்துவ ரீதியாகத் தகுதியற்றதாகக் கண்டறியப்பட்ட ஊழியர்களுக்கு மாற்று வேலை வழங்கப்படாது, மேலும் அவர்களுக்கு ‘கூடுதல் பணப் பலன்’ வழங்கப்பட்டு ஓய்வு பெறச் செய்யப் படுவார்கள் என்று கூறும் 10.11.2014 மற்றும் 14.05.2015 தேதியிட்ட உள்சுற்றறிக்கை களைக் குறிப்பிட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த நடவடிக்கையை நியாயப்படுத்த முயன்றனர்.

13. இந்த அணுகுமுறையின் முக்கிய சட்டக் குறைபாடு என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட பதவிக்கு மருத்துவ ரீதியாகத் தகுதியற்றவர் என்பது பொதுச் சேவைக்கு முற்றிலும் இயலாமையைக் குறிக்கும் என்ற அனுமானத்தில் உள்ளது. வண்ணக் குறைபாடு, வாகனம் ஓட்டுவதற்குத் தகுதியிழப்பு என்றாலும், மற்ற வாகனம் ஓட்டாத எந்தப் பாத்திரத்திலும் சேவை செய்ய மனுதாரரைத் தகுதியற்றவராக ஆக்க வில்லை. அவர் முழுமையாக இயலாமை கொண்டவர் என்றோ அல்லது மற்ற கடமை களைச் செய்ய இயலாதவர் என்றோ அறிவிக்கப் பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை. குணால் சிங் (மேற்கூறிய) வழக்கில் இந்த நீதிமன்றம், ஒரு ஊழியர் பணியில் இருக்கும்போது ஒரு ஊனத்தை அடையும்போது, அத்தகைய பதவி எதுவும் இல்லாவிட்டால், பொருத்தமான மாற்று வேலை வழங்குவதன் மூலம் முதலாளி அந்த ஊழியரைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளித்தது. இந்த வழக்கில், மனுதாரர் ஷ்ராமிக் பதவிக்கு மறுபணி செய்யக் கோரி யிருந்தார். இது, அதன் இயல்பு காரணமாக, சாதாரண வண்ணங்களை தெளிவாக பிரித்த றியும் பார்வையை கோரவில்லை. அவரது பொருத்தத்தை மதிப்பிடவோ அல்லது அத்தகைய பதவிகளின் இருப்பை ஆராயவோ கழகம் எந்த முயற்சியும் மேற்கொள்ள வில்லை.

14. மேலும், விதி 6A(5)(b) ஆனது மருத்துவக் காரணங்களுக்காக ஒரு ஓட்டுநர் ஓய்வு பெறும் பட்சத்தில், ஒரு ஊழியர் பெறக் கூடிய பணி ஓய்வுப் பலன்களின் அளவை மட்டுமே வழங்கு கிறது என்று காணப்படுகிறது. தொழில் தகராறு சட்டம், 1947இன் பிரிவு 12(3)இன் கீழ் முதலாளிக்கும் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தொழிற்சங்கத்திற்கும் இடையே 17.12.1979 அன்று போடப்பட்ட இருதரப்பு சமரச ஒப்பந்தத்தின் பிரிவு 14 ஆனது. ‘வண்ணக் குறைபாடு’ உள்ளதாகக் கண்டறியப் பட்ட ஓட்டுநர்களுக்கு மாற்று வேலை வழங்கப் படும் மற்றும் அனைத்துச் சேவைப் பலன்களும் பாதுகாக்கப்படும் என்பதைக் குறிக்கிறது.

15. உடனடியாகப் பார்ப்பதற்காக, 17.12.1979 தேதியிட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 14 கீழே பிரித்தெடுக்கப்பட்டுள்ளது:

‘14. வண்ணக் குறைபாடுள்ள ஓட்டுநர்கள்

a) நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த இந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டுள்ளது. காலமுறைப் பரிசோதனையின்போது வண்ணக் குறை பாடுள்ளதாகக் கண்டறியப்பட்ட ஓட்டுநர்களுக்கு மாற்று வேலை வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. மாற்று வேலை வழங்கும் போது, தகுதியிழந்த நேரத்தில் ஓட்டுநர் பெற்ற ஊதிய விகிதம் மற்றும் ஊதியம் பாதுகாக்கப்படும். 16.08.1976 தேதியிட்ட சுற்றறிக்கை எண் P1/210(1)/76&PD க்குப் பிறகு எழும் வழக்குகளை உள்ளடக்கிய சுற்றறிக்கை வழிமுறைகள் இது தொடர்பாக வெளியிடப்படும்.

b) மாற்று வேலை வழங்கப்பட்டாலும், ஓட்டுநர்களின் பழைய பணிமூப்பு ஓட்டுநர் பிரிவில் தொடரும், மேலும் அவர்கள் பணியாளர் மற்றும் ஆட்சேர்ப்பு விதிமுறைகளின்படி பொருத்தமான நேரத்தில் தங்கள் அடுத்த பதவி உயர்வுகளைப் பெறுவார்கள்.

c) காலமுறை மருத்துவப் பரிசோதனையின் போது வண்ணக் குறைபாடுள்ளதாகக் கண்டறியப் பட்ட ஓட்டுநர்களுக்கு, டிப்போக்களில் அத்தகைய பணிகள் கிடைப்பதைப் பொறுத்து பகல் நேரப் பணிகள் வழங்கப்படும்.

d) இஷாரா சோதனைக்கு (Ishara test) மாற்றுச் சோதனையைக் கண்டறிவது குறித்த சங்கத்தின் ஆலோசனையைப் பொறுத்தவரை, துணைத் தலைவர் மற்றும் பொது மேலாளர், அரசுப் போக்குவரத்துக் கழக மருத்துவமனையின் கண் நிபுணர் டாக்டர் ஈ. பாபு ராவை கோருவதற்கும், மேலும் சில கண் நிபுணர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னரும், பயணிகள் மற்றும் வாகனத்தின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இஷாரா சோதனையைத் தொடர வேண்டுமா அல்லது வண்ணக் குறைபாட்டைத் தீர்மானிக்கப் பொருத்தமான மாற்றுச் சோதனை எதுவும் கிடைக்கிறதா என்று முடிவு எடுக்கப்படும் என்று ஒப்புக்கொண்டார்.'

16. இருப்பினும், எதிர்மனுவில் காணப்படுவது போல, போக்குவரத்துக் கழகம் பிற்கால ஒப்பந்தமான 22.12.1986 தேதியிட்ட இருதரப்பு ஒப்பந்தத்தை நம்பி, இந்த வழக்கில் மனுதாரரால் எழுப்பப்பட்ட மாற்று வேலைக்கான கோரிக்கையைத் தடுக்க முயன்றுள்ளது. 22.12.1986 தேதியிட்ட ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்தால், அது 09.10.1985 மற்றும் 10.03.1986 ஆகிய தேதிகளில் செய்யப்பட்ட இரண்டு முந்தைய ஒப்பந்தங்களுடன் தொடர்புடையது என்பதைக் குறிக்கும். 17.12.1979 தேதியிட்ட சமரச ஒப்பந்தம் 1986 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தால் முறியடிக்கப்பட்டது என்று கழகத்தால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் மனுவில் ஒரு வாதம் எழுப்பப்பட்ட போதிலும், பின்வரும் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுக்காக நாங்கள் அத்தகைய வாதத்தை ஏற்றுக்கொள்ள தயங்குகிறோம்:

16.1. முதலாவதாக, 22.12.1986 தேதியிட்ட ஒப்பந்தத்தில் 17.12.1979 தேதியிட்ட ஒப்பந்தத்தைக் குறிப்பிடவில்லை.

16.2. இரண்டாவதாக, 17.12.1979 ஒப்பந்தத்தில் 'வண்ணக் குறைபாடுள்ள ஓட்டுநர்கள்' (பிரிவு 14) பற்றித் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இது மேலே பிரித்தெடுத்து கொடுக்கப் பட்டுள்ளது. உண்மையில், மனுதாரரின் கோரிக்கையை நிராகரிக்க போக்குவரத்துக் கழக நிர்வாகத்தால் பெரிதும் நம்பப்பட்ட 22.12.1986 தேதியிட்ட இருதரப்பு சமரச ஒப்பந்தத்தின் பிரிவு 5(d), மனுதாரருக்குப் பலனளிக்கும் வகையில் கவனிக்கப்பட வேண்டும். அது பின்வருமாறு கூறுகிறது:

**5. ஓட்டுநர்களின் சிக்கல்கள்:**

'...d) மருத்துவ ரீதியாகத் தகுதியற்ற ஓட்டுநர்களுக்கு சாத்தியமான அளவிற்கு பொருத்தமான மாற்று வேலைகள் அடையாளம் காணப்படும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. பொருத்தமான வேலைகளை அடையாளம் காண இயலாவிட்டால், அரசுக்கு அனுப்பப்பட்ட திட்டங்களின்படி கூடுதல் பணப்பலன், அரசின் ஒப்புதலுக்குப் பிறகு வழங்கப்படும்.'

மேற்கண்ட பிரிவைப் பரிசீலனை செய்தால், பொருத்தமான மாற்று வேலைகள் அடையாளம் காணப்பட வேண்டும் என்றும், அத்தகைய வேலையை அடையாளம் காண இயலாத பட்சத்தில் மட்டுமே, அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்ட திட்டத்தின்படி கூடுதல் பணப்பலன் அரசாங்கத்தின் ஒப்புதலுக்குப் பிறகு வழங்கப் படும் என்றும் தெரியவரும்.

16.3. மூன்றாவதாக, 22.12.1986 தேதியிட்ட ஒப்பந்தம் 17.12.1979 தேதியிட்ட சமரச ஒப்பந்தத்தை குறிப்பாக முறியடிக்கவில்லை. வண்ணக் குறைபாடு காரணமாகத் தகுதியற்றதாக அறிவிக்கப்பட்ட ஓட்டுநர்களுக்கு வழங்கப்பட்ட மாற்று வேலைக்கான பலன், அதுவரை வழங்கப்பட்டு வந்த நிலையில், 10.11.2014 தேதியிட்ட ஒரு கடிதத்தின் மூலம் மட்டுமே பறிக்க முயலப்பட்டுள்ளது. மேற்கூறிய

10.11.2014 தேதியிட்ட கடிதம் வெளியிடப்பட்ட தற்கான ஒரே காரணம், இந்த நீதிமன்றம் இந்திய அரசு –எதிர்– தேவேந்திரகுமார் பந்த் மற்றும் பிறர் வழக்கில் வகுத்த கொள்கையை நம்பியதன் விளைவாகும்.

17. எதிர்மனுதாரர் தரப்பினரின் தற்காப்பு வாதம் என்பது, உள் சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குமுறை 6A(5)(b)–இன் இயந்திரத்தன மான வாசிப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இது மேற்சொன்ன கடமையை முறியடிக்க முடியாது. மருத்துவக் காரணங்களுக் காக ஓய்வு பெறுவது என்பது கடைசி வழியாகவே இருக்க வேண்டும். மேலும் மாற்று வேலைக் கான அனைத்து நியாயமான வழிகளையும் முதலாளி ஆராய்ந்த பின்னரே இருக்க வேண்டும். இந்த கொள்கை, இப்போது பிரிவுகள் 14 மற்றும் 21இன் கீழ் சமத்துவத்தின் ஒரு அம்சமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 'நியாயமான இடமளித்தல்' என்ற கருத்துக்கு உள்ளார்ந்த தாகும். மருத்துவரீதியான பணி ஓய்வை நாடுவதற்கு முன் மாற்று வேலை வாய்ப்பை ஆராயத் தவறுவது வெறும் நடைமுறைத் தவறு மட்டுமல்ல – அது மனுதாரரின் வாழ்வாதார உரிமை மற்றும் சமமான வாய்ப்பை மீறும் ஒரு உண்மையான சட்டவிரோதச் செயலாகும்.

18. மனுதாரர் தொழில் தகராறு சட்டம், 1947–இன் பிரிவு 12(3)இன் கீழ் கழகத்திற்கும் அதன் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட 17.12.1979 தேதியிட்ட இருதரப்பு சமரச ஒப்பந்தத்தை நம்பியுள்ளார். ஏற்படுத்தப்படும் ஒப்பந்தம் என்பது வெறும் நிர்வாகச் சுற்றறிக்கை அல்ல. அது தொழிலாளர் மற்றும் நிர்வாகத்திற்கு இடையே உருவாக்கப்பட்ட ஒரு கட்டாயச் சட்டபூர்வ ஒப்பந்தமாகும்.

19. 17.12.1979 தேதியிட்ட சமரச இரு தரப்பு ஒப்பந்தத்தின் பிரிவு 14 பின்வருமாறு வழங்குகிறது: '(a)...காலமுறைப் பரிசோதனை யின்போது வண்ணக் குறைபாடுள்ளதாகக் கண்டறியப்பட்ட ஓட்டுநர்களுக்கு மாற்று வேலை வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது. மாற்று வேலை வழங்கும்போது, தகுதியிழந்த நேரத்தில் ஓட்டுநர் பெற்ற ஊதிய விகிதம் மற்றும் ஊதியம் பாதுகாக்கப்படும்...'

20. இந்த விதி தொழில் தகராறு சட்டம், 1947–இன் பிரிவு 12(3)இன் கீழ், தொழிலாளர் உதவி ஆணையாளர் முன் நடைபெற்ற சமரச நடவடிக்கைகளின்போது முடிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் இணைக்கப்பட்டது. சட்டத்தின் பிரிவு 12(3)இன் காரணமாக, அத்தகைய ஒப்பந்தம் சர்ச்சைக்குரிய தரப்பினர் களை மட்டுமல்லாமல், அந்த நிறுவனத்தின் அனைத்துத் தொழிலாளர்களையும் மற்றும் அவர்களின் வாரிசுகளையும் கட்டுப்படுத்துகிறது.

21. இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவது என்பது 22.12.1986 தேதியிட்ட பிந்தைய ஒப்பந்தத்தால் தடைசெய்யப்படவில்லை. இருப்பினும் இதுவே இந்தத் துறையை நிர்வகிப்பதாக போக்குவரத்துக் கழக நிர்வாகம் கூறுகிறது. 1986 ஒப்பந்தத்தின் பிரிவு 5(d) மருத்துவ ரீதியாகத் தகுதியற்ற ஓட்டுநர்களுக்கு, 'சாத்தியமான அளவிற்கு' மாற்று வேலை வழங்கப்படலாம் என்றும், சாத்தியமற்ற நிலை யில், கூடுதல் பணப் பலன் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கிறது. முக்கியமாக, இந்த விதியில் 1979 ஒப்பந்தத்தின் பிரிவு 14–ஐ ரத்து செய்யும் அல்லது மாற்றியமைக்கும் எந்த வெளிப்படையான ஷரத்தும் சொல்லப்பட வில்லை. 1979 ஒப்பந்தத்தின் பிரிவு 14 ஆனது. ஊதியப் பாதுகாப்பு மற்றும் பணி மூப்பின் தொடர்ச்சி ஆகியவற்றுடன், வண்ணக் குறைபாடுள்ள வழக்குகளில் மாற்று வேலை வழங்க வேண்டும் எனக் குறிப்பாக தெரிவிக்கிறது. இது காலாவதியானதும் அல்ல, தெளிவற்றதும் அல்ல. இது 22.12.1986 தேதியிட்ட பிந்தைய ஒப்பந்தத்தால் முறியடிக்கப்பட்டது என்ற கழக நிர்வாகத்தின் சமர்ப்பிப்பு தவறானது மற்றும் அவர்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டதை காண்பிக்கிறது. முதலாளிக்கும் தொழிலாளர் களுக்கும் இடையிலான இருதரப்பு ஒப்பந்தமாக இருப்பதால், இந்தத் தொழிற்தாவா ஒப்பந்தம் சட்டபூர்வமான சக்தியைக் கொண்டுள்ளது மற்றும் இருதரப்பையும் கட்டுப்படுத்துகிறது. தொழிற்தாவாச் சட்டத்தில், ஒரு முந்தைய ஒப்பந்தத்தில் உள்ள ஒரு பயனுள்ள விதி வெளிப்படையான ரத்து அல்லது முரண்பாடு இல்லாவிட்டால், அது முறியடிக்கப் பட்டதாகக் கருதப்பட முடியாது. இந்த வழக்கில் அத்தகைய

முரண்பாடு எதுவும் இல்லை. கூடுத லாக, 1986ஆம் ஆண்டின் கூற்று பொதுவான இயல்புடையது, மருத்துவ ரீதியாகத் தகுதியற்ற ஓட்டுநர்களை ஒரு வகுப்பாகக் கையாள்கிறது. 1979 ஆம் ஆண்டின் கூற்று குறிப்பிட்டது, வண்ணக் குறைபாட்டை மட்டுமே கையாள்வது. ஒரு பொதுவான விதி ஒரு குறிப்பிட்ட விதியை முறியடிக்காது என்ற கொள்கையைப் பயன் படுத்துவதன் மூலம், 1979ஆம் ஆண்டின் கூற்று வண்ணக் குறைபாடுள்ள ஓட்டுநர்களின் வழக்கைத் தொடர்ந்து நிர்வகிக்கிறது. 1986 ஒப்பந்தத்தில் முடிவுக்குக் கொண்டுவரும் விதி இல்லாதது, அத்துடன் 1986 க்குப் பிறகும் மற்ற வழக்குகளில் பிரிவு 14-ஐ கழகம் தொடர்ந்து கடைப்பிடிப்பது, முந்தைய ஒப்பந்தம் செயல்பாட்டில் இருந்தது என்பதை உறுதிப் படுத்துகிறது. அதன்படி, 1986 ஒப்பந்தம் 1979 ஒப்பந்தத்தின் பிரிவு 14-ஐ வெளிப்படை யாக நீக்கவில்லை அல்லது செல்லாததாக ஆக்கவில்லை என்று நாங்கள் கண்டறிகிறோம்.

22. தொழில் தகராறு சட்டம், பிரிவு 12(3) இன் கீழ் செய்யப்படும் ஒப்பந்தங்கள் நிர்வாக வசதிகள் அல்ல. அவை பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்ட நீதியைப் பிரதிபலிக்கும் சட்டபூர்வ ஆவணங்கள், மேலும் அவை சட்டம் மற்றும் அதன் அதிகாரத்தின் மூலம் முதலாளி மற்றும் ஊழியர் இருவரையும் கட்டுப்படுத்து கின்றன. அத்தகைய ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட உரிமைகளை உருவாக்கும்போது, வெளிப்படை யாக ரத்து செய்யப்படாவிட்டால் அல்லது நிரூபிக்கப்பட்டால் ஒழிய, நீதிமன்றங்கள் அவற்றுக்கு நோக்கபூர்வமான விளைவைக் கொடுக்க வேண்டும். அவற்றின் விதிமுறைகள் உள் கொள்கை அல்லது அதற்கு முரணாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளால் முறியடிக்கப் படக் கூடாது.

23. மேலும், 10.11.2014 மற்றும் 14.05.2015 தேதியிட்ட கழகத்தின் உள் சுற்றறிக்கைகள், வண்ணக் குறைபாடுள்ள ஓட்டுநர்களுக்கு மாற்று வேலையை மறுக்க முயல்வதோடு, அவர்களை கூடுதல் பணப் பலனுக்குள் கட்டுப்படுத்துகின்றன. அவை நிர்வாக இயல்புடையவை மற்றும் பிரிவு 12(3) இன் கீழ் ஒரு சட்டபூர்வ ஒப்பந்தத்தின் கட்டாய விளைவை மீற முடியாது. எனவே, பிரிவு 14-ஐப் புறக்கணித்து உள் வழிமுறைகளை எதிர்மனுதாரர் தரப்பு நம்புவது நடைமுறை ரீதியாகவும் உண்மையிலும் செல்லாதது ஆகும்.

24. பதிவில் இருந்து பார்க்கும்போது, மனுதாரரை வாகனம் ஓட்டாத ஒரு பதவிக்கு நியமிக்கும் சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்கு எதிர்மனுதாரர் போக்குவரத்துக் கழகம் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பது தெளிவாகிறது. மனுதாரர் தொடர்பான எந்தக் கோப்பு குறிப்பு, குழு அறிக்கை, காலியிட அறிக்கை அல்லது பொருத்தமான மதிப்பீடு எதுவும் இல்லை. ஷ்ராமிக் பதவியைக் கோரிய அவரது கோரிக்கை பதிலளிக்கப்படாமல் இருந்துள்ளது. எந்தவொரு ஒப்பீட்டு மதிப்பீடும் நடத்தப்படவில்லை, மேலும் தனிப்பட்ட விசாரணை எதுவும் நடத்தப்பட வில்லை. முன் வைக்கப்பட்ட ஒரே நியாயம் என்னவென்றால், கழகத்தின் சுற்றறிக்கைகள் அத்தகைய மாற்று வேலைக்கு தடை விதிக்கின்றன என்பதே ஆகும்.

25. அத்தகைய செயலற்ற தன்மை முற்றிலும் நியாயமற்றது. 1986 ஒப்பந்தத்தின் பொருந்தக்கூடிய தன்மையை ஏற்றுக் கொண்டாலும், மாற்று வேலைகள் 'சாத்தியமான அளவிற்கு' அடையாளம் காணப்பட வேண்டும் என்று அது வெளிப்படையாகக் கட்டளை யிடுகிறது. இந்த சொற்றொடர், கிடைக்கக்கூடிய பதவிகளை ஆராய்வதற்கான ஒரு செயலிலுள்ள, ஆவணப் படுத்தப்பட்ட முயற்சியை ஊகிக்கும். இந்தக் கடமையை நிறைவேற்றத் தவறியது, ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மட்டுமல்லாமல், ஒரு நபரின் வாழ்வாதாரத்தை பறிப்பதற்கு முன், பொருத்த மான விஷயங்களைச் சேகரித்து பரிசீலிக்க வேண்டும் என்று கோரும் இயற்கை நீதியின் கொள்கையையும் மீறுவதாக அமைகிறது.

26. பொருத்தமான மாற்றுப் பதவி எதுவும் கிடைக்கவில்லை அல்லது நியாயமான முறை யில் உருவாக்க முடியவில்லை என்பதை நிரூபிக்க வேண்டிய சுமை ஊழியர் மீது அல்ல – கழக நிர்வாகத்தின் மீது உள்ளது. ஒரு மருத்துவச் சான்றிதழின் வெறுமையான அழைப்பு அல்லது ஒரு சுற்றறிக்கையின் மௌனம், இணக்கத்தை ஏற்படுத்தாது.

செயலற்ற தன்மை நடுநிலைமை அல்ல; இதுபோன்ற சமயங்களில், இது ஒரு வகையான நிறுவனம் தனது கடமையிலிருந்து விலகிக் கொள்வதன் வடிவமாகும்.

27. இந்த வழக்கில், காலியிடங்களின் இருப்பு, பணிகளின் பொருந்தும் தன்மை அல்லது மனுதாரரின் தகுதிகள் போன்ற மிக அடிப்படையான காரணிகளைக் கூட எதிர்மனு தாரர்கள் ஆராய்ந்தார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இந்த மொத்தத் தோல்வி 1979 அல்லது 1986 கட்டமைப்பிற்கு இணங்குவதாக கழகம் கூறும் கூற்றை பலவீனப்படுத்துகிறது. மேலும் மனுதாரரின் கோரிக்கையைச் சரியான கண்ணோட்டத்தில் பரிசீலிக்கத் தவறியதற்காக பணி முடிவிற்கு கொண்டுவந்த உத்தரவை செல்லாததாக்குகிறது.

28. இந்த நீதிமன்றத்தின் பி.எஸ். ரெட்டி (மேற்கூறப்பட்டது) வழக்கில் உள்ள முடிவை நம்பி, உயர் நீதிமன்றத்தின் இரு நீதியர் அமர்வு தனி நீதிபதியால் வழங்கப்பட்ட நிவாரணத்தை ரத்து செய்தது. அதில், ஊனமுற்றோர் சட்டம், 1995 இன் பிரிவு 47இன் பாதுகாப்பு அந்தச் சட்டத்தின் பிரிவு 2(i)இன் கீழ் பட்டியலிடப் பட்டுள்ள ஊனங்களுக்கு மட்டுமே வரையறுக்கப் பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருப்பினும், மனுதாரரின் உரிமைகள் பிரிவு 47இலிருந்து மட்டுமல்ல, தொழில் தகராறு சட்டம், 1947 இன் பிரிவு 18(3) இன் கீழ் சுயாதீனமான சட்டபூர்வமான சக்தியைப் பெற்றுள்ள ஒரு ஒப்பந்த ஷரத்தி லிருந்து எழுகின்றன என்பதால், இந்தத் தீர்ப்பை இந்த வழக்குக்குப் பயன்படுத்துவதில் இரு நீதியர் அமர்வு தவறிழைத்துள்ளது.

29. பி.எஸ். ரெட்டி (மேற்கூறப்பட்டது) தீர்ப்பு, பிரிவு 12(3)இன் கீழ் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தத்தில் உள்ள ஒரு பிரிவைச் செயல் படுத்துவது குறித்தோ அல்லது அதன் தொழிலாளர் களுடனான இருதரப்பு ஒப்பந்தங் களின் கீழ் கழகத்தின் கடமைகள் குறித்தோ விவாதிக்க வில்லை. உயர்நீதிமன்றம் ஊனமுற்றோர் சட்டத்தின் கீழ் உள்ள சட்டபூர்வமான உரிமை களுக்கும், ஒப்பந்தங்கள் மூலம் செயல்படுத்தக் கூடிய ஒப்பந்தச் சேவை நிபந்தனைகளுக்கும் இடையேயான அடிப்படைக் வேறுபாட்டைக் கவனிக்கத் தவறிவிட்டது. சரியான முன்னுதாரணக் கொள்கை, குணால் சிங் (மேற்கூறப்பட்டது) மற்றும் விகாஷ் குமார் –எதிர்– மத்திய பொதுப் பணித் துறை ஆணையம் மற்றும் பிறர் ஆகிய வற்றில் காணப்படுகிறது. இந்தத் தீர்ப்புகள், குறியிடப்பட்ட சட்டங்களுக்கு அப்பாற்பட்டு, பாகுபாடு காட்டாத மற்றும் நேர்மையான அரசியலமைப்பு கடமைகள், மாற்று ஏற்பாடு மற்றும் மறுபணி மூலம் பணியில் இருக்கும் போது ஊனமடைந்த ஊழியர்களைத் தக்க வைத்துக் கொள்ள முதலாளிகள் முயல வேண்டும் என்று கோருவதை அங்கீகரிக் கின்றன. இந்த வழக்கில், ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தம் இருக்கும்போது, மற்றும் அதே நிலையில் உள்ள ஊழியர்களுக்கு மாற்றுப்பணி செய்யும் ஒரு பரந்த நடைமுறை பின்பற்றப் பட்டபோது, மனுதாரருக்கு நிவாரணம் மறுக்கப் பட்டது தன்னிச்சையான பாகுபாடு என்பதுடன் சமமான பாதுகாப்பைத் தோல்வியடையச் செய்வதற்குச் சமமாகும்.

30. முந்தைய பகுப்பாய்வில், கட்டாயத் தொழில்துறை கடமைகள் மற்றும் நடைமுறைச் சீர்கேடுகளின் அடிப்படையில் சர்ச்சைக்குரிய நடவடிக்கையை ரத்து செய்யப் போதுமான மற்றும் சுயாதீனமான காரணங்களை நாங்கள் நிரூபித்திருந்தாலும், பணியின்போது ஊன மடையும் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு களை நிர்வகிக்கும் பரந்த சட்ட கட்டமைப்பையும் மீண்டும் உறுதிப்படுத்துவது அவசியமாகக் கருதுகிறோம். அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத ஊனங்களுக்கு இடையே சட்டபூர்வமான கட்டமைப்புகளின் கீழ் கடினமான வேறுபாடுகளை வரைவதன் மூலம், மாற்று வேலை வழங்குவதற்கான தங்கள் கடமையைத் தவிர்ப்பதற்கு முதலாளிகள், குறிப்பாக பொதுத் துறை நிறுவனங்கள், முயற்சி செய்யலாம் என்ற முறையான ஆபத்துடன் எங்கள் அக்கறை மட்டுப்படுத்தப்படவில்லை. அத்தகைய தப்பித்தலுக்கு எதிராகப் பாதுகாக்க, மற்றும் பாகுபாடு காட்டாத, நியாயமான மாற்று ஏற்பாடு மற்றும் அடிப்படைச் சமத்துவத்தின் அரசியலமைப்பு மற்றும் சட்டபூர்வ மான கொள்கை களை வலுப்படுத்த, அத்தகைய பாதுகாப்புகளை குறுகிய முறையில் அல்லாமல்,

நோக்கபூர்வ மாக விளக்கும் ஒரு நிலையான முன்னுதாரணக் கொள்கையிலிருந்து நாங்கள் வழிகாட்டலைப் பெறுகிறோம்.

குணால் சிங் (மேற்கூறப்பட்டது) வழக்கில், இந்த நீதிமன்றம் 1995ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் 'ஊனம்' மற்றும் 'ஊனமுற்ற நபர்' ஆகிய வற்றுக்கு இடையே தெளிவான வேறுபாட்டைக் காட்டியது, மேலும் பணியின் போது ஊனம் பெறும் நபர்களின் வேலையைப் பாதுகாக்க பிரிவு 47 விதித்துள்ள கட்டாயக் கடமையை வலியுறுத்தியது. நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:

'9....ஒருவர் விருப்பத்தின் பேரில் ஊனத்தை அடைவது அல்லது அதனால் பாதிக்கப்படுவது இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பணியின் போது ஊனமடையும் ஒரு ஊழியர், சட்டத்தின் பிரிவு 47இன் கீழ் குறிப்பாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென முயல்கிறார். அத்தகைய ஊழியர், ஊனத்தை அடைந்ததற்காக, பாதுகாக்கப்படாவிட்டால், அவர் மட்டுமல்ல, அவரைச் சார்ந்துள்ள அனைவரும் பாதிக்கப்படுவார்கள். பிரிவு 47 இன் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் அதன் கட்டாயத் தன்மையை தெளிவாகக் குறிக்கிறது. பிரிவின் தொடக்கப் பகுதியே, 'பணியின்போது ஊனமடையும் ஒரு ஊழியரை எந்த நிறுவனமும் பணிநீக்கம் செய்யவோ அல்லது தரத்தைக் குறைக்கவோ கூடாது' என்று வாசிக்கிறது.

'ஊழியர் ஊனமடைந்த பிறகு அவர் வகிக்கும் பதவிக்குப் பொருத்தமற்றவராக இருந்தால், அதே ஊதிய விகிதம் மற்றும் சேவைப் பலன்களுடன் வேறு ஒரு பதவிக்கு மாற்றப்படலாம்; எந்தப் பதவிக்கும் ஊழியரைச் சரிசெய்ய முடியாவிட்டால், ஒரு பொருத்தமான பதவி கிடைக்கும் வரை அல்லது அவர் ஓய்வு பெறும் வயதை அடையும் வரை, இதில் எது முன்னதோ அதுவரை அவர் ஒரு சூப்பர்நியூமரரி பதவியில் வைக்கப்படுவார் என்றும் பிரிவு மேலும் தெரிவிக்கிறது. இதனுடன், பிரிவு 47 இன் உட்பிரிவு (2)இலிருந்து தெளிவாகத் தெரிவது போல, ஒருவருக்கு அவரது ஊனத்தின் அடிப்படையில் மட்டும் பதவி உயர்வு மறுக்கப் படக்கூடாது. பணியின் போது ஊனமடையும் ஒரு ஊழியரைப் பாதுகாக்க முதலாளிக்குச் சட்டபூர்வ மான கடமையை விதிக்கும் ஒரு தெளிவான வழிகாட்டுதலைப் பிரிவு 47 கொண்டுள்ளது. சமூக நலன்பயக்கும் ஒரு சட்டத்தின் விதியை, அதுவும் ஊனமுற்ற நபர்களுக்குச் சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட விதியை விளக்கும்போது, சட்டத்தின் நோக்கத்தை முன்னோக்கி நகர்த்தி, அதன் நோக்கத்திற்குச் சேவை செய்யும் பார்வையைப், நோக்கத்தைத் தடுக்கும் மற்றும் சட்டத்தின் நோக்கத்தை பாழ்படுத்தும் செயலைத் தவிர்க்க வேண்டும். பணியின் போது ஊனமடையும் ஒரு ஊழியரைப் பாதுகாக்க முதலாளிக்குச் சட்டபூர்வ மான கடமையை விதிக்கும் பிரிவு 47இன் மொழி தெளிவானது மற்றும் உறுதியானது.'

31. குணால் சிங் (மேற்கூறப்பட்டது) வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய மேற்கண்ட தீர்ப்பைப் பார்க்கும்போது, ஊனத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கும், பணியில் இருக்கும்போது ஊனம் பெற்றவர்களுக்கும் இடையே ஒரு வேறுபாடு உள்ளது என்பது தெளிவாகிறது. சட்டத்தின் பிரிவு 47ஐ மீண்டும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அது பின்வருமாறு வாசிக்கிறது:

'47. அரசு வேலையில் பாகுபாடு காட்டாமை. – (1) பணியின் போது ஊனமடையும் ஒரு ஊழியரை எந்த நிறுவனமும் பணிநீக்கம் செய்யவோ அல்லது தரத்தைக் குறைக்கவோ கூடாது:

ஆனால், ஒரு ஊழியர் ஊனமடைந்த பிறகு அவர் வகிக்கும் பதவிக்குப் பொருத்தமற்றவராக இருந்தால், அதே ஊதிய விகிதம் மற்றும் சேவைப் பலன்களுடன் வேறு ஒரு பதவிக்கு மாற்றப்படலாம்:

மேலும், எந்தப் பதவிக்கும் ஊழியரைச் சரிசெய்ய முடியாவிட்டால், ஒரு பொருத்தமான பதவி கிடைக்கும் வரை அல்லது அவர் ஓய்வு பெறும் வயதை அடையும் வரை, இதில் எது முன்னதோ அதுவரை அவர் ஒரு சூப்பர்நியூமரரி பதவியில் வைக்கப்படலாம்.

(2) ஒருவருக்கு அவரது ஊனத்தின் அடிப்படையில் மட்டும் பதவி உயர்வு மறுக்கப் படக்கூடாது:

ஆனால், பொருத்தமான அரசாங்கம், எந்தவொரு நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் வேலையின் வகையைக் கருத்தில் கொண்டு, அறிவிப்பு மூலம் மற்றும் அத்தகைய அறிவிப்பில் குறிப்பிடப்படக்கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்த பிரிவின் விதிகளிலிருந்து எந்தவொரு நிறுவனத்திற்கும் விலக்கு அளிக்கலாம்.'

32. அத்தகைய ஊழியர் அதே ஊதியம் மற்றும் சேவைப் பலன்களுடன் வேறு ஒரு பதவிக்கு மாற்றப்பட வேண்டும் என்றும், அத்தகைய பதவி எதுவும் கிடைக்கவில்லை என்றால், ஒரு பதவி கிடைக்கும் வரை அல்லது ஓய்வு பெறும் தேதி வரை ஒரு சூப்பர்நியூமரரி பதவியில் தக்கவைக்கப்பட வேண்டும் என்றும் பிரிவு 47 கட்டாயப்படுத்துகிறது. வேலைப் பாதுகாப்பு தனிப்பட்ட கண்ணியத்திற்கு மட்டு மல்லாமல், குடும்பத்தின் பிழைப்புக்கும் மையமானது என்பதை அங்கீகரித்து, ஊனத்தின் அடிப்படையில் மட்டும் பதவி உயர்வு மறுக்கப் படாது என்பதையும் இந்தப் பிரிவு மேலும் உறுதி செய்கிறது.

33. இந்த கொள்கை முகமது இப்ராஹிம் –எதிர்– தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மற்றும் பிறர் வழக்கில் மேலும் நீட்டிக்கப்பட்டது. அதில், எங்களில் ஒருவர் (அரவிந்த் குமார், ஜே.) தீர்ப்பின் ஒரு பகுதியாக இருந்தார். வண்ணக் குறைபாடு ஊனமுற்றோர் உரிமைகள் சட்டம், 2016 இன் பிரிவு 2(i)இன் கீழ் 'ஊனம்' அல்லது பிரிவு 2(i)இன் கீழ் ஊனமுற்ற நபர்கள்' என்ற சட்டபூர்வமான வரையறைக்குள் வர வில்லை என்றாலும், மாற்றுப் பாத்திரங்களை ஆராயாமல் வேலையை முடிவுக்குக் கொண்டு வர முடியாது. மேலும் முதலாளி நியாயமான மாற்று ஏற்பாட்டை வழங்கக் கடமைப்பட்டுள்ளார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதை இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது:

'19. சட்டம் ஒரு பொதுவான பாகுபாடற்ற விதியை உள்ளடக்கியது:

**3. சமத்துவம் மற்றும் பாகுபாடு காட்டாமை:**

1. பொருத்தமான அரசாங்கம், ஊனமுற்ற நபர்கள் மற்றவர்களைப் போலவே சமத்துவம், கண்ணியமான வாழ்க்கை மற்றும் அவரது அல்லது அவளது ஒருமைப்பாட்டிற்கான உரிமையை அனுபவிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

2. பொருத்தமான அரசாங்கம், பொருத்த மான சூழலை வழங்குவதன் மூலம் ஊனமுற்ற நபர்களின் திறனைப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

3. ஊனமுற்ற நபர், ஊனத்தின் அடிப்படை யில் பாகுபாடு காட்டப்படக் கூடாது. சர்ச்சைக் குரிய செயல் அல்லது தவறு ஒரு நியாயமான இலக்கை அடைவதற்கான விகிதாசார வழி என்று காட்டப்பட்டால் ஒழிய.

4. எந்தவொரு நபரும் ஊனத்தின் அடிப்படையில் மட்டும் அவரது அல்லது அவளது தனிப்பட்ட சுதந்திரத்தைப் பறிக்கப்படக் கூடாது.

5. பொருத்தமான அரசாங்கம், ஊனமுற்ற நபர்களுக்கு நியாயமான மாற்று ஏற்பாட்டை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.'

20. வரையறுக்கப்பட்ட பிரிவுகளுக்குள் வருதல் மற்றும் அத்தகைய ஊனங்களின் குறைந்தபட்ச சதவீதத்தின் வரம்பு நிலை ஆகிய இரட்டைக் கட்டுப்பாடுகள் உண்மையில் ஒரு தடையாகும். இந்த வழக்கின் உண்மைகள், மனுதாரர் தான் விண்ணப்பித்த மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிக்கான கடமைகளை நிறைவேற்ற, அந்த வார்த்தையின் அனைத்து அர்த்தங்களிலும் தகுதியுடையவர் என்பதை நிரூபிக்கின்றன. ஆயினும்கூட, அவர் வண்ணக் குறைபாடுள்ளவர் என்பதால் 'ஊனமுற்றவர்' என்று கூறி அவருக்கு அந்தப் பதவி மறுக்கப் படுகிறது. அதேசமயம், அவர் சட்டத்தின் பார்வையில் உள்ள ஊனமுற்றோர் பிரிவுக்குள் வரவில்லை. இவை 'ஊனம்' என்று அழைக்கப் படுவதற்கான பாரம்பரிய புரிதல்களுக்குச் சவால் விடுகின்றன. எனவே, நீதிமன்றம்

சட்டத்தின் விதிகளுக்கு அப்பாற்பட்டுப் பயணம் செய்து, நியாயமாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு கொள்கையை அறிய வேண்டும்.

21. ஜீஜா கோஷ் –எதிர்– இந்திய அரசு வழக்கில், இந்த நீதிமன்றம் பின்வருமாறு தெரிவித்திருந்தது:

'40. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில், சமத்துவம் இரண்டு நிரப்பு கொள்கைகளின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது: பாகுபாடு காட்டாமை மற்றும் நியாயமான வேறுபாடு. பாகுபாடு காட்டாமை கொள்கை, அனைத்து நபர்களும் சமமாக அனைத்து உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிக்கவும் பயன்படுத்தவும் முடியும் என்பதை உறுதிப் படுத்த முயல்கிறது. சமமான பங்கேற்புக்கான வாய்ப்புகளைத் தன்னிச்சையாக மறுப்பதால் பாகுபாடு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, பொது வசதிகள் மற்றும் சேவைகள் ஊனமுற்ற நபர் களுக்கு எட்டாத தரங்களில் அமைக்கப்படும் போது, அது விலக்கப்படுதலுக்கும் உரிமைகள் மறுப்புக்கும் வழிவகுக்கிறது. சமத்துவம் என்பது பாகுபாட்டைத் தடுப்பதைக் (எடுத்துக்காட்டாக, பாகுபாட்டுக்கு எதிரான சட்டங்களை அறிமுகப் படுத்துவதன் மூலம் சாதகமற்ற சிகிச்சைக்கு எதிராக தனிநபர்களைப் பாதுகாப்பது) மட்டு மல்லாமல், சமூகத்தில் முறையாகப் பாகு பாட்டால் பாதிக்கப்படும் குழுக்களுக்கு எதிரான பாகுபாட்டை நிவர்த்தி செய்வதையும் கடந்து செல்கிறது. உறுதியான வகையில், இது நேர் மறையான உரிமைகள், உறுதியான நடவடிக்கை மற்றும் நியாயமான மாற்று ஏற்பாடு என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது.'

22. ரவீந்தர் குமார் தரிவால் –எதிர்– இந்திய அரசு வழக்கில், சமத்துவத்திற்கான உரிமை வலியுறுத்தப்பட்டது, மேலும் இரண்டு அம்சங்கள் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டன: முறையான சமத்துவம் மற்றும் அடிப்படைச் சமத்துவம். அடிப்படைச் சமத்துவம் முடிவுகளின் சமத்துவத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும், இந்த வழக்கில், 'நியாயமான மாற்று ஏற்பாட்டுக் கொள்கை என்பது அடிப்படைச் சமத்துவத்தை அடைவதற் கான வழிகளில் ஒன்றாகும். அதன் மூலம் ஊனமுற்ற தனி நபர்கள் அவர்களின் தனிப்பட்ட திறன்களின் அடிப்படையில் நியாயமான முறையில் மாற்றி யமைக்கப்பட வேண்டும். என்றும் அது கூறியது. நீதிமன்றம் விகாஷ் குமார் –எதிர்– மத்திய பொதுப்பணித் துறை ஆணையம் வழக்கை நினைவு கூர்ந்தது. அது பின்வருமாறு தீர்ப்பளித்தது: 'நியாயமான மாற்று ஏற்பாட்டுக் கொள்கை 'ஊனத்தை' நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும், ஊனமுற்றவர்களின் வளர்ச்சியை எளிதாக்க வாய்ப்புகள் உறுதியாக உருவாக்கப்பட வேண்டும் என்றும் ஒப்புக்கொள்கிறது. நியாயமான மாற்று ஏற்பாடு உள்ளடக்கம் என்ற நெறிமுறையில் நிறுவப்பட்டுள்ளது. விலக்கு தனிப்பட்ட கண்ணியம் மற்றும் மதிப்பை மறுப்பதற்கு வழிவகுக்கிறது அல்லது ஒவ்வொரு தனிநபரின் கண்ணியம் மற்றும் மதிப்பு மதிக்கப்படும் நியாயமான மாற்று ஏற்பாடு பாதையை அவர்கள் தேர்வு செய்யலாம்.'

23. சட்டத்தின் அத்தியாயங்கள் VII மற்றும் VIIIஇன் விதிகள், சமத்துவத்திற்கான உத்தர வாதத்தின் ஒரு அங்கமான நியாயமான மாற்று ஏற்பாட்டுக் கொள்கையை மேலும் அதிகரிக்கின்றன என்பதும் கவனிக்கப்பட்டது. இது ஒரு தொடர்ச்சி யான முன்னுதாரணக் கொள்கையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றம், பல வழக்குகளில், ஊனமுற்ற நபர்களின் வெவ்வேறு தேவைகளை அங்கீகரிக்கும் நியாயமான வேறுபாட்டின் கொள்கை, சமத்துவக் கொள்கையின் ஒரு பகுதியாகும் என்று தீர்ப்பளித்துள்ளது.

24. விகாஷ்குமார் (மேற்கூறிய) வழக்குத் தீர்வின் குறிப்பிடத்தக்க தாக்கம் என்ன வென்றால், அந்த வழக்கு, எழுதுவதில் கடுமை யான சிரமத்தை அனுபவிக்கும் எழுத்தாளர் தசைப்பிடிப்பு என்ற நாள்பட்ட நரம்பியல் நிலையால் பாதிக்கப்பட்ட ஒரு நபரைப் பற்றியது. அவர் வரையறுக்கப்பட்ட ஊனமுற்ற நபர் (ஒரு குறிப்பிட்ட ஊனத்தில் 40% அல்லது அதற்கு மேல்) என்ற வரையறைக்குள் வராததால், சிவில் சர்வீஸ் தேர்வுக்கு எழுதுபவரை அமர்த்திக் கொள்ள அவருக்கு அனுமதி மறுத்தது தேர்வு வாரியம். இந்த நீதிமன்றம் இந்தக் நிலைப்

பாட்டை நிராகரித்தது. மேலும் அவரை ஊனமுற்ற நபர் என்று தீர்ப்பளித்தது. அவருக்கு எழுதுபவரை வழங்குவது நியாயமான மாற்று ஏற்பாட்டின் வரம்பிற்குள் வருகிறது என்றும் கூறப்பட்டது. நீதிமன்றம் மேலும் தெரிவிக்கையில்: '...சட்டம் கட்டளையிடும் மாற்று ஏற்பாடு 'நியாயமானது,' ஏனெனில் அது ஊனத்தின் ஒவ்வொரு நிலைக்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஊனமுற்ற நபரின் எதிர்பார்ப்புகளும் ஊனத்தின் தன்மை மற்றும் அதன் விளைவாக எதிர்கொள்ளும் தடைகளின் தன்மைக்கு தனித்துவமானவை...' என்று கூறியது.

'25. மனுதாரர், எல்லா நோக்கங்களுக்காகவும், ஊனமுற்ற நபராகக் கருதப்படுகிறார், ஆனால் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட வகைகளுக்குள் வரவில்லை. மேலும் அவருக்குத் தேவையான வரம்பு தகுதி நிபந்தனையும் இல்லை. பதிவில் உள்ள புறநிலை விஷயங்கள் வண்ணப் பார்வைக் குறைபாடு மிதமாக உள்ளது என்பதைக் காட்டுகிறது. ஆயினும்கூட, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கவலைகளை நியாயமற்றது என்று வகைப்படுத்த முடியாது. இருப்பினும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 'நியாயமான மாற்று ஏற்பாடு' என்ற கட்டமைப்பின் கீழ் செயல்பட கடமைப்பட்டுள்ளது, இது பிரிவு 2(y)ஆல் பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது: '(y) 'நியாயமான மாற்று ஏற்பாடு' என்பது, ஒரு குறிப்பிட்ட வழக்கில் விகிதாசாரமற்ற அல்லது தேவையற்ற சுமையை சுமத்தாமல், ஊனமுற்ற நபர்கள் மற்றவர்களைப் போலவே சமமாக உரிமைகளை அனுபவிப்பதை அல்லது பயன்படுத்து வதை உறுதி செய்வதற்கான தேவையான மற்றும் பொருத்தமான மாற்றம் மற்றும் சரி செய்தல்கள் ஆகும்;'

26. நியாயமான மாற்று ஏற்பாடு என்பது, இந்த வழக்கில், 'விகிதாசாரமற்ற அல்லது தேவையற்ற சுமையை' விதிக்காமல், முதலாளியால் எடுக்கப்பட வேண்டிய 'பொருத்தமான மாற்றம் மற்றும் சரிசெய்தல்கள்' ஆகும்.

34. இதேபோல், ரவிந்தர் குமார் தரிவால் மற்றும் மற்றொருவர் –எதிர்– இந்திய அரசு மற்றும் பிறர் வழக்கில், நியாயமான மாற்று ஏற்பாடு என்பது அடிப்படைச் சமத்துவத்தை அடைவதற்கான ஒரு வழிமுறையாகும் என்றும், ஊழியரின் எஞ்சிய செயல்பாட்டுத் திறனின் அடிப்படையில், முறையான ஊனப் வகைப்பாடுகளின் அடிப்படையில் அல்லாமல், ஒவ்வொரு வழக்கையும் தனித்தனியாக மதிப்பிட முதலாளிக்குக் கடமையாக்குகிறது என்றும் நீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்தியது.

35. பணியின்போது ஒரு ஊனம் பெறப்படும்போது, சட்டக் கட்டமைப்பு விலக்கத்துடன் அல்லாமல், சரிசெய்தலுடன் பதிலளிக்க வேண்டும். ஒரு பொது முதலாளியின் கடமை, பணியாளர்களை நீக்குவது மட்டுமல்ல, மனித ஆற்றல் தொடர்ந்து இருக்கும் இடத்தில் அதைப் பாதுகாப்பதாகும். பொருளாதார ரீதியாகப் பயனுள்ள மறுபணியின் சாத்தியக்கூறை முதலில் தீர்க்காமல், ஒரு மருத்துவச் சான்றிதழின் மூலம் சேவையைத் துண்டிக்கச் சட்டம் அனுமதிக்கவில்லை. அத்தகைய கடமை அனுதாபத்தில் வேரூன்றவில்லை. ஆனால் அரசியலமைப்பு ஒழுக்கம் மற்றும் சட்டபூர்வமான எதிர்பார்ப்பில் வேரூன்றியுள்ளது.

36. இந்த வளர்ந்து வரும் கோட்பாட்டின் வெளிச்சத்தில், முகமது இப்ராஹிம் வழக்கில் நீதிமன்றம், வண்ணக் குறைபாடு போன்ற நிலைகளைக் கொண்ட ஊழியர்கள், சட்டத்தின் வரையறுக்கப்பட்ட வகைகளுக்குள் வரா விட்டாலும், அவர்களின் செயல்பாட்டுத் திறன் அனுமதிக்கும் இடங்களில் மாற்று ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று தெளிவுபடுத்தியது. இல்லையெனில் மேற்கொள்ளும் நடவடிக்கை, சட்டத்தின் பிற்போக்குத்தனமான விளக்கத்திற்கு வழிவகுக்கும், பொது வேலைவாய்ப்பில் சம வாய்ப்பின் அடித்தளத்தையே பலவீனப் படுத்தும்.

37. இவ்வாறு, இந்த வழக்கில் மனுதாரருக்கு ஒரு சட்டபூர்வமான தொழில்துறை ஒப்பந்தத்தின் கீழ் செயல்படுத்தக்கூடிய உரிமை இருந்த போதிலும்–அவரது உரிமைகோரலை உறுதி

யான நிலையில் வைத்திருந்தாலும்–அத்தகைய ஒப்பந்த உரிமைகள் இல்லாதபோதும், பணி யின்போது ஊனமடையும் ஊழியர்கள் கைவிடப்படவோ அல்லது மறுபணிக்கான நியாயமான மற்றும் நியாயமான வாய்ப்பை வழங்காமல் முன்கூட்டியே ஓய்வு பெறச் செய்யப்படவோ கூடாது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துவது அவசியமாகக் கருதுகிறோம். அத்தகைய ஊழியர்களுக்கு நியாயமான மாற்று ஏற்பாடு செய்வதற்கான கடமை, வெறும் நிர்வாக கருணை மட்டுமல்ல, பாகுபாடு காட்டாமை, கண்ணியம் மற்றும் சமமான சிகிச்சை ஆகிய கொள்கைகளில் வேரூன்றிய அரசியலமைப்பு மற்றும் சட்டபூர்வமான கட்டாயம் ஆகும்.

38. எனவே, இந்த நீதிமன்றம், நன்மை பயக்கும் மற்றும் நிவாரண சட்டங்கள் குறுகிய விளக்கத்தால் நீர்த்துப் போகக் கூடாது என்றும், அதில் வழங்கப்படும் பாதுகாப்புகள், பணியின் போது ஊனமடையும் ஊழியர்களின் வாழ்வா தாரம், கண்ணியம் மற்றும் சேவைத் தொடர்ச்சியைப் பாதுகாக்க நோக்கபூர்வமாக நீட்டிக்கப்பட வேண்டும் என்றும் உறுதிப்படுத்துகிறது. அவ்வாறு செய்வதன் மூலம், நாங்கள் மனுதாரரின் உரிமைகளை உறுதிப்படுத்துவதோடு மட்டு மல்லாமல், நீதியான மற்றும் மனிதாபிமான மான முதலாளி–ஊழியர் உறவுக் கான நமது அரசியலமைப்பு உறுதிப்பாட்டையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

39. முடிவாக, மாற்று வேலைக்கான அவரது பொருத்தத்தை ஆராய எதிர்மனுதாரர் கழகம் எந்தவிதமான அர்த்தமுள்ள முயற்சியும் இல்லாமல், மனுதாரர் மருத்துவக் காரணங் களுக்காக முன்கூட்டியே பணியிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்பட்டார் என்பது எங்களுக்கு முன் உள்ள பதிவில் தெளிவாக உள்ளது. 17.12.1979 தேதியிட்ட கட்டாய சமாதான ஒப்பந்தத்தின் பிரிவு 14ஐப் புறக்கணித்து, நேர்மை அல்லது மாற்று ஏற்பாட்டின் கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை, சட்டத்தில் நிலைத்திருக்க முடியாது.

40. மறுபணியைக் கருத்தில் கொள்ளக் கழகம் தவறியது சட்டபூர்வமான மற்றும் அரசிய லமைப்பு கடமைகள் இரண்டையும் மீறுகிறது. குணால் சிங் (மேற்கூறிய) உட்பட, பணியின் போது ஊனமடையும் ஒரு ஊழியர் சாத்திய மானால் மறுபணி மூலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கட்டளையிடும் நிறுவப்பட்ட நீதித்துறை கொள்கை உறுதிப்படுத்துகிறது. அத்தகைய ஊழியர்களுக்கு நியாயமான மாற்று ஏற்பாடு செய்வதற்கான கடமை இப்போது பிரிவுகள் 14 மற்றும் 21 இல் வேரூன்றிய நமது அரசியலமைப்பு கட்டமைப்பின் ஒரு பகுதியாகும்.

41. நீதித்துறை கட்டுப்பாடு வரம்பை மீறுவதைத் தடுக்கும் அதே வேளையில், அது அநீதியிலிருந்து விலகுவதற்கான ஒரு சாக்காக மாறக்கூடாது. ஒரு ஊழியர் அவர் தேர்வு செய்யாத ஒரு நிலைக்காகப் பணியிலிருந்து நீக்கப்படும்போது, மற்றும் சாத்தியமான மாற்று வழிகள் புறக்கணிக்கப்படும்போது, நீதிமன்றம் தலையிடுவதன் மூலம் ஒரு கோட்டைத் தாண்டு வதில்லை, மாறாக அரசியலமைப்பால் வரையப் பட்ட ஒரு கொள்கையை நிலைநிறுத்துகிறது. ஊழியரின் கண்ணியம் தொடங்கும் இடத்தில் முதலாளியின் விருப்பம் முடிவடைகிறது.

42. மேற்கூறியவற்றின் வெளிச்சத்தில், W.A.No.1343/2017 வழக்கில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது. பதிலளிக்கும் போக்குவரத்துக் கழகம், இந்த உத்தரவைப் பெற்ற நாளிலிருந்து எட்டு வாரங்களுக்குள், மனுதாரரை அவரது நிலைக்கு இணங்கவும், அவர் 06.01.2016 அன்று வகித்த அதே ஊதிய விகிதத்திலும் ஒரு பொருத்தமான பதவிக்கு நியமிக்க உத்தரவிடப் படுகிறது. மனுதாரர் தனது பணிநீக்கத் தேதி முதல் மீண்டும் பணியில் சேரும் தேதி வரை யிலான சம்பளம், படிகள் மற்றும் பலன்களின் நிலுவைத் தொகையில் 25% ஐப் பெற உரிமை பெறுவார். இடைப்பட்ட காலம் அனைத்து நோக்கங்களுக்காகவும் தொடர்ச்சியான சேவை யாக கணக்கிடப்படும்.

43. இந்த மேல்முறையீடு அனுமதிக்கப் படுகிறது. செலவுகளுக்கு எந்த உத்தரவும் இல்லை.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# பொது அதிகாரத்தை ரத்தாக்குதல் அதற்கு முன் மேற்கொண்ட உரிமை மாற்றல் மீது தாக்கம் ஏற்படுத்தாது

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி திரு.சுதான்சு துலியா**
**நீதிபதி திரு.கே.வினோத் சந்திரன்**
**உரிமையியல் மேல்முறையீடு எண்**
**(சிவிம (உ) எண் 9472/2023இல் உருவாகிறது)**
**3.3.2025**
**2025 (2) சிடிசி 294**

**வி.ரவிகுமார்** ...மேல்முறையீட்டாளர்

–எதிர்–

**எஸ்.குமார்** ...எதிர்மேல்முறையீட்டாளர்

**ஹரிபிரியா பத்மனாபன், முதுநிலை வழக்குரைஞர், கருப்பையா மெய்யப்பன், ரகுனாத சேதுபதி, பி.கனிகா கலையரசன்–அதவ் குப்தா**
மேல்முறையீட்டாளர்கள் வழக்குரைஞர்கள்

**ரகேந்த் பசந்த், முதுநிலை வழக்குரைஞர், ஜி.உமாபதி முதுநிலை வழக்குரைஞர், சபரிஷ் சுப்ரமனியன், ஜானவி தனேஜா, விஷ்னு உன்னிகிருஷ்ணன், தனிஷ் சைப்பிம் ஆதித்யா சிங்–1 துஷார் நாயர்–சுஜீத்குமார்**
எதிர்மேல்முறையீட்டாளரது வழக்குரைஞர்கள்

உமே ஏற்கப்பட்டது.

## ஆணை

**நீதிபதி திரு.சுதான்சு துலியா**
**நீதிபதி திரு.கே.வினோத் சந்திரன்**

1. அனுமதி வழங்கப்பட்டது

2.காலவரம்பு காரணத்திலான வழக்குரை நிராகரிப்பு உயர்நீதிமன்றத்தால் திருப்பியகற்றப் பட்டது. வழக்கில் எதிர்வாதி இங்கு மேமு ஆவார். பொது அதிகாரம் நீண்ட காலத்துக்கு முன்பாக நிறைவேற்றப்பட்டு அதன் பின் தொடர்கையாக கிரய பத்திரங்களும் நிறைவேற்றப்பட்டு பொது அதிகார ரத்திலிருந்து காலவரம்பை தனி நீதிபதி கணிக்கிடுவதை அவர் எதிர்க்கிறார்.

3.வழக்கு வாதியால் விளம்புகைக்கும் உறுத்துக்கட்டளைக்கும் தாக்கலானது. பொது அதிகார வலிமையில் பதிவாகி நிறைவேற்றப் பட்ட அனைத்து கிரய பாத்திரங்களும் அறவே இல்லா நிலையதாகும் என்ற விளம்புகைக்கும் தாவா சொத்துகளில் அமைதியான உடைமை யிலும் துய்த்தலிலும் தலையிடலிருந்து எதிர் வாதியை நிரந்தரமாக தடுத்த நிறுத்தும் உறுத்துக்கட்டளைக்கும் ஆனதாகும். வழக்கு காலவரம்பால் தடையானது என தெளிவாக கூறிக் கொண்டு உவிதொச [உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டப்] பிரிவுகள் 10,11 மற்றும் 150 உடன் வாசிப்பாகும் வகுமுறை 7 விதி 11 கீழ் பொது அதிகார முகவர் ஆன முதலாவது எதிர்வாதி விண்ணப்பம் தாக்க லிட்டார். வகுமுறை 7 விதி 11 கீழான விண்ணப்பதை பரிசீலிக்கையில், முன்னிடப் பட்ட ஆவணங்களை ஆராய்தலை சாதாரண மாக அத்தகைய விண்ணப்பம் அவசியப் படுத்தாது என்பதையும் அது வழக்கு விசாரணை சமயத்தில் செய்யப்பட வேண்டியுள்ளதாகும் என்பதையும் கவனத்தில் விசாரணை நீதிமன்றம் கொண்டது. ஆயினும் வழக்கு காலவரம்பால் தடையாகும் என்பதை உறுத்துக்கூற்றுகளி லிருந்து வெளிப்படும் தெளிவான பொருண்மை களிலிருந்து நீதிமன்றம் கண்டறிந்தது.

4.வாதியால் முதலாவது எதிர்வாதி பெயருக்கு நிறைவேற்றப்பட்ட பொது அதிகார ஆவணம் 15.10.2004 தேதியதானது. அறவே இல்லா நிலையதாக்கக் கோரப்படும் கிரய ஆவணங்கள் 2004–06 மற்றும் 2009 வருடத்தியவை யாகும். கிரய பத்திரங்கள் பற்றி 21.9.2015 அன்றுதான் அவருக்கு தெரிவிக்கப்பட்டது என்பது வாதியின் வாதமாகும். அதன் மூன்று வருடங் களுக்குள் 20.9.2018 அன்று வழக்கு தாக்க

லானது. பல்வேறு உரிமை மாற்றங்களை சுட்டிக் காட்டும் பட்டா 10.1.2015 அன்று பெறப்பட்டு 36வது ஆவணமாக இணைப்பானது என்பதும் எனவே பொது அதிகார வலிமையில் செய்யப் பட்ட பரிவர்த்தனைகள் வாதிக்கு தெரிந்ததாகும் எனவும் விசாரணை நீதிபதி கண்டறிந்தார். அறிந்த தேதி 10.1.2015 தேதியிலிருந்து கூட வழக்கு தெளிவாக கால வரம்பால் தடையானது என காணப்பட்டது. வழக்குரை நிராகரிக்கப் பட்டது.

5.மேல்முறையீடில் 2.9.2015 அன்று மட்டுமே பொது அதிகாரம் ரத்தானது எனவும் அத்கைய ரத்து தேதியிலிருந்து காலவரம்பு துவங்க வேண்டியிருக்கிறது எனவும் உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. சட்டத்துக்கிணங்க தகுதிப்பாடுகள்பேரில் வழக்கு மேல்தொடரலுக்கு விசாரணை நீதிமன்ற கோப்புகளுக்கு மீட்டளிப்பாக பணித்தது.

6. பொது அதிகாரத்தின் ரத்து தேதியிலிருந்து காலவரம்பு துவங்கவியலாது என இங்குள்ள மேமு சார்பில் முன்னிலையாகும் குமரி ஹரி பிரியா பதமனாபன் வாதிட்டார். ஏற்றவாறு, நிறைவேற்றப்பட்ட பொது அதிகார ஆவணம் இருந்து அதன் அடிப்படையில் மேமு செய்திருந்த உரிமை மாற்றங்கள் ஒரு தசாபதத்து அதிக காலத்துக்கு பின்பு நிலைத்திராத தாக்கப்பட முடியாது.

7.மறுபுறத்தில் சொத்துக்களை அவரது மனைவிக்கு உரிமை மாற்றமாகியிருந்து பொது அதிகார முகவர் அவரது பெயரில் உரிமை யளிப்பை திருப்பிப் பெற்றிருக்கும் அளவில் பரிவர்த்தனைகள் கூட்டுச்சதியிலானதாகும் எனவும் வாதி மோசடிக்கு ஆளாக்கப்பட்டார் எனவும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரை உறுதி யாக்கப்பட வேண்டியதாகும் எனவும் எமேமு வாதி தரப்பில் முன்னிலையான முதுநிலை வழக்குரைஞர் பணிந்திட்டார்.

8. பதிவாவணங்களிலிருந்து தெளிவாக உள்ளது போன்று 2004வது வருடத்தில் நிறைவேற்றப்பட்ட பொது அதிகார ஆவணத்தை எமேமு–வாதி மறுக்கவேயில்லை. அவருக்கு தரப்பட்ட பொது அதிகாரத்தின் வலிமையில் உரிமைமாற்றங்கள் அமைந்தன. அறுதியான விஷயங்களை குறிப்பாக 2004இல் வழங்கப் பட்ட பொது அதிகாரம் 2015இல் ரத்தானது என்ற வாதுரை பேரில் நிலைத்திராமல் செய்வது வாதியின் முயற்சியாக உள்ளது. ஆமேமு இக்கு அளிக்கப்பட்ட பொது அதிகாரத்தின் வலிமையில் தெளிவாக செய்யப்பட்ட முன்கூட்டிய உரிமை மாற்றங்களை பொது அதிகாரத்தை ரத்தாக்கல் பாதிக்கவில்லை என்பது எங்களது பரிசீலிப்பான கருத்தாகும். உரிமைமாற்றங்கள் செய்தலுக்கு பொது அதிகாரம் வழங்கப்படாதிருந்தது அல்லது அத்தகைய பொது அதிகாரம் எழுதிக் கொடுத்தவர் மீது வலுக்கட்டாயம் அல்லது மோசடி காரண மாக நிறைவேற்றப்பட்டது என்பது பற்றி எழுப்பப் படும் வாதம் ஏதும் எழுப்பப்படவில்லை. வாங்குனர்கள் பெயர்களில் சொத்துக்கலை உரிமை மாற்றிடலுக்காக வழங்கப்பட்ட அதிகாரத்தை பொது அதிகார முகவர் செலுத்தியிருக்கும் நிலை யில் பொது அதிகாரத்தை ரத்தாக்குதல் வழங்கப் பட்ட செல்லும் அதிகாரம் கீழ் மேற்கொள்ளப்பட்ட உரிமைமாற்றல்கள் மீது தாக்கம் எதனையும் கொண்டிருக்காது. பின்கூட்டிய ஆவணத்தால் ஏற்படுத்தப்படும் அதிகார ரத்து காரணமாக அது உளதானபோது செலுத்தப்பட்ட அதிகாரத்தை மறுத்திடலுக்கு பொது அதிகாரத்தை நிறை வேற்றிய நபருக்கு அது வழக்குமூலம் எதனை யும் அளிக்காது.

9. காலவரம்பின் துவக்கப் புள்ளியாக ரத்தாக்கலை உயர்நீதிமன்றம் பிழையாக பாவித்திருந்தது என நாங்கள் உறுதியாக கருதுகிறோம். அது அடிப்படையற்றாகும் என் எமேமுஆல் வாதிடப்பட்ட பெறும் விசாரணை நீதிமன்றத்து 10.1.2015 தேதிய ஆணையை வாதி அறிதலில் நாங்கள் நம்புகை எதையும் கொள்ளவில்லை. 2004இல் பொது அதிகாரம் தரப்படப்பட்டுள்ளது. 11 ஆண்டுகளுக்கு அதிக காலத்துக்கு பின்னராக பொது அதிகாரம் ரத்தாதல்பேரில் வழக்கு மூலம் ஏதும் துருவி யெடுக்கப்பட முடியாது. உயர்நீதிமன்றத்தின் குறையுறு ஆணையை நீக்கறவாக்கி நாங்கள் விசாரணை நீதிமன்றத்தால் உத்தரவானவாறு வழக்குரை நிராகரிப்பை உறுதியாக்குகிறோம்.

10.மேல்முறையீடு ஏற்கப்படுகிறது.

11. நிலுவை விண்ணப்பங்கள் ஏதும் இருப்பின் தள்ளுபடியாக வேண்டும்.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

# நீதிமன்ற தீர்ப்புரையின் பகுதியாகும் அசையாச் சொத்து பொறுத்த ஆவணங்கள் முத்திரை தீர்வை செலுத்தலிருந்து விலக்கப்படுகின்றன

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா**
**மாற்றல் மனு (உ) எண் 875/2024**
**28.2.2025**
**2025 (2) சிடிசி 302**

**அருண் மேஷ்சந்த் ஆர்யா ...மனுதாரர்**

**-எதிர்-**

**பாருல் சிங் ...எதிர்மனுதாரர்**

திரு.ராஜிவ் கே.கார்க், திரு.ஆஷிஷ் கார்க், திரு.லலித் நாகர்-திரு.டி.எல்.கார்க், பதிவா வணத்திலுள்ள வழக்குரைஞர், மனுதாரரது வழக்குரைஞர்கள்

திரு. ஹிமான்சு சேகர், ப.வ. திரு.பார்த் சேகர், திரு.ஷுபம் சிங், குமாரி அம்பாலி வடேசன், திரு. யுக்டேசவரி பிரசாத், திரு.மாதா பிரசாத் பதக், திரு.முகேஷ் குமார் வெர்மா, திரு.உக்ர நாத் குமார் திரு.பரகர் கார்க் - திரு.ஞானேஷ் குமார் மஹேஸ்வரி எதிர்மனுதாரரது வழக்குரைஞர்கள்

மாற்றல் மனு தீர்வானது.

## ஆணை

1. 'எதிர்மனுதாரர் மனைவியால் தாக்கலான மணமுறிவு வழக்கு எண் ஏ/2335/2023ஐ மும்பை, பந்த்ரா குடும்ப நீதிமன்றத்திலிருந்து தகுதிறனுற்ற டில்லி ஷாதர கர்கர்தூமா குடும்ப நீதிமன்றத்தின் தகுதிறனுறு நீதிமன்றத்துக்கு மாற்றிடுமாறு கோரிக் கொண்டு இந்த மாற்றல் மனு மனுதாரரர் கணவனால் தாக்கலாகி யிருக்கிறது.

2. மாற்றல் மனு நிலுவையின்போது தரப்பினர்கள் மத்தியஸ்துக்காக குறித்தனுப்பப் பட்டு மெய்யறிவு கருத்துரை நிலவியிருந்து பரஸ்பர சம்மதம் மூலமாக திருமண கலைப்புக் காக கணவனும் மனைவியும் தனித்தனி விண்ணப்பங்களை இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 142 கீழ் தாக்கலிட்டுள்ளார்கள்.

3. கல்யாண்(எற்கு)-421301 பரவே கிராம கோத்ரேஜ் குன்றில் கிரீன் ஹில்ஸ் கூட்டுறவு சங்கம் லிட் என அழைக்கப்படும் கட்டட காட்சியில் 6வது தளத்தில் 39.76 சமீ. (428 சதுரடி) தளப்பரப்புள்ள கூட்டு சொத்துரிமையுடனான அடுக்கக எண் 601 தரப்பினர்கள் இடையிலான சர்ச்சைக்குரிய அம்சமாக விளங்குகிறது. அடுக்ககத்தை கொண்டடைதலுக்காக பயன் படுத்தப்பட்ட நீதி ஆதாரங்கள் தொடர்பாக தரப்பினர்களால் கோரிக்கைகளும் எதிர்கோரிக்கை களும் வைப்பாகியுள்ளன. எனினும் இறுதியாக மனுதாரரர் கணவரிடமிருந்து ஜீவனாம்சம் கோராது பரஸ்பர சம்மதம் மூலமாக மண முறிவுக்கு இணங்கியிருந்த எதிர்மனுதாரர் மனைவிக்கு ஆதரவாக தாவா அடுக்ககத்தில் அவரது உரிமையைக் துறந்திட அவர் ஆயத்த மாக உள்ளார் எனவாக மனுதாரர் கணவர் சம்மதித்துள்ளார். வாழ்க்கையில் இருவரும் தகுதியுற்று நன்னிலை பெற்றவர்களாக உள்ளார்கள் என்பது கவனிக்கப்படலாம்.

4.இவ்வாறாக கல்யாண் (எற்கு)-421301 பரவே கிராம கோத்ரேஜ் குன்றில் கிரீன் ஹில்ஸ் கூட்டுறவு சங்கம் லிட் என் அழைக்கப்படும் கட்டட காட்சியில் 6வது தளத்தில் 39.76 சமீ. (428 சதுரடி) தளப்பரப்புள்ள அடுக்கக எண் 601இல் உள்ள முழு சொத்துரிமையும் இதன் பின்னராக எதிர்மனுதாரர் மனைவி பாருல் சிங் பெயரில் வில்லங்கம் ஏதுமின்றி உரிமையளிப்பாக வேண்டும் என பணிக்கப்படுகிறது சொன்ன அடுக்ககத்தில் இதன் பின்னராக உரிமைகள் அல்லது தனியுரிமைகள் எதனையும் கோரலுக்கு மனுதாரர் கணவர் உரிமையுறக் கூடாது.

5.மனுதாரர் கணவரிடமிருந்து ஜீவனாம்சத்தை அல்லது பிற ஏதும் தொகையை எதிர்மனுதாரர் மனைவி கோரக் கூடாது.

6.தற்போது கேள்வியிலுள்ள அடுக்ககத்தின் தனித்த பாத்தியம் மனைவி முத்திரை தீர்வை செலுத்தலை அவசியமாக்காது எதிர்மனுதாரர் மனைவி பெயருக்கு உரிமைமாற்றப்பட முடிமா என்பதை நாங்கள் ஆராய வேண்டியிருக்கிறது. இது விஷயத்தில் முகேஷ் குமார் எதிர் மத்திய பிரதேச மாநிலம் –மற்றுமொருவர் 2024 SCC Online 3832 வழக்கில் 1908இன் பதிவு சட்ட பிரிவு 17(2)(vi)ஐ பொருள்விளக்குகையில், தீர்ப்பாணை கோரப்படப் பெறாத சொத்து விடுத்து அசையாச் சொத்தை சமரசம் உட்படுத்து மானால் அத்தகைய சொத்து உட்படுத்தப் பட்டாது பதிவேற்றத்தை அவசியமாக்கும் என்ற விலக்கலுடன் 1908ன் பதிவு சட்டப் பிரிவு 17(2)(vi) நீதிமன்ற தீர்ப்பாணை அல்லது ஆணை பின்தொடர்கையாக பதிவு கட்டணம் செலுத்தலிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என தீர்ப்பானது. தெளிவாக, நுதல்பொருள் அடுக்ககம் சமரசத்தின் பொருட்பாடாக உள்ளது. விளைவாக அது இந்த நீதிமன்றத்தின் செயல்பாடுகளின் பகுதியாக விளங்குகிறது. எனவே 1908இன் பதிவு சட்டப் பிரிவு 17(2)(vi)ஆல் வகை செய்யப்படும் விளக்கம் பொருந்துவதாகும். எதிர்மனுதாரர் மனைவி யின் தனித்த பெயரில் உள்ள தாவா அடுக்ககத்தை பதிவிடுதல் முத்திரை தீர்வையிலிருந்து விலக்கப்படும்.

7.விளைவாக அதன் சொத்துரிமையராக தாவா அடுக்ககத்தை எதிர்மனுதாரர் மனைவி பாருல் சிங்கின் தனித்த பெயரில் பதியுமாறு சம்பந்தப்பட்ட சார் பதிவாளரை நாங்கள் பணிக்கிறோம்.

8.இந்திய அரசமைப்பு சாசன உறுபு 142 கீழ் தாக்கலான விண்ணப்பங்கள் இதன்மூலம ஏற்று கொள்ளப்படுகின்றன, இதற்கிணங்க தரப்பினர்களது திருமணம் பரஸ்பர சம்மதம் மூலமாக கலைக்கப்படுகிறது.

9.மேலுள்ள விதிமுறைகள்படி தீர்ப்பாணை தயாரிக்கப்பட்டும்.

10.விளைவாக இப்போதைய மாற்றல் மனு தீர்வாக்கப்படுகிறது.

11. நிலுவை விண்ணப்பங்கள் ஏதும் இருந்தால் அவை தீர்வாக்கப் பட வேண்டும்.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

## அனுமதியின்றி வழக்குரைஞர்களுக்கு அழைப்பாணை அனுப்ப முடியாது

'குற்ற வழக்கு விசாரணையில் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் தரப்பு வழக்குரைஞருக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட கண்காணிப்பாளரின் (எஸ்.பி.) அனுமதியைப் பெறாமல் அமலாக்கத் துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் அழைப்பாணை அனுப்ப முடியாது' என்று உச்சநீதிமன்ற உத்தரவிட்டது. மேலும், 2 மூத்த வழக்குரைஞர்களுக்கு அமலாக்கத் துறை இது போல தன்னிச்சையாக பிறப்பித்த அழைப்பாணைகளைத் தள்ளுபடி செய்தும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

பண மோசடி வழக்கு விசாரணையில், குற்றச் சாட்டுக்கு உள்ளானவர் தரப்பு மூத்த வழக்குரைஞர் களான அரவிந்த் தத்தார், பிரதாப் வேணுகோபால் ஆகியோர் விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு அமலாக்கத்துறை பிறப்பித்த அழைப்பாணை விவகாரத்தை தானாக முன்வந்து வழக்காகப் பதிந்து விசாரித்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் நீதிபதிகள் கே.வினோத் சந்திரன், என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது. தீர்ப்பை வாசித்த நீதிபதி சந்திரன், 'குற்றச்சாட்டுக்கு உள்ளான தனது மனுதாரர் தெரிவிக்கும் தகவல்களை அவரின் வழக்குரைஞர் வெளியிடாமல் ரகசியம் காப்பது, மனுதாரருக்கு அவர் அளிக்கும் சலுகை, வழக்குரைஞ ருக்கான உரிமையை பாரதீய சாக்ஷிய அபியான் (பிஎஸ்ஏ) பிரிவு 132 வழங்குகிறது. எனவே, பிஎஸ்.ஏ. பிரிவு 132இன் கீழ் உள்ள விதிவிலக்குகளுக்கு உட்பட்டிருந்தால் மட்டுமே, வழக்கின் விவரங்களை அறிய குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு வழக்குரைஞருக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்ப முடியும்.

அவ்வாறு விதிவிலக்குக்கு உட்படாத பட்சத்தில், வழக்குரைஞர்கள் அமலாக்கத் துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் அழைப்பாணை அனுப்பக் கூடாது. மேலும் சிவில் மற்றும் குற்ற வழக்குகளில் வழக்குரைஞர்கள் வசம் இருக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு ஆவணங்கள் சட்டப் பிரிவு 132இன் உள்ள விதி விலக்கின் கீழ் வராது. அதாவது வழக்குரைஞர் தன்னிடம் இருக்கும் மனுதாரர் தரப்பு ஆவணங்களை விசாரணை அமைப்பிடம் சமர்ப்பிக்க வேண்டிய அவசிய மில்லை. அதோடு சட்டப் பிரிவு 132–இன் கீழ் உள்ள விதிவிலக்கின் கீழ், குற்றஞ்சாட்டப்பட்டவரின் வழக்குரைஞருக்கு அழைப்பாணை விடுக்க வேண்டு மெனில், எந்த விதிவிலக்கின் கீழ், அந்த அழைப்பாணை விடுக்கப்படுகிறது என்ற காரணத்தை விசாரணை அமைப்புகள் தெளிவாகக் குறிப்பிடுவதோடு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு குறையாத அதிகாரி யின் ஒப்புதலையும் பெற்ற பிறகே அழைப்பாணையை அனுப்ப வேண்டும். எனவே, வழக்குரைஞர்கள் அரவிந்த் தத்தார், பிரதாப் வேணுகோபால் ஆகியோருக்கு அமலாக்கத் துறை பிறப்பித்த அழைப்பாணைகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன' என்று குறிப்பிட்டார். மேலும், நீதிமன்றங்களில் பதிவு செய்து வழக்காடும் வழக்குரைஞராக அல்லாமல், தனிப்பட்ட முறையில், வழக்குகளில் ஆஜராகும் வழக்குரைஞர்களுக்கு சட்டப் பிரிவு 132இன் கீழ் பாதுகாப்பு வழங்கப்படாது என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

**நன்றி: தினமணி 2.11.2025**

# நலிவுற்ற நெசவு நிறுவனங்களின் ஒப்பந்தங்கள்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை : தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம்**
**நீதிபதி க. செந்தில்குமார் ராமமூர்த்தி**
**நீபேம எண் 33343/2005, நீ.பே.ம.எண் 36318/2005**
**6.11.2024**
**2025 (2) CTC 673**

**தேசிய துணி கழகம் (A.P.K.K.&M) வரையறு பதிவு செய். அலுவலகம்**
**அஞ்சல் பெட்டி 2713, 3ஆவது தளம், நஞ்சப்பா மாளிகை,**
**29/2, கே.ஹெச் சாலை, சாந்தி நகர், பெங்களூரு-560 027.**
**சார்பாற்றம் அதன் நிறுவனச் செயலாளர் ...மனுதாரர்**

**-எதிர்-**

**கடன் வசூலிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம்**
**கமாண்டர் இன்-சீப் சாலை, எழும்பூர்,**
**சென்னை-600 008**

**2. கடன் வசூலிப்பு தீர்ப்பாயம் கோயம்புத்தூர்**
**3. கனரா வங்கி (சிண்டிகேட் வங்கி) வட்டார அலுவலகம்,**
**டி.வி. சுவாமித் திருத்தப்பட்டது. நீதிமன்ற கட்டளைப்படி**
**6.11.2024 தேதியிடப் பட்டது நீ.பே.ம.) ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

ஆர்.சிவக்குமார், கே.எம்.விஜயன்
கழகங்களுக்காக மனுதாரர்களுக்கான வழக்கறிஞர்கள்
எதிர்வழக்கீட்டாளர் எண்கள் 1, 2 தீர்ப்பாயம்
பி. ஸ்ரீநிவாசலு எதிர்வழக்கீட்டாளர் எண் 3இன் வழக்கறிஞர்

நீ.பே.ம. வகை செய்யப்பட்டது. செலவுத் தொகையின்றி. மு.வி. முடிக்கப்பட்டது. இதில் ஆவணக்கட்டுகளை அனுப்புக என்னும் நீதிப்பேராணை வழங்கக் கோரப்பட்டது. 11.8.2005 தேதியிடப்பட்ட முதல் எதிர் வழக்கீட்டாளர் எந்த ஆணை தொடர்பான பதிவேடுகளை கோரிப் பெறவும் ஆர்.ஏ.எண் 34/2005இன் 3.12.2003 தேதியிடப்பட்டது. 2ஆம் எதிர்வழக்கீட்டாளரின் ஆணையை உறுதி செய்யவும் டி.ஏ.எண் 1437/2002இனை நசுக்கவும் கோரப்பட்டது.

## தீர்ப்பு

**கே.ஆர்.ஸ்ரீராம், தலைமை நீதிபதி**

1. மனுதாரர் தேசிய துணிக் கழகம், 1956 நிறுமங்கள் சட்டத்தின்படி அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. மனுதாரர் 1974 நலிந்த துணி தொழிலேற்பு நிறுவனங்கள் (தேசியமயமாக்கல்) சட்டத்தின் வகைமுறைகளின்படி கொண்டு வரப்பட்டது.

2. ஒரு காலத்தில், பல துணி தொழிலேற்பு நிறுவனங்களும் நலிவுற்றதாக இந்தச் சட்டத்தின் படி விளம்பப்பட்டன. இதில் அவற்றை எடுத்து நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனங்களின் உரிமை மூல ஆவணம் மற்றும் சொந்தக்காரர் களின் உரித்தம் தொடர்பாக வகை செய்வதற்காக இந்தச் சட்டம் இயற்றப்பட்டது மற்றும் இவை தொடர்பாக முதல் இணைப்புச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இவை மீண்டும் முறைப்படுத்தவும் மறுவாழ்வளிக்கும் வகையிலும் பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யவும். இவற்றின் உற்பத்தி மற்றும் பகிர்மானத்தை முறைப்படுத்த வும், நியாயவிலை கிடைக்கச் செய்யவும் பல வகை துணிகள் யார்ன் போன்றவை மற்றும் இவை தொடர்பான பொருட்பாடுகளுக்கு வகை செய்யப்பட்டது.

3. அத்தகை ஒரு நலிவுற்ற பிரிவு அனந்தபூர் பருத்தி ஆலை வரம்பிடப்பட்டது. அது சிண்டிகேட் வங்கியிடம் கடன் பெற்றிருந்தது. பின்னர் சிண்டிகேட் வங்கி, கனரா வங்கியுடன் சேர்க்கப் பட்டது. மனுதாரரின் வழக்கறிஞர் அதன் வழக்கு

உரிமைமூலத்தை திருத்த அனுமதி கேட்டுள்ளார். அதில் அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து திருத்தம் செய்யப் படக் கூறப்பட்டது.

4. வங்கியானது, முதன்மை வழக்கு எண் 1022/1988னை முன்னிட்டது. கோயம்புத்தூர் கீழ்நிலை நீதிமன்றத்தில் ரூ.36,50,917.66 கடன் பெற்றவரிடமிருந்து வசூலிக்க வழக்கிடப் பட்டது. அதாவது அனந்தபூர் பஞ்சாலையிட மிருந்து கடன் அல்லது பிற வசதிகளும் செய்து தரப்பட்டிருந்தது. ஆலை இவற்றில் தவறியது முதன்மை வழக்கு முன்னிடப்பட்டது. மனுதாரர் 12வது எதிர்வாதியாக்கப்பட்டார். இவர் அதன் அதிகார வரம்பு பற்றி வாதிட்டார். பின்னர் அது கடன் வசூலிப்புத் தீர்ப்பாயம் சென்னைக்கு மாற்றப்பட்டு TA-14/1998 என்று எண்ணிடப்பட்டது மற்றும் இது TA-487/2001 என்று எண்ணிடப்பட்டு சென்னை கடன் வசூலிப்பு தீர்ப்பாயம் IIக்கு உள்ளது. கடன் வசூலிப்பு தீர்ப்பாயம் கோயம்புத்தூரில் தொடங்கப்பட்டுள்ள அங்கு மு.வ. மாற்றப்பட்டது. பின்னர் மனு எண்ணிடப் பட்டது. TA-1437/2002 கடன்கள் வசூலிப்பு தீர்ப்பாயம் கோயம்புத்தூர் 3.12.2003 தேதி யிட்ட ஆணையில் வங்கியின் கோரிக்கையை அனுமதித்தது எதிர்வாதிகள் ரூ.36,30,917.66 இனைச் செலுத்த கடப்பாடுடையவர் என்றும் அத்துடன் 18 சதவீதம் ஆண்டுக்கு வட்டியுடன் வழக்கத் தேதியிலிருந்து செலுத்தப்படும் தேதி வரையிலான வட்டியுடன் செலுத்தக் கோரப் பட்டது.

5. மனுதாரர் சொல்லப்பட்ட ஆணையை எதிர்த்தார். அதாவது சென்னை கடன் வசூலிப்பு தீர்ப்பாயத்தின் முறை அது எதிர்ப்புக்குள்ளாக்கப் பட்ட ஆணை மூலம் மேல்முறையீட்டை வகை செய்தது. 11.8.2005 தேதியிடப்பட்ட ஆணை இதில் கடன் வசூலிப்பு தீர்ப்பாய ஆணை உறுதி செய்யப்பட்டது.

6. மனுதாரர் எடுத்த நிலையாவது, 1.4.1974க்குப் பின்னர், எந்தத் தொகையும் வங்கிக்கு செலுத்தப் பட வேண்டியதில்லை என்பது, அதாவது செய்யப்பட்ட சட்டம் செயற்பாட்டிற்கு வந்த தேதிய அதுவே தீர்மானிக்கப்பட்ட தேதியும் மனுதார ருக்கு இணங்க, சட்டத்தின் பிரிவு 5(1)இன்படி, நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முந்திய இடத்தில் இருந்த வந்த கடப்பாடு ஒவ்வொன்றும், சொந்தக் காரரின் கடப்பாடு ஆக்கப்படும் மற்றும் சொந்தக் காரருக்கு எதிராக செயற்படுத்தப்படும் மற்றும் மைய அரசுக்கு அல்லது தேசிய நெசவுக் கழகத்திற்காக எதிராக அல்ல. இந்தச் சட்டத்தின் பொருள்வரையறைபடி சொந்தக்காரர் என்பது, மனுதாரர் பணிந்தளிப்பதாவது, ஆண் எவரும் அல்லது நிறுவனம், அதாவது நிர்ணயிக்கப்பட்ட தேதிக்க உடனடி முந்தி சொந்தக்காரராக அல்லது குத்தகைதாரராக அல்லது அதனை கொண்டிருப்பாராக இருந்தவர். அதாவது நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனம் அல்லது அதன் பகுதி எதனையும் கொண்டிருந்தது மற்றும் நெசவு நிறுவகத்தின் நேர்வில் அலுவல் முடிவுறுத்தப்பட்ட நிறுவனத்தில் அதன் வைப்பாளர் அல்லது வழக்குச் சொத்து பேணுநர் மற்றும் முகவரை அல்லது மேலாளரையும் உள்ள டக்கும் அல்லது அத்தகைய சொந்தக்காரர் கட்டாயமாக இது மனுதாரரை உள்ளடக்காது.

7. மேலும் இதில் பணிந்தனுப்பப்பட்ட தாவது, 5ஆம் பிரிவின் (1)ஆம் பிரிவின் ஒரே விதிவிலக்கு, (2)ஆம் உட்பிரிவில் குறித்து ரைக்கப்பட்ட கடப்பாட அதாவது நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனங்களின் சொந்தக்காரர் கள் மற்றும் (2)ஆம் உட்பிரிவின்படி, இத்தகைய கடப்பாடுகளை மைய அரசால் அல்லது மாநில அரசால் அல்லது இரண்டாலும் அளிக்கப்பட்ட கடன்கள் அல்லது தேசிய நெசவு கழகத்தால் அல்லது மைய நெசவுக் கழகத்தால் நலிவுற்ற நெசவு தொழிலேற்பு அமைப்புகளுக்கு அளிக்கப் பட்ட கடன்கள் அல்லது ஊதியங்கள், சம்பளங்கள் மற்றும் பணியாளர்களுக்கான பிற கொடுபட உள்ளவை போன்றவை. இதில் உள்ளடக்கம் வங்கியின் கோரிக்கை கூறுக்கானது/பிற வசதிகள் நிறுவகத்தினால் அளிக்கப்பட்டவை. சொல்லப்பட்ட சட்டத்தின்படி அளிக்கப்பட்டவை. எடுத்துக் கொள்ளப்படுதல் அது மனுதாரரிட மிருந்து கோரப்பட முடியாது. இந்தப் பணிந்த னுப்புதல்களேன் சிவக்குமார் நம் முன்பு பணிந்தளிக்கப்பட்டவைகள்.

8. வங்கியின் பணிந்தனுப்புதல்கள் இவை சீனிவாசலு என்பவரால் மீண்டும் கூறப்பட்டது சொல்லப்பட்ட சட்டத்தின் 30ஆம் பிரிவின்படி மனுதாரர், அந்த ஒப்பந்தத்தினை ஏற்க வேண்டியது கட்டாயமாகிறது. அதாவது நலிவுற்ற நெசவு நிறுவனங்களால் வங்கியுடன் செய்து கொள்ளப் பட்ட ஒப்பந்தம் இதனை மனுதாரர் ஏற்கத் தவறி

யுள்ளார். எனவே, இதனால் வங்கியின் கோரிக்கை தோல்வியுறக் கூடாது. இதில் பிரிவு இன் வகைமுறை ஆதாரமாக்கப்பட்டது மற்றும் இதில் பணிந்தனுப்பப்பட்டதாவது தேசிய நெசவுக் கழகம் கடமைப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை அங்கீகரித்து ஏற்பதற்கு மற்றும் அது அந்த ஒப்பந்தத்தினை மாற்ற அல்லது மாற்றம் ஏற்படுத்த முடியாது. அதுவும் நலிந்த நெசவு நிறுவனங்களுக்கு கெடுதலான அல்லது தவறான முறையில் இருந்தாலன்றி நலிவுற்ற நெசவு நலன்களுக்கு பாதகமாக மாற்றப்படுதல் ஆகாது. வழக்கறிஞர் பணிந்தளித்தது அது மனுதாரரின் வழக்கல்ல.

9. இதில் பிரிவுகளை முன்னிடுவது பயனுள்ள தாக அமையும். அதாவது சட்டத்தின் பிரிவுகள் 2(1)(h), 3, 4(1), 4(2), 4(5), 5(1), 5(2), 30 அவை பின்வருமாறு படிக்கப்படுகிறது.

“2. பொருள்வரையறைகள்: (1) “சொந்தக் காரர்” நலிவுற்ற ஒரு நெசவு தொழிலேற்பு நிறுவனம் தொடர்பான பயன்படுத்தப்படும்போது என்பது. எவர் ஒருவரும் அல்லது நிறுவனம் அது நிர்ணயிக்கப்பட்ட தேதி முந்தி உடனடியாக, இருந்த நிறுவனம் சொந்தக்காரர் அல்லது குத்தகைதாரர் அல்லது உடைமை கொண்டி ருந்தவர். அதாவது அந்த நலிவுற்ற நிறுவனத்தை அல்லது அதன் பகுதியைக் கொண்டிருந்தவர் மற்றும் ஒரு நெசவு நிறுவனத்தைப் பொறுத்த வரை, அது முடிவுறுத்தப்படுகிறபோது அல்லது அதன் அலுவலர் நடத்தப்படும்போது அதன் கலைப்பாளர் அல்லது அலவலக சொத்தாய் இவரை உள்ளடக்கும் மற்றும் முகவர் அல்லது மேலாளர் அல்லது அத்தகைய சொந்தக்காரர் எவரையும் உள்ளடக்கும். ஆனால் 1972 சட்டத்தின் தொழிற் சாலைகள் (மேலாண்மை ஏற்றுக் கொள்ளுதல்) சட்டத்தின்படி அல்லது 1951 தொழிற்சாலைகள் (மேம்பாடு ஒழுங்கு முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி அதிகாரமளிக்கப் பட்ட ஆட்களின் குழுமம் அல்லது ஆள் எவரையும் உள்ளடக்கும். இவர்கள் நலிவுற்ற தொழிலேற்பு நிறுவனங்களின் மேலாண்மையை முழுவதுமாக அல்லது பகுதியாக ஏற்றவர்கள்.

3. நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனங் களின் தொடர்பாக சொந்தக்காரர்களின் உரிமை கள் தொடர்பான உரிமைகள் பெறப்படுதல்.

(1) நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று நலிவுற்ற நெசவு நிறுவனங்களின் சொந்தக்காரர்களிட மிருந்து உரிமை மாற்றம் செய்யப்பட்டு மத்திய அரசிடம் முழுமையாக உற்றடையும்.

(2) நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனம் ஒவ்வொன்றும், மத்திய அரசிடம் உற்றடையும் மற்றும் (1)ஆம் உட்பிரிவின் காரணமாக அவ்வாறு அவை உற்றடைந்த உடன் தேசிய நெசவு கழகத்திற்கு உரிமை மாற்றம் செய்யப் பட்டு அதனிடம் உற்றடையும்.

(3) அத்தகைய உரிமை மாற்றம் மற்றும் உற்றடைதல் மற்றும் நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனங்கள் எவையும் உற்ற டைந்தபோதிலும் தேசிய நெசவு கழகம் (2)ஆம் உட்பிரிவின்படி அதன் குத்தகை உரிமைகள் அந்த நலிவுற்ற நிறுவனங்கள் தொடர்பாகத் தொடரும். அவை மத்திய அரசிடம் அந்த குத்தகை தொகைகளை செலுத்துவதன் பேரில் விடுபட்டு நிற்கும். அரசுக்காகவும் அது சார்பாகவும் தேசிய நெசவுக் கழகம் மற்றும் அத்தகைய வாடகை செலுத்தப்படும்போது அல்லது தொகை எதுவும் செலுத்தத்தக்கதால் போது அவை செலுத்தப்படும்.

(4) 3ஆம் உட்பிரிவிற்கு உட்பட்டு, எந்த நீதிமன்றத்திற்கும் அந்த தொகையினை தேசிய நெசவு கழகத்திலிருந்து மாற்ற அதிகார வரம்பு கிடையாது. அதனால் அது மத்திய அரசிடம் உற்றடையும் சொத்தாகும்.

4. அவ்வாறு உற்றடைதலின் பொதுப்பயன் (1) நலிவற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனம் 3ஆம் பிரிவில் சுட்டப்பட்டவற்றில் அனைத்து உடைமைகள் உரிமைகள், குத்தகை உரிமைகள், அதிகாரங்கள், அதிகார உரிமைகள், சலுகைகள் அனைத்தையும் உள்ளடங்குவதாக கொள்ளப் படும் மற்றும் சொத்துக்கள் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், நிலங்கள், கட்டிடங்கள், பயிற்சி மையங்கள், ஸ்டோர்கள், காரணங்கள், இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் உள்ளடங்க லாக பண நிலுவைகள், கையில் உள்ள நோக்கம், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியங்கள் வைப்பீடுகள் புத்தகக் கடன்கள் மற்றும் அனைத்து உரிமைக்கும் உரித்தங்களும் அத்தகைய சொத்திலிருந்து எழக் கூடிய அனைத்தும் அதுவும் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்பு உடனடியாக அந்த நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனங்களின் சொந்தக்காரரின் அதிகாரத்தில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளவை. அவை இந்தியாவிற்குள் அல்லது வெளியே இருந்தாலும் அனைத்து கணக்கு புத்தகங்கள், பதிவேடுகள்

மற்றும் அனைத்து பிற ஆவணங்களும் எத்தன்மையதாயினும் அவை கடமைப் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை உள்ளடக்குவதாகும் அதாவது 5ஆம் பிரிவின் (2)ஆம் பிரிவும் குறித்துரைக்கப்பட்டவை.

(2) மேற்சொல்லப்பட்ட அனைத்து சொத்துக்களும் மத்திய அரசிடம் உற்றடையும், பிரிவு 3இன் (1)ஆம் உட்பிரிவின்படி அத்தகைய உற்றடைதல் மூலம், அவை கட்டளை, கடப்பாடு, அடைமானம், கட்டாயம் என்றும் அனைத்திலிருந்தும் விடுவிக்கப்படும் மற்றும் அனைத்து வில்லங்கங்களிலிருந்தும் விடுதலை பெறும் மற்றும் பற்றுகை, தடையுறுத்து ஆணை அல்லது தீர்ப்பினை அல்லது நீதிமன்றம் ஏதொன்றில் ஆணை எதிலிருந்தும் விடுபடும். அதாவது அந்தச் சொத்தினைப் பயன்படுத்தும் முறை எதிலிருந்தும் இவை அனைத்தும் மீளப் பெறப்பட்ட கொள்ளப்படும்.

(5) ஐயங்களை அகற்றுவதற்காக, இதன் மூலம் விளம்பப்படுவதாவது, சொத்து ஏதொன்றின் அடைமானம் (2)ஆம் பிரிவின் கட்டப்பட்டது அல்லது வேறு எவராலும் கொள்ளப்பட்டுள்ள பற்றுகை அல்லது பிற உரித்தம் எதுவும் அல்லது அவை தொடர்பாக. அந்த சொத்தின் மீதான கோரிக்கை அவரது உரித்தங்கள் அல்லது உரிமைகள் போன்றவற்றில் இணங்க அடைமானப் பணத் செலுத்தம் அல்லது பிற கொடுபட உள்ளவை. முழுவதுமாக அல்லது பகுதியாக அந்தத் தொகையிருந்தானவை அந்த சொத்துக்கு எதிராகப் பயன்படக் கூடியவை எவையும் அவை மத்திய அரசை உற்றடையும்.

5. சொந்தக்காரர் சில முந்திய கடப்பாடுகளுக்கு உரித்தமுடையவராவார். (1) ஒவ்வொரு கடமைப் பொறுப்பும், கடமைப் பொறுப்பில்லாத பிற (2)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டவை. பொறுப்பில்லாத பிற (2)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டவை. ஒரு நலிந்த நெசவு தொழிலேற்பு நிறுவனத்தின் சொந்தக்காரர், நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முந்திய காலத்தின் போதாதற்கு அவருடைய கடமைப் பொறுப்பு செயற்படுத்தப்படும் மற்றும் மத்திய அரசுக்கு அல்லது தேசிய நெசவுக் கழகத்திற்கு எதிராகச் செயற்படுத்தப்படும்.

(2) பின்வருவனவற்றில் எழும் கடப்பாடு எதுவும்

(அ) ஒரு நலிவுற்ற நெசவு தொழிலேற்பு அமைப்பிற்கு மத்திய அரசும் அல்லது மாநில அரசால் அல்லது இரண்டாவது அளிக்கப் பட்டுள்ள கடன் எதுவும், (கொடுபட உள்ள அதன் வட்டியுடன்) அத்தகைய தொழிலேற்பு நிறுவனத்தின் மேலாண்மைக்குப் பின்னர், அவற்றை மத்திய அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர்,

(ஆ) ஒரு நலிவுற்ற நெசவு தொழிலேற்பு அமைப்பிற்கு கொடுக்கப்பட்ட முன்பணத் தொகை (அத்தகை மேலாண்மைக்குப் பின்னர் அவை மத்திய அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர்) தேசிய நெசவு கழகத்தால் அல்லது மாநில நெசவு கழகத்தால் அல்லது இரண்டாலும் அளிக்கப்பட்ட தொகை அத்துடனான வட்டியுடன்.

(இ) ஊதியங்கள், சம்பளங்கள் மற்றும் பிற கொடுபட வேண்டியவைகள் அதாவது நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனங்களின் பணியாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை தொடர்பாக.

அந்த தொழிலேற்பு மேலாண்மை மத்திய அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர், அத்தகை நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து, மத்திய அரசின் கடப்பாடாகும் மற்றும்

அந்த அரசு சார்பாக தேசிய நெசவுக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் மற்றும் அத்தகைய கடன்கள் அல்லது தொகைகள் திருப்பிச் செலுத்த வேண்டிய தேதியில் இவர்களால் அத்தகைய ஊதியம், சம்பளங்கள் அல்லது பிற கொடுபட உள்ளவை செலுத்தப் படத்தக்கவை.

..............

30. ஒப்பந்தங்கள் செயற்படுவது அற்றுப் போகும் – அவை தேசிய நெசவுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி: (1) நலிவுற்ற நெசவு தொழிலேற்பு எதன் சொந்தக்காரர் அல்லது உடைமையிலிருப்பவரினால் ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தம் ஒவ்வொன்றும் அவை பணிக்காக, விற்பனை அல்லது விநியோகத்திற்காக செய்யப்பட்டிருந்து அந்த நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்பு செயற்பாட்டில் இருந்திருப்பின் இந்தச் சட்டம் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்ற தேதியிலிருந்து 180 நாட்கள் முடிவடைந்ததுபேரில் செயற்பாட்டிலிருப்பது அற்றுப்

போகும். இத்தகைய ஒப்பந்தம் அந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அங்கீகாரம் பெறப்படுதல் அவசியம். அதாவது எழுத்து மூலமான அங்கீகாரம் தேசிய நெசவுக் கழகத்திட மிருந்து மற்றும் அத்தகைய ஒப்பந்தத்தை அங்கீகரிப்பது மத்திய அரசின் முன் ஒப்பளிப்புடன் இதில் அது தக்கதெனக் கருதலாகிற மாற்றங் களை அல்லது மாறுபாடுகளை செய்யும்.

**வரம்புரையாக:** அந்த தேசிய நெசவுக் கழகம் ஒரு ஒப்பந்தத்திற்கு ஏற்பிசைவளிக்காக விட்டு விடாது மற்றும் அந்த ஒப்பந்தத்தில் மாற்றம் அல்லது மாற்றீடு செய்தல் ஆகாது. அது அதில் அந்த ஒப்பந்தம் தேவையற்ற பொறுப்புடைவதாக உள்ளதாக அல்லது தவறான நம்பிக்கையில் ஏற்படுத்தப்பட்டிருப்ப தாக அல்லது நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனத்தின் உரித்தத்திற்கு பாதகமாக உள்ள மனநிறைவு கொள்ளுமானால், அன்றி செய்யாது.

(2) தேசிய நெசவுக் கழகம், ஒரு ஒப்பந்தத்திற்கு ஏற்பிசையளிக்காது விடுதல் ஆகாது மற்றும் அதில் மாற்றம் அல்லது மாற்றீடு எதனையும் செய்தலாகாது. அதாவது இது பற்றி ஒப்பந்தத்தின் தரப்பினர்களுக்கு கேட்கப்படுவதற்கு ஒரு நியாயமான வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றும் அந்த ஒப்பந்தத்திற்கு ஏற்பிசைவு அளிக்க மறுப்பதற் காக காரணங்களை எழுத்தில் பதிவு செய்தி ருந்தால் தவிர அல்லது அத்தகைய மாற்றம் அன்று மாற்றீடு எதனை செய்வதற்காக.

......

10. கடப்பாடு ஒவ்வொன்றும் என்னும் சொற்றொடர் 5ஆம் பிரிவில் பயன்படுத்தப் பட்டுள்ளது. அதுவும் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்பான காலம் எதன் தொடர்பாகவும், அது அந்த சொந்தக்காரரின் கடப்பாடாகும் மற்றும் அவருக்கு எதிராக செயற்படுத்தப்படத்தக்கதாகும் மற்றும் மத்திய அரசுக்கு அல்லது தேசிய நெசவு கழகத்திற்கு எதிராக அல்ல. இதன் பொருள் கோள் மிகவும் விரிவானது. இதில் அனைத்து கடப்பாடுகள் எத்தன்மையதாயினும் அதனை உள்ளடக்கும். இதில் ஒரே விதிவிலக்கு. சொல்லப்பட்ட சட்டத்தின் (2)ஆம் உட்பிரிவில் உள்ள கடப்பாடுகள் மட்டுமே. வழக்கறிஞர்கள் நியாயமாக உடன்பட்டது. வங்கியின் கடப்பாடு 5ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் வராது என்பது. எனவே, கட்டாயமாக வங்கியின் கடப்பாடுகள், அதாவது ஒரு நலிவுற்ற பிரிவின் கடப்பாடுகள் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட் பிரிவின்படி அடங்கும்.

11. ஸ்ரீசிவக்குமாரின் பணிந்தனுப்புதல்கள் தொடர்பாக. பிரிவு 30 இந்த வழக்கிற்கு மொத்த மாகப் பொருந்தாது. நாம் வழக்கறிஞர்களுடன் உடன்படி வேண்டியதே. ஏனெனில் 30 வகை செய்வதாவது நலிவுற்ற நெசவு தொழிலேற்பு நிறுவனத்தின் சொந்தக்காரரால் அல்லது உடைமையிலிருப்பவரால் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் பணிக்காக, விற்பனை அல்லது விநியோகம் தொடர்பானவை மட்டுமே ஏற்பிசைவளிக்கப்பட வேண்டியவை. எந்த அளவு கற்பனையை மேற்கொண்டாலும் இதில் வங்கிக்கும் நிறுமத்திற்குமான ஒப்பந்தம் ஒரு ஒப்பந்தமாக கூறப்பட முடியாது. அதாவது பணி விற்பனை அல்லது வழங்கீடு தொடர்பானவை. நம் கருத்துப்படி இந்த வகைமுறை அத்தகைய ஒப்பந்தங்களுக்கு ஏற்பிசைவளிப்பது வகை செய்யப்பட்டுள்ளது. தேசிய நெசவுக் கழகம் நலிவுற்ற நெசவுப் பிரிவுகளை எடுத்துக் கொள்வது தொடர்பான ஒப்பந்தங்கள் பணி, விற்பனை அல்லது வழங்கீடு தொடர்பானவை. இதனால் பாதிக்கப்படக் கூடாது. இது ஒரு தப்பிக்கும் நடமாடும் தேசிய நெசவுக் கழகம். இது தேவையற்ற சுமையை அளிப்பதாக மனநிறைவு கொள்ளுமானால் அல்லது இது தவறான நம்பிக்கையில் செய்யப்படுவதாகக் கருது மானால் இது நிறுமத்தின் உரித்தங்களுக்கு பாதகமாக உள்ளதாகக் கருதுமானால் இதை மறுக்கும்.

12. நமது கருத்தில் இந்த சூழ்நிலைகளில் சட்டத்தின் பிரிவு 30 இந்த வழக்கிற்கும் பொருந்தாது. முடிவு எடுக்கப்பட்டது. கடன் வசூலிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தால் என்பதை இடையீடு செய்ய வேண்டியுள்ளது. எனவே நிராகரிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப் படுகிறது.

அவ்வாறே நீதிப்பேராணை வகை செய்யப் படுகிறது. செலவுத் தொகையின்றி ஆணை இல்லை. இதன் விளைவாக இடைநிலை விண்ணப்பம் முடிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# நிவாரணம் உரிமையியல் நெறிமுறைச் சட்டம் ஆணை 7, விதி 11ல் இருப்பதால், உரிமையியல் சீராய்வு மனு தள்ளுபடியாகிறது

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி திரு.பி.ப்பி.பாலாஜி**
**உ.சீ.ம.எண் 2841/2025**
**தீர்ப்பு ஒத்திவைப்பு : 31/07/2025**
**தீர்ப்பு பகிரப்பட்டது : 22/08/2025**
**(2025 (5) CTC 136)**

**1. சித்ராதேவி,**
**2. ஸ்ரீ விக்னேஷ்வரன் (எ) ஸ்ரீவிக்னேஷ்,**
**3. மதுமிதா சுபஸ்ரீ ...மனுதாரர்கள்**

**–எதிர்–**

**1. எஸ்.பி.டி.அப்பேரல்ஸ் பி லிட், சார்பாற்றம்**
**அதன் மேலாண் இயக்குனர்**
**பி.சண்முகவடிவேல், பல்லடம் ...எதிர்மனுதாரர்**

**வேண்டுகை:** அரசியலமைப்பு சட்ட உறுபு 227ன் தாக்கலான உரிமையியல் சீராய்வு மனுவின் வாயிலான சார்நிலை நீதிமன்றம், பல்லடம் அ.வ.எண் 97/2025ன் மீதான வாதுரையை ரத்து செய்ய வேண்டுகை செய்யப் பட்டது.

மனுதாரர்களுக்காக – திரு.பி.வள்ளியப்பன், மூத்த வழக்கறிஞர்–திரு.எஸ்.சித்திரை ஆனந்தன், வழக்கறிஞருக்காக

எதிர்மனுதாரருக்காக – திரு.என்.ராமகிருஷ்ணன், உதவி திரு.அத்வைத் நீலகண்டன் மற்றும் பிரணவ் ஆர்.மேனன், ஏஆர்கே அசோசியேட்ஸ்–ற்காக, வழக்கறிஞர்கள்

**ஆணை :**

1. பல்லடம் சார்பு நீதிமன்றத்தின் கோப்பு எண் O.S.No.97/2025–ல் உள்ள மனுவை நீக்கக் கோரி இந்த மறுசீராய்வு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான திரு.எஸ்.சித்திரை ஆனந்தன் அவர் களுக்காக ஆஜரான மூத்த வழக்கறிஞர் திரு. பி. வள்ளியப்பன் மற்றும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஏஆர்கே அசோசியேட்ஸ்–க்காக திரு.அத்வைத் நீலகண்டன் துணையுடன் ஆஜரான வழக்கறிஞர் திரு.என். ராமகிருஷ்ணன் ஆகியோரின் வாதங்களைக் கேட்டேன்.

3. மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் திரு. பி. வள்ளியப்பன், இந்திய அரசியலமைப்பின் சரத்து 227–ன் கீழ் மனுவைத் தள்ளுபடி செய்யக் கோரும்போது, வழக்கின் நிலைக்கத்தக்க தன்மையையே கேள்வி எழுப்பிப் பேசினார். முதலாவதாக, இது வழக்கு நடைமுறையை துஷ்பிரயோகம் செய்வ தாகும் என்றும், கம்பெனிகள் சட்டம், 2013–இன் பிரிவு 241–ன் கீழ் நிவாரணம் கிடைக்கும்போது, வாதி தேசிய கம்பெனி சட்டத் தீர்ப்பாயத்தை மட்டுமே அணுகியிருக்க வேண்டும் என்றும், உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்ட வழக்கு நிலைக்கத் தகுதியற்றது என்றும் வாதிட்டார். மேலும், வழக்கில் உள்ள பிரதி வாதிகள் பெரும்பான்மை பங்குதாரர்கள் என்றும், வாதிக்கு பழனி ஆண்டவர் டெக்ஸ்டைல்ஸில் 15% பங்குகள் மட்டுமே உள்ளன என்றும் அவர் கூறினார். மேலும், இந்தச் சொத்து வாதியின் தந்தையின் குடும்ப உறுப்பினர்களுக்குச் சொந்தமான பரம்பரைச் சொத்து என்றும், இது

குறித்து O.S.No.584/2024 என்ற பிரிவினை வழக்கும் நிலுவையில் உள்ளது என்றும் கூறினார். அந்தப் பிரிவினை வழக்கிலும் வாதியையும் அவரது சகோதரரையும் சேர்க்கக் கோரி I.A.No.4/2024 என்ற விண்ணப்பம் நிலுவையில் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

4. மனுதாரர்களின் மூத்த வழக்கறிஞர், தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில், கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 241-ன் கீழ் மட்டுமின்றி, பிற தடைகளாலும் வழக்கு தடை செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டாலும், அவர் அந்த வாதத்தை வலியுறுத்தவில்லை என்றும், ஆனால் பிரிவு 430-ன் கீழும் ஒரு தடை உள்ளது என்றும் வாதிட்டார். கம்பெனிகள் சட்டத்தின் பிரிவுகள் 408 மற்றும் 424-ஐ எனது கவனத்திற்குக் கொண்டு வந்து, சட்டம் தீர்ப்பாயத்திற்கும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத் திற்கும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை வகுத்துள்ளது என்றும், நிவாரணம் தேட சட்டத்தில் தெளிவான, விரிவான மற்றும் உள்ள மைக்கப்பட்ட வழிமுறை இருக்கும்போது, வாதி சிவில் நீதிமன்றத்தை அணுகி வழக்கு தொடர முடியாது என்றும் மூத்த வழக்கறிஞர் கூறினார். மேலும், திரு. பி. சண்முகவேலின் உரிமைகள், O.S.No.584/2024 வழக்கு விசாரணைக்குப் பிறகு தீர்ப்பளிக்கப்பட்டால் மட்டுமே கிடைக்கும் என்றும், எந்தக் கோணத்தில் பார்த்தாலும், இது வழக்கு நடைமுறையின் துஷ்பிரயோகம் மட்டுமே என்றும், இந்திய அரசியலமைப்பின் சரத்து 227-ன் கீழ் நீக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார். எனவே, மறுசீராய்வை அனுமதிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

5. இதற்கு நேர்மாறாக, எதிர்மனுதாரா? தரப்பு வழக்கறிஞர், முதலாவதாக, நீக்கப்படக் கோரும் O.S.No.97/2025-ன் வாதி, முந்தைய வழக்கில் தரப்பினர் அல்ல என்று வாதிட்டார். வாதி ஒரு தனி சட்ட நிறுவனம் என்றும், நிரந்தரத் தடையாணை நிவாரணம் கோருவதற்கு ஒரு குறிப்பிட்ட வழக்குக் காரணத்தை வெளியிட்டு ள்ளது என்றும் கூறினார். இது தொடர்பாக, அவர் O.S.No.97/2025-ல் உள்ள மனுவில் உள்ள வாதங்களை என் முன்பாக எடுத்துரைத்தார். மேலும், கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 241, ஒடுக்குமுறை மற்றும் தவறான நிர்வாகம் தொடர்பானது என்றும், இது பங்குதாரருக்கு மட்டுமே கிடைக்கும் என்றும், ஆனால் இந்த வழக்கில் வாதி நிறுவனம் என்றும், நிறுவனம் தீர்ப்பாயத்தை அணுகுவதற்கு வழிமுறை எதுவும் இல்லை என்றும், எனவே மனுவை நீக்குவதற்காக வாதிக்கு எதிராக பிரிவு 241-ஐப் பயன்படுத்த முடியாது என்றும் அவர் மேலும் கூறினார்.

6. நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 430 ஐப் பொறுத்தவரை, தங்கள் சொத்தைப் பாதுகாக்கக் கோருவது நிறுவனம் மட்டுமே என்பதால், இந்தத் தடை பொருந்தாது என்று எதிர்மனுதாரா? தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். வழக்கில் நிவாரணம் கோரப்படும் விசைத்தறிகளை வாதி நிறுவனம் வாங்கியதற்கான ரசீதுகளையும் எனது கவனத்திற்கு அவர் கொண்டு வந்தார். மேலும், அந்த விசைத்தறிகள் O.S.No.584/2024 பிரிவினை வழக்கில் உள்ள சொத்தின் பகுதியே அல்ல என்றும், எனவே இந்த வழக்கில் நடைமுறையை துஷ்பிரயோகம் செய்யும் கேள்வி எழவில்லை என்றும் அவர் மேலும் வாதிட்டார். மறுசீராய்வை தள்ளுபடி செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

7. மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த மூத்த வழக்கறிஞரின் வாதங்களையும், எதிர்மனுதார் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதங்களை யும் நான் கவனமாகக் கருத்தில் கொண்டேன்.

8. மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு. பி. வள்ளியப்பன் அவர்கள், மறுசீராய்வுக்கான காரணங்களில் வலியுறுத்தப் பட்டபோதிலும், கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 241-ன் கீழ் உள்ள தடை பொருந்தாது என்று நியாயமான சலுகையை சுட்டிக்காட்டியதால், நான் அதைப் பற்றி விவாதிக்கப் போவதில்லை. நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 430 மற்றும் சொத்துக்கள் வழக்கில் உள்ளதா இல்லையா என்பது குறித்தும், இது மீண்டும் வழக்கின் பொருண்மை குறித்த கேள்வி ஆகும். ஏனெனில், பிரிவினை வழக்கில் உள்ள மனுவை மேலோட்டமாகப் படிக்கும்போது, அந்தச் சொத்தில் விசைத்தறிகள் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதாக என்னால் காண முடியவில்லை. இருப்பினும், மனுதாரர்கள்

தரப்பு மூத்த வழக்கறிஞரின் வாதம் என்னவென்றால், அந்த விசைத்தறிகள் பிரிவினை வழக்கில் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களுக்குள் அமைந்துள்ளன என்பதாகும். இது மீண்டும் ஒரு சர்ச்சைக்குரிய உண்மை. மேலும் இது குறித்து ஒரு ஊகத்தை என்னால் காண முடியவில்லை. இந்த மறுசீராய்வில், மனுதாரர்கள் இந்திய அரசியலமைப்பின் சரத்து 227-ன் கீழ் மனுவை நீக்க மட்டுமே கோருகின்றனர். எனவே, பிரிவு 430-ன் கீழ் உள்ள தடையின் காரணமாக மனு நீக்கப்படுவதற்குத் தகுதியுடையதா என்பதே தீர்ப்பளிக்கப்பட வேண்டிய ஒரே கேள்வி.

9. சிவில் நடைமுறைச் சட்டத்தின் ஆணை VII விதி 11(d)-ன் கீழ் இந்த நிவாரணம் மறுசீராய்வு மனுதாரர்களுக்குக் கிடைக்கிறது. மாண்புமிகு உச்ச நீதிமன்றம், கே.வளர்மதி மற்றும் சிலர் -எ- குமரேசன் (2025 INSC 606) மற்றும் விருதுநகர் ஹிந்து நாடார்கள் தர்ம பரிபாலன சபை மற்றும் சிலர் -எ- தூத்துக்குடி கல்வி சமூகம் மற்றும் சிலர் (2019) 9 SCC 538) ஆகிய வழக்குகளில், மாற்று நிவாரணம் இருக்கும்போது, அதைப் பயன்படுத்தாமல், நேரடியாக உயர்நீதிமன்றத்தை அணுகி மனுவைத் தள்ளுபடி செய்யக் கோரக்கூடாது என்று கூறியுள்ளது. மறுசீராய்வு மனுதாரர்களால் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளின் முகப்பில் எந்தவொரு நடைமுறை துஷ்பிரயோகத்தையும் என்னால் காண முடியவில்லை. எனவே, இந்த மறுசீராய்வில் எந்தத் தகுதியையும் நான் காணவில்லை. மனுதாரர்கள் அறிவுறுத்தப்பட்டால், சிவில் நடைமுறைச் சட்டத்தின் ஆணை VII விதி 11-ன் கீழ் மனுவை தள்ளுபடி செய்யக் கோரி பொருத்தமான விண்ணப்பத்தை தாக்கல் செய்ய அவர்களுக்கு எப்போதும் வாய்ப்பு உள்ளது.

10. மேற்கூறியவற்றின் அடிப்படையில், உரிமையியல் மறுசீராய்வு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுகள் குறித்து எந்த உத்தரவும் இல்லை. இணைக்கப்பட்ட உரிமையியல் இதர மனு முடித்து வைக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## குழந்தைகளைத் தத்தெடுக்க அனைத்து மதத்தினருக்கும் உரிமை உள்ளது

குழந்தைகளைத் தத்தெடுக்க அனைத்து மதத்தினருக்கும் உரிமை உள்ளது என சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு அண்மையில் உத்தரவிட்டது. மதுரையில் இஸ்லாத்தைச் சேர்ந்த ஒருவர், உயிரிழந்த தனது சகோதரியின் 8 வயது குழந்தையைத் தத்தெடுக்க முன் வந்தார். இதற்கு, அந்தக் குழந்தை யின் தாயும் சம்மதித்தார். இந்தத் தத்தெடுப்பை சட்டபூர்வமாக பதிவு செய்வதற்காக, அவர் மேலூர் கிழக்கு சார் பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்தார். இஸ்லாம் மதத் தத்தெடுப்பை அனுமதிக்கவில்லை என்ற அடிப்படையில், சார்-பதிவாளர் அலுவலகத்தில் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து, தனது தத்தெடுப்பு விண்ணப்பத்தை ஏற்க உத்தரவிடக் கோரி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் அவர் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அண்மையில் பிறப்பித்த உத்தரவு.

இஸ்லாம், கிறிஸ்துவ மதங்கள் தத்தெடுப்பை அங்கீகரிக்கவில்லை என்பது உண்மை. அதேநேரத்தில், சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு, பாதுகாப்பு) சட்டம் 2000இன் கீழ் குழந்தைகளைத் தத்தெடுக்க அனைவருக்கும் உரிமை உள்ளது. குழந்தையின் உண்மையான பெற்றோரின் முழு விருப்பத்துடன் தத்தெடுக்கலாம். இந்த வழக்கில் குழந்தையைத் தத்தெடுப்பவரும், தத்துக் கொடுப்பவரும் ஒரே மதத்தை (இஸ்லாம்) சேர்ந்தவர்கள். இவர்கள், சிறார் நீதி சட்டத்தில் 2015ஆம் ஆண்டில் வகுப்பட்ட விதிகளை முழுமை யாகப் பின்பற்றினால் போதுமானது. அதேநேரத்தில், தத்தெடுப்பு பதிவு விவகாரத்தில் எளிய வழிமுறைகள் எதையும் நாட முடியாது. எனவே, குழந்தையைத் தத்தெடுப்பவர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரை அணுக வேண்டும். 5 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தத்தெடுக்கப்படும்போது தொடர்புடைய குழந்தையின் ஒப்புதலையும் பெற வேண்டியது அவசியம். எனவே, தத்தெடுப்பு உத்தரவு பிறப்பிக்கும் முன்பாக குழந்தையின் வயது, அதப் புரிதலை மாவட்ட நிர்வாகம் கவனத்தில் கொள்ள வேண்டும். குழந்தையின் விருப்பங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

தத்தெடுப்பு முறையில் குழந்தையின் நலன் மிக முக்கியமானதாகக் கருதப்பட வேண்டும். தத்தெடுக்கும் உரிமை அரசமைப்புப் பிரிவு 21-ன் வரையறைக்குள் ஒரு அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்படவில்லை. இருப்பினும், தத்தெடுப்பது பல சந்தர்ப்பங்களில் தொடர்புடைய குழந்தை ஏற்கனவே சந்தித்த பாதக மான அதிர்ச்சிகரமான நிகழ்வுகளிலிருந்து மீள வாய்ப்பு அளிக்கிறது. எனவே, மனுதாரரின் தத்தெடுப்பு விண்ணப்பத்தை குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் உரிய வகையில் பரிசீலித்து வழக்கமான செயல்முறை நடவடிக்கை களை 3 வாரங்களுக்குள் நிறைவு செய்ய வேண்டும். இந்த விவகாரம் மாவட்ட ஆட்சியரின் கவனத்தை அடைந்ததும், 3 வாரங்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டும். தத்தெடுப்புக்கு மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கிற பிறகு அதைப் பதிவு செய்யத் தேவையில்லை. தத்தெடுப்பு மூலம் ஒரு குழந்தைக்கு நல்ல எதிர் கால வாழ்க்கை, தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட வாய்ப்புகள் கிடைக்கின்றன. எனவே, தத்தெடுப்பு தடை முறைகளை சிறார் நீதிச் சட்டத்தின் அடிப்படையில் அதிகாரிகள் விரைவுபடுத்த வேண்டும் என்றார் நீதிபதி.

**நன்றி: தினமணி 22.10.2025**

# உரிமையும் கால வரம்பும்

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை : நீதிபதி பி.டி.ஆஷா
உ.சீ.ம. (PD) எண் 250/2025 மற்றும்
உ.ப.ம. எண் 1663/2025
3.4.2025
2025 (3) CTC 572

ஏ. பிரசாத் 2. ஜி.இந்துஜா ...மனுதாரர்கள்

-எதிர்-

சீனிவாச ராவ் ...எதிர்வழக்கீட்டாளர்

டி. முருகமாணிக்கம் பாபு ரங்கசாமி குழு
மனுதாரரின் வழக்கறிஞர்கள்

ஜி. சாரத் பானு
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.சீ.ம. அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப்பட்டது.

**கோரிக்கை**: உரிமையியல் சீராய்வு மனு. இந்திய அரசமைப்பின் 227ஆம் உறுப்பின்படி முன்னிடப்பட்டது. இது மு.வ.எண் 1193/2024 XXஆவது உதவி-மாநகர உரிமையியல் நீதிமன்றம் சென்னை இதன் மு.மே.எண் 5/ 2024, 16.12.2024 தேதியிடப்பட்ட ஆணைக்கு எதிரானது.

**தீர்ப்பு**

1. மு.வ.எண் 1193/2024, சென்னை XXஆவது உதவி மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் கோப்பில் உள்ளதிலிருந்து எழுகிற. மு.மே.எண் 5/2024.

2. கட்டளை 7 விதி 11 (அ), ஆ உடன் சேர்த்து வாசிக்கப்படுகிற பிரிவு 151இன்படி அவர்களது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப் பட்டதை எதிர்த்து, சென்னை XXஆவது உதவி மாநகர உரிமையியல் நீதிமன்றத்தினை வழக்கு, எதிர்வாதிகள் இந்த நீதிமன்றத்தில் மனுதாரர்கள் தரப்பினர்களை அறிவதற்காக, விசாரணை நீதிமன்றத்தின் முன்பான அவர்கள் நிலையில் சுட்டப்படுவர். இதன் பொருண்மைகள் சுருக்க மாகப் பின்வருமாறு.

3. வாதி மு.வ.எண் 1193/2024இனை முன்னிட்டுள்ளார். இது நீதிமன்றக் கோப்பில் உள்ளது. இதில் பின்வரும் உய்தி கோரப் பட்டுள்ளது.

(அ) வாதிகளை 'B' இணைப்புச் சொத்துக்கு முழு சொந்தக்காரர்கள் என்று விளம்புகை செய்தல் மற்றும் இதன் அடிப்படையில், நிலையான தடையுறுத்து ஆணை விதிக்க கோரியும் அதாவது எதிர்வாதிகளின் ஆட்கள், முகவர்கள், வேலையாட்கள் அல்லது அவர் மூலம் உரிமை கோருகிற எவரும், வாதியுடன் இடையிடு செய்வதைத் தடுக்கவும் அவரது அமைதியான கையுடைமைக்கும் அதனைத் துய்த்தலுக்கும் வழி செய்ய கோரப்பட்டது.

(ஆ) 'B' இணைப்பு சொத்தின் முன்பு வண்டியை நிறுத்தாது இருக்கக் கூறும் தற்காலிக தடையுறுத்து ஆணை.

4. 'A' இணைப்புச் சொத்து ஒரு பகுதி மற்றும் அதனையை ஒட்டிய நிலம் பழைய எண் 15, புதிய எண் 35, முதலி தெரு, தியாகராய நகர், சென்னை இதன் 4 எல்லைகள் இந்த சொத்தின் பரப்பு குறிப்பிடப்படவில்லை.

5. 'B' இணைப்புச் சொத்து ஒரு தாழ்வாரம் என்று குறிக்கப்பட்டுள்ளது வாதுரையில் அது 10ஒ10 100 சதுர அடி. அதன் எல்லைகள் கிழக்கில் மற்றொரு தாழ்வாரம், மேற்கு மற்றும் தெற்கில், வழிப்பாதை ஆர்.ராஜுக்கு சொந்த மானது. வடக்கில் திறந்தவெளி இது அளவு வழக்கும் பொதுவானது.

6. வாதியின் வழக்கானது, 1987இல் அவரது தாயார் சாவித்திரி சிவராமன் பிளாட் எண் 10இனை 2ஆம் தளத்தில் வாங்கி யிருந்தார். ஆர்.ஆர்.பிளாட் என்றழைக்கப்பட்டது. எண் 13, சரவணத் தெரு, தி.நகர், சென்னை தனிக் கட்டிடம் பரப்பிடம் 1100 சதுர அடி அத்துடன் 1/8 பிரிக்கப்படாத பங்கு 3752 சதுர

அடிப்பரப்பிலான இடத்தில் மற்றும் 1/20 பாகம் பிரிக்கப்படாத பங்கு 800 சதுர அடி இடத்தில் வழிப்பாதை இடத்தில் இந்த அடுக்குமாடி வி.ராமசாமி என்பவரிடமிருந்து வாங்கப்பட்டது. அவர் சார்பாற்றம் அவரது அதிகார முகவர் ஆர்.ராஜு இதன் பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணம் 25.7.1987 தேதியிடப்பட்டது.

7. வாதியின் வழக்காவது, விற்பவர், அவரது தாய்க்கு கூறியுள்ள உறுதியாவது அவர்களுக்கு வாகனம் நிறுத்தும் இடம் ஒதுக்கீடு செய்யப்படும் என்பது. இந்த உடன்படிக்கையை ஒட்டி வாதியின் தாயார் மற்றும் சொல்லப்பட்ட ராஜு விற்பனை உடன்படிக்கை 19.9.1992 தேதியிடப்பட்டதை ஏற்படுத்தியுள்ளனர். ‘B’ இணைப்புச் சொத்து தொடர்பாக. இதற்கு அவரது தாய் ரூ.30,000/ – செலுத்தியுள்ளார்.

8. வாதியின் தாயார் ‘B’ இணைப்பு சொத்தினை காரை நிறுத்திவதற்கு அது வாங்கப் பட்ட நாளிலிருந்து அவளது இறப்பு 15.4.2006 வரை பயன்படுத்தி வந்துள்ளார். வாதியின் தாயார் அவருக்கு பின்னர் சிவராம் நரசிம்மய்யா, வாதியின் தந்தை வாதியின் சகோதரி ப்ரீராமன் மோகன் உள்ளனர். தந்தை அந்த பிளாட்டினை உடைமையில் கொண்டு அவரது இறப்பு தேதி 27.10.2017 வரைப் பயன்படுத்தியுள்ளார். அவரது இறப்பின்பேரில், வாதி மற்றும் அவரது சகோதரி இதன் முழுச் சொந்தக்காரர்கள் அதாவது ‘A’ & ‘B’ இணைப்பு சொத்திற்கு.

9. வாதியின் வழக்காவது, அவளது சகோதரி 50 சதவீதம் பங்கை வாதி சார்பாக அளித்துள்ளார். எனவே வாதி ‘A’ இணைப்பு சொத்தின் குழு சொந்தக்காரராக அத்துடன் ‘B’ இணைப்புச் சொத்தாகும்.

10. வாதியின் மேலுமான வாதமாவது ப்ளாட் எண் 11– 2ஆம் தளத்தில் உள்ளது. டி. பத்மினி என்பவரால் வாங்கப்பட்டது. விற்பனை ஆவணம் 16.7.1983இல் பதிவு செய்யப் பட்டது. இது தனியார் கட்டிடப் பரப்பிடம் அத்துடன் 1/8 பிரிக்கப்படாத நிலம் பிளாட்டுக்கானது மற்றும் பொது இடம் மற்றும் 1/20 பிரிக்கப் படாத நிலம் பொதுவானது. எனினும் அவருக்கு அவளது காரினை நிறுத்துவதற்காக உரிமை ‘B’ இணைப்புச் சொத்தில் அளிக்கப்படவில்லை. அவளது கடைசி உயில் மற்றும் ஆணைப்படி பத்மினி தன்னால் வாங்கப்பட்ட சொத்தினை ரவீந்திரன். சாந்திதேவி, பிரியா லஷ்மி என்பவர்கள் சார்பாக அளித்திருந்தார்.

11. அவர்கள் உயிலினை செயற்படுத்தி அதனை பின்னர் பி.டி. ரவிகுமார் என்பவருக்கு விற்றுள்ளார். அவர் அதனை எதிர்வழக்கீட்டாளர் 11.5.2018 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணம் மூலம் விற்றுள்ளார். இதில் முதல் சொந்தக்காரருக்கு ‘B’ இணைப்புச் சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று அறிந்து எதிர்வாதிகள் பொதுப்பாதை சுட்டப் பட்டுள்ளதை தவறுதலாகக் கொண்டு அதன் பலனாக ‘B’ இணைப்புச் சொத்தின் வண்டியை நிறுத்தி தொல்லை அளித்துள்ளார். வண்டியை நிறுத்துவதை தடுக்கக் கோரிக்கை செய்த பின்னரும் தொடர்ந்து அவ்வாறே செய்து வந்துள்ளனர்.

12. வாதி, சொத்தினை வாடகைக்கு விட்டுள்ளார். அவர் பணிந்தளிப்பது, அவரது வாடகைதாரர் ‘B’ இணைப்புச் சொத்தினை பயனுள்ளதாகவும் அமையாகவும் இந்த வழக்கினை முன்னிட்டு ள்ளார்.

13. எதிர்வாதிகள், முன்வருவதற்காக மு.மே. எண் 3/2024 அந்த வாதுரை, வழக்கு மு.வ.எண் 1193/2024 சென்னை XX ஆவது மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் உள்ளதை நிராகரிக்க கோரி வழக்கு நிராகரிக்க கோரிய அடிப்படை காரணங்கள் பின்வருமாறு.

(அ) ஓர் உடன்படிக்கையின் அடிப்படை யிலான விளம்புகையை இது செயற்படுத்தப்பட முடியாதது.

(ஆ) வழக்கு காலத்தால் வரம்பிடப்படுகிறது.

(இ) இது அலைக்கழிப்பான வழக்கு, இதில் வாதியின் தரப்பிற்கு தீர்ப்பாணை பெறுவது அரிதான ஒன்று.

14. வாதி/எதிர்வழக்கீட்டாளர் இந்த வாதங் களை மறுத்து எதிர்வழக்கு முன்னிட்டுள்ளார்.

15. சென்னை மாநகர உதவி உரிமையியல் நீதிமன்ற நீதிபதி, தரப்பினர்களைக் கேட்டறிந்த

பின்னர் சொல்லப்பட்ட விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்துள்ளார். அவரது வாதமாவது வாதிகள் ஒரு செயற்படும் காரணத்தை ஏற்படுத்தியுள்ளனர். அது தொடர்பான பிரச்சினை பதிவு செய்யப்படாத ஆவணம் தொடர்பாக. நீதிமன்றம் கூறியுள்ளதாவது. ஆவணம் ஏற்கப்படுவது தொடர்பாக. அது சான்றாக அளிக்கப்படும்போது மட்டுமே கருதுகை செய்யப்படும் என்பது. கால வரம்பு தொடர்பாக. நீதிபதி கூறியதாவது, இது சட்டம் மற்றும் பொருண்மை கலந்த கேள்வி, எனவே மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

16. இதனை எதிர்த்து, எதிர்வாதிகள் நீதிமன்றத்தின் முன்பு உள்ளனர்.

17. திரு. டி. முருகமாணிக்கம், மெசர்ஸ் பாபு ரங்கசாமி அமைப்பிற்காக முன்னிலையாகிறது. மனுதாரரின் வழக்கறிஞர். அவர் பணிந்தளிப்பது வழக்கே உடன்படிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. அது 19.3.1992 தேதியிடப்பட்டது. வழக்கில் ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் வாதி கோருவது ஒரு விளம்புகை அதாவது உடன்படிக்கையின் அடிப்படையில் அவர் பணிந்தளிப்பது ஆவணம் சமமானதாக இருக்காது. ஏனெனில் இது பதிவு செய்யப் படாதது மற்றும் வாதி வாதமாவது ‘B’ இணைப்புச் சொத்தின் உரிமை, இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் அவர் பணிந்தளிப்பது ஆவணம் சமமானதாக இருக்காது. ஏனெனில் இது பதிவு செய்யப்படாதது மற்றும் வாதி வாதமாவது ‘B’ இணைப்புச் சொத்தின் உரிமை, இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளது.

18. வழக்கறிஞர் பணிந்தளிப்பது, வாதி உடன்படிக்கையின் அடிப்படையில் உரிமை கோரியபோதிலும், விசாரணை நீதிபதி கலந்தாலோசித்தது வாதி இதனை 35 ஆண்டுகளுக்கு மேலாக உடைமையில் கொண்டுள்ளார். நீண்ட கால உடைமை காரணமாக உரிமை/சொந்தம் கொண்டாடுகிறார் என்பது. அவர் பணிந்தளிப்பது உய்தி பதிவு செய்யப்படாத ஆவணத்தின் அடிப்படையில் அளிக்க இயலாது என்பது மற்றும் கீழ்நிலை நீதிமன்றம் இந்த பொருண்மைகளை கவனத்தில் கொள்ளாது விண்ணப்பத்தினைத் தள்ளுபடி செய்துள்ளது.

19. மாறாக, திரு.ஜி.சரத்பாபு எதிர்வழக்கீட்டாளருக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் பணிந்தளிப்பது ‘B’ இணைப்புச் சொத்து வாதியின் தாய்க்கு அளிக்கப்பட்டது விற்பனை உடன்படிக்கை 19.3.1992 தேதியிடப்பட்டது மற்றும் வாதிக்கு பின்னவரின் உரிமை மூல ஆவண மூலம் சொத்தினைத் தொடர்ந்து துய்த்து வருகின்றனர்.

20. வழக்கறிஞர் கேட்டறியப்பட்டு பதிவேடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன.

21. வாதி விளம்புகையை உய்தியாகக் கோருகிறார். அதமாவது அவர் இதன் சொந்தக்காரர் என்று விளம்புமாறு.

இந்த உய்தி 19.3.1928 தேதியிட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் கோரப்படுகிறது. இந்த உடன்படிக்கையை கூர்ந்தாய்வு செய்வதில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பது சொத்தானது வாதிக்கு அளிக்கப்படவில்லை மாறாக மூல சொந்தக்காரர்களின் உரிமை சொல்லப்பட்ட சொத்து தொடர்பாக. இது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் இதில் கூறப்பட்டதாவது அதாவது இவர்கள் ‘B’ இணைப்புச் சொத்து வாதியாக வெளியே செய்யவும் உள்ளே வரவும் உரிமையுள்ளதாக.

22. இவ்வாறு வழக்கு உள்ளபோது விளம்புகை உய்தி அதாவது வாதி இதன் முழுச் சொந்தக்காரர் என்று அதாவது ‘B’ இணைப்புச் சொத்து தொடர்பாக என்பது. அளிக்கப்பட முடியாதது. ஏனெனில் அது 19.3.1992 தேதியிடப்பட்ட உடன்படிக்கையில் கூறப்பட்டதற்கு மாறாக உள்ளது. மேலும் வாதி உடன்படிக்கையின் அடிப்படையில் சொந்தம் கோருவதும் அதுவும் அது பதிவு செய்யப்படாத ஒன்றென்பதும்.

23. மனுதாரருக்கான வழக்குரைஞர், குறிப்பிட்டுள்ளதாவது, ஆவணம் தயாரித்தலுக்கு அந்த முத்திரைத் தாள்கள் ஆண்டிப்பட்டியில் இருந்து வாங்கப்பட்டதாகத் தெரிகிறது. இரு தரப்பினர்களும் சென்னையில் வசிப்பவர்களாக

உள்ளபோது. 19.3.1992 தேதியிட்ட உடன்படிக்கையில் படிக்கப்படுவதாவது வாதியின் தாயார், அந்த கார் நிறுத்துமிடத்தை சொந்தமாகக் கொண்டு உடைமை கொண்டாட அது தெளிவாக ஒரு விற்பனை மூலம் செய்யப்பட முடியாது.

24. வாதி கோருவதாவது விற்பனை உடன்படிக்கையின் அது 22 ஆண்டுகள் செயற்படுத்தப்படவில்லை. அதாவது 3 ஆண்டுகளுக்கு மேலாக, அதுவே ஒரு உடன்படிக்கையினை செயற்படுத்துவதற்கான கால வரம்பு. எனவே வாதுரையில் இந்த வாதம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் தெளிவாக்கப்படுவது வாதிக்கு உய்தி ஒன்று கிடைக்க முடியாத நிலை. இவர் கோரிக்கை உடன்படிக்கையின் அடிப்படையிலானது அதன் அடிப்படை இது மனுதாரருக்கு மொத்த உரிமையை அளிக்காது.

25. வழக்கறிஞரால் ஆதாரமாக்கப்பட்ட தீர்ப்பு தாகிபன் –எதிர்– அரவிந்பாய் கல்யாண்ஜி பன்சாலி (காஜ்ரா) இறப்பு அவர்களது சட்ட சார்பாற்றம் மற்றும் பிறர் 2020 (5) த.த.வ. 471 (உச்.நீ.) 2020 (7) உச்.நீ.வ. 366 உச்சநீதிமன்றம் பின்வருமாறு கண்டறிந்தது.

அத்தகைய அதிகாரம் அளிப்பதில் மொத்த நோக்கமே பயனற்றதாக உள்ளது. வழக்கே அர்த்தமற்றதாகவும் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிப்பதாக உள்ளது. எதிர்வாதியினால் சிந்திக்கப்பட வைப்பது. இதனால் தலைக்குமேல் கத்தி தொங்குவதாக என்ன முடியாது. இது காரண மற்ற நோக்கம் அல்லது குறிப்பு சாதாரண உரிமையியல் வழக்கில் நீதிமன்றம் வாதுரையை நிராகரிக்க அதிகாரம் கொண்டு உள்ளது. அதாவது அதில் வழக்கிடுவதற்கு ஏற்ற காரணம் குறிப்பிட்டி ராததபோது.

26. எனவே, மேற்சொல்லப்பட்டவற்றின்படி XXஆவது, உதவி நீதிபதி மாநகர உரிமை யியல் நீதிமன்ற வழக்கில் இதனை கட்டாயமாக தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகிறது.

27. உரிமையியல் சீராய்வு மனு அனுமதிக்கப்படுகிறது. இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது. செலவுத் தொகையின்றி.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## உறவு முறிந்தால் பாலியல் வழக்கா? குற்றவியல் நீதியின் தவறான பயன்பாடு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்

உறவு முறிவுகளைப் பாலியல் வன்கொடுமை வழக்குகளாக மாற்றுவது, குற்றவியல் நீதியைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் என்று உச்சநீதிமன்றம் கண்டித்துள்ளது.

மகாராஷ்டிர மாநிலம், சத்ரபதி சம்பாஜி நகரில் பதிவான ஒரு பாலியல் வன்கொடுமை வழக்கின் முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு மீதான தீர்ப்பில் நீதிபதிகள் இந்தக் கருத்தைத் தெரிவித்தனர். மும்பை உயர்நீதிமன்றத்தின் ஔரங்காபாத் கிளை முன்னர் மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்திருந்தது.

இந்நிலையில், உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.வி.நாகரத்னா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அமர்வு அளித்த தீர்ப்பில், 'பாலியல் வன்கொடுமை என்பது மிகக் கொடூரமான குற்றம் என்பதால், அது உண்மையான பாலியல் வன்முறை அல்லது ஒப்புதல் இல்லாத சூழ்நிலைகளில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

விசாரணையில் இருக்கும் வழக்கின் முதல் தகவல் அறிக்கையின்படி மனுதாரர் (ஆண்), புகார்தாரர் (பெண்) ஆகிய இரு தரப்பினருக்கும் இடையேயான உறவு சம்மதத்துடன் இருந்தது தெளிவாகிறது. உறவு மூன்று ஆண்டுகள் நீடித்துள்ளது. இது ஒரு குறிப்பிடத் தக்கத்தக்க காலமாகும். இந்த வழக்கில் மனுதாரரான ஆண் புகார்தாரரான பெண்ணை ஏமாற்றி விட்டு மறைந்து விடவில்லை. சில காரணங்களால் உறவு திருமணத்தில் முடியாமல் போனதால், அந்த உறவின் போது ஏற்பட்ட உடலுறவை பாலியல் வன்கொடுமைக் குற்றமாகக் கருத முடியாது. இந்த வழக்கில் நடந்த செயல்கள், அன்றைய நிலையில் சம்மதத்துடன் கூடிய உறவின் எல்லைக்குள் நிகழ்ந்தவை.

இத்தகைய வழக்குகளைத் தொடர அனுமதிப்பது நீதிமன்ற அமைப்பைத் தவறாகப் பயன்படுத்து வதைத் தவிர வேற இல்லை. இதை உயர்நீதிமன்றம் கவனிக்கத் தவறி விட்டது.

தோல்வியுற்ற அல்லது முறிந்த உறவுகளுக்கு குற்றவியல் சாயம் பூசப்படும் கவலையளிக்கும் போக்கை இந்த நீதிமன்றம் பலமுறை கவனித்துள்ளது. தோல்வியுற்ற ஒவ்வொரு உறவையும் பாலியல் வன்கொடுமை குற்றமாக மாற்றுவது, அந்த உண்மையான குற்றத்தின் தீவிரத்தைக் குறைக்கிறது.

மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அழியாத களங்கத்தையும் அநீதியையும் இழைக்கிறது. எனவே, மனுதாரருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட பாலியல் வன்கொடுமை வழக்கை ரத்து செய்து உத்தரவிடுகிறோம்' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**நன்றி: தினமணி 25.11.2025**

# தொழிலாளர்களது பணிநீக்கல் பின்னோக்கியதாக உள்ள போது அது எளிய பணி நீக்கமாக அழைக்கப்பட முடியாது.

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை : நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி
நீபேம எண் 2051/2008
2025(2) CTC 820

நிருவாகம், ஸ்ரீ ஆனந்தகுமார் மில்ஸ் லிட்,
சரவணம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர்-35
சார்பாற்றம்: அதன் பொது மேலாளர் ...மனுதாரர்

-எதிர்-

1. தலைமை அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர்
2. ஏ.ஆர்.காளியப்பன்
3. ஆர்.சண்முகசுந்தரம்
4. ஏ.பன்னீர்செல்வம்
5. வி.செல்வராஜ்
6. வி.ஏ.சுந்தரமூர்த்தி
7. வி.குணசேகரன்
8. கே.வெங்கிடுசாமி
9. ஆர்.ருக்மணி
10. பி.வேல்முருகன் ...எதிர்மனுதாரர்கள்

**மனுதாரரது வழக்குரைஞர்கள் எம்.ராமசுப்ரமணியன் மற்றும் கூட்டாளிகள் சார்பாக திரு.எம்.சிவதானு மோகன் மற்றும் மெசர்ஸ் என்.சுவாதி**
எம 1. தொழிலாளர் நீதிமன்றம்
திரு.எஸ்.முகுந்த், முதுநிலை வழக்குரைஞர்

திரு என்.கிருஷ்ண் குமார் உதவியுடன்,
2-10வது எம வழக்குரைஞர்கள் சர்வபவுமன் அசோசியேட்ஸ் சார்பில்

**கோருகை:** 1வது எதிர்மனுதாரர் கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நீதிமன்ற தலைமை அலுவலர் கோப்பிலான க.ம எண்கள் 145,146,147,148,149,150,151, 152-153/2005இல் தொடர்புற்ற பதிவெண்களை வரவழைத்து அதனில் இயற்றப்பட்ட 24.11.2006 தேதிய பொது ஆணையை ரத்தாக்கலுக்காக நெறிமுறை யுறுத்த நீதிப்பேராணை இயற்ற நீதிப்பேராணை மனு இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 226 கீழ் தாக்கலானது.

## ஆணை

க.ம.எண்கள் 145-153/2005இல் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட 24.11.2006 தேதிய பொது ஆணைக்கு சவாலிட்டுக் கொண்டு இந்த நீதிப் பேராணை மனு தாக்கலாகிறது. சொன்ன உத்தரவால் இங்கு 2-10வது எதிர்மனு தாரர்களாக சேர்க்கப்பட்டுள்ள ஒன்பது பணி யாட்களால் தாக்கலான கணக்கீடு மனுக்கள் பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. க.ம. எண்கள் 145,146,147,150 மற்றும் 152/2005 இல் மனுதாரர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ..97925 தொகையும் க.எண் 153/2003 இல் மனுதாரருக்கு ரூ.96050 தொகையும் க.ம எண்கள் 148,149 மற்றும் 151/2005 இல் மனுதாரர்களில் ஒவ்வொருவருக்கும் தலா ரூ..99816.25 தொகையும் செலுத்தப்பட உத்தரவானது.

2. நீதிமன்றத்தல் பணியாட்களின் கூற்று அவர்கள் ஆலையின் பணியாளர்கள் ஆவார்கள் என்பதாகும். டி பிரிவு ஆலையாகும் நிருவாக

ஆலையில் 190 நிரந்த பணியாட்களும் 152 பதிலிகளும் 26 தொழில்பழகுநர்களும் உள்ளார்கள். 17.5.1996 அன்று 1947இன் தொழில் தாவாக்கள் சட்ட (பின்னர் சட்டம் என குறிப்பிடப்படும்) பிரிவு 18(எல்) கீழ் நிருவாகம் செய்து கொண்ட ஏற்பாட்டின் தொடர்ச்சியாக 45 மாதங்கள் பணிபுரிந்திருந்த பதிலிகளுக்கும் நிலைதன்மை தருவதாக ஒப்புக் கொண்டது. எனினும் ஏற்பாடு நிறைவற்றப்படவில்லை.. ஆகவே தொழிற்சங்கம் ஒரு தாவாவை எழுப்பியது. தவறுகை அறிக்கை 6.6.2003 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

3. இந்த சந்தப்பங்களில் நிருவாகம் மறைமுக நோக்குடன் மின் கட்டணத்தை செலுத்தத் தவறி ஆலை செய்யப்படுதலை நிறுத்த முயன்றது. மீண்டும், புதிய தாவா உதவி தொழிலாளர் ஆணையரிடம் எழுப்பப் பட்டது. உற்பத்தித் திறனை 100% அதிகரிக்க பணியாட்கள் சம்மதித்தபோதிலும் ஆலையை நடத்த நிருவாகம் மறுத்து கூலிகளை பணிய மர்த்த நோக்கியது. 6.7.2003 அன்று சட்ட வகையங்களை பின்பற்றாமல் கதவடைப்பை யும் நிருவாகம் அறிவித்தது. அதன்பேரில் இந்த அனைத்து பொருண்மைகளையும் தெரிவித்து கொண்டு ஆணையர் உதவி தொழிலாளர் 9.1.2004 அன்று அறிக்கை அனுப்பினார். தாவாவை அரசு தீர்வுறுதிக்காக தொழிலக தீர்ப்பாயத்துக்கு குறித்தனுப்பியது. 16.9.2004 தேதிய ஜி.ஓ.டி எண் 1195படி முந்தைய தாவாவும் தீர்வுறுதிக்காக குறித்தனுப்பப் பட்டது. அது தொ.தா. எண் 444/2004 எனவாக நிலுவையில் இருந்து கொண்டிருந்தது.

4. இதற்கிடையில் பணியாளர்கள் சிலரிடம் ராஜினா கடிதத்தை நிருவாகம் பெற்று அவர் களுக்கு இழப்பீடு அளித்தது. இப்போதைய வழக்கில் உள்ளாகும் பணியாட்கள் நிருவாகத்தின் வேண்டுகையை ஏற்கவில்லை. அவர்களது வேலையிலிருந்து அவர்கள் ராஜினாம செய்யவில்லை. அவ்வாறான நிலையில் 6.7.2003இலிருந்து அவர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என அறிவிப்பை பணியாட்களுக்கு அனுப்பியது. குற்றச்சாட்டுகளை மறுத்துக் கொண்டு பணியாட்கள் 21.1.2005 அன்று பதில் அனுப்பினார்கள். எழுப்பப்பட்ட தாவா நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்து கொண்டிருக்கும் போது பணியாட்களை பணி நீக்கம் செய்திடும் 7.1.2005 அன்றான ஆணை சட்டவிரோதமான தாகும். பணியிலிருந்து தொழிலாளர்களை நீக்கலுக்கு நிருவாகம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆகையால் பணியாட்களது பண நீக்கம் சட்டவிரோதமானதாகும். இவ்வாறாக 6.7.2003இலிருந்து 31.1.2005 வரை யிலான காலஅளவுக்கு ஊதியத்துக்கும் பிற பலன்களுக்கும் பணியாட்கள் பாத்தியதை யுற்றவர்கள் ஆவார்கள். ஆகையால் கணக்கீடு மனுக்கள் தாக்கலிடப் பட்டன.

5. நிருவாகத்தால் கணக்கீடு மனுக்கள் எதிர்க்கப்பட்டன. கச்சா பொருள் செலவு உயர்வு காரணமாக மட்டுமே ஆலை செயல்பாடு நிறுத்தப்பட்டு அதன் வழியாக சந்தை விலையில் கூட நூல்களை விற்க நிருவாகத்தால் இயல வில்லை. ஆகையால் ஆலை செயல்படுதல் தற்காலிகமாக 6.7.2003 அன்று நிறுத்தப் பட்டது. ஊதியத்துக்கும் இடைநிறுத்தமான கால அளவுக்குள்ள பணியிடை நிறுத்த காலத்துக்கான ஊதியத்துக்கும் அவர்கள் உரிமையுற்றிருக்க மட்டார்கள். என் பணியாட்களுக்கு தெரிவிக்கப் பட்டது. ஆலை செயல்படுதலை நிருவாகம் இடை நிறுத்தம் மட்டுமே செய்து ஆலையை மூடவில்லை. தொழிலாளர் சங்கத்தால் எழுப்பப் பட்ட தாவா தொ.தா. எண் 444/2004இல் நிலுவையிலிருந்து கொண்டிருக்கிறது. அவற்றுக்கு ஏதும் முன்னிருந்த உரிமைகள் இல்லாததால் கணக்கீடு மனுக்கள் செல்லாதவையாகும். 365 பணியாட்களில் 352பணியாட்கள் ஏற்பாடு பிரிவு 18படி அவர்களது கோரிக்கைகள் தீர்த்து ள்ளார்கள். அவர்களது கோரிக்கைகளை தீர்த்திடல் 2-10வது பணியாட்களுக்கு திறந்ததாகும் அல்லது நிர்வாகத்தலான புதிய நிபந்தனைகள் படி அவர்கல் நடந்தால் அவர்கள் பணி யளிப்பாதலில் தொடர முடியும்.

6.சொன்ன வாதுரைகள்பேரில் தொழிலாளர் நீதிமன்றம் விசாரணையை மேல் தொடர்ந்தது. பணியாட்கள் தரப்பில் ஏ.ஆர்.காளியப்பன் என்பவர் ப.சா1 ஆக விசாரிக்கப்பட்டு சா. ப1-12 குறியீடாகின. நிருவாகம் தரப்பில் வாய்மொழி சாட்சியம் ஏதும் வைக்கப்பட

வில்லை. எனினும் சா.நி.1–3 குறியீடாகின. பணியாட்களது தற்காலிக வேலைமுடக்கம் தொடர்பான விஷயம் தொழிலாளர் நீதிமன்றத்துக்கு குறித்தனுப்பலாகி அது தொ.தா. எண் 444/ 2004இல் நிலுவையில் இருந்து கொண்டிருந்தது என தொழிலாளர் நீதிமன்றம் கண்டறிந்தது. சொன்ன தாவாவில் இப்போதுள்ள பணியாட்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்பதில் தகரராறில்லை. ஆகையால் சட்டப் பிரிவு 33 (2)(பி)ஐ நிருவாகம் நிறைவேற்றியிருக்க வேண்டும். தொழிலாளர் நீதிமன்றம் (2002)1 LLN 639இல் அறிவிப்பான ஜெய்பூர் ஜில்லா சஹகரி பூமி விகாஸ் வங்கி லிட். –எதிர்– ராம்கோபால் சர்மா மற்றும் பிறர் வழக்கு தீர்ப்புரையில் நம்புகை வைத்துக் கொண்டு சட்ட பிரிவு 33(2)(பி) மீறுகையாகிறது என் தீர்ப்பிட்டது. அதன்பின்பாக ஊக்கத்தொக ஈட்டு விடுப்பு ஊதியம் பிறவற்றை மறுக்கையில் அது பணியாட்களுக்கு செலுத்தத்தக்க ஊதியத்தை கணக்கிட்டு ஆணையை இயற்றியது. அதனால் துயருற்று நிருவாகம் இந்த நீதிமன்றத்தில் உள்ளது.

7. முதலாவதாக, பணியாட்கள் பணி நீக்கம் செய்யப்பட்டபோது பணியில்லில்லாமை பற்றி கேள்வி எழுப்பாது அவர்களால் நேரடியாக அவர்கள் சட்டப் பிரிவு 33சி(2)ஐ பொருத்தவியாலது என நிருவாகம் சார்பிலான வழக்குரைஞர் திரு.எஸ்.சிவதாணு மோகன் பணிந்துரைத்தார். அவரது முன்மொழிவுக்கு ஆதரவாக பாம்பே கெமிக்கல் இண்ட்ஸ்ட்ரீஸ் –எதிர்– துணை தொழிலாளர் ஆணையர் மற்றும் ஒருவர் (2022) 5 SCC 629 வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் இன்னும் குறித்ததாக, தொழிலாளர் நீதிமன்றத்துக்கு ஆள்வை கிடையாது எனவும் அது ஸ்ட்ட பிரிவு 33சி(2) கீழான விண்ணப்பத்தில் பாத்தியதை பற்றிய தகராறை அல்லது பணியாட்களின் கோரிக்கையின் அடிப்படையை தீர்வுறுதியாக்கிட முடியாது எனவும் தீர்ப்பை உள்ளடக்கும் பத்தி 8இல் வழக்குரைஞர் நம்புகை வைத்தார்.

8. தொழில் தாவா எண் 444/2004 நிலுவையில் இருந்து கொண்டிருந்தாலும் சட்ட பிரிவு 33(1) கீழ் முன் அனுமதி தாவாவுடன் நேரடியாக தொடர்புடையாதல் மட்டுமே தேவையாகும் என வழக்குரைஞர் இந்த நீதிமன்றத்தை பிரிவு 33 ஊடாக இட்டு சென்று பணிந்திட்டார். அது தாவாவுடன் சம்பந்தமின்றி இருக்குமானால் ஒப்புதல் சட்டப் பிரிவு 33(2) கீழ் எதிர்நோக்கப்படுகிறது. பிரிவுகள் 33(1) மற்றும் 33 (2) இரண்டும் கீழ், பணிமுறை நிபந்தனை மாற்றப்பட இருந்தால் மட்டுமே அப்போதுமுன் அனுமதி அல்லது ஒப்புதல் தேவையாகிறது எனமட்டுமே தீர்ப்பிடப்படுகிறது. அது போலவே துர்நடத்தை காரணமாக மட்டுமே பணியிலிருந்து பணியாள் பணி நீக்கமானால் அல்லது விடுவிக்கப்பட்டால் பிரிவுகள் 33(எல்)(பி) மற்றும் 2(பி) பிரயோகிக்கப்பட முடியும். அது எளிய பணி நீக்கமாக மட்டுமே இருக்கும்போது அது விடுவிப்பு அல்லது பணி நீக்கம் ஆகாது. அது பணிமுறை நிபந்தனை மாற்றமும் ஆகாது. அந்த நேர்வில் பிரிவு 33 ஈர்க்கப்படவில்லை. பாபுலால் வைஷ்ணவ் –எதிர்– தொழில் தீர்ப்பாயம் மற்றும் பிறர் 2008 (3)LLR (Raj) 428 வழக்கில் ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையில், இன்னும் முழுமையாக, சொன்ன தீர்ப்புரையின் 15–17வது பத்திகளில் வழக்குரைஞர் நம்புகை கொண்டார்.

9. துர்நடத்தைக்காக விடுவிப்பு இருந்தாலன்றி பிரிவு 33(2) ஈர்க்கப்படாது என வாதிடலுக்கு குஞ்சன் மனு மற்றும் பிறர் –எதிர்– அஸ்பின்வாலா –கோ லிட் மற்றும் பிறர் AIR 1963 Ker 264 வழக்கில் கேரள உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் இன்னும் குறித்ததாக பத்தி26இல் திரு.எஸ்.சிவதாணு மோகன் நம்புகை கொண்டார். இந்த வழக்கில் பணிநீக்கம் தண்டனையியல்பில் இருந்தாலொழிய அது எளிய பணிநீக்கமான கருதப்பட வேண்டியதாகும் என வழக்குரைஞர் மேலும் பணிந்திட்டார். துர்நடத்தை பணி நீக்கத்தின் அடித்தளமாக இருந்தாலான்றி அது தண்டனையியல்பானது என அழைக்கப்பட முடியாது. வழக்குரைஞர் உ.பி.மாநிலம் மற்றும் பிறர் –எதிர்– அசோக்குமார் (2005) 13 SCC 652 வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் நம்புகை வைத்தார்.ஆகையால் அவர்களது பணிநீக்கம் பற்றி பணியாட்கள் எவ்வித எதிர்ப்பும் எழுப்பாதபோது கணக்கீடு மனுக்களில் எந்த பரிகாரமும் வழங்கப்பட இயன்றிருந்திருக்காது என அவர் பணிந்திட்டார். எளிய பணி நீக்கல் விஷயத்தில் பிரிவு 33 ஈர்க்கப்படாததால்

முன் அனுமதி அல்லது ஏற்பு பெறலுக்கு அவசியம் இருந்ததில்லை.

10. மாறாக, இந்த வழ்க்கில் ஒத்த கணக்கீடு மனுக்கள் க.ம.எண் 95/209 பிறவற்றில் தாக்கலாகின எனவும் நிறைவேற்றலின் கட்டத்தில் தொகையை செலுத்த நிருவாகம் ஒப்புக் கொண்டிருந்துது கூட்டு விவரக் குறிப்பாணை மூலமாக விஷயங்கள் தீர்வாகின என பணி யாட்களது முதுநிலை வழக்குரைஞர் திரு. எச்.முகுந்த் பணிந்திட்டார். சில மற்ற கணக்கீடு மனுக்களில் நிருவாகம் கோரிக்கையை தீர்த்து வைத்தது. அனைத்து கணக்கீட்டுகளும் ஒரே பொருண்மைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் பேரில் செய்யப்படுகின்றன, ஆகையால் மற்றவர்களை பொறுத்தளவில் நிருவாகம் நிறைவேற்றிக் கொண்டிருக்கையில் கொண்டு ஒரு விஷயத்தை மட்டுமே நிருவாகம் தேர்ந்தெடுத்து மறுத்திட முடியாது.

11. சட்டப் பிரிவு 33 கீழ் முன் அனுமதி அல்லது ஒப்புதல் பெறலுக்கு பொறுப்பேற்புள்ள நிருவாகம் அதை செய்யாதிருக்கும்போது பணி நீக்கல் ஆணை தன்னிலையில் இல்லா நிலைய தாகும் எனவும் ஆகையால் பலங்களுக்காக கணீடை மனுதாரர்கள் வேண்டியது சரியான தாகும் எனவும் வாதிட மேற்சொன்ன ஜெய்ப்பூர் ஜில்லா சஹகரி பூமி விசகாஸ் வங்கி லிட் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரை பத்திகள் 15-17இல் வழக்குரைஞர் நம்புகை வைத்தார். சட்டப்படியானதாக பணி நீக்கம் இல்லாதிருந்து செய்கை இல்லாநிலையதாகும் என கருதப்படும் போது அப்போது தாவா எழுப்புலுக்கு தேவை ஏற்படவில்லை. நேரடியாக கணக்கீடு மனுக்கள் தாக்கலிடப்பட முடியும். ஊதியம் பொறுத்து முன்னிருந்த உரிமை உள்ளதாகும் அது தொழிலாளர் நீதிமன்றத்தால் கணக்கிடப்பட்டது.

12. சட்டப்பிரிவு 33(எல்)(பி)இல் உளதாகும் தாவா தொடர்புற்ற என்ற பதத்தை உச்ச நீதிமன்றம் ஸ்ரீதுரைராஜ் ஸ்பின்டெக்ஸ் -எதிர்- ஆர்.சிட்டிபாபு மற்றும் பிறர் (2021) 12 SCC 38 வழக்கில் தெளிவுறுத்திய தீர்ப்பில் வழக்குரைஞர் நம்புகை வைத்தார். இந்த வழக்கில் முந்தைய தாவா கதவடைப்பு தொடர்பானதாக இருந்த போது நிருவாகத்தின் தற்போதைய செயல்பாடு தாவாவுடன் நேரடியாக தொடர்புடையதாகும் என அவர் பணிந்திட்டார். நிருவாகம் சட்டமுறையான கடப்பாடை நிறைவேற்றத் தவறியபோது சட்டமுறை வகையத்தை நிறைவேற்றாமை சட்டத்தின் பார்வையில் ஆணையை ஆவண பிழையாக்கு வதால் பணி நீக்கலை அல்லது விடுவிப்பை அல்லது ஆணை எதனையும் நீக்கறவாக்கிப் பெறலுக்கு நீதிமன்றங்களது கதவை தட்டலுக்கு பணியாட்களுக்கு தேவை யில்லை என வாதிட புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி -எதிர்- தமிழ்நாடு அரசு மற்றும் ஒருவர் வழக்கில் [WP N44768/2016 dt 29.12.2016] இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புரை யில் பத்தி 7இலும் வழக்குரைஞர் நம்புகை வைத்தார்.

13. ஒவ்வொரு தரப்பிலும் வைப்பான பணிந்துரைகளை நான் பரிசீலித்திருந்து வழக்கு ஆதார பதிவெண்களை ஆழ்ந்து வாசித்துள்ளேன்.

14. எளிய பணி நீக்கம் மூலமாக பணி யாளரது சேவைகள் தேவையற்றதாக்கப்படு மானால் அது சட்டப் பிரிவு 33(GÀ)(H) கீழான நிபந்தனை மாற்றங்கள் கீழ் அல்லது பிரிவு 33(எல்)(பி) கீழ் துர்நடத்தைக்கான விடுவிப்பு அல்லது பணி நீக்கல் எனவாக, ஏற்கப்பட வேண்டியதாகிறது என்பது முன்மொழிவுரை யாக உள்ளது. சொன்ன நிலைமை நிர்வாகத்தின் வழக்குரைஞரால் நம்புகையாகி ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட பாபுலால் வழக்கு தீர்ப்புரையிலிருந்து தெளிவாகிறது அது மட்டுமின்றி மேகனித்ரா சின்க் தந்தேவால் எதிர் ஹிந்துஸ்தான் மோட்டர்ஸ் லிட் மற்றும் பிறர் AIR 1976 SC 2062 வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் அவ்வாறே ஆணித்தரமாக தீர்ப்பானது. பின் வருமாறு வாசிப்பாகும் சொன்ன தீர்ப்புரையின் பத்தி 32ஐ தருதல் பயனுடைதாகும்.

32. எனினும், ஒப்பந்தம் கீழாக அல்லது நிலையான வகையங்களுக்கு இசைவாக அவரது உரிமை செலுத்தலாக பணி நீக்கல் உத்தரவை பணியளிப்பவர் இயற்றி ஆணை துர்நடத்தை காரணத்திலானது அல்ல என தீர்ப்பாயம் கண்டறியுமானால் பிரிவு 33ஐ மீறுதல் பற்றிய கேள்வி எழாது என்பது முற்றிலும் ஏற்கதக்கதாகும்.

15. அதே தீர்ப்புரையின் பத்தி 24இல் அது கீழ்வருமாறு தீர்ப்பிட்டது:-

24. பணிமுறை நிபந்தனைகள் கீழ் அல்லது நிலையாணைகள் கீழான பணி நீக்கல் அல்லது தன்னானால பணி நீக்கம் சட்ட பிரிவு 33இன் குறியெல்லைக்கு வெளியிலுள்ளது. ஒரு பணியாளரது பணி நீக்கம் பற்றிய இறுதி கருத்தை பணிவழங்குனர் கொண்டிருக்கிறார் எனவும் பணியாளருக்கு அனுப்பப்பட்ட அவரது விடுவிப்பாணையில் அதை எளிய பணி நீக்கமாக விவரித்துக் கொண்டு அவர் தப்பிக்க வியலாது. பிரிவு 33-ஏ கீழான புகார் விஷயத்தில், ஆணையின் வடிவம் இருந்தபோதிலும், சாரத்தில் அது துர்நடத்தைக்கான பணி நீக்கல் செய்கை ஆகும், எளிய பணி நீக்கம் அல்ல என்பதை ஆராய்தலுக்கு தீர்ப்பாயம் தடுக்கப் படும் என்பதும் சரியான சட்ட முன்மொழிவுரை ஆகாது.

ஆகையால் ஒரு பணி நீக்கல் உத்தரவை எளிய பணி நீக்கல் உத்தவாக நிருவாகம் அழைக்கும் காரணத்தால் மட்டுமே சட்டபிரிவு 33 கீழான கடப்பாடு தானாகவே அழிக்கப்பட்டாது. ஆனால், இன்னும் பணி நீக்கல் எளிய பணி நீக்கமாக உள்ளதா இல்லையா என்பதை நீதிமன்றம் காண வேண்டியுள்ளது.

16. ஏற்றவாறாக குறையுறு பணி நீக்க லாணை 7.1.2005 தேதியது ஆகும். சொன்ன உத்தரவின் பத்தி 2இல் உள்ள பகுதி கீழ் வருமாறு வாசிப்பாகிறது.

''ஆனால் உம்மிடமிருந்தும் உம்மைப் போல 15இக்கும் குறைவான சில தொழிலாளர் களிடமிருந்தும் இன்று வரை எந்த தகவலும் இல்லை. மேலும், இனிமேலும் 15 பேர்களைக் கொண்டு ஆலையை மீண்டும் நடத்த எந்த வாய்ப்பும் இல்லையென்று உமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே உமது நன்மையைக் கருதியே மற்ற எல்லாத் தொழிலாளர்களும் வேலையி லிருந்து விலகி கொண்டு தங்கள் தங்கள் நன்மையை பாதுகாத்துக் கொண்டது போல இருப்பதற்கு உம்மையும் ஆலை வேலையி லிருந்து விலக்கி விடுவது என்ற இயற்கை நியாயத்துக்கு உட்பட்டு உம்மை 6.7.2003 தேதியிலிருந்து விலக்கப்படுகிறீர் என்பதை அறியவும் [Discharge Simplicitor].

17. 6.7.2003 அன்று ஆலையை அது மூடவில்லை. ஆனால் அது தற்காலிகமாக அலை செயல்பாடை இடைநிறுத்தி வைத்தது எனபது நிருவாகத்தின் வழக்காகும் என்பது இப்போதைய வழக்கில் காணப்படவியலும். ஆகையால் அங்கு பணிவழங்குனர்- பணியாள் உறவுமுறை இருந்ததாகும். எனினும், இந்த பணியாட்கள் சொன்ன தேதி வரையில் பணியில் தொடர்ந்திருப்போது பின்னோக்கிய தாக்கத்துடன் 6.7.2003 அன்று அவர்கள் பணி நீக்க மானார்கள்.

18. விஷயத்தை அத்தகைய பரிசீலனை யில் முதலாவதாக, அது எளிய பணி நீக்கம் எனவாக அழைக்கப்பட முடியாது. அது நிருவாகத்தின் காரணமாக மட்டுமே இருக்க வியலும். ஏனெனில் 365 பணியாளர்களில் 365 பணியாளர்கள் அவர்களது கோரிக்கையை தீர்வாக்கியிருக்கையில் இந்த பணியாட்கள் மட்டுமே கோரிக்கையை தீர்வாக்கியிருக்க வில்லை. துர்நடத்தையுள்ளவர்களாக அவர்கள் கருதப்பட்டு பணி நீக்கம் செய்யப்படுகிறது. ஆகையால் இவ்விடத்தில் நிருவாகத்து விதி களை பின்பற்றாததும் பிரிவு 18(1) கீழ் அவர்கள் ராஜினாமா செய்து கோரிக்கையை தீர்வளிக்காததும் ஆன பணியாட்களின் செய்கை மட்டுமே செயல்பாட்டின் அடித்தளமாக இருக்க வியலும். அவ்வாறே அந்த செயல்பாடு தண்டிப்பதன்றி வேறேதுமில்லை. அது தண்டித்தலாக உள்ளது எனவானால் அது சட்ட பிரிவு 33(ஏல்)(பி)ஐ ஈர்க்கிறது.

19. மேலும். 2004இலிருந்து தொழில் தாவா எண் 444/2004 நிலுவையில் இருந்து கொண்டிருந்தது என்பது காணப்படவியலும். தொழில் தாவா நிலுவையில் இந்த பணியாட்கள் சட்டப்படியாக பணியில் தொடர்ந்திருந்து அவர்கள் 6.7.2003 தேதிய உத்தரவால் பின் தேதிய விளைவுடன் பணி நீக்கமான போது வழக்கு நிலுவையின்போது அவர்களுக்கு

பாத்தியமாகும் ஊதியம் அல்லது தற்காலிக முடக்க இழப்பீடு செலுத்துல் போன்ற அனைத்து பணிமுறை நிபந்தனைகளும் மாற்றப்பட்ட தாகின. ஆகையால் பணி நீக்கல் பின்னோக்கியதாக உள்ள போது அது எளிய பணி நீக்கமாக அழைக்கப்பட முடியாது. சட்ட பிரிவு 33 ஈர்க்கப்படாது என்ற நிருவாக சார்பு வழக்குரைஞர்து வா5தம் ஏற்கப்பட முடியாது. இப்போதைய நேர்வில் குறையுறு செய்கை முதலாவதாக தண்டிப்பதாகவும் இரண்டாவது பின்னோக்கிய பணி நீக்கம் மூலமாக பணியி லிருந்ததாக பாவிக்கப்பட்ட பணியாட்களின் பணிமுறை நிபந்தனைகள் மாற்றியமைக்கப்படுவ தாகவும் உள்ளது. ஆகையால் பிரிவு 33(எல்) அல்லது பிரிவு 33(2) இரண்டும் ஈர்க்கப்படு கின்றன.

20. விஷயத்தின் அத்தகைய பார்வையில் மேற்சொன்ன ஜெய்பூர் ஜில்லா சஹகரி பூமி விகாஸ் வங்கி லிட் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் கட்டளைப்படி அனுமதி அல்லது ஒப்புதல் பெறாது ஆணை பிறக்கப்படும்போது பணி நீக்கல் ஆணை ஆரம்பத்திருந்து இல்லா நிலைய தாகிறது. ஆகையால் சட்டத்தில் ஆவணப் பிழையாக பணி நீக்கல் ஆணை உள்ளபோதும் இந்த நீதிமன்றத்தால் புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி வழக்கில் தீர்ப்பாவாறு, தனித்து பணி நீக்கத்துக்கு சவாலிடலுக்கும் அதனை நீக்கறவாக்கப் பெறலுக்கும் பணியாட் களுக்கு நிர்பந்தம் கிடையாது. பணி நீக்கம் ஏதும் இல்லாத நிலையில் அப்போது சட்டப் பிரிவு 33(எல்)(2) கீழ் அவர்களது ஊதியம் கணக்கிடப்படலுக்கான உரிமையளிப்பான உரிமை மறுக்கப்பட முடியாது. அதற்கிணங்க தொழிலாளர் நீதிமன்றத்தால் இயற்றலான ஆணையில் எதுவகையிலான பிழையையும் நாங்கள் காணவில்லை.

21. தகுதிப்பாடுகள் அற்றதாக கண்டறிது கொண்டு இந்த நீதிப்பேராணை மனு தள்ளுபடி யாகிறது. செலவு தொகை குறித்த உத்தரவு இராது. விளைவாக தொடர்புறு பல்வகை மனு முடித்து வைக்கப்படுகிறது.

மொழியாக்கம்: பா.ஞானசேகரன்

## சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் கூட்டுறவு சங்கத்தின் தேர்தலை நவம்பர் 27ஆம் தேதிக்குள் நடத்தி முடிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் உணவகம் நடத்தப்படுகிறது. இந்த கூட்டுறவு சங்கத்துக்கு பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படவில்லை என்பதால், தனி அதிகாரி நிர்வகித்து வருகிறார் இந்த நிலையில் இந்தக் கூட்டுறவு சங்கத்துக்கு தேர்தல் நடத்தக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆனந்த் என்பவர் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன்பு விசாரணைக்கு வந்தது. இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தரவில், “இதே மனுதாரர் இதே கூட்டுறவு சங்கத்துக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்று 2018ஆம் ஆண்டு வழக்கு தொடர்ந்தார். அப்போது இந்தத் தேர்தலை நடத்த வழக்கறிஞர்கள் குழுவை உயர்நீதிமன்றம் அமைத்தது. அந்தக் குழுவில் இருந்த மூத்த வழக்கறிஞர் வி.ஜெயராமன் மறைந்து விட்டார். அந்த குழுவில் இடம் பெற்றிருந்த வழக்கறிஞர்கள் ஜி.மோகன கிருஷ்ணன், வி.ஆர்.கமலநாதன், டி.வி. கிருஷ்ணகுமார், வி.நளினி கொண்ட குழுவை மீண்டும் நியமிக்கிறேன்.

இவர்கள் வாக்காளர் பட்டியலை தயாரித்து கூட்டுறவு சங்கத்தில் தனி அதிகாரியிடம் வழங்க வேண்டும். அந்த பட்டியலை அக்டோபர் 25ஆம் தேதிக்குள் தனி அதிகாரி ஆய்வு செய்ய வேண்டும். அதன் பின்னர், கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் அதிகாரி தேர்தலை வருகிற நவம்பர் 27ஆம் தேதிக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

நன்றி: தினத்தந்தி 30.09.2025

# நேர்வு முறையும் நீதிப்பேராணையும்

**சென்னை உயர்நீதிமன்றம் (மதுரைக் கிளை)**
**முன்னிலை : நீதிபதி ஷமீம் அகமது**
**நீ.பே.ம. (MD) எண் 10967/2021 மற்றும்**
**நீ.ப.ம. (MD) எண்கள் 8609/10075/2021**
**19.3.2025**
**2025 (3) CTC 545**

**டி.சதீஷ்குமார் ...மனுதாரர்**

**–எதிர்–**

**அரசு முதன்மைச் செயலாளர், கால்நடைப் பராமரிப்பு, பால் பண்ணை மற்றும் மீன்வளத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009. பொது மேலாளர், மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் வரையறுக்கப்பட்டது. மதுரை – 625 020. 3. ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை மாதவரம் பால் காலனி, சென்னை–600 051. 4. மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு கூட்டுறவு பால் பொருட்கள் அமைப்பு வரையறுக்கப்பட்டது. ஆவின் இல்லம் பசும்பொன் முத்துராமலிங்கம் ரோடு, சென்னை – 600 035.**
**தி. நிர்மலா ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

பி. மாதவன்
மனுதாரரின் வழக்கறிஞர்

டி. சாதிக் பாஷா
கூடுதல் அரசு வழக்குரைஞர்
எதிர்வழக்கீட்டாளர் எண் 1 தேவநேசன்,
எதிர்வழக்கீட்டாளர் எண் 2இன் வழக்கறிஞர்

நீ.பே.ம. தள்ளுபடி செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப்பட்டன.

**கோரிக்கை**: நீதிப்பேராணை மனு. இந்திய அரசமைப்பின் 226ஆம் உறுப்பின்படி முன்னிடப்பட்டு செய்க என்னும் நீதிப்பேராணை மனு பிறப்பிக்க கோரப்பட்டது. பதிவேடுகளைக் கோரிப் பெறவும், பணி தொடர்பான அறிவிக்கையுடனான விளம்பர எண் 1 2020–5–6–2000 தேதியிடப்பட்டது. பிரிவு சுட்டு எண் 3010/pers-1/2020, 2ஆம் எதிர்வழக்கீட்டாளர் கோப்பில் உள்ளது. மேலாளர் பதவிக்கானது தொடர்பாக. (MIS) மட்டுமே மற்றும் இது தொடர்பான செயற்பாடுகள் இவற்றை அழிக்கவும் தேர்ந்தெடுக்கும் முறை அதுவும் மேலாளர் பதவிக்கானது (MIS) மற்றும் 2ஆம் எதிர்வழக்கீட்டாளர் 22.1.2021 தேதியிடப்பட்ட மனுதாரரின் சார்பாளரை கருதுகை செய்யப் பணிக்குமாறும் வகுத்துரைக்கப்பட்ட நடைமுறையை கட்டாயமாகப் பின்பற்றி மனு தேர்வு நடத்தவும் நியாயமாகவும் வெளிப்படையாகவும் நடத்தக் கூறுமாறு பணிக்க கோரப்படுகிறது.

தீர்ப்பு

1. இந்த நீதிப்பேராணை மனு. இந்திய அரசமைப்பின் 226இன்படி முன்னிடப்பட்டது. இதில் செய்யற்க என்னும் நீதிப்பேராணை மனு பிறப்பிக்கக் கோரப்பட்டது. இதில் விளம்பர எண் 1/2020இன் பணி அறிவிக்கை எதிர்க்கப் பட்டது. 5.6.2020 தேதியிடப்பட்டது. அட்வைஸ் (3010/person 1/2000) இது 2ஆம் எதிர் வழக்கீட்டாளர் கோப்பில் உள்ளது. அதாவது இது மேலாளர் பதவிக்கானது தொடர்பானது மட்டுமே (MIS) மற்றும் இது தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும், மனுதாரர் தேர்வு செய்யும் முறையை அழிக்க கோருகிறார். அதாவது மேலாளர் பதவிக்கான தேர்வு (MIS) மற்றும் 2ஆம் எதிர்வழக்கீட்டாளரை 22.1.2021 தேதியிட்ட மனுதாரரின் சார்பாற்றத்தை கருதுகை செய்ய கோருகிறார்.

2. இந்த பொருட்பாடு கேட்கப்பட எடுத்தபோது திரு. டி. சாதிக்ராஜா கூடுதல் அரசு வழக்குரைஞர், 1ஆம் எதிர்வழக்கீட்டாளருக்காக மற்றும் திரு. தேவநேசன், 2ஆம் எதிர்வாதியின் வழக்கறிஞர், பணிந்தளித்தது எதிர்உறுதியுரையின் பத்தி 3இல்

கூறப்பட்டவாறு 2ஆம் எதிர்வழக்கீட்டாளர், அறிவிக்கை எண் 1/2020, 5.6.2020 தேதியிட்ட விளம்பரத்தில் மேலாளர் பதவி (MIS) யில் ஒரு காலியிடத்தை நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டிருந்தது. அவர் மேலும் பணிந்தளித்தது. அறிவிக்கை முழுவதும் 3ஆம் எதிர்வழக்கீட்டாளரால் ரத்து செய்யப்பட்டது. அதாவது பல தனியாட்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டதன்பேரில் மற்றும் அதைத் தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 81ஆம் பிரிவின்படி, விசாரணை ஒன்று நடத்தப்பட்டது. மேலும் இதில் பணிந்தளிக்கப்பட்டதாவது, எதிர் உறுதியுரையில் பத்தி 6இல் குறிப்பிட்டதாவது தேர்வு செய்வதற்கான செயல்முறை முழுவதும் மேலாளர் (MIS) பதவிக்கானது தமிழ்நாடு பொதுத் தேர்வாணை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கூடுதலாக, 2ஆம் எதிர்வழக்கீட்டாளரால் சங்கத்தால் முன்பு ஏற்பட்ட நேரடித் தேர்வு என்னும் நடைமுறை அரசின் பணிப்புரைகளுக்கு இணங்க தொடரப்படவில்லை. எனவே, இதில் பணிந்தளிக்கப்பட்டது. மனுதாரரால் கோரப்பட்ட உய்தி, வழங்கப்பட முடியாது. ஏனெனில் அறிவிக்கை ரத்து செய்யப்பட்டுள்ள காரணத்தால் மற்றும் கோரப்பட்ட உய்தி பயனற்றது. எனவே, இந்த நீதிப்பேராணை மனுவில் ஏற்கத்தக்க குறிப்பு இல்லாததால் இந்த நீதிமன்றத்தை நீதிப்பேராணை மனுவை தள்ளுபடி செய்யக் கோரப்பட்டது.

3. 1ஆம் எதிர்வழக்கீட்டாளரின் அரசு வழக்குரைஞர் தலைவராலும் 2ஆம் எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞரால் செய்யப்பட்ட பணிந்தனுப்புதல்களைக் கருதுகை செய்ததில் மற்றும் 2ஆம் எதிர்வழக்கீட்டாளரால் முன்னிடப்பட்ட எதிர் உறுதியுரையின் பத்திகள் 3, 6இன் உறுதிக் கூற்றின் படியும், இந்த நீதிமன்றம் கருதுவது 5.6.2020 தேதியிடப்பட்ட விளம்பர அறிவிக்கை எண் 1/2020 ரத்து செய்யப்பட்டுள்ளது. மொத்த தேர்வு செய்யும் செயல்முறையும் தமிழ்நாடு பொது தேர்வாணை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் நேரடி ஆள்தேர்வு மற்றும் நடைமுறை முன்பு பின்பற்றப்பட்டது. அதாவது 2ஆம் எதிர்வழக்கீட்டாளரான சங்கத்தினால் அரசு பணிப்புரைகளின்படி தொடராது விட்டு விடப்பட்டது.

4. மேற்சொல்லப்பட்ட கருத்தின்படி நீதிமன்றம் கண்டறிவது, தற்போதைய நீதிப்பேராணை மனுவில் கோரப்பட்ட உய்தி இந்த நீதிமன்றத்தினால் வழங்கப்பட முடியாது. ஏனெனில் மொத்த தேர்வுக்கான நடைமுறையும் தமிழ்நாடு பொதுத் தேர்வாணை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நீதிமன்றம் ஏற்கக் கூடிய குறிப்பு எதனையும் நீதிப்பேராணையில் காண முடியவில்லை. அவ்வாறே, நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனுக்கள் முடிக்கப்படுகிறது. செலவுத் தொகை பற்றி எந்த ஆணையும் இல்லை. கோப்பு பதிவுத் துறைக்கு அனுப்பப்படுகிறது.

மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி

## மலேசியாவில் 2026 முதல் சமூக ஊடகங்களை சிறுவர்கள் பயன்படுத்த தடை

அடுத்த ஆண்டு முதல் சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்க மலேசிய அரசு திட்டமிட்டுள்ளது. இது குறித்து தொலைத்தொடர்பு அமைச்சர் பஹ்மி பட்சில் கூறியுள்ளதாவது

வரும் 2026ஆம் ஆண்டு முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கு தடைவிதிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான சட்டத்தை அரசு உருவாக்கி வருகிறது. இதன் மூலம், 16வயதுக்குட்ட குழந்தைகள் பேஸ்புக், டிக்டாக், இன்ஸ்டாகிராம், ஸ்நாப்சாட் போன்ற தளங்களில் சமூக ஊடக கணக்கை உருவாக்குவதோ, அல்லது பராமரிப்பதோ சட்டவிரோதமானதாக அறிவிக்கப் படும். இதனுடன், சுரண்டல், சைபர்புல்லிங், பொருத்தமற்ற உள்ளடக்கத்துக்கு ஆளாகுதல் போன்ற ஆன்லைன் அச்சுறுத்தல்களிலிருந்து குழந்தைகள் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தத் தடையை அமல்படுத்துவதற்கு முன்பாக இதற்கான கட்டமைப்பை இறுதி செய்வதற்காக தொழில்நுட்ப நிறுவனங்கள், குழந்தைகள் நலக் குழுக்கள் மற்றும் கல்வியாளர்களுடன் அரசு இணைந்து செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்

நன்றி: இந்து தமிழ் 25.11.2025

# ஓய்வூதியத்தை மறுக்க மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றதை காரணமாக கூற முடியாது

**சென்னை உயர்நீதிமன்றம் - மதுரை அமர்வு**
**முன்னிலை: நீதிபதி திரு கே.குமரேஷ் பாபு**
**நீ.பே.(மஅ) எண் 24101/2025**
**தீர்ப்பு நாள் 13-10-2025**

**ஸ்ரீனிவாசன் ...மனுதாரர்**

**-எதிர்-**

**1. இயக்குனர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, அண்ணாசாலை, நந்தனம், சென்னை - 600 035**

**2. கருவூல அலுவலர், விருதுநகர் மாவட்டம்**

**3. உதவி கருவூல அலுவலர், ஸ்ரீவில்லிபுத்தூர் ...எதிர்மனுதாரர்கள்**

**வேண்டுகை:** இந்திய அரசியலமைப்பின் பிரிவு 226 இன் கீழ் ஆவணக் கட்டுகளை கொணரக் கோரும் வகை நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டு, 3வது எதிர்மனுதாரரால் பிறப்பிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய உத்தரவு தொடர்பான பதிவுகளைக் கோரிப் பெற்று, 07.07.2025 தேதியிட்ட Ka.Mu.105/2025/A1 இல் உள்ள நடவடிக்கைகளைப் பார்த்து, அதை சட்டவிரோதமானது என்று ரத்து செய்து, அதன் விளைவாக, மார்ச் 2024 முதல் இன்றுவரை மனுதாரருக்கு மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்கவும், அதைத் தொடர்ந்து மனுதாரருக்கு செலுத்தவும் பிரதிவாதி எண்.1 முதல் 3 வரையிலானவர்களுக்கு உத்தரவிட வேண்டுகை செய்யப்பட்டது.

மனுதாரருக்கு-திரு.ஆர்.கருணாநிதி, வழக்கறிஞர்

எதிர்மனுதாரர்களுக்கு - திரு.எஃப். தீபக், சிறப்பு அரசு வழக்கறிஞர்

## ஆணை:

1. மூன்றாவது எதிர்மனுதாரரால் பிறப்பிக்கப்பட்ட செயல்முறை ஆணை கா.மு.105/2025/அ1 மூலம் 07.07.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட பிரச்சனைக்குரிய உத்தரவை எதிர்த்தும், அதை ரத்து செய்து 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு மார்ச் 2024 முதல் இன்றுவரை நிறுத்திவைத்துள்ள மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்குவதுடன், தொடர்ந்து அதனை வழங்கவும் உத்தரவிடக் கோரியும் இந்த நீ.பே.மனுதாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. மனுதாரரின் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் காவல் துறையில் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் என்றும், ஓய்வூதியம் பெற்று வந்தவர் என்றும் சமர்ப்பித்தார். மனுதாரர் மாற்றுமுறை ஆவணச் சட்டம், பிரிவு 138-ன் கீழ் தண்டனைக்கு உள்ளாகி, குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தார். பிரச்சனைக்குரியதாக எதிர்கொள்ளப்பட்ட உத்தரவில், தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 8-ன் கீழ் உள்ள பிரிவுகளைப் பயன்படுத்தி, மனுதாரருக்கு பதிலளிக்க வாய்ப்பு வழங்காமல் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது. மாற்றுமுறை ஆவணச் சட்டம், பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி எனத் தீர்ப்பளிப்பது என்பதை அறம் சார் ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட குற்றமாகக் கருதப்பட முடியாது என்று வாதிட, இந்த நீதிமன்றத்தின் W.P.(MD).எண் 5002/2024, தேதி 05.09.2024 தீர்ப்பை அவர் மேற்கோள் காட்டினார். எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் மனுதாரர் பெற்ற தண்டனைக்காக, ஓய்வூதியத்தைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதிலும்

சட்டப்படி உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் இதனைச் செய்ய முடியாது என்றும் அவர் சமர்ப்பித்தார். இதன் காரணமாக, இரண்டாவது எதிர்மனுதாரரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் தள்ளுபடி செய்ய அவர் வேண்டுகை செய்தார்.

3. இதற்குப் பதிலளிக்கும் வகையில், எதிர் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான கற்றறிந்த தனி அரசு வழக்கறிஞர், மனுதாரர் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் பிரிவு 138-ன் கீழ் திரும்பத் திரும்ப குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார். இது கடுமையான நடத்தை மீறலுக்குச் சமம் என்று சமர்ப்பித்தார். மனுதாரர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதை மறுக்கவில்லை என்றும், அவர் தனது தண்டனையை ஒப்புக் கொண்டதாக வும் அவர் சமர்ப்பித்தார். எனவே, ஓய்வூதியம் பெறுபவருக்கு நல்ல நடத்தை இருக்க வேண்டும் என்றும், நல்ல நடத்தை இல்லையெனில் ஓய்வூதியம் நிறுத்தப்படலாம் என்றும் கூறும் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், விதி 8-ன் கீழ் உள்ள பிரிவுகளைப் பயன்படுத்தி, மாற்றுமுறை ஆவணச் சட்டம் தொடர்பான மூன்று வழக்கு களில் மனுதாரர் ஈடுபட்டது கடுமையான நடத்தை மீறலை செய்ததைக் காட்டுகிறது. இது தண்டனை யிலும் முடிந்தது. எனவே, பிரச்சனைக்குரியதாக எதிர்கொள்ளப்பட்ட உத்தரவில் எந்தத் தவறும் இல்லை என்று அவர் வாதிட்டார். மேலும், இந்த வழக்கில், மனுதாரர் தண்டனை உத்தரவுக்கு உட்படுத்தப்பட்டவர் என்பது நிரூபிக்கப்பட்ட வழக்கு என்பதால், எந்த விசாரணையும் தேவையில்லை என்றும் அவர் சமர்ப்பித்தார். எனவே, இந்த நீதிப்பேராணை மனுவைத் தள்ளுபடி செய்ய அவர் வேண்டினார்.

4. இரு தரப்பிலும் செய்யப்பட்ட சமர்ப்பிப்பு களை நான் கருத்தில் கொண்டேன் மற்றும் பதிவில் உள்ள ஆவணங்களை கவனமாகப் பரிசீலனை செய்தேன்.

5. மனுதாரர் மாற்றுமுறை ஆவணச் சட்டம், பிரிவு 138-ன் கீழ் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப் பட்டவர் என்பதை ஒப்புக்கொள்கிறார். இந்த நீதிமன்றம் W.P.(MD).எண் 5002/2024, தேதி 05.09.2024-ல், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புகள் மற்றும் இந்த நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வின் தீர்ப்புகளைக் கருத்தில் கொண்டு, மாற்றுமுறை ஆவணச் சட்டம், பிரிவு 138-ன் கீழ் உள்ள தண்டனையை ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட குற்றமாகக் கருத முடியாது என்று திட்டவட்டமான தீர்ப்பை வழங்கி யதுடன், அதன் அடிப்படையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகை நியாயமற்றது என்றும் அறிவித்துள்ளது. ஓய்வூதிய விதிகள், ஒரு நபர் எதிர்காலத்தில் நல்ல நடத்தையை கடைப் பிடிக்கத் தவறினால், ஓய்வூதியத்தைப் பெறுவ தற்குத் தகுதியற்றவர் ஆவார் என்று கூறுகிறது. மாற்றுமுறை ஆவணச் சட்டம், பிரிவு 138 என்பது தரப்பினர்களுக்கு இடையேயான ஒப்பந்தரீதியான சர்ச்சையில் இருந்து எழுகிறது. இதில் ஈடுபடுவது ஒருவரின் அறம் சார் நடத்தையைப் பாதிக்கக்கூடிய குற்றம் என்று கூற முடியாது. அத்தகைய நடத்தை அவரது நல்ல நடத்தையைப் பாதிக்கும் என்று குறிக்க முடியாது. மேற்கூறிய தீர்ப்பில் கற்றறிந்த நீதிபதி எடுத்த முடிவிலிருந்து வேறுபடுவதற்கு இந்த நீதிமன்றம் எந்தக் காரணத்தையும் காண வில்லை. எனவே மனுதாரரின் நடத்தை ஓய்வூதியத்தை மறுக்கக்கூடிய காரணமாகக் கூற முடியாது.

6. இந்தக் கண்ணோட்டத்தில், இங்கு பிரச்சனைக்குரியதாக எதிர்கொள்ளப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மேலும் இந்த உத்தரவின் நகல் கிடைத்த நாளிலிருந்து பன்னிரண்டு வாரங்களுக்குள் மனுதாரருக்கு ஓய்வூதியத்தை திரும்ப வழங்கவும், ஏதேனும் ஓய்வூதிய நிலுவைத் தொகை இருந்தால் அதனையும் வழங்கவும் பிரதிவாதிகளுக்கு உத்தரவிடப்படுகிறது.

7. மேற்கண்ட உத்தரவுகளுடன், இந்த நீ.பே. மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுகள் இல்லை. இதன் விளைவாக, தொடர்புடைய இதர வகை மனுக்கள் முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# மணமுறிவும் அதற்கான ஆதாரங்களும்

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்)
முன்னிலை : நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், நீதிபதி ஆர். பூர்ணிமா
உ.ப.ம. (MD) எண்கள் 460, 1515/2024, உ.ப.ம. (MD) 15844/2024
19.3.2025
2025 (2) CTC 684

எல்.சந்தானகிருஷ்ணன் ...மேல்முறையீட்டாளர்

–எதிர்–

தி. நிர்மலா ...எதிர்வழக்கீட்டாளர்கள்

சி. கோமதிசங்கர்
மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

எஸ்.கோகுல்ராஜ்
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.ப.எண்கள் தள்ளுபடி செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப்பட்டது.

**கோரிக்கை** : உரிமையியல் பல்வகை மேல் முறையீடு. குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தின் 19ஆம் பிரிவின்படி முன்னிடப்பட்டது. இ.தி.மு.ம.எண் 443, 445/2023 குடும்ப நீதிமன்றம் கரூரில் கோப்பில் உள்ளது. இதில் அளிக்கப்பட்ட 6.2.2024 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை தொடர்பான பதிவேடுகளை கோரிப் பெறவும் அதனை தள்ளுபடி செய்து, மேல்முறையீட்டாளருக்கு மணமுறிவு வழங்கக் கோரியும் உரிமையியல் பல்வகை மேல் முறையீடு முன்னிடப்படுகிறது.

## தீர்ப்பு

நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்

1. சந்தான கிருஷ்ணன் என்பவருக்கும் நிர்மலா என்பவருக்குமிடையே 1.7.2010 அன்று திருமணம் நடைபெற்றது. பசுபதீஸ்வரர் கோயிலில் கரூரில் இந்து முறைப்படி நடைபெற்ற திருமணம். இவர்களுக்கிடையே குழந்தை எதுவும் பிறக்கவில்லை தரப்பினர்கள் பிரிந்தே வாழ்ந்தனர். 9.12.2020 முதல் இவர்கள் உடனுறை உரிமைக்காக நிர்மலா இ.தி.மு.ம. எண் 29/2021இனை கரூர் துணை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு மனு எண்ணிடப் பட்டது. இ.தி.மு.ம.எண் 445/2023. சந்தான கிருஷ்ணனும் இ.தி.மு.க. எண் 400/2021. கோயம்புத்தூர் குடும்ப நீதிமன்றத்தில் முன்னிட்டுள்ளார். இது பின்னர், முதன்மை கரூர் நீதிமன்றத்திற்கு, மாற்றப்பட்டு, மறு எண்ணிடப் பட்டது. இ.தி.மு.ம.எண் 445/2023 சந்தான கிருஷ்ணன் இ.தி.மு.ம.எண் 400/2021. கோயம்புத்தூர் குடும்ப நீதிமன்றத்தில் முன்னிட்டுள்ளார். இது பின்னர், முதன்மை கரூர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு மனு எண்ணிடப் பட்டது. இ.தி.மு.ம.எண் 138/2022 மீண்டும் குடும்ப நீதிமன்றம் கரூர்க்கு மாற்றப்பட்டு இ.தி.மு.மக்களும் ஒன்றாக விசாரிக்கப்பட்டன. சந்தானகிருஷ்ணன் PW1 ஆக விசாரிக்கப் பட்டார். EXP1 முதல் EXP13 வரை அவரது தரப்பில் தேதியிடப்பட்டது. நிர்மலா RW1 ஆக விசாரிக்கப்பட்டார். EXR1 முதல் EXR4 அவளது தரப்பில் குறியீடு செய்யப்பட்டது. பதிவேட்டில் உள்ள சான்றுக்கான கருதுகை செய்த பின்னர், குடும்ப நீதிபதி கரூர் அனுமதித்தது. இ.தி.மு.ம.444/2023 மற்றும் இ.தி.மு.ம.443/2023இனைத் தள்ளுபடி செய்தார். பொது ஆணை 6.2.2024 தேதியிடப்பட்டது. பிறப்பிக்கப் பட்டது. இதனை எதிர்த்து உரிமையியல் பல்வகை மனுக்கள் முன்னிடப்பட்டன. உ.ப.மே. (MD) எண் 460/2024 இ.தி.மு.ம.எண் 443/2023இன் ஆணைக்கு எதிராக பணிக்கப்பட்டது. உ.ப.வி. (MD) எண் 1515/2024, 445/2023க்கு எதிராக பணிக்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர்/கணவருக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் வாதிட்டது. மேல்முறையீட்டிற்கான அளிக்கப்பட்ட அனைத்து காரணங்கள் தொடர்பாகவும் அவர் பதிவேட்டில் உள்ள சான்றையும் சுட்டிக்காட்டி மணமுறிவு மனுவில் கூறப்பட்ட முடிவான அடிப்படை காரணங்களை சுட்டிக் காட்டினார். அவர் மேலும்

கூறியதாவது, தரப்பினர்களுக்கிடையேயான உறவு மீள முடியாத நிலைக்கு உடைக்கப் பட்டுள்ளது. இந்த பண உறவு முறை நீடிப்பதால் எந்த நோக்கமும் நிறைவேறாது. இவர் ஓர் வழக்கின் முடிவையும் ஆதாரமாக காட்டி யுள்ளார். C.M.S.A. எண் 40/2008 (பி.ரவி குமார் –எதிர்– மலர்விழி (எ) கோகிலா) 15.4.2013 தேதியிடப்பட்டது. இவரது வாதங் களுக்கு ஆதாரமாகக் காட்டப்பட்டது. இவர் நீதிமன்றத்தை எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை களை தள்ளுபடி செய்து மேல்முறையீட்டை அனுமதிக்குமாறு கோரினார்.

3. மாறாக, எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளித்தது எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணை சரியான காரணங்களைக் கொண்டி ருப்பதாகவும் இது இடையீடு செய்ய தேவை யில்லை என்றும் கூறினார்.

4. நாங்கள் எதிரெதிர் வாதங்களை கவன மாகக் கேட்டறிந்தோம் மற்றும் பதிவேட்டில் உள்ள பொருட்பாடுகளை கவனித்தோம். இரு தரப்பினரிடையே திருமணம் 1.7.2018இல் நடைபெற்றது. இது இரண்டாவது முயற்சி, நீதிமன்ற சட்டப்படி முதல் திருமணம் கலைக்கப் பட்டது. மேல்முறையீட்டாளர் இரண்டாவது திருமணத்தையும் கலைப்பதாக உள்ளார். அவர் அவரது முதல் ஆதாரம் எதிர்வழக்கீட்டாளருக்கு பால்வினை நோய் உள்ளது. இது தொற்றக் கூடிய ஒன்று. இரண்டாவது காரணம் மேல் முறையீட்டாளருக்கிணங்க எதிர்வழக்கீட்டாளர் தொடர் கொடுமையில் ஈடுபட்டுள்ளார் என்பது.

5. 1955 இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13(1)(v) வகை செய்வதாவது எதிர்தரப்பினருக்கு பால்வினை நோய் உள்ளதாகவும் அது தொற்றக் கூடியதாக உள்ளதாக சொல்லப்பட்ட காரணம் என்று வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தனது பிணைக்கு பால்வினை நோய் இருப்ப தாக கூறுவதே பெரிய கரும்புள்ளி. எனவே, வழக்கின் தன்மை இது பற்றிய ஆதாரம் தேவைப்படுகிறது. 1955 இந்து திருமணச் சட்டத்தின் 13(1)(v) பிரிவில் மணமுறிவு கோருவதற்கான ஏழு காரணங்களை குறிப்பிட்டுள்ளது. இதன் பேரில் கணவனால் அல்லது மனைவியால் மணமுறிவு கோரப்படலாம். நாம் இவை பற்றி அறிவோம். முறைபிணர்ந்தபுணர்ச்சி மற்றும் எதிர்தரப்பினர் பால்வினைநோயால் துன்புறுகிறார் மற்றும் அது தொற்றக் கூடிய நிலை இவை நிரூபிக்கப்படுமானால், இது பிரிவு 13(1)(v)இன்படியான காரணமாக அமையும். இதன் மூலம் எதிர் தரப்பில் குறிப்பிட்ட பாதிப்பு இருப்பதாகக் காட்டப்படுவது மட்டுமே மண முறிவுக்கு காரணமானது. எதிர் தரப்பினருக்கு அவர் அல்லது அவளது நிலை பற்றி எடுத்துக் கூற வாய்ப்பு ஒன்று அளிக்கப்படுதல் வேண்டும். அதாவது அவர்களது நிலை ஒழுக்க நெறியில் இருந்து நெறிபிறழ்ந்த ஒன்றல்ல என்றும், அது அவரது அல்லது அவளது கட்டுப்பாட்டுக்கு மீறிய சந்தர்ப்ப சூழ்நிலை என்பதை மெய்ப்பிக்கும் நிலை பற்றி இதில் இரண்டு நிகழ்வுகள் நினைவுகூறத் தக்கன. சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு பெண் கர்ப்ப முற்றது தொடர்பான சோதனைக்காக அரசு மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கு அவருக்கு ஹெச்ஐவி HIV தொற்று ஏற்பட்டுள்ளது. அதாவது தூய்மையற்ற இரத்தம் அளிக்கப்பட்ட காரணத்தால், இந்தச் சூழ்நிலையில் அவளது திருமணத்தைக் கலைப்பது நியாயமா இது அவளது தவறு எதுவும் இல்லை. “நாம் இல்லை” என்றே கூற வேண்டியுள்ளது. நாம்தியோ தசால் ஒரு புரட்சி பாடகர் மற்றும் தலித் தீவிரவாதி, அவரது மனைவி மல்லிகா சுமார்சிக் ஒரு சுயச்சரிதை எழுதியுள்ளார். “நான் என்னை அழித்துக் கொள்ள கருதுகிறேன்.” இது அதன் தலைப்பு, அவள் எவ்வாறு தனது கணவர் அவரது செயலால் அவருக்கு பால்வினை நோய்க்கு ஆளாக்கினார் என்பதை நினைவு கூறுகிறார். இது போன்ற ஒரு கேள்வி எந்த பாடகர் நமோதியோ தசல் மணமுறிவு மனுவை முன்னிட்டிருப்பாரா அதாவது அவரது மனைவிக்கு நோய் உள்ளதாக அதற்கான பதில் இல்லை என்பதே. எனவே நாம் கூறுவது 1955 இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13(1)(v) மேலே குறிப்பிடப்பட்ட முறையில் புரியப்படுதல் வேண்டும். மனு தரப்பு பால்வினை நோயால் பாதிக்கப்பட்டபோதிலும் அது தொற்றக் கூடியதாக இருந்தபோதிலும், எதிர்தரப்பினருக்கு தான் எந்தத்தவறையும் செய்யவில்லை என்று

தன்னிலைப் பற்றி எடுத்துக் கூற வாய்ப்பு ஒன்று அளிக்கப்படுதல் வேண்டும்.

6. கையில் உள்ள வழக்கை பார்ப்பதில் நாம் நேரடியாகக் கூறுவதாவது, மேல்முறையீட்டாளர் கூறப்பட்டதை மெய்ப்பிக்கத் தவறியுள்ளார். அந்த வழக்கை ரவிக்குமார் எதிர்– மலர்விழி (எ) கோகிலா) மேல்முறையீட்டாளர் மு.ம. எதனையும் முன்னிடவில்லை. அதாவது எதிர்வழக்கீட்டாளர் மருத்துவ சோதனை அல்லது விசாரணை எதற்கும் தன்னை உட்படுத்திக் கொள்ளவில்லை. எந்த அறிக்கையும் குறியீடு செய்யப்படவில்லை. மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்ட அறிக்கை குறியீடு செய்யப்பட்டது. இதுவும் ஆயுர்வேத மையத்திலிருந்து, எதிர் வழக்கீட்டாளருக்கு பால்வினைநோய் உள்ளதாகக் கூறப்பட்டது. மெய்ப்பிக்கப்படவில்லை. ரத்த சோதனை அறிக்கை குறியீடு செய்யப்பட்டது. வேறு அறிக்கை எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. ExP10 பரிசோதனை நிலைய அறிக்கை. இது மேல்முறையீட்டாளர் தொடர்பானது மட்டுமே. இந்த அனுப்புதல்களைப் படிப்பதில் ஒருவருக்கு எதிர்வழக்கீட்டாளருக்கு பால்வினை நோய் உள்ளதாக முடிவுக்கு வர முடியாது.

7. இதில் மணமுறிவு மனு திருமணத்திற்கு/ அறிந்ததும் செய்யப்படவில்லை. தரப்பினர்கள் 2 ஆண்டுகள் நெருக்கமாக இருந்துள்ளனர். அந்தக் காலத்தில் மேல்முறையீட்டாளர் மணமுறிவு மனுவில் கூறப்பட்ட காரணத்தை அறிந்திருப்பாரானால் அவரை ஒரு வைத்தியரிடம் நோயாளியாக கொண்டு சென்றிருப்பார். ஆனால் எந்த மருத்துவ சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. பொருண்மையின்படி சட்டவகை முறையில் எதிர்வழக்கீட்டாளருக்கு பால்வினை நோயிருப்பதாகவும் அது தொற்றக் கூடிய நிலையில் உள்ளதென்றும் கூறப்பட்டது. இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் எதிர்வழக்கீட்டாளருக்கு நோய் உள்ளதை மெய்ப்பிக்கத் தவறியுள்ளார். எதிர்வழக்கீட்டாளர் நோயுற்றிருந்தால் மேல்முறையீட்டாளரையும் அது பாதித்திருக்கும் மேல்முறையீட்டாளர் அவரது சட்ட அறிக்கை 28.1.2021 ExR4இல் கோரியுள்ளது. அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டதாக அதாவது எதிர்வழக்கீட்டாளருடன் உடன் வராத காரணத்தால் மற்றும் இது பற்றிய மருத்துவ அறிக்கையினை மேல்முறையீட்டாளர் முன்னிட்டிருத்தல் வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. எனவே இதில் கூறக் கூடிய முடிவானது. அவர் பொய்யான கூற்றை கூறியுள்ளார் என்பதே.

8. எதிர்வழக்கீட்டாளரின்படி ஏதோ சில பிரச்சினைகள் இருந்திருப்பின் அவர் கூறிய குறைபாடு திருந்தத்தக்கதென்றும் அவர் எதனையும் மேற்கொள்ளவில்லை. எதிர்வழக்கீட்டாளரின் பிரச்சினை எளிதில் சரி செய்யக் கூடியதே. எனவே கீழ்நிலை நீதிமன்றம் சரியாகவே கண்ட முடிவாவது பிரிவு 13(1)(v) இன்படி எதுவும் மெய்ப்பிக்கப்படவில்லை என்பது.

9. மேல்முறையீட்டாளரால் அடுத்து கூறப்பட்ட தாவது எதிர்வழக்கீட்டாளர், தன்னை கொடூரமாக நடத்தியதாகக் கூறியுள்ளார். அதற்கு ஆதாரமாகக் காட்ட பின்வருவனவற்றை கூறியுள்ளார்.

(அ) அவள் மிக கஞ்சமாக இருப்பாள்.

(ஆ) அவள் பரத்தமை பற்றிய படங்களை பார்ப்பதும் எப்போதும் சுய இன்பத்தில் செயற்படவும் செய்வாள்.

(இ) வீட்டு வேலைகளை செய்ய மறுத்ததாக கூறியுள்ளார்.

(ஈ) அவள் இவளது உறவினர்களை மதிப்பாக நடத்தவில்லை.

(உ) தொடர் தொலைபேசி உரையாடல்களில் ஈடுபட்டு வந்தாள்.

10. மு.ம. முன்னிடப்பட்டதுடன் சட்ட அறிக்கை அனுப்பப்படவில்லை. ExR4 சட்ட அறிவிப்பு அதே காலத்தில் அனுப்பப்பட்டது. இதில் மேலே கூறப்பட்டவை தொடர்பாக எதையும் கூறவில்லை. அவரது வழக்கை நிரூபிக்க, மேல்முறையீட்டாளரால் தன்னை மட்டுமே விசாரிக்க செய்தார். மேல்முறையீட்டாளரால் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு அவனது சொந்தக்காரர்களை ஆலமருந்தாக அதனை மெய்ப்பிக்க ஒருவரையாவது விசாரித்திருக்கலாம். ஆனால் இதை அவர்

செய்யவில்லை. மேல்முறையீட்டாளரால் கூறப்பட்டவை அதுவும் ஆதாரம் காட்டப்படவோ மெய்ப்பிக்க முற்படவோ இல்லை.

11. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் வாதிட்டதாவது எதிர்வழக்கீட்டாளர், பரத்தமை யின் படங்களை பார்ப்பதுடன் சுய இன்பத்தில் ஈடுபட்டார் என்பது இவற்றை மெய்ப்பிக்க அல்லது உறுதி செய்ய முடியாத நிலை. இது உறுதிமொழிக்கு எதிர்த்த உறுதி மொழியாகும். இவருக்கு இணங்க எந்தக் கணவரும் இத்தயை முறையீடுகளை கூறக் கூடாது. இதில் உண்மை யிருந்தாலன்றி.

12. எனவே நாங்கள் இந்த பணிந்தனுப்புதல் களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இழிவான படங்கள் பார்த்தல் போன்றவை தனிப்பட்ட செயல்கள் இது குற்றச்செயலாக அமையாது. நம்மில் ஒருவர் (G.R.S.J.) கூறிய தாவது. பி.ஜி.சாம் குழந்தை ஜோன்ஸ் –எதிர்– மாநிலம் 2021 உச்.நீ.வ. வலைதளம் சென்னை 2241 இது பின்வருமாறு.

“5. தனிப்பட்ட முறையில் ஆபாச படங்களை பார்ப்பது மட்டுமே ஒரு குற்றச் செயலாக அமையாது. இதில் பொருள்வரையறை இ.த.தொ.ச. பிரிவு 40இல் காணப்படுகிறது. நாளது தேதி வரை இத்தகைய தனிப்பட்ட செயல்களை தடை செய்கிற வகைமுறை எதுவும் இல்லை. இதில் இவர் இதனை ஒருவர் அவரது தனிப்பட்ட காட்சி சுதந்திரத்திற்கும் அந்தரங்கத்திற்கும் இது எதிராக அமைவதாகக் கூற முடியும். ஆனால் குழந்தை தொடர்பாக இத்தகைய படங்கள் அதன் சுதந்திரத்திற்கு அப்பாற்பட்டது. பிரிவு 67(ஆ) தொழில்நுட்ப தகவல் துறைச் சட்டம், 2000 குழந்தை தொடர்பாக இத்தகைய படங்கள் ஒவ்வொரு வகைக்கும் தண்டம் விதிக்கும். எவரொருவர், பாலின முறையில் தவறான செயற்பாடுகளை வெளிப்படையாக செயற்படுத்தும் அல்லது நடவடிக்கைகளை வெளியிடுகிற, பரப்புகிற அல்லது வெளியிட உதவுகிற அல்லது பரப்ப உதவி புரிகிற எவரொருவர் அதாவது மின் தொழில்நுட்ப முறையில் இதை படமாக, எண் விகிதமாக செயற்படுத்துகிற அல்லது சேகரிக்கிற கோரிப் பெறுகிற, படி எடுத்து பரப்புரை விளம்பரப்படுத்துகிற, வாக்களிக்கிற மாற்று பெறுகிற விநியோகிக்கிற எவரொருவரும் இதற்கான தண்டனையை பெறுவர். இவற்றை கணினி வழியோ, வலைதள வழியோ செயற்படுத்துகிற அல்லது முயற்சிக்கிற எவரும். எனவே குழந்தைகளை ஆபாச படங்களைப் பார்க்கச் செய்வதே ஒரு குற்றச் செயலாக அமையும்.”

இவ்வாறாக கூறப்பட்டு நடக்கு இதில் தெளிவு ஏற்பட்டுள்ளது. இதை போன்ற செயலுக்கு அடிமையாயிருத்தல் இது காட்சி காண்பவரை காலப்போக்கில் பாதிக்கும். இது பெண்களை இழிபொருளாக காட்டப்படுவதால் மதிப்புக் குறை வாக செயற்படுத்துவது. இது இழிவான நல் ஒழுக்க பண்பாட்டுக்கு எதிரானதாக அமையும். இது தனிப்பட்ட மற்றும் சமுதாய தளத்திற்கு ஏற்றதல்ல. இது சட்ட மீறல் என்பதல்லாது. எதிர்வழக்கீட்டாளரின் செயல் சட்டப்படியில்லாத போதும். இழிதலான பண்பற்ற செயலாகும். ஆனால் இந்தக் காரணத்தைக் காட்டி மணமுறிவு பெற முடியாது. பிரிவு 13(1)(i)(i-a)இன்படி திருமணமானது கலைக்கப்படலாம். எதிர்வழக் கீட்டாளர் இவரை அதாவது மனுதாரரை கொடுமையாக நடத்தியிருந்தால் ஆக்ஸ்போர்டு சொற்களஞ்சியம் “நடத்துதல்” என்னும் சொல்லுக்கு பொருள்கோள் செய்துள்ளது. ஒருவரிடம் ஒரு குறிப்பிட்ட முறையில் நடத்தை அது, நேரடியான தாக இருத்தல் வேண்டும். செயற்பாடானது, எதிர்வழக்கீட்டாளரை தொடர்பு டையவராக்காது. தனிப்பட்ட செயலாக அமையும் போது இது கொடுமையாக இருக்க முடியாது. “நடத்துவது” என்பது வேண்டுமென்றே ஆன செயற்பாடு. எனவே, எதிர்வழக்கீட்டாளரின் செயல், தனிமையில் பரத்தமை பற்றிய படங்களைப் பார்ப்பது என்பது. கொடுமை விளைவிப்பதாகாது. இது மனத்தனைப் இதைப் பார்ப்பவர்களை தான் பாதிக்கச் செய்யும். இதை விட மேற்பட்டதான செயலே கொடுமையாகும். அதாவது கட்டாயப்படுத்துதல் போன்ற செயல்கள் இதுவே உடல், உணவு, பலருக்கு கேடுகளை விளைவிக்கும். இது நடவடிக்காக எடுக்கத்தக்கதாக அமையும்.

13. மேல்முறையீட்டாளரின் வழக்காவது எதிர்வழக்கீட்டாளர் தொடர்ந்து இழிதலான படங்களை கைபேசியில் பார்த்துக் கொண்டிருப்பார் என்பதும் ஆனால் இது பற்றி தடவியியல் நிபுணரைக் கொண்டு எதனையும் எதிர்வழக்கீட்டாளர் செயற்படுத்தவில்லை. இதற்காக அந்த முறையாவணத்தை அல்லது சாதனத்தை விசாரணையில் சேர்த்து விவரங்களை சேகரிக்க முயற்சிக்கவில்லை. இது பற்றி நாம் இந்த சூழ்நிலையில் பிணையருக்காக தனிப்பட்டவை பற்றி வகை செய்யவில்லை. ஏனெனில் மேல்முறையீட்டாளர் இது தொடர்பாக எந்த குறுக்கு விசாரணைக்கும் முயற்சிக்கவிலலை.

14. பிறவாறு சொல்லப்பட்டவை எதிர்வழக்கீட்டாளர் சுயஇன்பம் காண்பதில் ஈடுபடுவார் என்பது. இது தொடர்பாக ஒருவரை ஏதேனும் கேட்பதே அவர்களது தனிமனித சுதந்திரத்தில் தலையிடுவதாக அமையும். திருமண ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் பிறருடன் உறவு வைத்துக் கொள்வது. கண்டனத்துக் குரியது மற்றும் மணமுறிவு செய்ய காரணமாக அமையும். சுய இன்பம் காண்பது மணமுறிவுக்கு காரணமாக அமையாது. எந்த அளவு கற்பனை வனைத்தாலும் இது எதிர்தரப்பான கணவருக்கு செய்யும் கொடுமையாக கொள்ளப்பட முடியாது. மனுதாரர் கொடூரமாக நடத்தப்பட்டார் என்றால் மட்டுமே பிரிவு 13(1)(i)(i-a) பிரிவு ஈர்க்கப்படும். சுய இன்பம் காண்பது ஆண்களிடையே உலகறியப்பட்ட ஒன்று. இது பெண்களிடையே கேள்வியாக்கப்பட முடியாது. இதனால் உடன் உறையும் நிலையும் பாதிப்பு ஏற்படாது. உச்ச நீதிமன்றம் ராஜுஸ் ரதோரி –எதிர்– UOI 2024, உச்.நீ.வ. வலைதளம் உச்.நீ. 3217. இதில் NALSAR அறிக்கையை வகை செய்வதில் மனதளவிலும் எதிர்ப்புகளை சந்திக்க வேண்டி யிருந்தது. PWD's உணர்ச்சிகளுக்கு தனிமை தேவைப்படுகிறது. சுய இன்பம் இது பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை. தனியுரிமை அடிப்படை உரிமை இதில் பிணையில் தனிமையும் உள்ளடக்கும். பிணையின் தனிமை பல்வேறு நிலைகளை உள்ளடக்கும். இதில் எதுவும் சட்டப்படி சரியற்றதாக அமையாத வரை ஒவர் தன்னை வெளிப்படுத்தும் உரிமை மறுக்கப்படக் கூடாது. தனி இன்பம் கிடைக்காத ஒன்றல்ல. திருமணத்திற்குப் பின்னர் ஒரு பெண் பிணையாகிறாள். அவள் தன் தனி சுதந்திரத்தை கொண்டிருப்பாள். அடிப்படை அடையாளம் அவளது ஒரு பெண்ணாக திருமண நிலையில் இது இல்லை என்றாகாது.

15. எதிர்வழக்கீட்டாளர் அனைத்து கூறப்பட்டவற்றையும் மறுத்துள்ளார். மேல்முறையீட்டாளரால் கூறப்பட்டவை உண்மையாக இருக்குமானால் 2 ஆண்டுகள் அவர்கள் சேர்ந்து வாழ்ந்து இருக்க முடியாது. மேல்முறையீட்டாளர் எதிர்வழக்கீட்டாளர் வீட்டு வேலைகளை செய்யவில்லை என்பதற்கு எந்த சான்றும் அளிக்கவில்லை. கீழ்நிலை நீதிமன்றம். முழு சான்றுகளையும் பதிவேட்டில் கண்ட பின்னர் கொண்ட முடிவானது. மேல்முறையீட்டாளர் தனது வழக்கை மெய்ப்பிக்கவில்லை என்பது. பதிவேட்டில் உள்ளவற்றை கவனமாக பார்த்த பின்னர் மாறுபட்ட கருத்து எடுக்க இயலாது. கீழ்நிலை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை நாங்கள் உறுதி செய்கிறோம். உரிமையியல் பல்வகை மேல்முறையீடுகள் தள்ளுபடி செலவுத் தொகையின்றி. இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனுவும் முடிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## அரசு காரை விட்டுச் சென்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக சூர்ய காந்த் பதவியேற்பு விழாவில் பங்கேற்க குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வந்த ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், அரசு காரை அங்கேயே விட்டுச் சென்றார்.

ஓய்வு பெறும் தலைமை நீதிபதியை அரசு காரில் வீடு வரை அழைத்துச் செல்வது வழக்கம். இந்த நிலையில், நவம்பர் 24, 2025 நடைபெற்ற பதவியேற்பு விழா முடிந்தபின்னர், அரசு காரை (பென்ஸ்) புதிய தலைமை நீதிபதியின் பயன்பாட்டுக்காக அங்கேயே விட்டு விட்டு, தனது சொந்தக் காரில் நீதிபதி கவாய் வீடு திரும்பினார்.

**நன்றி : தினமணி 25.11.2025**

# குறித்தவகை நிறைவேற்றுதலும் அதற்கான காரணங்களும்

**சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை கிளை**
**முன்னிலை : நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்**
**நீதிபதி எம்.ஜோதிராமன்**
**மே.வ.(MD) எண் 158/2020 உ.ப.ம.(MD) எண் 5842/2020**
**28.3.2025**
**2025 (3) CTC 600**

**மாரிமுத்து ...மேல்முறையீட்டாளர்**

**–எதிர்–**

**எஸ்.எஸ்.பிரபாகரன் 2. சுப்புராஜ் ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

எஸ்.பார்த்தசாரதி பி.ஜெ.கார்த்திகேயருக்காக
மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

மே.வ. அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப்பட்டது.

**கோரிக்கை**: மு.வ.எண் 26/2013 முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கோப்பில் உள்ளதில் பிறப்பிக்கப்பட்ட விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை 24.7.2019 தேதியிடப்பட்டதை தள்ளுபடி செய்யக் கோரி உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் 96ஆம் பிரிவின்படி மேல்முறையீட்டு வழக்கு முன்னிடப்பட்டது.

## தீர்ப்பு

**நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்**

1. இந்த மேல்முறையீடு குறித்தவகை நிறைவேற்றுதல் வழக்கிலிருந்து எழுகிறது.

2. வாதி/பிரபாகரன் 25.7.2011 அன்று விற்பனை உடன்படிக்கையை எதிர்வாதி/சுப்புராஜுடன் செய்து கொண்டுள்ளார். அந்த விற்பனை உடன்படிக்கையை செயற்படுத்தக் கோரி குறிப்பாக பிரபாகரன் மு.வ.எண் 26/2013இனை 13.3.2013 அன்று முன்னிட்டு உள்ளார். இது முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் விருதுநகர் ஸ்ரீவில்லிபுத்தூரில் கோப்பில் உள்ளது. அவர் வழக்காவது, எதிர்வாதி தாவாவில் உள்ள சொத்தினை விற்பனை மறுபயனை ரூ.41,23,000க்கு அதாவது 12 ஏக்கர் மற்றும் 72 சென்ட் அளவிலானதை இவர் சார்பாக விற்க எதிர்வாதி உடன்பட்டுள்ளார். அவருக்கிணங்க ரூ.10,50,000 தொகையை முன்பணமாக 25.7.2011 அன்று செலுத்தியுள்ளார் மற்றும் ரூ.5,00,000இனை 10.10.2011 அன்று செலுத்தியுள்ளார். எதிர்வாதி இந்த உடன்படிக்கையை நிறைவேற்றி இதை முடிக்க முன்வராததால் சொல்லப்பட்ட வழக்கை அவர் முன்னிட்டுள்ளார்.

3. எதிர்வாதி எழுத்து மூல விவர உரையை முன்னிட்டு கூறியுள்ளதாவது இந்த நடவடிக்கை 11.11.2011 அன்று முடிவுற்றது. எனவே இவர் 15.12.2011 சட்ட அறிக்கை அனுப்பியுள்ளார். அந்த உடன்படிக்கையை ரத்து செய்து, எதிர்வாதி வாதியை ஒப்பந்தத்தை நிறைவேற்ற அவர் ஆயத்தமாக உள்ளதா என்று கேட்டு உள்ளார். எதிர்வாதி வாதிட்டது வாதி ஒப்பந்த வரையுரைகளைப் பின்பற்ற தவறியுள்ளார். எதிர்வாதி கூறியது வாதி இதனால் அத் தொகையை இழப்பதாக.

4. எதிரெதிர் வாதங்களின் அடிப்படையில், விசாரணை நீதிமன்றம், நான்கு பிரச்சினைகளை வனைந்துள்ளது. எதிர்வாதி தாவாவில் உள்ள சொத்தினை விற்ற பின்னர், அதாவது பி.மாரிமுத்து/மேல்முறையீட்டாளருக்கு 16.10.2015 என்று விற்ற பின்னர், அந்த நடவடிக்கைகளின் பங்கு கொள்ளவில்லை. தரப்பினர் இன்றி இது 27.2.2019 அன்று தீர்மானிக்கப்பட்டது. 13.3.2019 வாதி PW1 ஆக விசாரிக்கப்பட்டார் மற்றும் ExA1 முதல் A5 வரையிலானவை குறியீடு செய்யப்பட்டன. வழக்கில் தீர்ப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த நிலையில், மாரிமுத்து I.A.Nos.1, 2/ 2019/ 18.3.2019இனை நடத்த நடவடிக்கைகளை

மேற்கொள்ள அந்த வழக்கில் தன்னை இரண்டாவது எதிர்வாதியாக சேர்க்கக் கோரி முன்னிடப்பட்டது. வாதியால் வாதிடப்பட்டது 18.7.2019 இரண்டு விண்ணப்பங்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. சொல்லப்பட்ட ஆணையை மாரிமுத்து வாதிடுவதற்கு முன்னரே அதாவது உரிமையியல் சீராய்வு மனுவிற்கு முன்னரே, 24.7.2019 கோரப்பட்டவாறு வழக்கில் தீர்ப்பாணை வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து, மூன்றாம் தரப்பின் மேல்முறையீடு மேல்முறை யீட்டாளரால் உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் 96ஆம் பிரிவின்படி முன்னிடப்பட்டது.

5. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் கேட்டறியப்பட்டார். முதல் எதிர்வழக்கீட்டாளர்/ வாதியின் வழக்கறிஞரும் கேட்டறியப்பட்டார் மற்றும் விற்றவர்/எதிர்வாதியை வழக்கறிஞரும் கேட்கப்பட்டார்.

6. தீர்மானிப்பதற்காக எழும் குறிப்புகள் பின்வருமாறு

(1) வழக்கின் நடவடிக்கைகளில் பிந்தைய வாங்குநர், தன்னைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை கொண்டுள்ளாரா? மற்றும் கீழ்நிலை நீதிமன்றம், இவரால் முன்னிடப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்து தவறு இழைத்துள்ளதா?

(2) பிந்திய வாங்குபவரால் வழக்குத் தொடர்பாக தீர்ப்பு ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் மனு முன்னிடப்பட்டது செல்லத்தக்கதாக

(3) இந்த நீதிமன்றத்தில் இந்த நிகழ்வு, அதாவது எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையைத் தள்ளுபடி செய்தல், மற்றும் மேல்முறையீட்டாளரை 2ஆம் எதிர்வாதி யாக சேர்த்தல் இதில் அவருக்கு எதிராக உள்ளவை எவை?

இதில் மேல்முறையீட்டாளர் கோருவது, அவர் மதிப்பிற்காக உரிமை மாற்றம் பெற்றது தொடர்பாக. அவர் நல்லெண்ணத்தில் பணம் செலுத்தியுள்ளார் என்பது. அதுவும் முந்திய ஒப்பந்தம் பற்றி அறியாமல் இது வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையே உள்ளது தெரியாமல் எனினும் அவர் 1963 குறித்துரைக்கப்பட்ட உய்திச் சட்டத்தின் பிரிவு 19(ஆ)இன்படி நலப் பயன் எதனையும் கோரிட முடியாது. ஏனெனில், இந்த வழக்கில் உரிமை மாற்றம் வழக்கை முன்னிடுவதற்கு முன்னர் நிகழவில்லை. ஆனால், அது நடப்பில் இருக்கையில் ஏற்பட்டது. வேறு சொற்களில் மேல்முறையீட்டாளர், வழக்கு நடப்பில் உள்ளபோது, உரிமை மாற்றம் பெறுகிறவர். எனவே கோட்பாடு மேல்முறையீட்டாளருக்கு எதிராகச் செயற்படும்.

7. இந்த வழக்கிடை மாற்றக் கோட்பாடு 1882 சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 52இல் காணப்படுகிறது இது பின்வருமாறு.

**'52. வழக்கு நடப்பில் உள்ளபோது, அது தொடர்பான சொத்து உரிமை மாற்றம் செய்யப் படுதல்:** வழக்கு நடப்பில் எந்த நீதிமன்றத்திலும் உள்ளபோது, ஜம்முகாஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியாவின் எல்லைகளுக்குள் அல்லது எல்லைச் சுருக்கமாக வெளியே உள்ளபோது (மைய அரசால்) வழக்கு (எதுவும்) அல்லது நடவடிக்கை (அதாவது வஞ்சகக் கூட்டாக இல்லாதபோது) அதில் அசையாச் சொத்தின் உரிமை எதுவும் நேரடியாக அல்லது குறிப்பிடப்பட்டு கேள்வியாக்கப்படும்போது, அந்த சொத்து உரிமை மாற்றம் செய்யப்பட முடியாது அல்லது வேறுவகையில் வகை செய்யப்பட முடியாது. வழக்கின் எந்தத் தரப்பின ராலும் அல்லது வேறு தரப்பினரின் உரிமை களைப் பாதிக்கிறவராக நடவடிக்கைகள் எடுக்கப் பட முடியாது. இது தொடர்பாக இதில் தீர்ப்பாணை அல்லது ஆணை எதுவும் செயற் படுத்தப்பட முடியாது. அதாவது நீதிமன்ற அதிகாரத்தின்படியன்றியும் விதிக்கப்பட்ட வரையுரைகளின்படியன்றியும்

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கங் களுக்காக, வழக்கு அல்லது நடவடிக்கை ஒன்று நடப்பில் இருப்பது, வாதுரை முன்னிடப்பட்ட தேதியிலிருந்து, தொடங்குவதாகக் கொள்ளப் படுதல் வேண்டும் அல்லது தகுதி பெற்ற அதிகார வரம்பு கொண்ட நீதிமன்ற நடவடிக்கை தொடங்கப்பட்ட தேதியிலிருந்து, அந்த வழக்கு அல்லது நடவடிக்கை வகை செய்யப்படும் வரையில் தொடரும். அதாவது ஒரு அறுதியான தீர்ப்பாணை அல்லது ஆணை மற்றும் அத்தகைய தீர்ப்பாணை அல்லது ஆணை முழுவதுமாக மனநிறைவு கொள்ளும் வகை

யில் முடிக்கப்படும் அல்லது செயற்படுத்தும் வகையில் அது பெறப்படுதல் அல்லது கால வரம்பு முடிவுற்ற காரணத்தால் பெறப்பட முடியாதது. அதாவது சட்டம் எதனாலும் நிறைவேற்றப் பட முடியாத காரணம் அப்போதைக்கு செயற் பாட்டில் உள்ள சட்டம் எதனாலும் ஏற்படுத்தப் படும்போது''

மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் பின் வருமாறு வாதிட்டார்.

(1) சொத்துரிமை மாற்றச் சட்டத்தின் 54ஆம் பிரிவின்படி, விற்பனைக்கான ஒப்பந்தம், தன்னிச்சையாக, எந்த உரித்தத்தினையும் ஏற்படுத்தாதது அல்லது அசையாச் சொத்தின் மீது எந்த பற்றுரிமையையும் ஏற்படுத்தாது. அது உடன்படிக்கையின் நுதல்பொருளாக இருந்தபோதும்.

(2) குறித்தவகை நிறைவேற்றதலுக்கான ஒரு வழக்கு, ஒப்பந்தத்தின் பேரிலான வழக்கு

(3) அசையாச் சொத்தில் எந்த உரிமையும் ஏற்படாதபோது வழக்கிடை மாற்றம் கோட்பாடு ஏற்படுத்தப்பட முடியாது. எனவே சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 52ஆம் பிரிவு பிந்திய உரிமை மாற்றுநருக்கு எதிராக செயற்படாது.

மேற்சொல்லப்பட்ட வாதம், பழைய ஒன்று. எனவே நிகராகரிக்கப்பட வேண்டியது. விராஜ் குவார்பாய் மற்றும் பிறர் –எதிர்– குஞ்பிஹாரி லால் கிருஷ்ணசந்திரா, AIR 1971 MP 109இன் முடிவில் கூறப்பட்டதாவது.

''14. இது தொடர்பாக, வாதிடப்பட்டதாவது, வங்கி சார்பாக முன்னிலையாகிற வழக்கறிஞ ரால், குறித்தவகை நிறைவேற்றுதல் ஒப்பந்த வழக்கில் வழக்கிடை மாற்றம் என்னும் கோட்பாடு பொருந்தாது. அத்தகைய வழக்கில், உரிமை மூல பாத்தியதை, விற்பனை ஆவணம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மட்டுமே, செயற் படும். இந்த வாரத்திற்கு நாம் உடன்பட இயல வில்லை. சொத்து எவை தொடர்பாகவும் வழக்கு நடப்பில் உள்ளபோது, அந்த சொத்து உரிமை மாற்றம் ஒரு தரப்பால் செய்யப்படுவது அந்த வழக்கில் தீர்வுக்கு உட்பட்டதே, அந்த சொத்தின் உரிமை மாற்றம், ஒரு தரப்பினரால் செய்யப் படுவது வழக்கின் முடிவுக்கு உட்பட்டதே மற்றும் குறித்தவகை நிறைவேற்றுதல் வழக்கு கட்டாய மாக அசையாச் சொத்து தொடர்பான வழக்கு. இது தொடர்பாக பல கூற்றுகள் இந்திய உயர் நீதிமன்றங்களில் உள்ளன. நாம் சுட்டுவது டத் மஹாராஜ் –எதிர் சுகூர் முகமது AIR 1948 PC P 147. இந்த வழக்கில் இந்தக் கோட்பாடு குறித்த வகை நிறைவேற்றுதல் வழக்கில் செயற் படுத்தப்பட்டு சமரச உடன்பாடு தீர்ப்பாணை யாக்கப்பட்டது.''

இந்தக் கேள்வி தொடர்பா முல்லானி (13ஆம் பதிப்பு)புத்தகத்தில் பின்வரும் முறை கூறப்பட்டுள்ளது.

''(vi) குறித்தவகை நிறைவேற்றுதல் வழக்கு: வழக்கிடை மாற்ற தீர்ப்பெதிர் செல்லாது என்றும் விதி குறித்தவகை நிறைவேற்றுதல் வழக்கில் ஒப்பந்தங்களில் உ.மா. சட்டத்தின் 52ஆம் பிரிவின்படி அசையாச் சொத்து உரிமை மாற்றத்திற்குப் பொருந்தும். இது 1963 குறித்த வகை உய்திச் சட்டத்தின் பிரிவு 19(ஆ)க்கு உட்படாது. இதில் வகை செய்யப்பட்டிருப்பது மதிப்பிற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்ட வழக்கு எதிராக குறித்தவகை நிறைவேற்றுதல் ஒப்பந்தம் செயற்படுத்தப்பட முடியாது என்பது. அவர் பணத்தை நல்லெண்ணத்தின்படி செலுத்தி யுள்ளார். அதாவது முந்திய ஒப்பந்தம் உள்ளது. அறியாது. பிந்திய உரிமை மாற்றம் செய்பவர், அவர் உரிமை மாற்றம் பெற்றுள்ளபோதும் அதுவும் முதலில் உள்ள ஒப்பந்தத்தை அறியாமல் அவர் உடன்படிக்கைக்கு எதிராக செயற்பட முடியாது. அதாவது வழக்கிடை மாற்ற தீர்ப்பெதிர் செல்லாது என்றும் விதிக்கு எதிராக இது ஒரு பொதுவர் கொள்கையின்பேரில் அமைக்கப்பட்டது.

8. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 52ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டவாறு வழக்கிடை மாற்றம் தீர்ப்பெதிர் செல்லாது என்றும் கோட்பாடு பிந்திய உரிமை மாற்றம் செய்ப வருக்கு எதிராகச் செயற்படும் இது நடப்பில் உள்ள வழக்கிடை மாற்றம் அனைத்திற்கும் எடுத்த எடுப்பில் அதனை விழலானதாக்காது. இது தரப்பினர்களின் உரிமைகளுக்கு உட்பட்ட உரிமை மாற்றங்களில் இருந்து எழுகிற உரிமை களுக்கு உரிமையளிக்கும் அதாவது வழக்கு நடப்பில் உள்ளபோது மற்றும் அந்த

நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படலாகிற பணிப்புரைகளுக்கு உட்பட்டு பிரிவு யோகேஷ் கோயன்கா –எதிர்– கோவிந் 2024 (5) சிடிசி 428 (உச்.நீ.): 2024 (3) MWN (civil) 661 (உச்.நீ.): 2024 (7) (உச்.நீ.) 524. மேலும் இதில் கண்டறியப் பட்டது. சட்டமானது. உருவாக்கப்பட்ட முறையில் பிந்திய உரிமை மாற்றங்களை அது பாதுகாத்து அவர்களது உரித்தங்களை ஏற்கிறது அதனால் வழக்கிடை மாற்றம் தீர்ப்பிடுவதில் செல்லாது. அந்த உரிமை மூல பாத்தியதை எதிர்க்காது. இது வாதியுடன் முடிவுறும்.

9. அமித்குமார் ஷா –எதிர்– பரிதா காடுன் 2005 (4) த.த.வ. 47 (உச்.நீ.); 2005 11 உச்.நீ.வ.403இல் கூறப்பட்டதாவது வழக்கிடை உரிமை மாற்றம் என்பது. பதிவேட்டில் கொண்டு வரப்பட்டு அது உ.வி.தொ.ச.இன் கட்டளை 22இன்படி அல்லது உ.வி.தொ.ச.இன் கட்டளை 1 விதி 10இன்படி பதிவேட்டின் கொண்டு வரப்பட்டது மற்றும் இதில் முன்னிடப்பட்ட விண்ணப்பம் சாதாரணமாக அனுமதிக்கப்பட வேண்டும். ஏனெனில் வழக்கிடை உரிமை மாற்றம் பெறுபவர், எதிர்வாதியிடமிருந்து உரித்தத்தைப் பெற்றவர் ஆவார். இவர் வழக்கில் முக்கியமாக உரித்தம் உடையவர். எதிர்வாதி பின்னர் அதிக அளவில் உரித்தம் கொள்ளாத போது, அவர் உரிய வயையில் வழக்கை எதிர்க்க மாட்டார். அப்போது உரித்தம் பெற்றவர் இடையீட்டாளராக வழக்கில் சேர்ந்து வாக்கை எதிர்க்க உரிமை கொண்டவர் ஆவார். இதில் அவர் வழக்கின் நற்குறிப்புகள் பற்றிய பொருட் பாடுகளைக் கேட்டறிந்துள்ளார். மேற்சொல்லப் பட்ட வழக்கின் முடிவு பின்வருமாறு A. நவாப்ஜான் –எதிர்– வி.என்.சுப்பிரமணியன் 2012 (4) த.த.வ. 206 (உச்.நீ.): 2012 (7) த.த.வ. (உச்.நீ.வ.) 738. இதில் கண்டறியப் பட்டதாவது, கருத்து, முனைப்பு நிலை வழக்கிடை உரிமை மாற்றத்திற்கு வாங்கியவரின் விண்ணப்பம் இடையீட்டாளராக இது சாதாரணமாக அனுமதிக்கப்படும் அல்லது நீக்குப்போக்குடன் கருதுகை செய்யப்படும்.

10. இது தொடர்பான அருகாமையிலான முடிவு ஹெச் அஞ்சனப்பா –எதிர்– ஏ.பிரபாகர் மற்றும் ஹெச் அஞ்சனப்பா –எதிர்– பீனா அந்தோணி, 2025 INSC 121 அதனை உறுதியாக எதிர்க்கவில்லை. அதாவது பிந்திய வாங்குநர் தொடர்பாக. இந்த முடிவு இரண்டு நீதிபதிகள் கொண்ட ஆயத்தால் தீர்மானிக்கப்பட்டு பின் வரும் நெறிமுறைகள் விதிக்கப்பட்டன.

“58 மேற்சொல்லப்பட்ட தீர்ப்புகளிலிருந்து பொதுவான கருத்தாவது, தற்போதைய நிலை பற்றி விரிவாக பின்வருபவன அறியப்படுகிறது.

(i) முதலில் உரிமை மாற்றம் பெற்றவர் வழக்கிடை உரிமை மாற்றம் என்பதில் அதன் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் என்பன கண்டறியப்பட வேண்டியன அவசியமான பொருண்மைகளின்பேரில், நீதிமன்றமானது, அத்தகைய தரப்பினரை பதிவேட்டின்பேரில் செயற்படுத்தும் உ.வி.தொ.ச.இன் கட்டளை 1 பிரிவு 10 அல்லது உ.வி.தொ.ச.இன் கட்டளை 22 பிரிவு 10இன்படி ஒரு பொது நெறி முறையாகும்.

(ii) இரண்டாவதாக வழக்கிடை உரிமை மாற்றம் என்பதில் உரிமை மாற்றம் பெறுபவர். உரிமை என்னும் பொருட்பாட்டின் பதிவேட்டின் அடிப்படையில் உரிமை பெற முடியாது.

(iii) மூன்றாவதாக இதில் முழு விதி என்பதல்ல அத்தகைய வழக்கினை உரிமை மாற்றம் பெறுபவர் நீதிமன்ற அனுமதியுடன் அனைத்து வழக்குகளிலும், பதிவேட்டின்பேரில் வர அனுமதிக்கப்படுவர். அதாவது தரப்பினராக.

(iv) நான்காவதாக : வழக்கிடை உரிமை மாற்றம் பெற்றவர் இடையீட்டாளராக சேர்க்கப்பட அந்த வழக்கின் நன்மை அறியப்பட வேண்டியது மற்றும் பதிவேட்டில் கிடைக்கத்தக்க தகவல் பொறுத்து செயற்படும்.

(v) ஐந்தாவதாக வழக்கிடை உரிமை மாற்றம் பெறுபவர் பதிவேட்டில் கொண்டு வரப்பட அனுமதி கோராதபோது, இது அவருடைய செயற்பாடாக அமையும் மற்றும் இந்த வழக்கு வாதியால் பதிவேட்டின்பேரில் ஒழுங்கற்ற முறையில் நடத்தப்படலாம்.

(vi) ஆறாவதாக வழக்கிடை உரிமை மாற்றம் பெறுபவர் பதிவேட்டின்படி செயற்படாதபோது அவர் பற்றிய புரிதல் அதாவது (வழக்கிடை உரிமை மாற்றம்) தீர்ப்பினால் கட்டுப்பட்டவர் ஆகார். இதிலிருந்து அது எழுவதல்ல. இதன்

விளைவாக அவர் வழக்கின் குழுவினால் கட்டுப்பட்டவரே இவர் சார்பாற்றம் செய்யப்படாது இருந்தபோதிலும்.

(vii) ஏழாவதாக வழக்கு நடவடிக்கை சொத்துரிமை செய்யப்படும் விற்பனை நடவடிக்கை சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 52இன் வகைமுறைகளின் மூலம் பாதிக்கப்படும் மற்றும்

(viii) எட்டாவதாக வழக்கிடை உரிமை மாற்றத்தால் குறிப்பிடப்பட்டவர் உரித்தம் கொண்டவர். உ.வி.தொ.ச.இன் கட்டளை 22 விதி 10இன்படி நீதிமன்றத்தின் அனுமதியை கோருவார். அவர் தாமே பதிவேட்டில் அதை கொண்டு வரவும், வழக்கின் தரப்பினர்களின்படி பதிவு செய்ய முயற்சிப்பார்."

11. கையில் உள்ள வழக்கில், மேல்முறையீட்டாளர், தாவாவில் உள்ள சொத்தை வாங்கியுள்ளார். எதிர்வாதியிடமிருந்து 16.10.2025 அன்று விரிவு ஆவண எண் 2825, 2829/2015 குன்னூர் துணைப் பதிவாளர் கோப்பில் உள்ளது. அவர் அதன் உடைமையையும் எடுத்துள்ளார். அவர் பிரமாண உறுதியுரையில் அவரது இடையீட்டு மனுவில் இது தொடர்பாக கூறியுள்ளார். அவர் வழக்கு நடப்பில் உள்ளது பற்றி, அறிந்துள்ளார். அதுவும் பிப்ரவரி 2019 கடைசி வாரத்தில் மேல்முறையீட்டாளரான வாங்குபவர் அந்த வழக்கை எதிர்க்கத் தவறியுள்ளார். இது அறியப்படுவதாவது 27.2.2019இல் தரப்பினரின்றி தம்மை முன்னிலைப்படுத்த அவர் அனுமதித்துள்ளார். அவர், அந்த தீர்ப்பாணையை எதிர்க்கவுமில்லை. அவர் இதுபற்றி சும்மா இருந்துள்ளார். இவர் அந்த போட்டியை கைவிட்டுள்ளார். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 52ஆம் பிரிவின்படி கூறப்பட்டவாறு வழக்கிடைச் சொத்துரிமை மாற்றம் என்பது பொருந்தாது. வழக்கின் நடவடிக்கைகள் அறுதியானவை. அதாவது அவரது எதிர்ப்பை விட்டு விடுவதன் மூலம் எதிர்வாதி வாதியும் சேர்ந்து வஞ்சகக் கூட்டு மூலம் செயற்பட்டுள்ளார். ஆனால் நீதிமுறை தீர்ப்புகளின்படி தரப்பினரின்றி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கும் வழக்கிடை சொத்து உரிமை மாற்றம் பொருந்தும் என்பது.

12. மேல்முறையீட்டாளர் கோருவது, அவர் நல்லெண்ணத்தில் நல்ல மறுபயனுக்காக இதை வாங்கியுள்ளதாக கோருகிறார். எதிர்வாதிக்கும், மேல்முறையீட்டாளருக்கும் இடையேயான நடவடிக்கை உரியவாறு பதிவு செய்யப்பட்டது. அவர் இப்போது, தாவாவில் உள்ள சொத்தினை உடைமையில் கொண்டுள்ளார். அவரது உரித்தம் பொருட்டானதாகவும் உள்ளது. இந்த வழக்கின் முடிபு அவரது உரித்தத்தினை பாதிக்கும் என்பதால், கீழ்நிலை நீதிமன்றம் இந்த விண்ணப்பத்தினை அனுமதித்திருக்க வேண்டியது. விசாரணை நீதிமன்றம் இடையீட்டு விண்ணப்பத்தினைத் தள்ளுபடி செய்து உடன் வழக்கில் தீர்ப்பாணை பிறப்பித்து தவறு செய்துள்ளது. இது நியாயமான காலத்தை சீராய்வு செய்வதற்கு அளிக்கவில்லை. இதில் பொருட்பாட்டின்படியான அடிப்படை எதுவும் இல்லை. அதாவது இந்த நடவடிக்கை நல்லெண்ணத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்னும் முடிவுக்கு வருவதற்கான நிலை இல்லை. இதனை மேற்கொள்பவருக்கு வழக்கின் உடன்படிக்கை பற்றிய அறிவிப்பு பெற்றெடுத்தபோதிலும், அவர் சூழ்நிலை நீதிமன்றத்தினை தனது விண்ணப்பத்தை அனுமதிக்க கோரும் உரிமை பெற்றுள்ளார். யோகேஷ் கோயன்கா –எதிர்– கோவிந் 2024, த.த.வ. 428 (உச்.நீ.), 2024 (3) MWN (உரிமையியல்) 661 (உச்.நீ.); 2024 (7) உச்.நீ.வ. 24. இதில் கூறப்பட்டதாவது அறிக்கையின் வழக்கிடை உரிமை மாற்றம் இந்த வழக்கின் தன்மையில், பொருட்டான தரப்பினரின் உரிமைகள் உள்ளடங்கியுள்ளது. வாதிக்கு தொகையளித்து சரியீடு செய்திருக்க வேண்டியது. ஏனெனில், இடையீட்டு விண்ணப்பமானது வழக்கின் தீர்ப்பு தேதி குறிப்பிடப்பட்ட பின்னர் வழக்கு முன்னிடப்பட்டுள்ளது என்பதாம். நாம் கொண்டுள்ள கருத்தாவது கீழ்நிலை நீதிமன்றம். இந்த பொருட்பாடு நாம் தொடர்பாக தன் உளத்தேர்வினை பயன்படுத்த தவறியுள்ளது. வாதியும் விற்றவரும் கூட்டு சதி எதனையும் செய்யக் கூடிய தேர்வு இல்லை. எனவே நாம் கூறுவது மேல்முறையீட்டாளர் வழக்கில் இடையீட்டாளராக எதிர்வாதியாக உரிமை பெற்றுள்ளார் என்பது.

13. இடையீட்டு மனுவினை அதாவது மேல் முறையீட்டாளரின் மனுவை தள்ளுபடி செய்யும் ஆணை ஏற்கத்தக்கதல்ல. அவரும் சீராய்வு மனு எதனையும் முன்னிடவில்லை. மேல்முறை யீட்டாளர்/சொல்லப்பட்ட ஆணை யின் சரியான தன்மை குறித்து எதிர்க்க உரிமை யுடையவர் ஆவார் மற்றும் இதனை ஆட்சேபித்து மேல் முறையீட்டு குறிப்பாணையால் எதிர்ப்பிற்கான காரணத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

14. வாதிக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் வாதிடுவதாவது தீர்ப்பு ஒரு முறை வழக்கில் வெளியிட தேதி குறிக்கப்பட்ட பின்னர், நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவது என்பது எழாது. நாம் இந்த வாதத்தினை தள்ளுபடி செய்கிறோம். விண்ணப்பமானது உ.வி.தொ.ச.இன் கட்டளை 1 விதி 10(2)இன்படி முன்னிடப்பட்டது மற்றும் இந்த சொல்லப்பட்ட வகைமுறையில் நடவடிக்கைகள் எந்தக் கட்டத்திலும் என்றும் சொற்றொடர் காணப் படுவது. இதில் பொருள்படுவதாவது எதிர்ப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர் இதன்படி கட்டளை 1இன் விதி 10(2)இன்படியான அதிகாரம் செயற்படுத்தப்படலாம். எனவே இடை.வி. மேல்முறையீட்டாளரால் முன்னிடப் பட்டது. அதாவது நடவடிக்கையினை மீண்டும் தொடங்குவதற்கானது. செல்லத்தக்கதே என்பது.

15. அமித் குமார் ஷா –எதிர்– பரிதா கட்டூன் 2005 (4) த.த.வ. 47 (உச்.நீ.), 2005 (11) உச்.நீ.வ. 403. இதில் கண்டறியப்பட்டதாவது உ.வி.தொ.ச.இன் கட்டளை 1 விதி 10இன் நோக்கம் நேர்மையான நல்லெண்ணத்தில் செயற்படுகிற கோரிக்கையாளர்களை காப்பாற்று வதே. நடவடிக்கையின் அந்தக் கட்டத்திலும், நீதிமன்றமானது, தரப்பினை சேர்ப்பதற்கான அதிகாரத்தை செயற்படுத்த முடியும். அந்த வழக்கில், பொருட்டான மனு. உ.வி.தொ.ச.இன் கட்டளை 22இன் விதி 10இன் படியானது. இரண்டாவது மேல்முறையீட்டின் நிலையில் முன்னிடப்பட்டது மற்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளதாவது அவர்கள் தரப்பினர்களாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது.

16. நாம் இடையீட்டு மனுவினைத் தள்ளுபடி செய்யும் ஆணை சரியல்ல என்னும் முடிவுக்கு வந்த பின்னர், இதன் விளைவு பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை கட்டாயமாகத் தள்ளுபடி செய்யப்படுகிறது மற்றும் இந்த பொருட்பாடு விசாரணை நீதிமன்றத்தின் முன்பு கொண்டு வரப்படும்.

17. பிரச்சினை எண் 3இனை நாம் கருதுகை செய்வோம். தற்போது இடையீட்டாளரான எதிர்வாதிக்கான எதிர்வாதங்களாவன வாதிக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர், நமது கவனத்தை இந்த தீர்ப்பின் முடிவு தொடர்பாக ஈர்த்துள்ளார். தன்னாசிங் –எதிர்– பல்ஜுந்தர் கார் 1997 (1) த.த.வ. 767: (உச்.நீ.) 1997 (5) உச்.நீ.வ. 476. மற்றும் குறிப்பிட்டு கூறப் பட்டுள்ளதாவது அதாவது பிந்திய வாங்குபவர், சான்று அளிக்க முடியாது. தீர்ப்பானது தெளிவாக பொருண்மைகள் மாறுபாட்டை கூறுகிறது. உச்சநீதிமன்றம், அதன் முடிவில், ஜக்ராஜ்சிங் –எதிர்– லேப் சிங், 1995 (2) உச்.நீ.வ. 31 கூறியதாவது, பிந்திய வாங்குநர், வாதியில் ஆயத்தமான நிலை பற்றியோ அல்லது அவர் விருப்பம் பற்றியோ மூன்று நீதிபதிகள் கொண்ட பிந்திய ஆயம் அதன் முடிபில் (ராம் ஆவாத் –எதிர்– அச்சாபார் துபே, 2000 (2) உச்.நீ.வ. 428) இதனை மீதூர்ந்து கூறியதாவது எதிர்வாதி எவரும், வாதிட்டு நிரூபிக்க வேண்டியதாவது பிரிவு 16(இ)ன் கட்டாயத் தேவை. நிறைவேற்றப் படவில்லை என்பது மற்றும் இந்த நீதிமன்ற மானது, தீர்மானிக்கும் இது இணங்கப் பட்டுள்ளதா இல்லையா என்பது பற்றி மற்றும் அதன் முடிவினை சார்ந்த வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிப்பது அல்லது ஏற்க மறுப்பது நடைபெறும். ராம் அவாத் முடிவு மூன்று நீதிபதிகள் ஆயத்தால் பின்பற்றப்பட்டது. உச்சநீதிமன்றம் கருப்பு கொட் வரலெஷ்மி –எதிர்– வியூதாகி ரி வெங்கடராவ் 2021 (2) த.த.வ. 596 (உச்.நீ.); 2021 (2) MWN (உரிமையியல்) 455 (உச்.நீ.); 2021 உச்.நீ.வ. உச்.நீ. 365,

18.இதில் வாதிட்டப்பட்டதாவது இடையீட்டாளர் ஒருவர் பற்றிய குறிப்பு மேல்முறையீட்டின் நற்குறிப்பின்பேரில் கேட்கப்பட வேண்டிய தில்லை. சென்னை உயர்நீதிமன்ற முழு நீதியர்கள் அதன் முடிவில் போளி செ ரயா வீரரராகவ ரெட்டி சொலா அப்பா ரெட்டி 1919 உச்.நீ.வ. வலைதளம் சென்.80, கூறப்பட்ட

தாவது இந்த ஆணை பராதீனம் செய்தவரால் பெறப்பட்டது. என்பது அர்த்தமற்றதாகி விடும். ஒருமுறை அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு, வாங்குபவரை இதில் அனுமதித்ததில், பூசல் பற்றிய நுதல் பொருள் அதாவது அவர் உரித்தம் கொண்டுள்ளது. அவர் கேட்டறியப்படாது தீர்மானிக்கப்படுதல் ஆகாது. அது ஓர் உரிமை அதாவது அந்த வழக்கிடுபவருக்குள்ளது அதாவது அவர் வழக்கில் ஒரு தரப்பினராக உள்ளதால், (சேஷகிரி ஐயர், நீதிபதி). அவர் எந்த ஆணைகளுக்குக் கட்டுப்பட்டவர். இவர் உரிமை மாற்றம் பெறுபவர்களுக்கு கிடைக்காததை எழுப்ப முடியாது. ஒரு வாங்குபவர் சேர்க்கப் படும்போது, அவர் வழக்கில் தரப்பினருக்குரிய அனைத்து உரிமைகளையும் பெறுவார். அவரை ஒரு தரப்பாக அதுவும், முதன்மை தரப்பினர் களின் அனைத்து செயல்களுக்கும் கட்டுப்பட்ட வராக குறைக்க முடியாது. இவரது உரிமை மாற்றம் பற்றி வழக்கு நடப்பில் உள்ளது. (சி.வி. குமாரசுவாமி சாஸ்திரி, நீதிபதி).

19. நாம் தெளிவுபடுத்த உள்ளதாவது விசாரணை நீதிமன்றத்தின் முன்பு எவ்வாறு மேலுமான நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டும் என்பது. மேல்முறையீட்டாளரான விற்றவர் ஒரே எதிர்வாதி. அவர் தரப்பினர் இன்றியுள்ளார். அவர் தொடர்ந்தும் அவ்வாறே இருப்பார். மேல்முறையீட்டாளர் இதில் இரண்டாவது எதிர்வாதியாக நுழைவார். இதில் விற்றவர் இயற்கெனவே எழுத்து மூல விவர உரையை முன்னிட்டு வாதியின் நிலை பற்றி அவரது விருப்பம் பற்றி கேள்வி கேட்டுள்ளார். இதனால் இரண்டாம் எதிர்வாதியாக அவரது எழுத்து மூல விவர உரையை முன்னிட வேண்டிய தேவை யில்லை. கூடுதல் பிரச்சினைகள் பற்றி வனையத் தேவையில்லை. வாதி குறுக்கு விசாரணைக்காக மீண்டும் அழைக்கப்படுவார். அதாவது இடையீட்டாளரான எதிர்வாதியால், மேல்முறையீட்டாளர் சாதாரண சாட்சியை அவரது விற்பனை ஆவண நோக்கத்திற்காக குறியீடு செய்வார். வழக்கு வாதத்திற்கு கொண்டு வரப்படும். இடையீட்டாள ரான எதிர்வாதி அனைத்து கிடைக்கத்தக்க வாதங் களை அதாவது விற்றவர் தொடர்பாக முன்னிடுவார். விசாரணை நீதிமன்றம் அந்த வழக்கில் நடவடிக்கைகளை சட்டத்திற்கிணங்க அதன் நற்குறிப்புகளின் பேரில் ஏற்படும். இது ஆகஸ்டு 31, 2025 அன்று அல்லது அதற்கு முன்னர் நடைபெறும்.

20. அந்த வழக்கின் குறிப்புகளின்படி விசாரணை நீதிமன்றம், குறித்தவகை நிறைவேற்றுகை பற்றிய தீர்ப்பாணையப் பிறப்பிக்கலாமா அல்லது பிறப்பிக்காது இருக்கலாமா என்பது பற்றி நீதிமன்றம் முடிவு செய்யும். அது பற்றிய பொருட்பாடுகளின்பேரில் இது பற்றி நாம் அறிய முற்படவில்லை. இந்த நேர்வில் விசாரணை நீதிமன்றம் குறித்தவகை நிறைவேற்றுதலை மறுக்கும் நேர்வில் முன் பணத் தொகையை வட்டியுடன் திருப்பியளிக்க பணிப்புரை வழங்கும். இது பற்றி கேள்வி எழும். இதில் அவர் மீது கடப்பாட்டை ஏற்படுத்தும் என்றும் கேள்வி. மேல்முறையீட்டாளர், அவரது வழக்கறிஞர் மூலம், கூறும் உறுதிமொழி அவர் எதிர்வாதியின்/விற்பவரின் உரிமைகளினை ஏற்பதன் காரணமாக, அவர் தீர்ப்பாணை எதற்கும் இணங்கி செயற்படுவார் என்பது, அதாவது விசாரணை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணை எதன்படியும் செயற்படுவோம். வாதி/எதிர்வழக்கீட்டாளர் எஞ்சிய விற்பனை மறுபயனை வைப்பீடு செய்துள்ளார். கீழ்நிலை நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட பணிப்புரைகளைப் பின்பற்றி விசாரணை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை இப்போது தள்ளுபடி செய்யப்பட்டு உள்ளதால், எதிர்வழக்கீட்டாளர் சொல்லப்பட்ட தொகையை பெற அனுமதிக்கப்பட்டுள்ளார். அதாவது வழக்கில் அவரது வாதங்களுக்குப் பாதகமின்றி.

21. 24.7.2019 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மு.வ.எண் 26/2013இல் பிறப்பிக்கப்பட்டது. இது முதன்மை மாவட்ட நீதிமன்ற கோப்பில் உள்ளது. விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர். இவை தள்ளுபடி செய்யப்பட்டு பொருட்பாடானது மீண்டும் விசாரணை நீதிமன்றத்திற்கு திருப்பியனுப்பப் படுகிறது. தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# தலாக் அறிவிப்பால் மட்டுமே பராமரிப்பு கடமைகள் நீங்காது

[X v. Y, 2024 SCC Online J&K 512, 04.07.2024 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது]

**- ILI NEWSLETTER** dt.July-Sep 2024

கணவன் ஏற்கெனவே தனது மனைவியை விவாகரத்து செய்துவிட்டதாகக் கூறி, குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC) பிரிவு 488-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பராமரிப்புக் கோரிக்கையை இரத்து செய்ய முடியுமா என்று நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டிய இந்த வழக்கில், நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:

பராமரிப்பு தொடர்பான கடமைகள் உட்பட திருமண ஒப்பந்தத்தின் கீழ் உள்ள கடமைகளில் இருந்து ஒரு கணவன் விடுபட வேண்டு மானால், அவர் தலாக்கின் கூறுகளைக் கட்டாயம் நிரூபிக்க வேண்டும். வெறும் மூன்று முறை 'தலாக்' என்று உச்சரிப்பதோ அல்லது விவாகரத்து பத்திரத்தை நிறைவேற்று வதோ போதுமானதல்ல. இத்தகைய அனைத்து வழக்குகளிலும், நீதிமன்றம் கணவனால் முன்னிறுத்தப்படும் வழக்கை தீவிரமாகப் பரிசீலித்து, ஆதாரத்தை கடுமையாக வலியு றுத்துவதென முடிவு செய்யப்பட்டது. கணவன் தலாக்கின் கூறுகளை நிரூபித்த பின்னரே, அந்தத் தலாக் செயல்பாட்டுக்கு வந்து, தரப்பினர்கள் இடையிலான திருமணம் கலைக்கப் பட்டு, அதன் மூலம் கணவன் திருமண ஒப்பந்தத்தின் கீழ் உள்ள தனது கடமைகளில் இருந்து விடுபடத் தகுதியுடையவர் ஆவார்.

**பின்னணி மற்றும் வாதங்கள்:**

மனைவி (எதிர்மனுதாரர்) 2009ஆம் ஆண்டில் நீதித்துறை நடுவர் முன் குற்றவியல் நடைமுறை சட்டத் தொகுப்பு பிரிவு 488-ன் கீழ் பராமரிப்பு கோரி விண்ணப்பித்தார். நடுவர் மன்றம், கணவன்-மனைவி என்ற உறவு இல்லை என்று கூறி, 2018 பிப்ரவரியில் அந்த விண்ணப்பத்தை தள்ளுபடி செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட மனைவி, சீராய்வு மனு தாக்கல் செய்தார். அதன் விளைவாக, சீராய்வு நீதிமன்றம் நடுவரின் தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து, கணவர் (மனுதாரர்) மாதந்தோறும் ரூ.3000 பராமரிப்பு தொகையை மனைவிக்குச் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது.

சீராய்வு நீதிமன்றத்தின் இந்த உத்தரவால் பாதிக்கப்பட்ட கணவர், இந்த வழக்கை (உடனடி மனுவை) தாக்கல் செய்தார். சீராய்வு நீதிமன்றம், முழு விசாரணை மற்றும் ஆதாரம் பரிசீலனைக்குப் பின்னரே மனைவி ஏற்கெனவே விவாகரத்து செய்யப்பட்டார் என்ற நடுவரின் தீர்ப்பை கருத்தில் கொள்ளவில்லை என்று கணவர் வாதிட்டார். மேலும், சமரச முயற்சிகள் மற்றும் விவாகரத்துக்கான நியாயமான காரணம் நிரூபிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். 'தலக்நாமா (Talaknama)' வின் நகலையும் அவர் சமர்ப்பித்தார். அதில் அவர் மூன்று முறை 'தலாக்' என்று உச்சரித்து, மனைவியை விவாக ரத்து செய்து, திருமண பந்தத்திலிருந்து விடுவித்ததாகக் குறிப்பிட்டிருந்தார். இது மனைவிக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

**நீதிமன்றத்தின் மதிப்பீடு:**

பிரச்சினையைப் பரிசீலனை செய்த நீதிமன்றம், இந்த வழக்கில் எழுப்பப்பட்ட விவகாரங்களைத் தெளிவாக விளக்கியுள்ள முகமது நசீம் பட் -எதிர்- பில்கீஸ் அக்தர் வழக்கை நம்பியிருந்தது. விவாகரத்து (தலாக்) செல்லுபடியாக, இரண்டு சாட்சிகள் முன்னிலை யில் உச்சரிப்பது மட்டும் போதாது என்று முகமது நசீம் பட் வழக்கில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதை நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. அந்தச் சாட்சிகள் நீதியின்பால் ஈர்க்கப்பட்டவர் களாக இருக்க வேண்டும்; அதாவது, விவாகரத்தின் விளிம்பில் இருக்கும் தம்பதியரை அமைதிப்படுத்தி, சச்சரவுகளைத் தீர்த்து, அமைதி யான திருமண வாழ்க்கையை வாழச் செய்யும் படி சாட்சிகள் தங்கள் நீதியுணர்வால் கேட்டுக் கொள்ள வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

பராமரிப்பு உட்பட திருமண ஒப்பந்தத்தின் கடமைகளிலிருந்து ஒரு கணவன் விடுபட வேண்டுமானால், அவர் கட்டாயமாகப் பின்வரு வனவற்றை வாதிட்டு நிரூபிக்க வேண்டும் என்று

நீதிமன்றம் மேலும் கூறியது: கணவன் மற்றும் மனைவியின் பிரதிநிதிகள் தரப்பினர்களுக்கு இடையேயான சச்சரவுகள் மற்றும் கருத்து வேறுபாடுகளில் தலையிட்டுத் தீர்த்து வைக்க முயற்சி செய்யப்பட்டது, மேலும் அத்தகைய முயற்சி கணவருக்கு சாட்டத்தக்கதாக இல்லாத காரணங்களால் பலனளிக்கவில்லை. அவர் தனது மனைவிக்கு விவாகரத்து அறிவிக்க செல்லுபடியாகும் காரணத்தையும், உண்மையான நியாயத்தையும் கொண்டிருந்தார். நீதியின் பால் ஈர்க்கப்பட்ட இரண்டு சாட்சிகள் முன்னிலையில் தலாக் அறிவிக்கப்பட்டது. இந்தத் துஹ்ர் (Tuhr – இரண்டு மாதவிடாய் சுழற்சிகளுக்கு இடையில்) காலத்தில் மனைவியுடன் உடலுறவு கொள்ளாமல், துஹ்ர் காலத்தில் தலாக் அறிவிக்கப்பட்டது.

‘கணவர் மேற்கூறிய அனைத்து கூறுகளையும் வாதிட்டு நிரூபித்த பின்னரே, தலாக் செயல்பட்டு, கட்சிகளுக்கு இடையிலான திருமணம் கலைக்கப்பட்டு, திருமண ஒப்பந்தத்தின் கீழ் உள்ள கடமைகளில் இருந்து கணவர் விடுபட இயலும்.’ இந்த வழக்கில், கணவர் தாக்கல் செய்த தலக்நாமா, மூன்று முறை ‘தலாக்’ என்று உச்சரித்து திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததைக் காட்டுவதை நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. கணவர் விவாகரத்து செய்ய விரும்புவதைத் தெரிவிப்பதற்காக மனைவியின் வீட்டிற்குச் சென்ற 2 நபர்களின் வாக்கு மூலங்களையும் நீதிமன்றம் கவனத்தில் கொண்டது. ஆனால் அவர் அந்தத் திட்டத்தை ஏற்கவில்லை. மேலும் உரையாடல் வெற்றி பெறவில்லை.

சமரசம் செய்வதற்கான முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை என்றும், கணவர் தரப்பில் இருந்து சமரசத்தை நிலைநாட்டுவதற்கு போதுமான ஆதாரம் இல்லை என்றும் கண்டறியப் பட்டது. எனவே, சீராய்வு நீதிமன்றம் கட்சிகளின் பரஸ்பர வாதங்களைக் கருத்தில் கொண்டு, நடுவரின் 2018 பிப்ரவரி உத்தரவை ரத்து செய்து, கணவர் மாதந்தோறும் ரூ.3000 தொகையை மனைவிக்கு பராமரிப்பாகச் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது சரியே என்று நீதிமன்றம் கண்டறிந்தது.

– மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை

## உச்சநீதிமன்றத்தில் அரசமைப்பு சட்ட கொண்டாட்டம்: வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்பு

உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற அரசமைப்புச் சட்ட நாள் கொண்டாட்டத்தில் பல்வேறு நாடுகளின் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிகள், மூத்த நீதிபதிகள் 26.11.2025 பங்கேற்றனர். அரிய மற்றும் வரலாற்றுத் தருணமாக அவர்கள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வில் சேர்ந்து, வழக்கு விசாரணைகளைப் பார்வையிட்டனர். தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜயமால்ய பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வில் பூடான் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி லியோன்போ நோர்பு ஷெரிங், கென்யா உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி மார்த்தா கூமே, மோரீஷஸ் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ரெஹானா பீபி, இலங்கை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ப்ரீத்தி பத்மன் சூரசேன், நேபாள உச்சநீதிமன்ற நீதிபதி சப்னா பிரதான், மலேசிய உச்சநீதிமன்ற நீதிபதி தன் ஸ்ரீ தாதுக் நளினி பத்மநாபன், இலங்கை உச்சநீதிமன்ற நீதிபதிகள் துரைராஜா பி.சி., ஏ.ஹெச்.எம்.டி.நவாஸ் ஆகியோர் பங்கேற்றனர். அவர்களை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் வரவேற்றார். உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற அரசமைப்புச் சட்ட நாள் கொண்டாட்ட நிகழ்ச்சிக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தலைமையேற்ற நிலையில், அந்த நிகழ்ச்சிக்கு மேலும் பெருமை சேர்க்க வெளிநாட்டு நீதிபதிகள் வந்ததாக சூர்யகாந்த் கூறினார். அத்துடன் இந்திய நீதித்துறை குறித்த தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு வெளிநாட்டு நீதிபதிகளுக்கு சூர்யகாந்த் அழைப்பு விடுத்தார்.

இதைத் தொடர்ந்து மோரீஷஸ் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியான ரெஹானா பீபி பேசுகையில், இந்திய சட்டத்தின் கோட்பாடு, தத்துவத்தால் மோரீஷஸ் வழி நடத்தப்படுகிறது. சட்டத்தைப் படித்து புரிந்து கொள்வதிலும், அதற்கு தெளிவுரை வழங்குவதிலும் மோரீஷஸ் நீதித்துறையை இந்திய நீதிமன்றங்கள் வழி நடத்துகின்றன என்றார்.

கென்யா தலைமை நீதிபதி மார்த்தா இந்திய சட்ட கோட்பாடு மற்றும் தத்துவத்தையும் உச்ச நீதிமன்றத்தை யும் வியந்து பார்த்து மதிப்பளிக்கிறது. பூடான் தலைமை நீதிபதி லியோன்போ இந்திய சட்டத் துறையில் மிகவும் திறமை வாய்ந்த அறிவுகூர்மை கொண்ட நபர்கள் உள்ளனர். நான் தில்லி பல்கலைக் கழகத்தின் சிஎல்சி சட்ட கல்லூரியில் படித்த போது, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 91 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தற்போது அந்தத் திருத்தங்களின் எண்ணிக்கை 106ஆக அதிகரித்து உள்ளது. ஆனால் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பில் எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

இலங்கை தலைமை நீதிபதி ப்ரீத்தி இந்தியா மற்றும் இலங்கையில் ஒரே பாரம்பரியமும் சட்ட அமைப்பு முறையும் உள்ளன. இந்திய உச்சநீதிமன்ற வழக்கு விசாரணையைப் பார்த்து பலவற்றை கற்க முடிந்தது.

நன்றி: தினமணி 27.11.2025

# ஸ்ரீதனச் சொத்து: உரிமையாளரின் வெளிப்படையான அங்கீகாரம் இல்லாமல் வேறு யாரும் மீட்கக் கோர முடியாது

2024 SCC Online SC 2285, ஆகஸ்ட் 29, 2024 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது

முலகலா மல்லேஸ்வர ராவ் –எதிர்– தெலுங்கானா மாநிலம்

**- ILI NEWSLETTER** dt.July-Sep 2024

இந்த முக்கியமான தீர்ப்பில், திருமணத்தின் போது ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட்ட ஸ்ரீதனச் சொத்து பிரத்தியேகமாக அவருக்கே சொந்த மானது என்ற கொள்கையை உச்ச நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியது. மேலும், அவரது தந்தை உட்பட வேறு எந்த மூன்றாம் தரப்பினருக்கும், அவரது வெளிப்படையான அங்கீகாரம் இல்லாமல், அச்சொத்தை மீட்க முயற்சிக்கும் உரிமை இல்லை என்றும் தெளிவுபடுத்தியது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு (மனுதாரர்கள்), அதாவது புகார்தாரரின் மகளின் முன்னாள் மாமியாருக்கு எதிராகத் தொடங்கப்பட்ட கிரிமினல் நடவடிக்கைகளை ரத்து செய்யத் தெலுங்கானா உயர்நீதிமன்றம் மறுத்ததை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறை யீட்டை இந்தத் தீர்ப்பு மையமாகக் கொண்டது. ஸ்ரீதனம் என்பது பெண்ணின் தனிச் சொத்து என்றும், பெண்ணால் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டாலன்றி வேறு யாரும் அதன் மீது அதிகாரம் செலுத்த முடியாது என்றும் வலியுறுத்தி, உச்ச நீதிமன்றம் இந்த நடவடிக்கைகளை ரத்து செய்தது.

புகார்தாரர் (பெண்ணின் தந்தை) தனது மகளின் முன்னாள் மாமியார், 1999இல் அவரது திருமணத்தின்போது ஸ்ரீதனமாக வழங்கப்பட்ட தங்க நகைகள் மற்றும் பிற பொருட்களை நேர்மையற்ற முறையில் அபகரித்து விட்டதாகக் குற்றம் சாட்டி புகார் அளித்தார். அந்தத் திருமணம் 2016 இல் ஒரு பிரிப்பு ஒப்பந்தத்தின் மூலம் பரஸ்பர சம்மதத்துடன் கலைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் அனைத்து நிதி மற்றும் பொருள் சார்ந்த உரிமை கோரல் களையும் முழுமையாகத் தீர்த்து வைத்தது. பெண் பின்னர் 2018 இல் மறுமணம் செய்து கொண்டார். இந்த முன்னேற்றங்கள் இருந்த போதிலும், புகார்தாரர் (தந்தை) 2021 ஆம் ஆண்டில், இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 406 மற்றும் வரதட்சணைத் தடைச் சட்டம் பிரிவு 6–இன் கீழ், முன்னாள் மாமியார் ஸ்ரீதனத்தைத் திருப்பித் தரத் தவறியதாகக் குற்றம் சாட்டி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். மனுதாரர்கள் (முன்னாள் மாமியார் தரப்பு) இந்தக் குற்றச் சாட்டுகளை மறுத்து, முதல் தகவல் அறிக்கை ஆதாரமற்றது மற்றும் துன்புறுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டது என்று வாதிட்டனர்.

உச்ச நீதிமன்றம் நிகழ்வுகளின் கால வரிசையை கவனமாக ஆய்வு செய்தது:

1. திருமணம் முடிந்து கிட்டத்தட்ட 20 ஆண்டு களுக்குப் பிறகும்,

2. விவாகரத்து முடிந்து 5 ஆண்டுகளுக்குப் பிறகும்,

3. மகளின் மறுமணம் முடிந்து 3 ஆண்டு களுக்குப் பிறகும் புகார்தாரர் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளார்.

மிக முக்கியமாக, ஸ்ரீதனத்தை மீட்பதில் தனது சார்பில் செயல்பட மகள் தனது தந்தைக்கு அங்கீகாரம் அளிக்கவில்லை. பவர் ஆஃப் அட்டர்னி சட்டம், 1882, பிரிவு 5–இன் கீழ், ஒரு பெண் விரும்பினால் அத்தகைய அதிகாரத்தை வழங்கலாம் என்றும், ஆனால் இந்த வழக்கில் அத்தகைய அதிகாரப் பிரதிநிதித்துவம் எதுவும் இல்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. அங்கீகாரம் இல்லாததால் புகார்தாரரின் வழக்குத் தாக்கல் செய்யும் சட்ட உரிமை செல்லாது என நிராகரிக்கப்பட்டது.

குற்றச்சாட்டுகளை நிரூபிக்க போதுமான ஆதாரம் இல்லை என்றும் நீதிமன்றம் வலியுறுத்தியது. மனுதாரர்கள் ஸ்ரீதனத்தைத் தவறாகப் பயன்படுத்தினார்கள் அல்லது

தங்களுக்காக மாற்றினார்கள் என்று நிரூபிக்க எந்த ஆதாரமும் சமர்ப்பிக்கப்படவில்லை. விவாகரத்தின் போது பிரிப்பு ஒப்பந்தத்தின் மூலம் திருமணத் தகராறுகள் தீர்க்கப்பட்ட பின்னணியில், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கணிசமான தாமதத்திற்கான காரணத்தைப் புகார்தாரரின் மு.த.அ குறிப்பிடாதது ஒரு முக்கியமான காரணி என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. இந்த நடவடிக்கைகள் உண்மையான குறைகளை நிவர்த்தி செய்வதை விட, பழிவாங்கும் நோக்கத்தால் தூண்டப்பட்டதாகத் தோன்றியது.

உச்சநீதிமன்றம் தனது முந்தைய தீர்ப்பு களை (ராஷ்மி குமார் –எ– மகேஷ் குமார் பாதா (1997) மற்றும் மாலாகார் –எ– உத்தர காண்ட் மாநில அரசு (2024) உட்பட) சுட்டிக் காட்டி, ஸ்ரீதனம் என்பது பெண்ணின் முழுமை யான சொத்து என்பதை மீண்டும் உறுதிப் படுத்தியது. இந்த உரிமை திருமண முறிவு அல்லது பிற குடும்பத் தகராறுகளால் பாதிக்கப்படாமல் இருக்கும் என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. குற்றவியல் நடவடிக்கைகளின் நோக்கம் உண்மையான தவறுகளை நிவர்த்தி செய்வதே யன்றி, தொல்லை கொடுக்கும் கருவிகளாகவோ அல்லது பழிவாங்கும் நடவடிக்கை யாகவோ செயல்பட அல்ல என்றும் அது மேலும் கருத்துத் தெரிவித்தது.

உச்ச நீதிமன்றம், முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்தது மற்றும் தெலுங்கானா உயர் நீதிமன்றம் குற்றவியல் நடைமுறை சட்டத் தொகுப்பு பிரிவு 482–இன் கீழ் தனது உள்ளார்ந்த அதிகாரங்களைப் பயன்படுத்த மறுத்ததையும் ரத்து செய்தது. இந்த நடவடிக்கைகள் சட்டப்படி நிலைக்க முடியாதவை என்றும், கிரிமினல் சட்ட விதிகளின் தவறான பயன்பாட்டைப் பிரதிபலிப்ப தாகவும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பு, ஸ்ரீதனத்தின் மீதான பெண் களின் பிரத்தியேக உரிமையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது மற்றும் குடும்பத் தகராறுகளைத் தீர்க்கும்போது நீதி மற்றும் சமத்துவக் கொள்கை களைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது.

**– மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## மரண தண்டனை வழக்குக்கு மட்டுமே வாய்மொழி முறையீடு உச்சநீதிமன்ற புதிய தலைமை நீதிபதி கட்டுப்பாடு

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவியேற்ற முதலாவது நாளில் நீதிபதி சூர்ய காந்த் அவசரமாக பட்டியலிடுவதற்கான வழக்குகளை எழுத்துப்பூர்வமாக மட்டுமே வழக்குரைஞர்கள் முறையிட வேண்டும் என்றும், மரண தண்டனை போன்ற அரிதான அவசர வழக்குகளில் மட்டுமே வாய்மொழி முறையீடு ஏற்றுக் கொள்ளப்படும் என்று கட்டுப்பாடு விதிக்கும் புதிய நடைமுறையை 2025 நவம்பர் 24 அன்று வகுத்தார். மேலும் முதலாம் நாளிலேயே இவரது தலைமை யிலான அமர்வு, சுமார் இரண்டு மணி நேரத்தில் 17 வழக்குகளை விசாரித்தது. குடியரசுத் தலைவர் மாளிகையில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக நவம்பர் 24 அன்று காலையில் பதவியேற்ற பிறகு உச்சநீதிமன்றத்துக்கு வந்த அவர் அதன் வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தலைமை நீதிபதி தலைமையிலான முதன்மை அமர்வு விசாரிக்க ஒதுக்கப்பட்டுள்ள பாரம்பரிய நீதிமன்ற அறை எண் 1இல் நீதிபதிகள் ஜாய்மல்யா பாக்சி, அதுல் எஸ். சந்துர்கர் ஆகியோரை அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அவர் தலைமை தாங்கினார். நண்பகல் வேளையில், ஒரு தனியார் நிறுவனத்திற்கு எதிராக ஹிமாச்சலப் பிரதேச அரசு தொடர்ந்த வழக்கில் இந்த அமர்வு தீர்ப்பளித்தது. பிறகு, உச்சநீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கத்தின் தலைவர் விபின் நாயர் புதிய தலைமை நீதிபதியை வரவேற்றுப் பேசினார். மற்றொரு வழக்குரைஞர், ஒரு விவசாயின் மகன் இன்று தலைமை நீதிபதியாகி விட்டார் என்று புகழாராம் சூட்டினார். அவர்களுக்கு புன்னகைத்தபடி நீதிபதி சூர்யகாந்த் நன்றி தெரிவித்தார். பின்னர் வழக்குகளை விசாரிக்க தொடங்கிய தலைமை நீதிபதி சூர்யகாந்த், அசாதாரணமான சூழல்களில் அவசரப் பட்டியலுக்கான வழக்குகளை மட்டுமே வாய்மொழியாக முறையிட வேண்டும். மற்ற அனைத்து முறையீடுகளும் எழுத்துபூர்வமாக முறையிடப்பட வேண்டும் என்று தெளிவுபடுத்தினார். குறிப்பாக, மரண தண்டனை போன்ற அசாதாரண அரிதான விவகாரத்தில் மட்டுமே வாய்மொழி முறையீடு ஏற்கப்படும் என்ற நடைமுறையை வகுப்பதாக நீதிபதி சூர்யகாந்த் கூறினார்.

உச்சநீதிமன்றத்தில் இதேபோன்ற கட்டுப்பாட்டை இதற்கு முன்பு தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா இருந்தபோது விதித்தார். அவர் அவசரமாக பட்டியலிடப் பட வேண்டிய வழக்குகளை வாய்மொழியாக முறை யிடும் நடைமுறையை நிறுத்தி வைத்தார். நீதிபதி கன்னாவுக்குப் பிறகு தலைமை நீதிபதி பதவிக்கு வந்த நீதிபதி பி.ஆர்.கவாய் வாய்மொழி முறையீடுகளை சில வழக்குகளில் அனுமதித்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தலைமை நீதிபதி முன் அவசரமாக பட்டியலிடப்பட வேண்டிய வழக்குகளை மூத்த வழக்குரைஞர்கள் ஆஜராகி வாய்மொழியாக முறை யிடுவது வழக்கமாக இருந்தது. அவ்வாறு செய்வது வரிசைப்படி பட்டியலிடப்பட்ட வழக்குகளின் விசாரணையை தாமதப்படுத்தக் கூடும் என்று ஒரு பிரிவினர் கூறி வந்தத குறிப்பிடத்தக்கது.

**நன்றி: தினமணி 26.11.2025**

# தாயிடமிருந்து தனது சொந்த மைனர் குழந்தையை தந்தை எடுத்துச் சென்றதை கடத்தல் என குற்றம் சாட்ட இயலுமா?

**2024 SCC OnLine Kar 68, 04.07.2024 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது**

**குஷாக்ரா –எதிர்– கர்நாடக மாநிலம்**

**INDIAN LAW INSTITUTE Vol.66:3, (July-Sep.2024)**

கர்நாடக உயர் நீதிமன்றம், பெலகாவியில் உள்ள காடேபஜார் காவல் நிலையத்தில் மனுதாரர் (தந்தை) மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை (FIR) ரத்து செய்யக் கோரிய மனுவை விசாரித்தது. அந்த முதல் தகவல் அறிக்கையில், மனுதாரர் இந்திய தண்டனைச் சட்டம், 1860, பிரிவு 363–ன் கீழ், தனது பிரிந்து வாழும் மனைவியின் வீட்டில் இருந்து அவரது 2 வயது மைனர் மகனை எடுத்துச் சென்றதன் மூலம் கடத்தல் குற்றத்தைச் செய்ததாகக் கூறப்பட்டிருந்தது.

நீதிமன்றம் பாதுகாவலர் மற்றும் சிறுவர்கள் சட்டம், 1890 மற்றும் இந்து மைனர் மற்றும் பாதுகாவலர் சட்டம், 1956 ஆகியவற்றின் தொடர்புடைய விதிகளைப் பரிசீலித்தது: ஒரு தகுதியான நீதிமன்றத்தால் வேறு எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படாத நிலையில், தந்தையே மைனரின் இயற்கை பாதுகாவலர் ஆவார் என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. தாயின் பிடியில் இருந்து குழந்தையைத் தந்தை எடுத்துச் சென்றாலும், குழந்தையின் தந்தை இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 361–ன் எல்லைக்குள் அவர் வரமாட்டார் என்று நீதிமன்றம் மேலும் தெளிவுபடுத்தியது.

மனுதாரர் (தந்தை) தனது குழந்தையின் 2வது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார். 20–08–2023 அன்று, அவர் குழந்தையை மனைவியின் வீட்டில் இருந்து அழைத்துச் சென்றார். தான் தனது மகனுக்கு பிறந்தநாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளதாகவும், தந்தையின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களின் ஆசீர்வாதங்களைப் பெற மகனை அழைத்துச் செல்வதாகவும் தனது மனைவியிடம் (தாய்) தகவல் தெரிவித்தார். இதையடுத்து, குழந்தையின் தாயார் (புகார் அளித்தவர்) தந்தையின் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 363–ன் கீழ் கடத்தல் குற்றத்திற்காக புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், மைனர் குழந்தைக்கு இயற்கை பாதுகாவலராக இருக்கும் ஒரு தந்தை மீது கடத்தல் குற்றத்தைப் பதிவு செய்ய முடியாது என்று வாதிட்டார்.

இந்த வழக்கில், ஒரு தந்தை தனது சொந்த மைனர் குழந்தையை தாயின் பிடியில் இருந்து அழைத்துச் சென்றதற்காக கடத்தல் குற்றத்தைப் பதிவு செய்ய முடியுமா மற்றும் அது இதச பிரிவு 363–ன் கீழ் குற்றமாகுமா என்பதைக் நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது. இதச பிரிவு 361–ஐ ஆராய்ந்த நீதிமன்றம், அப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள ‘சட்டப்பூர்வ பாதுகாவலர்’ என்ற சொல், மைனரை பராமரிக்கும் அல்லது பாதுகாப்பில் வைத்திருக்கும் எவரையும் உள்ளடக்கும் என்று குறிப்பிட்டது. இருப்பினும், கடத்தல் குற்றம் நிரூபிக்கப்பட, குழந்தையை அழைத்துச் சென்றவர் ‘சட்டப்பூர்வ பாதுகாவலர்’ என்ற வரையறைக்குள் வராதவராக இருக்க வேண்டும்.

பாதுகாவலர் மற்றும் சிறுவர்கள் சட்டம், 1890, பிரிவு 4(2) ஆனது, மைனரின் பராமரிப்பு அல்லது சொத்தைப்

பொறுப்பேற்றுள்ள ஒருவரை 'பாதுகாவலர்' என்று வரையறுக்கிறது. இந்து மைனர் மற்றும் பாதுகாவலர் சட்டம், 1956, பிரிவு 6 ஆனது, ஒரு இந்து மைனருக்கு, முதலில் தந்தையே இயற்கை பாதுகாவலர், அதன் பிறகே தாயார் ஆவார் என்று குறிப்பிடுகிறது.

எனவே, ஒரு தகுதியான நீதிமன்றத்தால் வேறு எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படாததால், மனுதாரர் தனது 2 வயது மகனுக்கு இயற்கை பாதுகாவலர் என்பதில் நீதிமன்றத்திற்கு எந்தச் சந்தேகமும் இல்லை. மேலும், இந்த வழக்கில் தாயார் ஒரு தகுதியான நீதிமன்றத்தின் உத்தரவின் மூலம் மைனரின் பராமரிப்பு அல்லது பாதுகாப்பதற்காக சட்டப்பூர்வமாக ஒப்படைக்கப்பட்டவர் அல்ல என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

ஒரு தகுதியான நீதிமன்றத்தின் தடை உத்தரவு எதுவும் இல்லாத நிலையில், மனுதாரர் தனது சொந்த மைனர் குழந்தையைத் தாயின் பிடியில் இருந்து அழைத்துச் சென்றதற்காக அவர் மீது குற்றத்தைப் பதிவு செய்ய முடியாது என்று நீதிமன்றம் அறிவித்தது. தந்தையின் பாதுகாவலர் உரிமைகளைப் பறிக்கும் எந்த உத்தரவும் இல்லாதவரை, அவர் இதச பிரிவு 361–ன் கீழ் கடத்தல் குற்றவாளியாகக் கருதப்பட முடியாது. தாயார், தந்தை அல்லது வேறு எந்த சட்டப்பூர்வ பாதுகாவலரைத் தவிர வேறு எந்த நபருக்கும் எதிராக மட்டுமே 'சட்டப்பூர்வ பாதுகாவலர்' ஆக இருக்க முடியும்.

எனவே, மனுதாரர் மீது இதச பிரிவு 363–ன் கீழ் குற்றம் சாட்டுவதற்கு முதற்கட்ட ஆதாரம் எதுவும் இல்லை என்றும், அத்தகைய வழக்கை நீடிப்பது நீதிமன்ற நடைமுறையைத் தவறாகப் பயன்படுத்துவதற்குச் சமம் என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது. இதன் காரணமாக, மனுதாரர் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ரத்து செய்யப்பட்டது.

– மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை

## திருட்டு வழக்கில் குற்றவாளிகளைக் கைது செய்ய முடியாவிட்டால் அரசு இழப்பீடு வழங்க வேண்டும்

நகைத் திருட்டு வழக்கில் குற்றவாளிகளைக் கைது செய்ய முடியவில்லையெனில், பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுத் தொகையை அரசு வழங்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு 25.11.2025 அன்று உத்தரவிட்டது. மதுரை எஸ்.எஸ்.காலனி புறவழிச் சாலைப் பகுதியைச் சேர்ந்த சங்கரி தாக்கல் செய்த மனு. கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் என் வீட்டுக் கதவை உடைத்து சுமார் 75 பவுன் தங்க நகைகள், ரூ.1.39 லட்சத்தை மர்ம நபர்கள் திருடிச் சென்றனர். இது குறித்து எஸ்.எஸ். காலனி காவல் நிலைய போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். ஆனால், இந்த வழக்கில் இதுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இந்த நிலையில் நகைத் திருட்டு வழக்கில் குற்றவாளிகளைக் கண்டறிய முடியவில்லை எனவும், இந்த வழக்கை முடித்து விட்டதாகவும் காவல் நிலையம் தரப்பில் எனக்கு எந்தத் தகவலும் அளிக்காமல் சமர்ப்பித் துள்ளனர். எனவே, இந்த வழக்கு விசாரணையை வேறு சிறப்பு விசாரணை அமைப்புக்கு மாற்றி, திருடு போன எனது நகைகளை மீட்டுத் தர உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார். இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதி புகழேந்தி முன் 25.11.2025 விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர் ஹாரூன் ரஷீத் முன் வைத்த வாதம். சம்பவம் நடைபெற்று 10 ஆண்டுகளாகி விட்டன. திருட்டில் ஈடுபட்ட குற்றவாளிகளை போலீசார் இதுவரை கண்டறியவில்லை. பாதிக்கப்பட்டோருக்கு எந்த நிவாரணமும் வழங்கவில்லை. எனவே, இந்த வழக்கை சிறப்புப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்ற வேண்டும் என்றார். இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தரவு, தங்க நகைகள், பொருள்கள் திருட்டு குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தும் குற்றவாளிகளை போலீசாரால் கண்டறிய முடியவில்லை. இந்த வழக்கை பல ஆண்டுகளாக நிலுவையில் வைத்துள்ளனர். இதேபோல காணாமல் போன நகைகளை மீட்டுத் தரக் கோரி உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் பல மனுக்கள் தாக்கலாகி வருகின்றன. ஆனால், பல ஆண்டுகளாக குற்றவாளிகளைக் கண்டறிய முடியவில்லை என போலீசார் பதிவு செய்து விடுகின்றனர். இந்த நடைமுறை மாற்றப்பட வேண்டும். நகைகள் திருட்டு வழக்கில் குற்றவாளிகளைக் கண்டறிய முடியவில்லை என போலீசார் பதிவு செய்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குள், புகார்தாரருக்கு தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும். திருடு போன நகைகளின் மொத்த மதிப்பில் 30 சதவீதத் தொகையை புகார் தாரருக்கு தமிழக அரசு இழப்பீடாக வழங்க வேண்டும். இதேபோல, நகைத் திருட்டு சம்பவங்களில் குற்றவாளிகளைக் கண்டறிய முடியாமல் 5 ஆண்டுகளுக்கும் மேலாக வழக்கு நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகளின் நிலவரம் குறித்து 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது அந்தந்த மாவட்ட கூடுதல் டிஎஸ்பி தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்த வேண்டும். பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள நகைத் திருட்டு வழக்குகளில் விசாரணை நடத்தி குற்றவாளிகளைக் கண்டறிவதற்காக திறமை மிக்க காவல்துறை அதிகாரி களைக் கொண்ட சிறப்பு காவல் பிரிவை மாவட்டந்தோறும் உருவாக்க வேண்டும். இந்தப் பிரிவினருக்கு விசாரணை உத்திகள், புகார்தாரருக்கும், அரசுக்கும் இடையேயான தகவல் பரிமாற்றம் வழக்கை நவீன முறையில் கையாள்வது எப்படி என்பது குறித்து தொழில்நுட்ப ரீதியலான பயிற்சியை தமிழக காவல் துறை வழங்க வேண்டும் என்றார் நீதிபதி.

**நன்றி: தினமணி 26.11.2025**

# பட்டியல் இனத்தவர் (SC) பட்டியலைத் திருத்த நாடாளுமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உண்டு

**பஞ்சாப் மாநில அரசு –எதிர்– தேவீந்தர் சிங்,**
**2024 SCC Online SC 1860, 01.08.2024 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது**

**- INDIAN LAW INSTITUTE Vol.66:3, (July-Sep.2024)**

சிவில் மேல்முறையீடுகள் மற்றும் சிறப்பு விடுப்பு மனுக்களின் ஒரு தொகுப்பில், ஏழு நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வு, 6:1 என்ற பெரும்பான்மையின் அடிப்படையில், ஒதுக்கப்பட்ட பிரிவினரிடையே பட்டியல் இனத்தவரை துணைப் பிரிவுகளாகப் பிரித்து, அந்த பட்டியலின பிரிவுகளுக்குள்ளே மிகவும் பின்தங்கியவர்களுக்குத் தனி ஒதுக்கீடுகளை வழங்குவது அரசியலமைப்புச் சட்டப்படி அனுமதிக்கத்தக்கது என்று தீர்ப்பளித்தது, மேலும் ஈ.வி.சின்னய்யா –எ– ஆந்திரப் பிரதேச மாநில அரசு (2005) 1 SCC 394) வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை இது ரத்து செய்தது.

இருப்பினும், இந்த வழக்கில் ஒற்றை மாறுபட்ட தீர்ப்பை வழங்கிய நீதியரசர் பேலா எம். திரிவேதி, பட்டியலின சாதியினர்/பட்டியலின பழங்குடியினர் பிரிவினருக்குள் இத்தகைய துணைப் பிரிவுகள் அனுமதிக்க முடியாதவை என்று கூறி, ஈ.வி.சின்னய்யா வழக்கின் தீர்வு இன்றும் செல்லுபடியாகும் சட்டம் என்ற நிலைப்பாட்டை எடுத்தார்.

அவர் மேலும் கூறியது: ஈ.வி.சின்னய்யா வழக்கில் ரா சாஹ்னி –எதிர்– இந்திய அரசு [(1992) Supp (3) SCC 217] உட்பட முந்தைய அனைத்துத் தீர்ப்புகளையும் கருத்தில் கொண்ட பிறகும், கணிசமான நீதித்துறை நேரத்தையும் வளங்களையும் முதலீடு செய்த பிறகும், அரசியலமைப்பு அமர்வால் சட்டம் நிலைநாட்டப்பட்டபோது, மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு மாநில அரசு –எதிர்– தேவிந்தர் சிங் (2020) 8 SCC 65) வழக்கில், எந்தவொரு காரணத்தையும், குறிப்பாக உறுதியான காரணத்தையும் குறிப்பிடாமல், ஏற்கெனவே நிலைநிறுத்தப்பட்ட முன்னுதாரணங்கள் மற்றும் நிலைத்த சட்டக் கோட்பாடுகளைப் புறக்கணித்து, பெரிய அமர்வுக்குப் பரிந்துரைத்திருக்கக் கூடாது.

மேலும் நீதியரசர் திரிவேதி, ஈ.வி.சின்னையா வழக்கில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வால் நிலைநாட்டப்பட்ட சட்டத்தை, அந்தத் தீர்ப்பு பதினைந்து ஆண்டுகள் நீண்ட காலத்திற்கு நடைமுறையில் இருந்தபோது, மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, எந்தவொரு உறுதியான உடன்பாடின்மையின் காரணத்தையும் பதிவு செய்யாமல் பெரிய அமர்வுக்குப் பரிந்துரைத்திருக்க முடியுமா? என்ற கேள்வியை எழுப்பினார்.

மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு (தேவிந்தர் சிங் வழக்கில்) அரசியலமைப்பு அமர்வு வழங்கிய ஈ.வி.சின்னையா தீர்ப்புடன் ஏன் உடன்பட முடியவில்லை என்பதற்கான உறுதியான காரணம் உட்பட எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல், பெரிய அமர்வுக்குப் பரிந்துரைத்துள்ளது என்று நீதியரசர் திரிவேதி குறிப்பிட்டார். 15 ஆண்டுகளாகப் பரவலாக இருந்த மற்றும் அரசியலமைப்பு அமர்வால் நிலைநாட்டப்பட்ட சட்டம், எந்தவொரு காரணத்தின் ஆதரவும் இல்லாத, மிகவும் குழப்பமான மற்றும் சம்பிரதாயமான உத்தரவின் மூலம் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வால் சந்தேகிக்கப்பட்டு, நிலைகுலையச் செய்ய முயலப்பட்டுள்ளது என்று நீதியரசர் திரிவேதி கூறினார்.

இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்பைச்

சந்தேகிக்கும் உரிமையை ஆய்வு செய்தபோது, நீதித்துறை ஒழுக்கம் மற்றும் கண்ணியம் ஒரு சிறிய அமர்வு பெரிய அமர்வின் முடிவைப் பின்பற்ற வேண்டும் என்று தெரிவிக்கிறது. ஒருவேளை சிறிய அமர்வு, முந்தைய தீர்ப்பு முற்றிலும் தவறானது என்று முடிவெடுத்தால், அது தன்னால் ஏன் உடன்பட முடியவில்லை என்பதற்கான காரணங்களை விரிவாகக் கூறி மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வுக்குப் பரிந்துரைப்பதே சரியான நடைமுறை.

'முன்னுதாரணங்கள் மற்றும் நிலைத்த சட்டம் ஆகிய கோட்பாடுகள் நமது சட்ட அமைப்பின் அடிப்படை மதிப்புகள் ஆகும்.' கணிசமான நீதித்துறை நேரமும் வளங்களும் அரசியலமைப்பு அமர்வுகளால் செலவிடப்பட்டி ருக்கும்போது, அதே முடிவைப் பின்னர் ஒரு சிறிய அமர்வு, சாதாரணமான அல்லது அலட்சிய மான முறையில் மற்றும் உடன்பாடின்மைக் கான காரணங்களைப் பதிவு செய்யாமல், பெரிய அமர்வுக்கு மேலும் பரிந்துரைக்கக் கூடாது என்று வலியுறுத்தினார்.

சிறிய அமர்வு பெரிய அமர்வின் தீர்ப்பைப் பின்பற்ற வேண்டும். சிறிய அமர்வுக்கு ஏதேனும் சந்தேகம் அல்லது உடன்பாடின்மை இருந்தால், அது மறுபரிசீலனைக்கு பெரிய அமர்வுக்குப் பரிந்துரைக்கலாம், இருப்பினும், ஏற்கெனவே உள்ள பெரிய அமர்வின் முடிவை ஏன் ஏற்க முடியவில்லை என்பதற்கான காரணங்களையும் நியாயத்தையும் அமைத்த பிறகே பரிந்துரைக்க வேண்டும். முந்தைய தீர்ப்பு வெளிப்படையாகத் தவறாக இருக்கும்போ பாது அல்லது முந்தைய கருத்துக்கு வழிவகுத்த சூழல் மதிப்புகள் கணிசமாக மாறியிருக்கும் போது போன்ற நியாயமான காரணங்களின் அடிப்படையிலேயே இந்த உடன்பாடின்மை இருக்க வேண்டும்.

ஆகவே, இந்த விவகாரத்தில், மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, அரசியலமைப்பு அமர்வின் முந்தைய முடிவான ஈ.வி.சின்னையா வழக்கை மீண்டும் செல்லுபடியாக்குவதற்காக, எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல், மிகவும் சாதாரணமாகவும் அலட்சியமாகவும் பெரிய அமர்வுக்குப் பரிந்துரைத்துள்ளது என்று நீதியரசர் திரிவேதி தீர்ப்பளித்தார். அதன் இறுதித் தன்மைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் இது செய்யப்பட்டது. இத்தகைய பரிந்துரையை அதன் பின்னர் வந்த ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்குப் பரிந்துரைக்கக் கூடாது மற்றும் அனுமதிக்கப்பட்டிருக்கவும் கூடாது.

சமூகத்தில் மிகவும் பலவீனமானவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதாகக் கூறி, குடியரசுத் தலைவரால் சட்டம் 341(1)-ன் கீழ் அறிவிக்கப்பட்ட 'பட்டியல் இனத்தவர்' பட்டியலைத் துணைப் பிரிவுகளாகப் பிரித்து அல்லது மறுபிரிவு செய்து மாநிலங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்பட வேண்டுமா? சட்டம் 341-இன் உரையைப் பகுப்பாய்வு செய்த நீதியரசர் திரிவேதி, குடியரசுத் தலைவரின் அதிகாரம் அரசியலமைப்பின் நோக்கங்களுக் காக ஒரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்துடன் தொடர்புடைய பட்டியலின சாதிகள்/பட்டியலின பழங்குடிகளை வரை யறுப்பதற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது என்று கூறினார். சட்டம் 341(1)-ன் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டவுடன், நாடாளுமன்றம் மட்டுமே சட்டத்தின் மூலம் அந்தப் பட்டியலில் சேர்க்கவோ அல்லது நீக்கவோ முடியும். குடியரசுத் தலைவர் கூடப் பிந்தைய அறிவிப்பின் மூலம் அந்த அறிவிப்பை மாற்ற முடியாது.

பட்டியலின சாதிகள் என்பது சாதாரண அர்த்தத்தில் உள்ள சாதி அல்ல. சட்டம் 341-ன் கீழ் குடியரசுத் தலைவரின் அறிவிப்பால் தான் அவர்கள் நடைமுறைக்கு வருகிறார்கள். அவர்கள் குடியரசுத் தலைவர் அறிவிப்பின் மூலம் புதிய சிறப்பு நிலையைப் பெறுகிறார்கள். இது நாடாளுமன்றச் சட்டம் மூலம் மட்டுமே மாற்றியமைக்கப்பட முடியும். எந்தவொரு

நிர்வாக அல்லது சட்ட அதிகாரங்களும் இல்லாத நிலையில், மாநிலங்களுக்கு பட்டியலினத்திற் குள்ளேயே சாதிகளைப் பிரித்து/துணைப் பிரிவு களாக்கி/மறுபிரிவு செய்ய அதிகாரம் இல்லை என்று நீதியரசர் திரிவேதி கூறினார். மேலும், முழு பட்டியலின சாதிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து ஒரு குறிப்பிட்ட சாதிக்கு முன்னுரிமை அளிக்கவோ அல்லது ஒரு ஒதுக்கீட்டை ஒதுக்கவோ முடியாது.

அனைத்துச் சாதிகள், இனங்கள் அல்லது பழங்குடியினர் குடியரசுத் தலைவர் பட்டியலில் பட்டியலிடப்பட்டு, அரசியலமைப்பின் நோக்கங் களுக்காக 'பட்டியலினத்தவர்' என்று கருதப் படும்போது, அரசாங்க வேலைகளில் முழு பட்டியலின வகுப்புக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து ஒரு குறிப்பிட்ட சாதிக்கு முன்னுரிமை அல்லது ஒதுக்கீடு வழங்குவது, பட்டிய லினத்தவர்களின் மற்ற உறுப்பினர்களை அந்தச் சலுகையிலிருந்து பறிக்கும். 'மாநிலத்தின் அத்தகைய நடவடிக்கை, தலைகீழ் பாகுபாட்டிற்கு மட்டுமல்ல, சட்டம் 14-ஐ மீறுவதற்கும் சமமாகும். மேலும் அரசியலமைப்புச் சட்டம் 341-ஐ மாற்றியமைப்பதற்குச் சமமாகும்' என்று நீதியரசர் திரிவேதி வலியுறுத்தினார். சமூகத்தின் மிகவும் பலவீனமான பிரிவினருக்கு உறுதிப்படுத்தும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி, குடியரசுத் தலைவர் பட்டியலை மாநிலம் மாற்றியமைக்கவோ அல்லது சட்டம் 341-ஐத் திருத்தவோ முடியாது.

இந்திரா சாஹ்னி வழக்கில் பட்டியல் இனத்த வரைத் துணைப் பிரிவுகளாகப் பிரிப்பது பற்றியோ அல்லது சட்டம் 341-ன் கீழ் பட்டியலினத்தவர்களைத் துணைப் பிரிவுகளாகப் பிரிக்கும் மாநிலத்தின் அதிகாரம் பற்றியோ பேசப்படவில்லை என்று நீதியரசர் திரிவேதி கருத்து தெரிவித்தார். எனவே, ஈ.வி.சின்னையா வழக்கில் சொல்லப்பட்ட சட்டம், இந்திரா சாஹ்னி மற்றும் ஜர்னைல் சிங் வழக்குகளுடன் முரண்பட்டது என்று கூறுவது ஒரு தவறு என்று அவர் கூறினார்.

– மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை

**ஓய்வு பெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில்**

## ஆணவக் கொலைகளை தடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்க குழு அமைப்பு

**அரசாணை வெளியீடு - தமிழ்நாடு அரசு அறிவிப்பு**

ஆணவக் கொலைகளை தடுப்பதற்கான பரிந்துரை களை வழங்க குழு அமைத்து அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைத்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், மக்கள் உள்ளிட்டோரின் கருத்துகளை பெற்று பரிந்துரைகளை தர ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. கே.என்.பாஷா தலைமை யிலான ஆணையம் 4 மாதங்களில் அரசுக்கு பரிந்துரை களை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கு அரசியல் கட்சிகள், சட்ட வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள், பாதிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மக்களிட மிருந்து கருத்துக்களைச் சேகரித்து, அதற்கேற்ப பரிந்துரைகளை வழங்குவதற்காக சட்ட வல்லுநர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் மற்றும் மானுடவி யலாளர்கள் அடங்கிய ஒரு ஆணையத்தை அமைப்ப தற்காக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 17.10.2025 அன்று சட்டமன்றக் கூட்டத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

இதன் மூலம், சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி கே.என்.பாஷா (ஓய்வு பெற்றவர்) தலைமையில் ஒரு ஆணையத்தை அமைக்கிறது. டாக்டர் வி. பழனிக்குமார், ஐ.ஏ.எஸ்., (ஓய்வு பெற்றவர்) மற்றும் எஸ்.ராமநாதன், ஐ.பி.எஸ்., (ஓய்வு பெற்றவர்) ஆகியோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக விதிமுறை களுடன் நியமிக்கப்படுகிறார்கள்.

ஆணவக் கொலைகளைத் தடப்பதற்கு பரிந்துரை களை உருவாக்குவதற்கும் அவர்களின் கருத்துக்களைப் பெற அரசியல் அமைப்புகள், சட்ட வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள், பாதிக்கப்பட்ட நபர், பாதிக்கப்பட்டவர் களுடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும். ஆணவக் கொலைகள் தொடர்பான கடந்த காலத் தரவுகளை தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து சேகரித்து, இந்தப் பிரச்சினைக்கு பங்களிக்கும் சமூக முறையான காரணிகளை அடையாளம் காண தரவுகளை பகுப்பாய்வு செய்தல்.

ஆணவக் கொள்கைகளுக்கு எதிரான நடவடிக்கை தொடர்பான இந்திய அரசியலமைப்பின் விதிகள் மற்றும் பல்வேறு மாநிலங்கள் மற்றும் மையத்தின் தற்போதைய சட்டங்கள், உத்தரவுகள், கொள்கைகளை ஆராய்ந்து பொருத்தமான சட்ட கட்டமைப்பை பரிந்துரைத்தல். எதிர்காலத்தில் ஆணவக் கொலைகளைத் தவிர்க்க பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகளை பரிந்து ரைத்தல் மற்றும் ஆவணக் கொலைகளைத் தடுக்க பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற் கான செயல் திட்டத்தை பரிந்துரைத்தல், குறிப்பிட்ட, நிலையான மற்றும் செயல்படுத்தக் கூடிய பரிந்துரை களை உருவாக்கி 3 மாதங்களுக்குள் அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்றி: முரசொலி 14.11.2025

# வரதட்சிணைக் கொடுமைகளுக்கு நிரந்தரத் தீர்வு உண்டா?

– ப. சுசீந்திரா, ஆராய்ச்சியாளர்
சமூக நீதி – சமத்துவ மையம்

வரதட்சிணைக் கொடுமை, அதனைத் தொடர்ந்த குடும்ப வன்முறைகளால் இளம்பெண்கள் இறக்கும் செய்திகளைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். அண்மையில் திருப்பூர் மாவட்டம் அவிநாசியைச் சேர்ந்த இளம்பெண் ரிதன்யா, வரதட்சிணைக் கொடுமை, குடும்ப வன்முறையால் தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் தமிழகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இன்றைய காலக்கட்டத்தில், பெரும்பாலும் நன்றாகப் படித்த வேலைக்குச் சென்று சம்பாதிக்கக் கூடிய பெண்கள் இத்தகைய விபரீத முடிவுக்குச் செல்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது?

**வரலாற்றுப் பின்னனி**

புள்ளி விவரங்களின்படி, இந்தியாவில் 2019–2021 காலக்கட்டத்தில் 31.2% பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். அதில் வரதட்சிணைக் கொடுமைகள், குடும்பத்தில் பாலியல் வன்முறைகள் போன்றவற்றால் பாதிக்கப்படுபவர்களே அதிகம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஆழமாகப் பார்த்தால், படித்து வேலைக்குப் பெண்களே இக்கொடுமைகளால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்கிற தகவலும் அதிர்ச்சி அளிக்கிறது.

வரதட்சிணையின் வேர்கள் பண்டைய இந்தியச் சமூகத்திலேயே உள்ளன. வேதகாலத்தில் பெண்ணைத் திருமணம் அதாவது, கன்னியாதானம் செய்யும்போது ஸ்த்ரீதனம் என்கிற பெயரில் (ஸ்தரீ+தனம்= பெண்ணுக்காகக் கொடுக்கப்படும் பொருள் அல்லது செல்வம்) (Her share of inheritance) சொத்து உரிமையாக வழங்கப்பட்டவை. மத்திய காலத்தில் மணமகனின் குடும்பத்துக்குச் செல்லும் கட்டாயக் கொடையாக மாறின. காலனித்துவக் காலத்தில் பெண்களின் சொத்துரிமை மேலும் குறைக்கப்பட்டதால், வரதட்சிணை பெண்களை அடிமையாக்கும் சமூக ஒப்பந்தமாக (Social Contract) வலுவடைந்தது. சாதி, மதம், பொருளாதாரம் ஆகியவற்றோடு இணைந்த இந்த நடைமுறை இன்று பெண்களின் உயிரையே காவு கொள்கிறது.

அடிப்படையில் குடும்பம் என்பது பெண்களை அடிமையாக அமைப்பாகவும், திருமணம் என்பது பெண்களின் உழைப்பை மதிப்பற்றதாக்கும் சமூகக் கருவியாகவும் மாறியுள்ளது. அதனால்தான் பெற்றோர் பலர், ‘குடும்ப கௌரவம் குலைந்து விடக் கூடாது’ என்கிற மனநிலையில், தங்களது மகள்கள் மீதான துன்புறுத்தலை குடும்பம் என்றால் அப்படித்தான் இருக்கும்; சகித்துக் கொள் எனச் சொல்லிச் சொல்லி சமாதானப்படுத்துகிறார்கள்.

**வணிகத் திருமணங்கள்**

இன்றைய காலத்தில் வரதட்சிணையானது – நகை, பணம் என்பதாக மட்டுமல்ல நிலம், வீடு, வங்கிக் கணக்கு வைப்பு நிதி, தொழில் முதலீடு எனப் பல வடிவங்களில் உருமாறுகிறது. சிலர் திருமணப் பரிசு என்று இதை அழைத்தாலும், உண்மையில் அது பெண்ணையே பொருளாக்கும் வரதட்சிணைதான். திருமணச் சந்தை ஒரு பெரும் வணிகமாக வளர்ந்துள்ளது. நிகழ்ச்சி ஏற்பாட்டு நிறுவனங்கள், வரன்களுக்கான செயலிகள், நகை–ஆடை விளம்பரங்கள் அனைத்தும் வரதட்சிணையை மறைமுகமாக ஊக்குவிக்கின்றன.

திருமணச் சந்தை வெகு வேகமாக வளர்ந்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில், நாளுக்கு நாள் திருமணங்கள் பெரும் வணிகக் கலாச்சாரமாகப் பரிணாமம் எடுத்து விரிவடைந்து வருகின்றன. இது போன்ற திருமண நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுப்பதற்கு எனப் பல நிகழ்ச்சி ஏற்பாட்டு நிறுவனங்கள் செயல்படுகின்றன. திருமண அரங்குகள், ஆடைகள், நகைகள், உணவு தானியங்கள்,

மளிகைப் பொருட்கள், காய்கறிகள், ஆரடம்பரப் பரிசுகள் எனத் திருமணத்தையொட்டி மிகப் பெரிய வர்த்தகம் கட்டியமைக்கப்பட்டு உள்ளது. இந்தியத் திருமணங்களின் மொத்த சந்தை மதிப்பு ஆண்டுக்கு சுமார் ரூ.10.7 லட்சம் கோடி என்று கணிக்கப்படுகிறது. இந்தத் திருமணச் சந்தையை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவில் திருமணம் என்கிற திட்டமும் மத்திய அரசால் தொடங்கி வைக்கப்பட்டு உள்ளது.

அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு (Confederation of All India Traders) கடந்த ஆண்டு திருமண சீசனில் வெறும் 15 நாட்களில் இந்திய சந்தையில் 4.7 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வர்த்தகம் நடந்துள்ளதாகக் கூறுகிறது. 2022 ஆம் ஆண்டின் இதே காலத்தில் 3.75 லட்சம் கோடி ரூபாய்க்கும், அதற்கு முந்தைய ஆண்டு 3.10 லட்சம் கோடி ரூபாய்க்கும் வர்த்தகம் நடந்துள்ளது. கரோனா காலத்தின்போது கடுமையான சரிவைச் சந்தித்த திருமணம் சார்ந்த வர்த்தகங்கள், கடந்த இரண்டு வருடங்களில் அபாரமான வளர்ச்சியை அடைந்துள்ளன.

பல லட்சம் கோடி ரூபாய் புழங்கும் இந்தியத் திருமணச் சந்தையைத் தக்கவைத்துக் கொள்வதற்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. தங்களுடைய லாபவெறிக்காக ஒவ்வொரு சாதியினருக்கும் தனித்தனியாகத் திருமண வரன் செயலிகளை நடத்துகின்றன. சாதிவாரியாக அகமணமுறையை ஊக்குவிக்கின்றன. வரதட்சிணையை நகை, ஆடை, விளம்பரங்கள் மூலமாக மேலும் பரப்புகின்றன.

தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான வழக்குகள் வரதட்சிணைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. 2022ஆல் மட்டும் தமிழ்நாட்டில் 29 வரதட்சிணை மரணங்கள் நடந்திருப்பதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையான எண்ணிக்கை பல மடங்கு அதிகம் என்பது பலரும் அறிந்ததே. குடும்ப கௌரவம், காவல் நிலையத்திலேயே நடத்தப்படும் சில கட்டப் பஞ்சாயத்துகள், நீதிமன்றங்களில் இன்றும் நிலவும் ஆணாதிக்க மனோபாவம் போன்றவற்றின் காரணமாகக் குடும்ப வன்முறை நிகழ்வுகளில் பெண்கள் நீதியைப் பெறுவது கடினமாகிறது. சமீபத்தில் திருமண உறவு சார்ந்த பாலியல் வன்முறையைக் குற்றமாக்கக் கூடாது என மத்திய அரசு வாதிட்டது இது. பெண்களின் உரிமைகளை மறுக்கும் அரசியல் நோக்கத்தை வெளிக்காட்டுகிறது.

**எங்கே தீர்வு**

வரதட்சிணை என்பது பெண்ணின் மீது நடைபெறும் பொருளாதார, சமூக, பாலியல் வன்முறைகளின் சங்கமம். இதனை எதிர்கொள்ளப் பெண்களின் விடுதலைக்கான போராட்டமே உதவும். வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பெண்கள் மீதான வன்கொடுமைகளுக்கு எதிராக உறுதி செய்யப்பட்ட பல்வேறு சட்டங்கள் இருந்தாலும், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வைக் காலம் காலமாகப் பல பெண்ணிய இயக்கங்களும் சமூக இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் மேற்கொண்டாலும் இக்கொடுமைகள் இன்றும் தொடர எது அடிப்படைக் காரணமாகிறது பெண்ணைப் பொருளாக, குடும்ப உழைப்பில் மதிப்பற்றவராக, சுயமாக முடிவெடுக்கும் நபராக இல்லாமல் இயங்க வைப்பதுதான் ஆதிக்கச் சமுதாயத்தின் அடிப்படையாக இருக்கிறது. இந்தக் கருத்தியலைக் களைய, ஒரு நவீனச் சமூகமாக நாம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதில் நாம் தொடர்ந்து எங்கு தோற்கிறோம் இதனைப் பற்றிய ஆழமான உரையாடல்கள் நடத்தப்பட வேண்டும்.

அண்மையில் தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன் கேட்ட கேள்விக்கான தகவலின் அடிப்படையில், தமிழ்நாட்டில் 2018 முதல் சமீப காலம் வரை 2,114 சுயமரியாதைத் திருமணங்கள் பதிவாகியுள்ளன என்று தமிழ்நாடு பதிவுத் துறை அதிகாரி தெரிவித்துள்ளார். இது போன்ற தகவலைப் பொதுவாக நடைபெறும் திருமணங்களில் நம்மால் எளிதாகப் பெற முடியாது. ஏனெனில், நமது ஊர்களில் நடைபெறும் திருமணங்களில்

பெரும்பாலனவை பல்வேறு காரணங்களால் பதிவு செய்யப்படுவதே இல்லை. திருமணங்கள் நடைபெறுவதையே நம்மால் முறையாகக் கண்காணிக்க அல்லது கணக்கில் கொண்டு வர முடியாதபோது, அவற்றில் பரிமாறப்படும் பொருள், நகை, பணம் ஆகியவற்றை எப்படிக் கணக்கில் கொண்டு வருவது ஆக, மாவட்ட அளவில் இதற்கான தனிச் சிறப்புக் கண்காணிப்புக் குழுக்கள், ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றைத் தடையின்றிச் செயல்படுத்திட அரசு முனைய வேண்டும்.

மேலும் குடும்ப அமைப்பில், குடும்ப உழைப்பில பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பதைச் சமூகக் கடமையாகக் கூட்டுப் பொறுப்பாகக் கருதி, நாம் செயல்படத் தொடங்கியாக வேண்டும். அதுவே உண்மையில் பெண்களுக்கான உரிமையை நிலைநாட்டிட உதவி புரியும்.

**நன்றி : இந்து தமிழ்திசை 26.9.2025**

## தீர்ப்புகளை மாற்றி எழுதும் போக்கு அதிகரிப்பு: உச்சநீதிமன்றம் ஆதங்கம்

உச்சநீதிமன்றத்தில் ஒரு நீதிபதி அளிக்கும் தீர்ப்பை வேறு நீதிபதி மாற்றி எழுதும் போக்கு அதிகரித்து வருவது வேதனையளிப்பதாக உச்சநீதிமன்றம் 26.11.2025 அன்று தெரிவித்தது. உச்ச நீதிமன்றத்தில் கொலை குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவர், தனது ஜாமீன் நிபந்தனைகளில் மாற்றம் செய்யக் கோரி தாக்கல் செய்த மனு நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, அகஸ்டின் ஜார்ஜ் மாசி ஆகியோர் அடங்கியுள்ள அமர்வு முன்பாக 26.11.2025 அன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறியதாவது உச்சநீதிமன்றத்தில் வழக்குகளை விசாரித்து நீதிபதிகள் தீர்ப்பளித்தால், அதே வழக்குகளை வேறு நீதிபதிகள் மீண்டும் விசாரித்து ஏற்கனவே அளிக்கப்பட்ட தீர்ப்பை மாற்றி எழுதும் போக்கு அதிகரித்து வருகிறது. இது வேதனையளிக்கிறது. ஏற்கனவே தீர்ப்பளித்த நீதிபதி தொடர்ந்து பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்ட காலத்துக்கும் அதற்கு எதிராக மேல்முறையீடு செய்த காலத்துக்கும் இடையே உள்ள இடைவெளியை கருத்தில் கொள்ளாமலும் தீர்ப்புகள் மாற்றி எழுதப்படுகின்றன. ஏற்கனவே அளிக்கப்பட்ட தீர்ப்பால் அதிருப்தி அடைந்தவர்களின் வேண்டுகோளை ஏற்று வேறு நீதிபதிகள் அல்லது சிறப்பாக அமைக்கப்பட்ட நீதிபதிகளின் அமர்வுகள் இவ்வாறு தீர்ப்புகளை மாற்றுகின்றன.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 141-இன் நோக்கம் குறிப்பிட்ட சட்டப் பிரச்சினையில் ஓர் அமர்வு (நீதிபதிகள் அமர்வு) அளிக்கும் தீர்ப்பு சச்சரவுக்கு முடிவு காண வேண்டும். அந்தத் தீர்ப்பின் மூலம் வழக்கு நிறைவு செய்யப்பட்டதாகக் கருதி, அந்தத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ள விதிமுறையின்படி அனைத்து நீதிமன்றங்களும் பின்பற்ற வேண்டும் என்பதே அரசமைப்புச் சட்டப் பிரிவு 141இன் நோக்கமாக உள்ளது. ஒரு தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர், அது தொடர்பான வழக்கில் வித்தியாசமான கண்ணோட்டம் ஏற்பட்டு அந்தத் தீர்ப்பை மறு ஆய்வு செய்ய அனுமதித்தால், அது அரசமைப்புச் சட்டப் பிரிவு 141-இன் நோக்கத்தை தோல்வியடையச் செய்து விடும்.

ஓர் அமர்வு தீர்ப்பளித்த வழக்கு வேறு அமர்வு விசாரித்தால், அது வழக்கில் வேறு தீர்ப்பு கிடைக்க வழிவகுக்கும் என்ற நம்பிக்கையில் மேல்முறையீடு செய்வதற்கான வாய்ப்பு, நீதிமன்றத்தின் அதிகாரம், உரிமை, தீர்ப்புகள் மீதான மதிப்பு ஆகியவற்றை வலுவிழக்கச் செய்யும். முன்பு அளிக்கப்பட்ட தீர்ப்பை பின்னர் அளிக்கப்படும் தீர்ப்பால் மாற்றுவதன் மூலம், நீதி பரிபாலனம் சிறப்பாக செய்யப்பட்டதாக அர்த்தமாகாது என்பதே எங்களின் (நீதிபதிகள்) நிலைப்பாடு. வழக்குகளில் அளிக்கப்படும் தீர்ப்புகள் இறுதியானது மாற்ற முடியாதது என்று நிலைநிறுத்துவதன் மூலம், வழக்குகள் முடிவில்லாமல் தொடர்வதைத் தடுப்பதுடன், நீதித் துறை மீதான மக்களின் நம்பிக்கையும் நிலைநிறுத்தப்படுகிறது என்று தெரிவித்தனர். திட்டத்தை தொடங்கிய பின்னர் விதிவிலக்கான சூழலில் முன்தேதியிட்டு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்குத் தடையில்லை என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு அண்மையில் தீர்ப்பளித்தது.

இதன் மூலம், சுற்றுச்சூழல் அனுமதிகளை மத்திய அரசு முன் தேதியிட்டு வழங்கத் தடை விதித்து உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த அபே.எஸ்.ஓகா அமர்வு ஏற்கனவே அளித்தத் தீர்ப்பை கவாய் அமர்வு திரும்பப் பெற்றுக் கொண்டது.இதேபோல மாநில அரசுகள் அனுப்பும் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க ஆளுநர்களுக்கு காலக்கெடு விதித்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு தீர்ப்பளித்தது. ஆனால் அவ்வாறு ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிப்பது பொருத்தமற்றது என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்து பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு அண்மையில் விளக்கம் அளித்தது.

**நன்றி: தினமணி 27.11.2025**

# 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 18/2014)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The Tamil Nadu Hostels and Homes for Women and Children (Regulation) Act 2014 (Tamil Nadu Act No.18 of 2014)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2014ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

மகளிர மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள், தங்கும் விடுதிகள், காப்பகங்கள் மற்றும் அது போன்ற பிற நிறுவனங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக மற்றும் அதனுடன் தொடர்புடைய விவரங்களுக்கு வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இந்திய குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

### பகுதி - I

### முன்னுரை

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்** :

(1) இந்தச் சட்டம் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் மூலம் குறிப்பிடக்கூடிய அத்தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி

(a) ''குழந்தை'' என்பது, பதினெட்டு வயது நிறைவடையாத சிறுவன் அல்லது சிறுமி எனப் பொருள்படும்.

(b) ''ஆட்சியர்'' என்பது, மாவட்ட ஆட்சியர் எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி ஆட்சியரின் செயற்பணிகளைச் செய்து முடிப்பதற்கு அரசால் தனிப்பட்ட முறையில் பணியமர்த்தம் செய்யப்பட்ட அலுவலக எவரையும் உள்ளடக்கும்.

(c) ''அரசு'' என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(d) ''மகளிர்'' மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம்'' என்பது, அது எந்தப் பெயரிலும் அழைக்கப்பட்டாலும், மகளிர் அல்லது குழந்தைகள் அல்லது அவர்கள் இருவரையும் தங்க வைப்பதற்காக கவனிப்பதற்காக, பாதுகாப்பதற்காக மற்றும் அவர்களின் நலனுக்காக நிறுவப்பட்டுள்ள அல்லது பராமரிக்கப்பட்டுள்ள அல்லது நிறுவுவதற்குக் கருதப்பட்டுள்ள நிறுவனம் எனப் பொருள்படும்.

(e) ''விடுதி அல்லது தங்கும் விடுதி'' என்பது மகளிர் அல்லது குழந்தைகளுக்காக அல்லது இருவருக்காக, உணவுடனோ அல்லது உணவு இல்லாமலோ தங்கும் வசதி செய்யப்பட்டுள்ள கட்டடம் எனப் பொருள்படும்.

(f) ‘‘உரிமதாரர்’’ என்பது, இந்தச் சட்டத்தின்படி மகளிர் அல்லது குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஒன்றிற்கான உரிமை வைத்திருப்பவர் எனப் பொருள்படும்.

(g) ‘‘மேலாளர்’’ என்பது மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி அல்லது தங்கும் விடுதி அல்லது காப்பகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது நிருவாகம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள நபர் எனப் பொருள்படும்.

(h) ‘‘நபர்’’ என்பது கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாதிருப்பினும் பொறுப்புக் கட்டளை, சங்கம் அல்லது தனிநபர்களின் கழகம் அல்லது நிறுமம் ஒன்றினை உள்ளடக்கும்.

(i) ‘‘வகுத்துரைக்கப்பட்ட’’ என்பது, விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

(j) ‘‘பெண்’’ என்பது, பதினெட்டு வயது நிறைவடைந்த பெண் எனப் பொருள்படும்.

## பகுதி - II

### மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான உரிமம் பெற்றுள்ள விடுதிகள், தங்கும் விடுதிகள் மற்றும் காப்பகங்கள்

**3.குறிப்பிட்ட சில காப்பகங்களுக்கு வகைமுறைகள் பொருந்தாது** : இந்தப் பகுதியிலுள்ள எதுவும், அப்போதைக்க நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனாலும் நிர்வகிக்கப்படும், புறக்கணிக்கப்பட்ட மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களுக்கு அல்லது சீர்திருத்த அல்லது பாதுகாப்பான அல்லது பிற காப்பகங்களுக்கு அல்லது பள்ளிகள் எதற்கும் பொருந்தாது.

**4. உரிமம் இல்லாமல் விடுதிகள் மற்றும் காப்பகங்கள் நடத்தப்படுதல் வடாது**: நபர் எவரும் குறித்திட்ட நாளன்றும் அதற்குப் பின்பும் இந்தச் சட்டத்தின்படி அன்றியும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமமொன்றுக்கு இணங்கியவாறு இல்லாமல், விடுதி அல்லது தங்கும் விடுதி அல்லது மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் எதனையும் நிறுவுதல், பராமரித்தல் அல்லது நடத்துதல் கூடாது.

**5. உரிமத்திற்கான விண்ணப்பம் :** (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி அல்லது காப்பகம் ஆகியவற்றை நிறுவுவதற்கு பராமரிப்பதற்கு அல்லது நடத்துவதற்கு விரும்பும் ஒவ்வொரு நபரும், வகுத்துரைக்கப்படும் விவரங்கள் அடங்கியுள்ள அத்தகைய படிவத்தில் உரிமத்திற்கான விண்ணப்பத்தை ஆட்சியரிடம் அளிக்க வேண்டும். உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படும் முறையில் மூவாயிரம் ரூபாய்க்கு மேற்படாத கட்டணத்துடன் சேர்ந்து இருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி விண்ணப்பம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டதன்பேரில், ஆட்சியர் அவருக்குத் தேவையெனத் தோன்றும் விசாரணையைச் செய்த பின்பு, உரிமத்தை வழங்கலாம் அல்லது உரிமத்தை வழங்க மறுக்கலாம். வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும் மற்றும் அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குச் செல்லுந்தன்மை உடையதாக இருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன்படி உரிமம் வழங்க ஆட்சியர் மறுக்கிறவிடத்து அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களை எழுத்து வடிவில் அளிக்க வேண்டும்.

**6. தற்போதுள்ள விடுதிகள் மற்றும் காப்பகங்கள் தொடர்பான வகைமுறை :** (1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினம், உட்பிரிவு (2)இன்படி வகைமுறைகளுக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்பு, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தைப் பராமரித்து வரும் அல்லது நடத்துகிற நபர் ஒவ்வொருவரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தைத் தொடர்ந்து நடத்தலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்க உரிமையுடைய நபர் ஒவ்வொருவரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் தொடர்பாக பிரிவு 5இன்படியான உரிமத்தை அவர் பெற்றிருந்தாலன்றி, இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டு மாதக் கால அளவு முடிவுற்ற பின்பு விடுதியை தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தைத் தொடர்ந்து நடத்துதல் கூடாது.

(3) உட்பிரிவு (2)இன்படி உரிமைத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் இருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படும் முறையில் மூவாயிரம் ரூபாய்க்கு மேற்படாத கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

**7. புதுப்பித்தல் :** (1) இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமத்தின் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அத்தகைய உரிமத்தின் கால அளவு முடிவுறும் தேதிக்கு முன்பு மூன்று மாதங்களுக்குக் குறையாமல் செய்யப்படுதல் வேண்டும்.

வரம்புரை: மேற்சொன்ன காலம் முடிவடைந்த பின்பு, அத்தகைய விண்ணப்பத்தை ஆட்சியர் ஏற்கலாம். ஆனால் உரிமத்தின் காலம் முடிவடைவதற்கு முன்பு, உரிய காலத்திற்குள் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் செய்வதிலிருந்து விண்ணப்பதாரர் போதுமான காரணங்களால் தடுக்கப்பட்டிருக்கிறார் என்று அவர் திருப்தியடைந்திருந்தால் அதனை ஏற்கலாம்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் கூடுமான அளவுக்கு, பிரிவு 5இன்படி உரிமம் வழங்குவது தொடர்பாக அவை பொருந்தியிருப்பதைப் போன்றே உரிமத்தைப் புதுப்பித்தல் தொடர்பானவற்றிற்கும் பொருந்தும்.

**8. உரிமத்தின் உள்ளடக்கங்கள்**: (1) உரிமமானது

(a) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின் தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் பெயரை மற்றும் இருப்பிடத்தை

(b) அதனுடைய மேலாளரின் மற்றும் தங்கியிருக்கும் மேலாளரின் பெயரை:

(c) மகளிர் அல்லது குழந்தைகளுக்காக அல்லது இரண்டுக்கும் சேர்ந்ததாக அந்தக் காப்பகங்களின் தன்மையை.

(d) காப்பகங்களில் அனுமதிக்கப்படும் தங்கியிருப்பவர்களுடைய எண்ணிக்கையை

(e) தங்குமிடம், துப்பரவு, சுகாதாரம் மற்றும் உடல்நலம் பேணுதல் தொடர்பான குறைந்தபட்ச தரநிலைகளை

(f) வகுத்துரைக்கப்படும் பிற வரையறை மற்றும் குறித்துரைக்க வேண்டும்.

(2) ஆட்சியரின் எழுத்து வடிவிலான முன் இசைவின்றி, உரிமதாரர் எவரும் உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு

(a) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் பெயரை அல்லது இருப்பிடத்தை மாற்றவோ

(b) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவை எதனின் நோக்கத்தைத் திருத்தம் செய்யவோ

(c) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் தங்குபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதையோ செய்தல் கூடாது.

**9. உரிமத்தை இரத்து செய்வதற்கு அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான அதிகாரம்:** (1) ஆட்சியர், உரிமதாரருக்கு அவருடைய கருத்துக்களை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பினை அளித்த பின்பு.

(c) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தின் மேலாண்மை மனநிறைவு அளிக்காத வகையில் அல்லது தங்கியிருப்பவர்களின் ஒழுக்கம் மற்றும்

உடல்நலத்திற்கு மிகவும் ஊறு ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்றால்.

(d) ஆட்சியரின் கருத்தில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமானது அந்த நோக்கத்திற்குப் பொருத்தமற்று இருப்பதாகத் தோன்றுமானால்

உரிமம் எதையும் இரத்து செய்யலாம்.

(2) ஆட்சியர், இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமம் எதுவும் இரத்து செய்யப்படுவதற்கு உரியதாக இருக்கின்றது என்று கருதுவாரானால், உரிமம் ரத்து செய்யப்படும் நிலையில் இருக்கும்போது காரணங்களை எழுத்துப்பூர்வமாக எழுதி, பதிவு செய்து, உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் மற்றும் அத்தகைய நிகழ்வில், எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு எதுவும் அளிக்கத் தேவையில்லை.

(3) ஆட்சியர், தன்னிச்சையாகவோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ உட்பிரிவு (1)இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதையும்

(a) பதிவேட்டில் வெளிப்படையாக காணப்படுகிற தவறு அல்லது பிழையின் அடிப்படையில்

(b) ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்பு புதிய பொருண்மைகள் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட அடிப்படையில், அல்லது

(c) எழுத்துப் பூர்வமாகப் பதிவு செய்யப்படும் போதிய பிற காரணங்கள் எதற்காகவும் மறு ஆய்வு செய்யலாம்.

**வரம்புரை:** ஆட்சியர் இந்த உட்பிரிவின்படி நபர் எவருக்கும் அவருடைய கருத்தினை எடுத்துரைப்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினை அளித்திருந்தாலன்றி, நபர் எவருக்கும் ஊறு உண்டாகும் வகையில் ஆணையைப் பிறப்பித்தல் கூடாது.

(4) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் தொடர்பான உரிமம் உட்பிரிவு (1)இன்படி அல்லது உட்பிரிவு (2)இன்படி நீக்கம் செய்யப்படுகிறபோது அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறபோது

(a) மேல்முறையீட்டிற்காக வகுத்துரைக்கப்பட்ட கால அளவு முடிவடைவதன்பேரில், உடனடியாக, இரத்து செய்யப்பட்ட அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட ஆணைக்கு எதிராக, பிரிவு 10இன்படி மேல்முறையீடு ஒன்று தாக்கல் செய்யாமல் இருக்கிற நிலையில்

(b) அத்தகைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளபோதும் ஆனால், மேல்முறையீட்டு ஆணையின் தேதியிலிருந்து இரத்து செய்யும் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் ஆணை அதே நிலையில் இருக்கிற நிலையில்,

நிகழ்விற்கேற்ப, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமானது செயல்படாது இருத்தல் வேண்டும்.

(5) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமானது உட்பிரிவு (4)இன்படி செயல்படாது இருக்கும்போது, ஆட்சியர் அத்தகைய நிறுவனத்தில் தங்கியிருக்கும் மகளிர் மற்றும் குழந்தை எவரையும்

(a) நிகழ்விற்கேற்ப அவர்களது பெற்றோர் அல்லது சட்டப்படியான காப்பாளரின் பாதுகாப்பில் ஒப்படைக்குமாறு

(b) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான உரிமம் பெற்றுள்ள பிற விடுதிக்கு, தங்கும் விடுதிக்கு அல்லது காப்பகத்திற்கு மாறுதல் செய்யுமாறு.

**10. மேல்முறையீடு:** உரிமம் வழங்குவதற்கு மறுக்கின்ற அல்லது உரிமத்தை இரத்து செய்கின்ற அல்லது உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கின்ற ஆட்சியரின் ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய கால

அளவிற்குள் இதன் பொருட்டு அதனால் குறித்துரைக்கப்படும் அரசுக்கு அல்லது அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு ஒன்றினைச் செய்யலாம்.

வரம்புரை நிகழ்விற்கேற்ப, அரசு அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்படும் அதிகார அமைப்பு, மேல்முறையீட்டாளர் உரிய காலத்தில் மேல்முறையீடு செய்வதிலிருந்து போதிய காரணத்தால், தடுக்கப்பட்டுள்ளார் என மனநிறைவு அடையுமானால், அவ்வாறு வகுத்துரைக்கப்பட்ட கால அளவு முடிவுற்ற பின்னரும் மேல்முறையீடு ஒன்றினை அனுமதிக்கலாம்.

**11. உரிமத்தை ஒப்படைத்தல்**: மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் உரிமதாரர், அந்த விடுதிக்காக, தங்கும் விடுதிக்காக அல்லது காப்பகத்திற்காக வழங்கப்பட்ட உரிமைத்தைத் திரும்பப் பெறுவதற்கான அவருடைய கருத்தினை எழுத்துப்பூர்வமாக ஆறுமாதக் கால அறிவிப்பை ஆட்சியருக்கு அளிப்பதன்பேரில் திரும்பப் பெறலாம். மேற்சொன்ன காலம் முடிவடைதற்கு முன்பு அறிவிப்புத் திரும்பப் பெறப்பட்டாலன்றி, உரிமமானது மேற்சொன்ன காலம் முடிவடைவதன்பேரில் செயல்விளைவு பெறாது மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் செயல்பாடற்றுப் போகும்.

**பகுதி - III**

**மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களின் பதிவு**

**12. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களின் பதிவு :** (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று அல்லது அதற்குப் பின்பு, பிற சட்டம் எதனின்படியும் நிறுவப்பட்ட பதிவு செய்யப்பட்ட அல்லது பராமரித்து வரப்படும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒவ்வொன்றும், அது எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாம், வகுத்துரைக்கப்படும் கால அளவிற்குள் இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்து வரும் மற்றும் பிற சட்டம் எதனின்படியும் நிறுவப்பட்ட பதிவு செய்யப்பட்ட மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒவ்வொன்றும், எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், வகுத்துரைக்கப்படும் காலத்திற்குள் இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்றினைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய காப்பத்தின் உரிமையாளர் அல்லது மேலாளர். வகுத்துரைக்கப்படும் அத்தகைய விவரங்கள் அடங்கியுள்ள அத்தகைய படிவத்தில் ஆட்சியருக்கு விண்ணப்பம் ஒன்றினைச் செய்ய வேண்டும். ஆட்சியர், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் பதிவு செய்தல் தொடர்பாக. இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கி உள்ளது என்று மனநிறைவு அடைவதன்பேரில், வகுத்துரைக்கப்படும் அத்தகைய படிவத்தில் பதிவு செய்தலுக்கான சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(4) ஆட்சியர், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்றிற்குப் பதிவுச் சான்றிதழ் ஒன்றினை வழங்கிய பின்பு, வகுத்துரைக்கப்படும் விவரங்களை வகுத்துரைக்கப்பட்ட பதிவேடு ஒன்றில் பதிவு செய்தல் வேண்டும்.

(5) இந்தச் பகுதியில் உள்ள எதுவும், அரசால் அமைக்கப்பட்ட நிறுவப்பட்ட அல்லது மேலாண்மை செய்யப்பட்டு வரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் எதற்கும் பொருந்தாது.

**பகுதி - IV**

**மேலாளரின் பணியமர்த்தும், அவருடைய கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

**13. மேலாளரின் பணியமர்த்தம் :** (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் எதிலும் தங்குவதற்காக அதனை வாடகைக்கு விடும் ஒவ்வொரு நபரும், மேலாளர் ஒருவரைப் பணியமர்த்தம் செய்ய வேண்டும். மேலாளர் ஒருவரைப் பணியமர்த்தம் செய்ய வேண்டும். மேலாளர் எவரும் பணியமர்த்தம் செய்யப்படாத நிகழ்வு எதிலும், தங்குவதற்காக வளாகங்களை

வாடகைக்கு விடும் நபர் அத்தகைய வளாகங்களுக்கான மேலாளராக கருதப்படுதல் வேண்டும். மேலாளர், அந்த வளாகங்களில் நிரந்தரமாகத் தங்கியிருக்கவில்லை என்றால் அந்த வளாகங்களில் தங்கியிருக்கும் மேலாளராக இருப்பவர். மேலாளருக்குரிய அனைத்து அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளுடன் பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

வரம்புரை விடுதியில் தங்கும் விடுதியில் அல்லது காப்பகத்தில் பெண் குழந்தைகள் மற்றும் மகளிர் தங்கியிருக்கிறபோது மேலாளர் மற்றும் தங்கியிருக்கும் மேலாளர், ஒரு பெண்ணாக இருத்தல் வேண்டும்.

(2) மேலாளராக அல்லது தங்கியிருக்கும் மேலாளராக இருக்கும் எந்த ஒரு நபரும் அரசு, மருத்துவ அலுவலர் தரநிலைக்குக் குறையாத மருத்துவ அலுவலர் ஒருவரால் வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் உடல் தகுதிச் சான்றிதழ் ஒன்று அவருக்கு அளிக்கப்பட்டிருந்தாலன்றிப் பணியமர்த்தம் செய்யப்படுதல் கூடாது.

(3) மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் ஒவ்வொருவரும், அவருடைய முந்தைய விவரங்களை வட்டாரக் காவல் துறையிடம் விசாரித்த பின்பே பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

(4) தங்கியிருக்கும் ஒவ்வொரு ஐம்பது நபர்களுக்காகவும், ஒரு மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

**14. மேலாளரின் பொறுப்புகள்:** (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமொன்றின் உரிமையாளர் அல்லது மேலாளர்.

(a) அனைத்துக் கட்டடங்களையும் மற்றும் கட்டடத்தில் உள்ள உபயோகப் பொருட்கள், பொருத்துக் கருவிகள் மற்றும் இணைப்புக் கருவிகள் அனைத்தையும் நல்ல நிலையில் பழுது பார்த்தும் சுத்தமாகவும் மற்றும் உடல் நலத்துக்கேற்ற நிலையிலும் பராமரித்தல் வேண்டும்.

(b) குடியிருப்பு வளாகங்களின் அனைத்துப் பகுதிகளும் அனைத்து நேரங்களிலும் போதுமான வெளிச்சமுடனும், காற்றோட்ட வசதியுடனும் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

(c) குடியிருப்பு வளாகங்களை, குப்பைகள் சேராமலும், துர்நாற்றம் வீசாமலும் அல்லது தேவையற்ற செடி கொடிகள் வளராமலும் பாதுகாத்து வர வேண்டும்.

(d) குப்பையை, கழிவை அல்லது குப்பைக் கூளத்தை அகற்றுவதற்கு முன்பு, சேகரித்து வைப்பதற்காகப் பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்தல் வேண்டும்.

(e) தொடர்புடைய சட்டங்களின்படி வகுத்துரைக்கப்பட்ட விதத்தில் செயற்கை விளக்கு, அவசர விளக்கு மற்றும் போதுமான தீ அணைப்பான்களைப் பழுது பார்த்து நல்ல நிலையிலும் மற்றும் திறம்பட செயல்படும் நிலையிலும் பேணி வருதல் வேண்டும்.

(2) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின் தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர்

(a) வளாகங்களுக்குள் மண்ணெண்ணெய், பெட்ரோல், எரிசாராயம் அல்லது வெடிக்கும் அல்லது தீப்பற்றி எரியும் பொருள்கள் எதையும் சேமித்து வைத்தலோ அல்லது வைத்திருத்தலோ அல்லது சேமித்து வைக்கப்படுவதற்கு அனுமதித்தலோ அல்லது வைத்திருப்பதற்கு அனுமதித்தலோ கூடாது.

(b) உயரமான படிக்கட்டுகளில், வழியில் அல்லது ஆபத்துக் காலத்தில் வெளியேறும் அவசர வழிகளில் தடை எதனையும் வைத்தலோ அல்லது வைப்பதற்கு அனுமதித்தலோ கூடாது.

(3) படுக்கை அறையாகக் குறிப்பிடப்பட்டுள்ள அறை ஒன்று அல்லாத பிற அறை எதனையும், உள்ளே தங்கியிருப்பவர்கள் துயில் இடமாகப் பயன்படுத்துவதை மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் அனுமதித்தல் கூடாது.

(4) மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் குறிப்பிடப்படும் அறை ஒன்றில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலான உள்ளே தங்குபவர்களுக்கு மட்டும் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

(5) (a) மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர், வளாகத்தில் நபர் ஒருவர் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அல்லது பாதிக்கப்படக் கூடுமென அவருக்குத் தெரிகிறபோது, உடனடியாக, அந்த இடத்தில் சூழ்நிலை குறித்து சுகாதார ஆய்வாளருக்குத் தெரிவித்தல் வேண்டும் மற்றும் உடனடியாக தங்கியிருக்கும் இடத்தில் பிற தங்கியிருப்போர்களால் பயன்படுத்தப்படும் பொருட்களைத் தொடாமலிருக்கும் வண்ணம் அந்த நபரைத் தனிமைப்படுத்தி வைக்க வேண்டும்.

(a) மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர்

(i) தொற்றுநோயினால் பாதிப்படைந்த அல்லது பாதிக்கப்படக் கூடுமெனச் சந்தேகிக்கும் நபர் எவரையும் தனிமைப்படுத்துதல் அல்லது அகற்றுதல்

(ii) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை தங்கும் விடுதியை அல்லது பயன்படுத்துகின்ற படுக்கையை விரிப்பான்களை, போர்வைகளை அல்லது பிற பொருள்களைச் சுத்தப்படுத்துதல் மற்றும் தொற்றுநோய் பரவாமல் தடுத்தல் மற்றும்

(iii) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தில், தங்கியிருப்போர்களுக்கு இடையே தொற்றுநோயைத் தடுப்பதற்கு அல்லது அதனைக் குறைப்பதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாக.

சுகாதார ஆய்வாளரின் பணிப்புரை ஒவ்வொன்றிற்கும் இணங்கி நடத்தல் வேண்டும்.

(6) மேலாளர் மற்றும் தங்கியிருக்கும் மேலாளர், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியில், தங்கும் விடுதியில் அல்லது காப்பகத்தில் தங்கியிருப்பவர்கள் மனரீதியாக அல்லது உடல்ரீதியாகத் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## பகுதி -VI

## குற்றங்கள் மற்றும் தண்டனைகள்

**20. உரிமம் பெறாததற்கான மற்றும் பதிவு செய்யாமைக்கான தண்டனை:** (1) பிரிவுகள் 5 அல்லது 6இன்படி உரிமத்தைப் பெறத் தவறுகின்ற நபர் எவரும், இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறைத் தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீடிக்கப்படக் கூடிய பணத்தண்டம் (அபராதம்) விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(2) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்று. பிரிவு 12 உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)இன்படி பதிவு செய்யப்படத்தக்கதாக இருக்கும் நிலையில் குறிப்பிடப்படும் காலத்திற்குள் பதிவு செய்யத் தவறுகிறது என்றால், அத்தகைய காப்பகடக்ளின் உரிமையாளர் அல்லது மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறைத் தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத்தண்டம் (அபராதம்) விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

(3) இந்தச் சட்டத்தின் பிரிவுகள் 5,6,12 ஆகிய வகைமுறைகள் அல்லாத பிற வகைமுறைகள் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதி எதனின் அல்லது உரிமம் ஒன்றின் அல்லது பதிவுச் சான்றிதழ் ஒன்றின் நிபந்தனைகள் எவற்றிற்கும் இணங்கியிருக்கத் தவறுகிற நபர் எவரும், முதல் குற்றமாக இருக்கின்ற நிகழ்வில், இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறைத் தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத் தண்டத்துடன் (அபராதத்துடன்) மற்றும் இண்டாவது அல்லது அதற்று அடுத்தப்படியான குற்றமாக இருக்கின்ற ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறைத் தண்டனையுடன் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பணத் தண்டம் (அபராதத்துடன்) விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

**21. நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்:** (1) இந்தச் சட்டத்தின்படி குற்றம் ஒன்று. நிறுமம் ஒன்றினால் செய்யப்பட்டிருந்தால், அந்தக் குற்றம்செய்யப்பட்ட நேரத்தில் நிறுமத்தின் அலுவலை நடத்துவதற்கு நிறுமத்திற்குப் பொறுப்பாய் இருந்தவரும், நிறுமத்தின் பொறுப்பினைக் கொண்டிருந்த

வருமான நபர் ஒவ்வொருவரும், அதுபோல அந்த நிறுமமும் குற்றத்தைச் செய்திருப்பதாகக் கருதப்பட்டு அவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கும் உள்ளாவர்.

**வரம்புரை**: இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அக்குற்றத்தைச் செய்த அத்தகைய நபர் எவரையும், அக்குற்றம் அவரை அறியாமல் செய்யப்பட்டது என்றும் அல்லது அவர் அத்தகைய குற்றம் நிகழ்வதைத் தடுப்பதற்கு உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டிருந்தார் என்றும் மெய்ப்பிப்பாரானால், தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு 1இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், இந்தச் சட்டத்தின்படி குற்றம் எதுவும் நிறுமம் ஒன்றினால் செய்யப்பட்டிருந்தால் மற்றும் அது நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் செயலின்பேரில், அவருடைய சம்மதத்துடன், மறைமுக ஆதரவுடன் அல்லது கவனக் குறைவு எதனாலும் குந்தகம் நடைபெற்றுள்ளது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்றால் அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றத்தைச் செய்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படி அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கும் உள்ளாவர்.

விளக்கம்: இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக

(a) "**நிறுமம்**" என்பது. கூட்டுரும அமைப்பு எதுவும் மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனி நபர்களின் பிற கழகத்தையும் உள்ளடக்கும் மற்றும்

(b) "**இயக்குநர்**" என்பது

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக நிறுவகத்திலுள்ள பங்குதாரர் ஒருவர் எனப் பொருள்படும்.

(ii) ஒரு சங்கம், ஒரு பொறுப்புக் கட்டளை அல்லது பிற தனி நபர்களின் கழகம் என்பது நிகழ்வுக்கேற்ப, சங்கத்தின் பொறுப்புக் கட்டளை அல்லது பிற தனி நபர்கள் கழகத்தின் விதிகளின்படி சங்கத்தின், பொறுப்புக் கட்டளையின் அல்லது பிற தனிநபர்கள் கழகத்தின், விதிகளின்படி, ஒப்படைக்கப்பட்ட நபர் எனப் பொருள்படும்.

## பகுதி -VII

## பல்வகை

**22. ஆய்வு செய்வதற்கான அதிகாரம் :** ஆட்சியர் அல்லது அவரால் எழுத்து வடிவில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் எவரும், பொதுவான அல்லது சிறப்பு ஆணையின் மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளாலோ அல்லது விதிகள் எதனாலோ அல்லது உரிமத்தின் வரைக்கட்டுகளாலோ அல்லது பதிவுச் சான்றிதழ் இணங்கியுள்ளதா என்பதை உறுதி செய்யும் நோக்கத்திற்காக, அவர் நியாயமான அனைத்து நேரங்களிலும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் எதிலும் நுழையலாம் மற்றும் அவருடைய ஆய்விற்காக ஆவணத்தை பதிவேட்டை அல்லது அதன்படி வைக்கப்பட்டுள்ள பதிவுருவினை முன்னிலைப்படுத்துமாறு கோரலாம் மற்றும் அத்தகைய நிறுவனத்தின் செயற்பாடு தொடர்பாகத் தகவல் எதனையும் கேட்டுக் பெறலாம்.

வரம்புரை ஆட்சியர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர், பெண்கள் தங்கியிருக்கும் விடுதி அமைந்திருக்கும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய இரண்டு பெண்கள் அவருடன் சேர்ந்து வந்தாலன்றி விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் எதற்குள்ளும் நுழையக் கூடாது.

**23. பிற சட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படுவதில்லை**: இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி, அதனைத் திறக் குறைவு செய்தல் ஆகாது.

**24. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு :** நபர் எவருக்கும் எதிராக இந்தச் சட்டம் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது பணிப்புரை அல்லது ஆணைக்கிணங்க நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

**25. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்:** (1) அரசானது, அறிவிக்கையின் மூலமாக இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் மற்றும் முன் சென்ற அதிகாரத்தில் பொதுப் பங்கிற்கு ஊறு செய்யாமலும் அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடு அனைத்திற்காகவும் அல்லது எவற்றிற்காகவும் அத்தகைய விதிகளைச் செய்யலாம் அதாவது

(a) விண்ணப்பத்தின் படிவம், விண்ணப்பத்துடன் அடங்கியிருக்க வேண்டிய விவரங்கள் மற்றும் உரிமத்தை வழங்குவதற்காகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம்

(b) எந்தப் படிவத்தில் மற்றும் எந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமம் வழங்கப்படலாம்.

(c) எந்த முறையில் மற்றும் எந்தக் கால வரம்பிற்குள் மேல்முறையீடொன்று விண்ணப்பிக்கப்படலாம்.

(d) விண்ணபப்படிவம், அத்தகைய விண்ணபத்துடன் அடங்கியிருக்க வேண்டிய விவரங்கள் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களைப் பதிவு செய்ய வேண்டிய காலவரம்பு.

(e) எந்தப் படிவத்தில் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும்.

(f) பதிவேட்டின் படிவம் மற்றும் பதிவின்பேரில் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய விவரங்கள்

(g) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி மற்றும் காப்பகம் ஒன்றின் அறை ஒன்றில் தங்க வைக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை மற்றும்

மேலாளராக அல்லது தங்கியிருக்கும் மேலாளராகப் பணியமர்த்தம் செய்வதற்கான உடகல்தகுதிச் சான்றிதழ் எந்தப் படிவத்தில் தரப்படுதல் வேண்டும்.

(3) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அந்த விதிகள் குறிப்பிட்ட நாளன்று செல்லாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளன்று செல்லாற்றலுக்கு வரும்.

(b) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்பட்ட அனைத்து அறிவிக்கைகளும் குறிப்பிட்ட நாளன்று செல்லாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை வெளியிடப்பட்ட அந்த நாளன்று செல்லாற்றலுக்கு வரும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி, பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அவை செய்யப்பட்ட பின்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் அது சட்டமன்றத்தில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட கூட்டத் தொடரில் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை எதிலும் சட்டமன்றமானது மாற்றமைவு எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றமானது விதியை அல்லது அறிவிக்கையைச் செய்யக் கூடாது அல்லது பிறப்பக்கப்படக் வடாது எனக் கருதினால் அதன் பின்பு அந்த விதி அல்லது அறிவிக்கையானது அத்தகைய மாற்றம் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல் விளைவு உடையதாகும் இல்லாதிருக்கும் எனினும் அத்தகைய மாற்றம் அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**26. பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்:** இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசு. அதனுடைய கருத்தில் தேவையானதாக அல்லது உகந்ததானதாக இருக்கின்ற அத்தகைய பணிப்புரைகளை ஆட்சியருக்கு வழங்கலாம். ஆட்சியர் அத்தகைய பணிப்புரைகள் அனைத்திற்கும் செயல்விளைவு அளிக்க வேண்டும்.

**27. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்**: இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, ஆணையின்மூலமாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அவற்றுக்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரை**: அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் கால அளவு முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.

நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை

## 4 தொழிலாளர் சட்டங்கள் – சீர்திருத்தங்களுக்குப் பிந்தைய மாற்றங்கள்

நடைமுறையில் இருந்த 29 தொழிலாளர் சட்டங்களில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அவை ஊதிய விதி, 2019, தொழில் துறை தொடர்பு விதி, 2020, சமூகப் பாதுகாப்பு விதி, 2020 மற்றும் பணிப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிச் சூழல் விதி, 2020 ஆகிய நான்கு சட்டங்களாக சுருக்கப்பட்டன. இந்த சட்டங்கள் நவ.21ஆம் தேதி முதல் அமலுக்கு வந்ததாக மத்திய அரசு அறிவித்தது. இது சுதந்திர இந்தியாவில் தொழிலாளர்கள் நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய சீர்திருத்தம் என பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டினார்.

இதில் முதன்முறையாக உணவு விநியோகம் உள்ளிட்ட துறைகளில் தற்காலிக பணிகளான கிக் தொழில், பிளாட்பார்ம் தொழில் (தற்காலிக ஒப்பந்த தொழிலாளர்கள்) மற்றும் அக்ரகேட்டார் (இணையவழி விநியோக நிறுவனம்) பணிகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டங்கள் அமலாவதற்கு முன்பு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் அமலான பிறகு மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் குறித்து பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை

| | |
|---|---|
| 1. தொழிலாளர்களுக்கு நியமன கடிதம் வழங்குவது கட்டாயமில்லை. | 1. அனைத்து தொழிலாளர்களுக்கும் நியமன கடிதம் வழங்குவது கட்டாயம். எழுத்துபூர்வமாக நியமன கடிதங்கள் வழங்குவது வெளிப்படைத்தன்மை, பணி பாதுகாப்பு மற்றும் குறிப்பிட்ட காலத்துக்கு வேலை உத்தரவாதம் கிடைக்க வழிவகுக்கும். |
| 2. சமூக பாதுகாப்பு மிக குறைந்த தொழிலாளர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. | 2. சமூகப் பாதுகாப்பு விதி, 2020–ன் கீழ் கிக் மற்றும் பிளாட்பார்ம் தொழிலாளர்கள் உள்பட அனைவருக்கும் காப்பீடு, வருங்கால வைப்பு நிதி (பிஎஃப்), காப்பீடு ஊழியர் காப்பீட்டு நிறுவன (இஎஸ்ஐசி) சலுகைகள் நீட்டிப்பு. |
| 3. குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் மற்றும் சில பணிகளுக்கு மட்டுமே குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம். | 3. ஊதிய விதி, 2019இன் கீழ் அனைத்து தொழிலாளர் களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம். |
| 4. தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வது கட்டாயமில்லை. | 4. 40 வயதுக்கு மேற்பட்ட அனைத்து தொழிலாளர் களுக்கும் ஆண்டுதோறும் நிறுவனங்கள் இலவச மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வது கட்டாயம். |
| 5. உரிய நேரத்தில் தொழிலாளர்களுக்கு நிறுவனங்கள் ஊதியம் வழங்குவது அவசியமில்லை. | 5. குறிப்பிட்ட காலத்தில் தொழிலாளர்களுக்கு நிறுவனங்கள் ஊதியம் வழங்குவது கட்டாயம். |
| 6. குறிப்பிட்ட தொழில்களிலும் இரவுப் பணிகளிலும் பெண்களை பணியமர்த்த தடை. | 6. அனைத்து வகையான பணிகளிலும் பெண்கள் இரவில் பணிபுரிய அனுமதி பெண்களிடம் ஒப்புதல் பெற்று பாதுகாப்பு வழங்கி இரவில் பணியமர்த்தலாம். |
| 7. குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிவோருக்கு மட்டுமே இஎஸ்ஐசி சலுகைகள். 10க்கும் குறைவான தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு இந்தச் சலுகைகள் இல்லை. | 7. 10க்கும் குறைவான தொழிலாளர்களைக் கொண்டி ருந்தாலும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய தொழில் களில் ஒரு தொழிலாளி ஈடுபட்டிருந்தாலும் இஎஸ்ஐசி சலுகைகள் வழங்குவது கட்டாயம். |
| 8. பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் பல நிலை களில் பதிவு உரிமம் பெறுவது அவசியம். | 8. நாடு முழுவதும் ஒற்றைப் பதிவு, ஒற்றை உரிமம் அறிமுகம். |
| 9. தொழிலாளர்கள் நாங்கள் பணிபுரியும் நிறுவனத்திடம் இருந்து பணிக்கொடை பெறுவதற்கு 5 ஆண்டுகள் பணியாற்றுவது கட்டாயம். | 9. பணிக்கொடை பெற ஓராண்டு பணியாற்றினால் போதும். |



THINK AHEAD. STAY AHEAD.
Bharath
UNIVERSITY
30
YEARS OF EXCELLENCE
RATING
AA+
பாரத் பல்கலைக்கழகம்
B.TECH
AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHANICAL ENGINEERING
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY
M.TECH
[For Program details, please visit: www.bharathuniv.ac.in ]
EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.
M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time
INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years
MBA
[ Full time and Part time ]
MCA
HOTEL MANAGEMENT & CATERING
Courses : Diploma, B.Sc., & MBA
B.ARCH Eligibility : As per Council of Architecture norms
PLACEMENT 100%
1st among the participants from 125 Countries in International competition on Robotics
Job Placements : 100% with the highest salary package of ₹10 L.P.A.
Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,
Internationally acclaimed curriculum in tune with global trends.
Scholarships worth ₹12.00 crores to the meritorius students
27 Centers of excellence to promote research and industry aided / driven projects
SCHOLARSHIP (TUITION FEES GRANT) ■ 100%-State Toppers of all Boards ■ 50%-School toppers, participated in National Level Sports Competition / Event ■ 30%-Students having participated in State Level Sports Competition / Event ■ 35%-Students securing 90% above Marks in the Board examinations ■ 25%- "SARVA SIKSHA" Scheme | Scheduled Caste / Scheduled Tribe candidate | Parent being an Ex-servicemen | Physically Handicapped candidate | First Graduate candidate
HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.
BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph 044-22290247
Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph 044-42115251 / 91-98410 64199
Apply online : www.bharathuniv.ac.in
ADMISSION HELPLINE
1800-419-1441
Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity
BY REGISTRAR

**Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of December 2025**
**SATTAKADIR - Tamil Law Journal /Monthly December 2025 / Publication First Week of Every month.**
**Registration of News Papers for India, Reg. No. 62767/92**
**Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026**




அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் டிசியில் அமைய உள்ள உலகளாவிய தமிழ்நாடு இல்லம் திட்ட அறிமுக விழாவில் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் தலைவர் உலகத் தமிழர் பொருளாதார கழகம், டாக்டர் ராஜன் நடராஜன், முன்னாள் துணை அமைச்சர் மேரிலேண்ட் மாநிலம், டாக்டர் பாரிவேந்தர், வேந்தர் எஸ்ஆர்எம் பல்கலைக்கழகம், திரு.டி.கே.எஸ். இளங்கோ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் பழனி பெரியசாமி, தலைவர் ஓட்டல் லி மெரிடியன், திரு.எலிஷா புலிவர்த்தி, தலைவர் அமெரிக்க–இந்திய தொழில் நிறுவனம், டாக்டர் விஜிபி சந்தோசம், தலைவர் விஜிபி நிறுவனம், திரு. சக்ரவர்த்தி, துணை தலைவர் பிஜிபி தமிழ்நாடு, திரு.கண்ணதாசன், உறுப்பினர் மனித உரிமை ஆணையம் மற்றும் பலர்.





12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு அமெரிக்காவில் வெற்றிகரமாய் நடத்திய தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் அவர்களுக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் திரு.அமல்ராஜ் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்.

On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**